# திருநீர்வை



நீர்வேலி கலை பண்பாட்டு விழாச் சிறப்பு மலர் - 2011

# திருநீர்வை

நீர்வேலி கலைபண்பாட்டு மன்றம்
CENTER FOR ARTS AND CULTURE, NEERVELY




வெளியீடு:

நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம்

நீர்வேலி

2011

# தமிழ்த் தெய்வ வணக்கம்

நீராரும் கடல்உடுத்த நிலமடந்தைக்கு எழில்ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திரவிட நல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்துஒழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

— பேராசிரியர் "மனோன்மணீயம்" சுந்தரம்பிள்ளை



# நூல் வெளியீட்டுத் தரவுகள்


நூல் : திருநீர்வை

விடயம் : நீர்வேலிக் கிராமத்தின் பண்பாடு,
நீர்வேலிக் கிராமத்தவரின் பல்துறை ஆக்கங்கள்

பதிப்பு : 19 நவம்பர் 2011

தாள் : கென்யா பாங்

அளவு : 176 mm x 250 mm

பக்கங்கள் : XVII + 218

பதிப்பாசிரியர் : ச.லலீசன் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

பதிப்புரிமை : கலை பண்பாட்டு மன்றம், நீர்வேலி.

வெளியீடு : கலை பண்பாட்டு மன்றம்
(கலைபண்பாட்டு மன்றப் பெருவிழாச் சிறப்பு மலர்)

அட்டைப் படம் : ஓவியர் ரமணி,
விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழக சித்திர வடிவமைப்புத் துறை

ஒளிப்படங்கள் : தனுஷன் வீடியோ அன்ட் போட்டோ, நீர்வேலி.

அச்சமைப்பு : ஷாம்பவி பதிப்பகம், 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி)
தொலைபேசி : 021 2224143

பிரதிகள் : 500

விலை : 500/=

## பொருளடக்கம்

**வாழ்த்தியல்**

01. சிவஸ்ரீ கு. தியாகராசக் குருக்கள் I
02. சிவஸ்ரீ. இ. ஸ்வாமிநாதக் குருக்கள் II
03. சிவஸ்ரீ. சா. சோமதேவக் குருக்கள் III
04. சிவஸ்ரீ. ஆ. சந்திரசேகரக் குருக்கள் IV
05. நல்லைக் குருமணி V
06. அருட்தந்தை ஆ. யூட் நிக்சன் VI
07. திருமதி இமெல்டா சுகுமார் VII
08. திரு. ம. பிரதீபன் VIII
09. திரு. வே. கா. கணபதிப்பிள்ளை IX
10. திரு. ச. குகதாஸ் X
11. திரு. த. ந. பஞ்சாட்சரம் XI
12. திருமதி ஜெயந்தா சோமராஜ் XII
13. செல்வி அ. மிலாசினி XIII
14. தலைவரின் இதயத்திலிருந்து... XIV
15. பதிப்புரை XVI

**பொதுவியல்**

01. அன்றில் பறவைகள் 01
*- நீர்வை பொன்னையன்*
02. இந்துப் பண்பாட்டு மரபில் தல விருட்ச வழிபாடு 10
*- திரு. ப. கணேசலிங்கம்*
03. ஆரோக்கிய வாழ்வில் உணவு முறையும் மூலிகைகளின் பங்களிப்பும் 24
*- வைத்திய கலாநிதி சிவஞானமணி பஞ்சராசா*
04. குருதட்சணை 33
*- நீர்வை கு.தியாகராசா*
05. ஈழத்தில் இசைக்கலை வளர்ச்சி 38
*- திரு. க. கருணேசன்*
06. புகைத்தலைத் தவிர்ப்போம் 41
*- வைத்திய கலாநிதி வே.ஜெகரூபன்*
07. Z புள்ளி பற்றிய கண்ணோட்டம் 45
*- செல்வி சி. சிறிவதனி*
08. முதியோரே நமது தேசிய சொத்தாவர் 51
*- செல்வி மீரா ஞானேஸ்வரன்*

09. வாஸ்து சாஸ்திரம் 56

*- திரு. ப.ரமேஷ்*

10. வெங்காயச் செய்கை 63

*- திரு. ச. சதீஸ்வரன்*

11. ஈழத்துத் தமிழ்ச் சொற்பொழிவின் செல்நெறி 70

*- திரு. ச.லலீசன்*

**பதிவியல்**

01. நீர்வேலிக் கிராமம் - ஒரு பார்வை 79

*- திரு. சு. சண்முகவடிவேல்*

02. நீர்வேலியின் கல்விச் சாலைகள் 88

*- திரு. இ. குணநாதன்*

03. நீர்வேலியின் கைத்தொழில் வளர்ச்சி 96

*- திரு. த. பரராசசிங்கம்*

04. புலம்பெயர் சமூகமும் நீர்வேலியும் 105

*- திரு. மா. திருவாசகம்*

05. நீர்வையூரின் இந்து சமய வளர்ச்சியில்
இந்து சமய நிறுவனங்களின் பங்களிப்பு 113

*- செல்வி செ. சிவானதி*

06. நீர்வேலியில் முறைசாராக் கல்வியின் வளர்ச்சி 119

*- திரு. எஸ். சிவானந்தன்*

07. எங்களூர் 123

*- திரு. கு. துரைராஜன்*

08. செழுமைமிகு நீர்வேலி 126

*- செல்வி ச.அனுசாகரி*

09. வினைத்திறன் மேம்பட விளையாடும் நீர்வையம்பதி 128

*- திரு. ந. சிறிமுருகதாஸ்காந்தராசா*

10. ஒரு வியர்வையின் பார்வை 133

*- திரு. வி. பராபரன்*

11. பெருமைமிகு நீர்வேலி 134

*- செல்வி சிந்துஜா தேவபாலன்*

12. நிறைவோடு வாழி 135

*- செல்வி கு. யாழினி*

13. எமது கிராமத்திற்கே உரித்தான சூத்திரக் கிணறு 136

*- செல்வி இ. சுஜாதா*

14. நான் தவழ்ந்த மண் 138

- நீர்வை இரத்தினரூபன்

15. ஆலயங்களும் நீர்வேலியும் 139

- சிவஸ்ரீ கு. தியாகராசக் குருக்கள்

16. நீர்வேலியின் அபிவிருத்தி 144

- நீர்வை மகன்

17. நீர்வேலிப் பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைகளில் இரசாயனப் பசளைக் கிருமிநாசினிப் பயன்பாடும் நிலத்தடி நீரில் அதன் தாக்கமும் 153

- திரு. பா. ராஜ்குமார்

18. நீர்வேலியில் சமஸ்கிருதக் கல்வி வளர்ச்சி 165

- சிவஸ்ரீ. தி. மயூரகிரி

19.எமது கிராமத்தின் கூட்டுறவு வளர்ச்சி 174

- திரு. த.பரராசசிங்கம்

20.ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் 183

-திரு. க. கணேசராசா

21. யாழ்ப்பாணத் தமிழ் மந்திரிக்கு நீர்வேலியில் திருவுருச் சிலை 186

- திரு. ந. குமரசிறி

22. அழகொளிரும் நீர்வேலி 188

- செல்வன் கு.நிரோஜன்

23. நீர்வேலியின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயத் துறையின் பங்களிப்பு 190

- திரு பொ.சற்குணநாதன்

24. நீர்வேலியில் இணையத்தள வளர்ச்சி 200

- செல்வன் பூ. யசிந்தன்

25. நீர்வேலயில் பேணப்படும் வசந்தன் கூத்து 203

- திரு. செ. கஜதீபன்

**பின்னிணைப்பு 01** 207

கலைபண்பாட்டு மன்றத்தால் நடத்தப்பட்ட கலைத்திறன் போட்டி முடிவுகள்

**பின்னிணைப்பு 02** 209

நீர்வேலி பிரதேச சமாதான நீதிவான்கள்

**பின்னிணைப்பு 03** 211

நீர்வைக் குரிசில் விருது பெறும் சான்றோர்

**பின்னிணைப்பு 04** 214

கலை பண்பாட்டு மன்ற நிர்வாகக் குழு

**பின்னிணைப்பு 05** 216

கலை பண்பாட்டு விழா நிகழ்ச்சி நிரல்


வாழ்த்தியல்



# நீர்மை நிறை நீர்வேலி

சிவஸ்ரீ. கு. தியாகராஜக் குருக்கள்
(நீர்வை மணி)
நீர்வேலி.

நீர்மை நிறைந்தோர் வாழும் பதி நீர்வேலி. இவ்வூரின் கிழக்கெல்லையாக நீர் நிலையுள்ளதாலும் இது நீர்வேலி கோலவில்லி ஸ்ரீ ராமனின் பாதம் பட்ட புண்ணிய பூமி என்றும் நம்பப்படும் நீர்வில்லூரும் இதுவே அந்தணர், அறிஞர், அரசர், வணிகர், விவசாயிகள், கலைஞர், துறவியர் என்று பலரும் சிறப்புற்று வாழ்ந்த ஊர் இந்த நீரவாடிபுரம்.

இத்தகு நீரூரின் நீண்ட வரலாற்றை, பண்பாட்டை, பெருமையை இளஞ் சந்ததியும் வருங்காலமும் அறியும் வண்ணம் செய்வது நம் கடன். இதனை முன்னிட்டு, நீர்வேலியில் ஊர்ப் பிரமுகர்கள் ஒன்றாக இணைந்து கலை பண்பாட்டு விழா நடாத்துவது பெருமைக்குரியது. அதில் அவ்விழாச் சிறப்புமலராக திரு நீர்வை வெளிவருவதும் மகிழ்ச்சி தருகிறது.


வரப்புயர, நீருயரும், நீருயர, நெல்லுயரும், நெல்லுயர குடியுயரும், குடியுயர, கோனுயர்வான். என்று நன்மொழி கூறி இவற்றைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

ஏறத்தாழ ஆறாயிரத்து ஐந்நூறு பேர் வாழும் திருவுடை நீர்வையின் உயர்வை இவை பிரதிபலிக்க வேண்டும்.

மலர்வெளியீட்டிற்கு தயாரிப்பூடாகவும் கூட திரு நீர்வையாம் நீராரும் மலர் சோலை வாவி சூழ் நீர்வேலிப்பதியின் பெருமையை வெளிப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவது வரவேற்பிற்குரியது.

இம் முயற்சிகளை பாராட்டி, எம் பெருமான் கருணைக் கடவுளாகிய அழகு முருகன் அருள் சுரக்க பிரார்த்தித்து ஆசி கூறுகிறோம். □

*"எங்கும் மங்கலம் தங்கட்டும்"*



# திரு நீர்வையின் புகழ் திக்கெட்டும் பரவட்டும்

சிவஸ்ரீ. இராஜேந்திர ஸ்வாமிநாதக்குருக்கள்
பிரமகுரு
நீர்வை கந்தஸ்வாமி தேவஸ்தானம்

நீர்வேலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதரால் – அவர் போன்ற பெருமக்களால் புகழ் பெற்ற நீர்வேலியூரில் நிறைய குருமார்கள், அறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இவைகள் ஆவணமாக்கப்பட வேண்டும்.

நீர்மை (ஒழுக்கம்) மிக்க மக்கள் வாழ்ந்த – வாழ்கிறதால் நீர்வேலி என்று சொல்லப்படுகிறது நமது இல்லத்தில் தங்கி – யாழகம் எங்கும் சென்று தமிழகத்தின் புகழ் பூத்த எழுத்தாளர், பேச்சாளர் "கலைமகள்" கி. வா. ஜகந்நாத ஐயர் பணியாற்றினார் அவர்.

*"எம்மான் திருமுருகன் நீர்வேலி நின்றான் நிமிர்ந்து"*
என்று பாடியிருக்கிறார்.


என்னுடைய தந்தையார் அமரர் பிரம்மஸ்ரீ. சு. இராஜேந்திரக் குருக்கள் நீர்வேலியூரின் பல்வேறு சிறப்புக்களை நமக்கு குறிப்பிட்டிருக்கிறார். அவரோடு பேசி – பல்வேறு விஷயங்களைப் பற்றியும் ஆலோசிக்க வரும் அறிஞர்கள் ஊரின் பெருமை பேசுவதை நிறைய கேட்டிருக்கிறேன்.

ஆக, ஆன்மீக மணம் பொலிகிறதான அழகான இந்த ஊர் பற்றிய ஆய்வேடாக "திருநீர்வை" மலர் வெளிவர இருப்பது கண்டு ஊரின் மைந்தன் என்ற வகையிலும் மிக்க மகிழ்வடைகிறேன்.

எம் வழிபடு தெய்வமான கருணை வள்ளல் நீர்வைக் கடம்பக் கந்தன் அருளால் கலை பண்பாட்டு விழாவும் மலரும் சிறப்புறவும் –அவற்றி னூடே வரும் தலைமுறையினரும் பயன்பெறவும் ஆசி கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இறுவெட்டு மற்றும் இணையமும் இனிய நீர்வேலியின் புகழேந்த வாழ்த்துகிறோம். □

***திருநீர்வை நகர் வாழும் திருமால் முருகன் திருவடிகள் போற்றுதும்***



ஆசியுரை

# வரலாற்றுச் சிறப்புமிக்க பதி

**சிவ. ஸ்ரீ. சோமதேவக்குருக்கள்**
**பிரதம குரு**
**ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் கோயில்**
**நீர்வேலி.**

தொன்மையும் வரலாற்று சிறப்பும் மிக்க அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தை மத்திம இடமாகக் கொண்டு விளங்குவது நீர்வைக்கிராமாகும். நீர்வளம், நிலவளம் மிக்க பதியாக விளங்குவது. கல்விமான்கள், விவசாயிகள், தொழில் அதிபர்கள், பணிப்பாளர்கள் என பல்துறை மக்களும் சுபீட்சமாக வாழும் கிராமம் நீர்வேலியாகும். "கோப்பாய் நீர்வேலி நிறை செல்வம்" என பழைய புலவரால் பாடப்பட்ட பெருமை உடையது.

அமரர் சிற்சபேசன் புலவர், சமஸ்கிருதப் பண்டிதர் சிவங்கரப்புலவர், அத்தியார் அருணாசலம், பண்டிதர் துரைசிங்கம், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதர் முருகேசு, கந்தையா பண்டிதர், து. அருளம்பலம் ஆசிரியர், தலைமையாசிரியர் காத்திகேய ஐயர், ஆகம விற்பன்னர் பிட்சாடன குருக்கள், சோதிட நிபுணர் சுவாமிநாத இராசேந்திரக்குருக்கள், குருத்துவத்தில் தனித்துவம் பெற்ற அரசகேசரி பிள்ளையார் பிரதம குருவாக விளங்கிய கார்த்திகேய சாம்ப சதாசிவக் குருக்கள், பெரிய நடராச உபாத்தியார், சமூக சேவையாளர் கனகரத்தினம் போன்ற பெரியவர்கள் வாழ்ந்த புண்ணிய பூமியிதுவாகும்.

யாழ்ப்பாண அரசவம்சத்தைச் சார்ந்த அரசகேசரி என்ற முதல்மந்திரியால் ஸ்தாபிக்கப்பட்ட சிறப்புடைய ஆலயம் நீர்வேலியில் அமைந்திருப்பது இம்மண்ணிற்குப் பெருமை தருவதாகும்.

இம்மண்ணின் புனிதத்துவத்தையும் பெருமையையும் வருங்கால சந்ததியினரும் பேணும்வகையில் ஆற்றுப்படுத்த அரசகேசரி எம்பெருமானை வணங்கி ஆசிவழங்கி அமைகிறேன். □



# வரவேற்கத் தக்க செயற்பாடு

ஆ. சந்திரசேகரக்குருக்கள்
வாய்க்காற்றரவை விநாயகர் தேவஸ்தானம்,
நீர்வேலி.

நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் திருநீர்வை என்று ஒரு மலரை வெளியிடும் பணியானது மிகவும் வரவேற்கத்தக்கது. பண்பாடென்பது ஒரு இனத்தின் வாழ்க்கைநெறி, கலைகல்வி சார்ந்தது, தொழில்நுட்பம், கைவண்ணம் இவற்றின் பிரிவுகள் முக்கலைகளும் இதனுள் அடங்கும் நீர்வேலியில் ஒரு குறுகிய வட்டத்தை எல்லையாக கொண்டு அதற்குள் வாழும் மக்களின் கலைபண்பாடு ஆகியவற்றை நோக்குமிடத்து சிற்பம், மரம், உலோகம் ஆகியவற்றில் மிகச்சிறந்த தொழில் நுட்பகலைஞர்கள் உள்ளனர். ஓவியத்தில் சிறந்த ஓரிரு கலைஞர்கள் உள்ளனர்.

பொருண்மியம் இத்துறை விவசாயம், வயற்செய்கை பல விதவாழைகளுக்கு பேர்போன ஊர் நீர்வேலி. கல்வி ஒரு கல்லூரி மட்ட கல்விச்சாலையும் பல கலாசாலைகளும் உள்ளன. முன்பள்ிகள் பல இயங்குகின்றன. சமயம் ஒரு கிறிஸ்தவகோயிலும், நான்கு மகோற்சவகோவில்களும் பல சிறிய ஆலயங்களும் உள்ளன. ஆலயங்கள் கலாசார மையங்களாக விளங்குகின்றன. சமயபிரசங்கங்கள், கூட்டுப்பிரார்த்தனைகள் ஆகிய சிறப்பம்சமாக அமைந்துள்ளது.

மாதர்முன்னேற்றத்துக்கு சங்கங்கள் சனசமூகநிலையங்கள் செயல்படுகின்றன. ஒரு சிறந்த கல்யாணமண்டபமும் சிறப்பாக அமைந்துள்ளது.

ஔவையார் "வரப்புயர என்றது போல்" "திருநீர்வை" மலர் வாழ்க அதனுள் அடங்கும் மக்கள்கலைஞர்கள் வாழ்க திரு என்ற லட்சுமி நீர்வைக்குமுன் அமைந்ததனால்மலரும் மக்களும் என்றும் சிறந்து வாழ்க. □




# முத்தமிழ் வளர்க்கும் திருநீர்வை

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.
நல்லை ஆதீன குருமுதல்வர்.

நீர்வேலிப்பிரதேசத்தின் கலை பண்பாட்டு மன்றம் இன்று திருநீர்வை என்னும் மலர் வெளியிடுவது மனமகிழ்ச்சியைத் தருகின்றது. இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழை சிறப்புற வளர்த்த பெருமை நீர்வேலி பிரதேசத்தினை சாரும். ஒரு இனத்தின் செயற்பாட்டை வெளிப்படுத்துவது கலையும் பண்பாடும் ஆகும். இதனை நெறிப்படுத்திய நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் இன்றைய கால சூழ்நிலையில் எல்லோரையும் இப்பணியில் ஈடுபட விழா எடுத்து தான் பெற்ற இன்பத்தினை மற்றவருக்கும் கொடுப்பது மனித நேயம் ஆகும்.

கலை இன்பத்தில் உயிரினத்தை தன்வசப்படுத்துவது கலைக்கு இசையாக உயிர் இன்பம் இல்லாதது ஆகும். இதனை இசை இன்பமே கலை இன்பம் என போற்றுவர். இப்பணியை செய்கின்ற நீர்வேலி கலைமக்களையும் ஊக்கம் கொடுக்கின்ற அனைத்து அன்பு உள்ளங்களையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். இன்று வெளிவரும் திருநீர்வை என்னும் மலரை வெளியிடும் ஆசிரியரையும் மன்றத்தின் பணிகள் தொடர்ந்து நடைபெறவும் இறைவனுடைய திருவருள் கிடைக்க பிராத்திக்கின்றோம். கலை பண்பாடுவாழ, அனைவரும் செயற்படுவோமாக. □

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"





# கலையால் இறைவனைப் புகழ்

அருட்தந்தை ஆ.யூட்நிக்சன்,
பங்குத்தந்தை,
பரலோக மாதா ஆலயம்,
நீர்வேலி.

மனிதன் இயற்கையிலேயே கலை வளம் உள்ளவன். இறைவன் தனது சாயலாகவும், பாவனையாகவும் மனிதனை படைத்து தனது ஆற்றல்களை மனிதனோடு பகிர்ந்து கொண்டார் என்று சொன்னால் மிகையாகாது. எனவே, கலையால் இறைவனின் மகிமையை எடுத்துரைக்க வேண்டும் என்பது மனிதனின் கடமையும் உரிமையுமாக உள்ளது. ஆகவே, மனிதன் தனது ஆற்றல்கள், திறமைகள் ஒவ்வொன்றையும் பயன்படுத்தி அவற்றை வளர்த்து இறைவனை மகிமைப்படுத்த வேண்டும்.

பண்பாடு, கலாசாரம், வாழ்க்கைமுறை, மொழி, இசை, இயல், நாடகம் போன்றவை கலையினுள் உள்ளடக்கப்படுவது மட்டுமன்றி ஒன்றோடு ஒன்று தொடர்பு பட்டதாகவும் உள்ளது. இன்று அருகிப் போகின்ற கலை, பண்பாடு விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டியனவாயுள்ளன. இவற்றின் வழியே பண்பாட்டுப் பிறழ்வைத் தடுக்கலாம்.

இன்றைய சூழலில் பல்வேறு மட்டத்திலும் கலாசார விழிப்புணர்வு உண்டாக வேண்டும். அதிலும் கூடுதலாக பாடசாலை மாணவர்கள், இளையோர் மத்தியில் கலாசார விழிப்புணர்வுத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.

இந்த அடிப்படையில், நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் நடாத்தும் கலை பண்பாட்டு விழா – 2011 மிகப்பயனுடையதாக இருக்கும். இவ்வாறான செயற்பாடுகள் ஊர்கள் தோறும் முன்னெடுக்கப்பட வேண்டும். இவை கலாசாரப் பேணுகைக்கும், பண்பாட்டுத் தூய்மைக்கும் உதவும்.

இப்படியான விழாக்கள் நமக்குத் தேவை என்பதை உணர்ந்து நடாத்தும் ஒருங்கமைப்பாளருக்கு நன்றி கூறுகிறேன். இறைவனுடைய ஆசிகளும் பரலோக மாதாவின் பரிந்துரையும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.□



**வாழ்த்துரை**

# நீர்வையூரவர்கள் வரலாற்றுணர்வு மிக்கவர்கள்

திருமதி இமெல்டா சுகுமார்
அரச அதிபர்,
யாழ். மாவட்டம்.

யாழ்ப்பாணத்தின் தொல்பதிகளுள் ஒன்றாக இலங்கும் நீர்வைக் கிராமம், தனது சிறப்பாளுமைகளை வெளிக்காட்டும் விதத்தில் கலைபண்பாட்டு விழா எடுப்பதையும் திருநீர்வை மலர் தொடுப்பதையுமிட்டுப் புளகாங்கிதம் அடைகின்றேன்.


தமிழருடைய பண்பாடு புறக்கோலத்தில் மாத்திரம் அழகையும் அமைதியையும் கொண்டிருக்கவில்லை. அதனையும் கடந்து அகக் கோலத்திலும் அழகைக் கொண்டிருக்கிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற மனநிலை வளர்ச்சி உலக சகோதரத்துவத்தை எம்முள் விதைக்கிறது.

கலையைத் தெய்வீகமாக அனுபவிப்பது தமிழருடைய பண்பாடு. கலையை இரண்டு நிலைகளில் தமிழர் நோக்கினர். கலையைத் தன் உள்ளக்காட்சியாகக் காணும் நிலை ஒன்று. இது அவனுக்கேயுரிய தற்கிழமைப் பொருளாக விளங்குகின்றது. கலையைப் பிறர் இரசிக்கத்தக்க ஆற்றுகையாக வெளிப்படுத்துவது மற்றையது. இது எல்லோராலும் அனுபவிக்கப்படக் கூடிய நிலையை ஏற்படுத்திக் கொடுக்கிறது. அதாவது பிறிதின் கிழமையாய் எல்லோருக்கும் உரியதாகின்றது. இவ்விரண்டு நிலையையும் அனுபவிக்கத் துணிந்துள்ள நீர்வைக் கலைஞர்களையும் நூல் வெளியீட்டாளர்களையும் ஆற்றுப்படுத்தும் பிரதேச செயலரையும் மற்றும் தொடர்புடைய யாவரையும் வாழ்த்துகின்றேன்.

எமது சூழலில் பெருகியுள்ள தொடர்பு சாதனங்களின் பெருக்கம் கலை, பண்பாடு என்ற தளங்களின் வேரைக்கூட அரித்துவிடுமோ? என்கிற அச்சத்தை ஏற்படுத்துவதாகக் கருதுகின்றனர். கிராமியத் தளங்களில் பண்பாட்டு விழாக்கள் மேற்கொள்ளப்படுவது இத்தகைய பகைப்புலத்திற்குப் பரிகாரமாக அமையும். இதனாலேயே வலி. கிழக்குப் பிரதேச செயலகத்தினர் கிராமிய மட்டப் பண்பாட்டு விழாக்களை ஆற்றுப்படுத்தி வருகின்றனர். சிறுப்பிட்டி, கோப்பாய் என ஆரம்பித்து தற்போது இவ்விழா நீர்வேலியில் இடம்பெற இருக்கிறது.

நீர்வையூரவர்கள் வரலாற்றுணர்வு மிக்கவர்கள். அரசகேசரிப் பிள்ளையார் கோவிலுடன் தொடர்புடைய யாழ்ப்பாண அரசவம்சத்தவனாகிய அரசகேசரிக்குச் சிலை அமைத்து இவர்கள் தமது வரலாற்றுணர்வை வெளிக்காட்டியிருந்தனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டு அரசகேசரிக்கு முதல் வணக்கம் செய்யும் வாய்ப்பும் எனக்குக் கைகூடியிருந்தது. இத்தகைய வரலாற்றாவணப்படுத்தலாகவே திருநீர்வை மலரையும் நோக்குகின்றேன்.

மலர் மணம் வீசவும் விழாப் பொலிவுபெறவும் நல்வாழ்த்துக்கள்.□



வாழ்த்துரை

# தொல்தமிழ்ச்சீர்ப் பண்பாட்டின் வெளிப்பாடு

திரு. ம. பிரதீபன்
வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர்,
கோப்பாய்.


"யாதானும் நாடாமால் ஊராமால்" என்பது வள்ளுவர் காட்டிய உலக ஒருமைப்பாடு. இதனாலேயே தமிழ்ப் பெருங்குடியினர் "திரைகடல் ஓடித்" தமிழ்ப் பண்பாட்டை உலகப்பண்பாடாக அடையாளப்படுத்தியுள்ளனர். இத்தகைய உலக நோக்கினால் சேக்கிழார் தமது காப்பியத்தை "உலகெலாம்" என ஆரம்பித்து "உலகெலாம்" என நிறைவு செய்கின்றார். "அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" எனத் தம் காலத்திற்கும் தம் நாட்டிற்கும் அப்பாற்பட்டவர்களது காலில் பணிகிறார் சுந்தரர். இத்தகைய தொல் தமிழ்ச் சீர்ப்பண்பாட்டின் சொந்தக்காரராக விளங்கும் நாம், அதன் வேரின் இருப்பை நிலைநிறுத்தும் சிறு முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இதன் வெளிப்பாடுகளில் ஒன்றே கிராமிய மட்டப் பண்பாட்டு விழா ஆகும். சிறுப்பிட்டி, கோப்பாய் என ஆரம்பித்துத் தற்போது இவ்விழா நீர்வேலியில் இடம்பெறுவது மகிழ்ச்சிக்குரியது.

நீர்வை எனவும் நீரவாடிபுரம் எனவும் அழைக்கப்படும் இக்கிராமம் பெயருக்கேற்ற பண்புகள் நிரம்பப்பெற்றது. கிணறுகளில் உள்ள தேன் சுவை நீர் இக்கிராமத்தவரின் மனங்களுக்கு ஒப்பானது. நீரால் எல்லை அமைத்துள்ள ஊரவர்கள் அல்லவா? நீர்மை என்பது ஒழுக்கம் என்ற பொருளையும் வேலி என்பது ஊர் என்ற பொருளையும் கொள்ள ஒழுக்கத்தின் சான்றோர் மேவும் பதி எனப் பொருள் கொள்ள முடிகின்றது.

யாழ்ப்பாண அரசவம்சக் காப்பியப் புலவனாகிய அரசகேசரியுடன் தன்னைத் தொடர்புபடுத்தியும் நீர்வைக் கிராமம் பெருமை பெறுகின்றது. அந்தப் புலமைசார் இருப்பின் தொடர்ச்சி சங்கர பண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர் எனச் சிறப்புற்று இன்றும் நிலைபெற்று வருகின்றது.

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் விவசாயத்துறையிலும் கைத்தொழில் துறையிலும் நீர்வைக் கிராமம் முதன்மை பெற்றுள்ளது. எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள நீர்வையூரர், கலைபண்பாட்டு விழா எடுத்தும் திருநீர்வை மலர் தொடுத்தும் தமது இருப்பைப் பறைசாற்றுகின்றனர்.

இவர்தம் முயற்சிகளுக்கு எனது நல்வாழ்த்துக்களை நவில்வதோடு விழாவை அர்த்தமுடையதாக்க அரும்பாடுபடும் கிராம அலுவலர்களையும் விழாக் குழுவினரையும் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.□



**வாழ்த்துரை**

# என் அன்னை மண்ணின் பெருவிழா


**திரு. வே. கா. கணபதிப்பிள்ளை**
**அதிபர்,**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**


யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்றுப் பெருமை மிக்க பதிகளுள் எங்கள் நீர்வேலியும் ஒன்று. கமக்காரரும் கைத்தொழில் வினைஞரும் ஒன்றாக வாழும் புண்ணிய பூமியாக இப்பதி விளங்குகின்றது. சைவம், தமிழ் என்பவற்றை தம் இரு கண்களாகக் கொண்ட மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.


நீர்வேலியின் பெருமைகள் குறித்து இளைய தலைமுறையினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நீரவேலி கலை பண்பாட்டு மன்றம் விழா எடுப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். சமூக, அரசியல் மாற்றங்களால் பண்பாட்டு அடையாளங்கள் மறக்கப்பட்டோ அன்றி மறைக்கப்பட்டோ விடும் அபாயம் எதிர்நோக்கப்படுகின்றது. இத்தகைய ஆபத்தில் இருந்து எமது கிராமும் தப்ப முடியாது. இந்நிலையில் இவ்விழா மிகுந்த கவன ஈர்ப்பைப் பெறுகின்றது.

நீர்வையின் நீர்ச்சுவையே ஒரு தனிச் சுவை. பசியாற்றவல்ல அருமருந்து அது. வயல்வெளிகள் புற்றரைகள் குளங்கள் என அமைந்த இயற்கை அழகு எந்தக் கிராமத்திற்கும் கிடைக்காத அரிய பொக்கிஷம்.

கிராமந் தோறும் பண்பாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்ற உயரிய நோக்கில் கோப்பாய் பிரதேச செயலர் திரு.மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் கிராம மட்டப் பண்பாட்டு விழாக்களை ஆற்றுப்படுத்தினார். இதன் முதல் விழா இவ்வாண்டின் தொடக்கத்தில் சிறுப்பிட்டிக் கிராம விழாவாக எனது தலைமையில் இடம்பெற்றது. இதன் தொடர்ச்சி கோப்பாய் பிரதேச விழாவாக அமைந்தது. இன்று எங்கள் பிறப்பகமான நீர்வேலிமண் விழாக்கோலம் கொள்கின்றது.

நீர்வேலிப் பிரதேச விழாவை முன்னெடுக்கும் கலை பண்பாட்டு மன்றத்தினருக்கு நல்வாழ்த்துக்களை நவில்வதில் மகிழ்வடைகின்றேன். கிராம அபிவிருத்தி பற்றிய அருட்டுணர்வை இவ்விழா ஏற்படுத்த வேண்டும். எங்கள் கிராமத்தில் முன்னர் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை சிறப்பாகச் செயற்பட்டது. இதனால் பலர் வேலைவாய்ப்பைப் பெற்றனர். இத்தகைய தொழில் வாய்ப்பை நல்கும் கைத்தொழிற் சாலைகள் கிராமத்தில் உதயமாவது நலமுடையதாக அமையும்.

கிராமத்தின் பெருமைகளைப் பறைசாற்றும் திருநீர்வை மலர் மணம்பரப்ப எனது நல்வாழ்த்துக்கள். □



வாழ்த்துரை

# அடையாளங்களை ஆவணப்படுத்தும் முயற்சி

திரு.ச. குகதாஸ்
கணக்காளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

எமது தாய் நிலத்தின் பெருமைகளைச் சுமந்தவாறு மலரும் திருநீர்வை மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

சிவசங்கரபண்டிதர் சிவப்பிரகாச பண்டிதர் போன்ற புலமைசார் கல்வி மரபின் ஊற்றாக முகிழ்த்த எங்கள் கிராமம் இன்றும் இளையோரது ஆளுமையாலும் ஆற்றலாலும் பொலிவு பெறுகின்றது.

யாழ். குடாநாட்டில் விவசாயமும் கைத்தொழிலும் ஒருங்கே வளரும் கிராமம் என யாவரும் நீர்வேலியையே சுட்டுவர். அழகான தோட்டவெளிகளும் குளங்களும் மேய்ச்சல் நிலங்களும் எம்மூரின் அழகிற்கு அழகு சேர்க்கின்றன. கிராமத்தின் தனித்துவங்களை மறக்கும் சமூகம் எதிர்கால இருப்பிற்குரிய ஆதாரத்தையும் இழந்து விடுகின்றது. பூகோளக் கிராமம் என்ற எ்ண்ணக்கருவுக்குள் கிராமங்கள் தமது தனித்துவங்களை இழத்தல் என்பது தவிர்க்கவியலாதது. ஆயினும் எமது அடையாளங்களை ஆவணப்படுத்துவதற்கு பண்பாட்டு விழாக்களும் மலர் வெளியீடுகளும் பேருதவி புரியும் என நம்பலாம்.

எனது தந்தையார் கிராமத்தின் கல்விப் பயிர் வளர்த்தவர்களுள் ஒருவர். கிராமத்தின் உயர்ச்சிபற்றிய சிந்தையுடன் இறுதி மூச்சுவரை செயற்பட்டார். அவரது வழிப்படுத்தல் எம்மையும் அத்தகைய சிந்தையில் வாழ வைக்கின்றது. இந்நிலையில் வரலாற்றுச் சிறப்புமிக்க பண்பாட்டு விழாவை முன்னெடுக்கும் விழாக் குழுவினருக்கு எனது நன்றியையும் நல்வாழ்த்துக்களையும் நவில்வதில் மகிழ்வடைகின்றேன்.

கிராமத்தின் பெருமைகளைச் சுமந்தவாறு திருநீர்வை மலரும் அழகொளிரும் நீர்வேலி என்ற இறுவட்டும் வெளிவருகின்றன. இப்பணிகளில் ஈடுபட்டு உழைக்கும் உள்ளங்களை ந்ன்றியுடன் கரம்பற்றிக் கொள்கிறேன். நல்வாழ்த்துக்கள். □

வாழ்த்துரை



# எங்கள் கிராமம் நீர்வேலி

த. ந. பஞ்சாட்சரம்
ஓய்வுநிலை ஆசிரியர்.
நீர்வேலி.

யாழ்ப்பாணம் – வலிகாமம் கிழக்கில் உள்ள ஊர்களில் ஒன்று. "நீர்வேலி, கோப்பாய், நிறை செல்வமாவாய்" வழி மொழியாய் வந்த நாடோடிப் பாடல் ஒன்றின் ஒருவரி! "யாதும் ஊரே! யாவரும் கேளிர்" இது சிந்தனைக்கும் சமூக வளர்ச்சிக்கும் உரிய கூற்று.

எமது கிராமம் ஏனைய கிராமங்கள் போன்று நீர்வளம், நிலவளம், சூழநான்கு பதினெண் குடிகளும் ஒற்றுமையாக வாழும் கிராமம். விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டு வளம் காணும் கிராமம். ஒரு கிராமத்திற்கு வேண்டிய சிறப்புக்கள் அனைததும் யாதுமோர் குறைவின்றி ஆலயங்கள், கல்விக்கூடங்கள், நூலகங்கள், சமூக நிலையங்கள், கூட்டுறவு, தனியார் தபால், தந்தி வசதிகள் என எல்லாம் அமையப்பெற்ற கிராமம்.

அமரர் ஸ்ரீ சிவசங்கரபண்டிதர், சிவபபிரகாசபண்டிதர் ஆகியோர் எமக்கும் எம் இனத்துக்கும் பெருமையளித்த எம் முன்னோர் அவர்கள் வழியேகி எம் சமூகத்தில் தம் தனித்துவ முத்திரையை, ஆளுமையைப் பதித்தவரே அமரர் முதலியார் அத்தியார் அருணாசலம் ஆவார். அவர் நிறுவிய கல்லூரி என்றும் அவரின் சிறப்பிற்கும் சேவைக்கும் கட்டியம் கூறிக்கொண்டேயிருக்கும். ஆயிரத்தில் ஒருவர் என்ற தனி மனிதன் பலர் அறிந்த பரமன்.

எமது கிராமத்தில் காலந்தோறும் மகத்தான பணியாற்றியோர் பலர் உளர். அவர்கள் பற்றி ஒரு தனி நபர் எழுதக்கூடிய பணியன்று. அதற்கென ஒரு குழு உருவாக்கப்பட்டு அவர்களின் உண்மையான வரலாறு எழுதப்படின் எதிர்காலத்திற்கு பிரயோசனமாக இருக்கலாம். பழமை மறவாது புதுமை சமைத்து நற்பிரஜைகளாக ஆக்கத்துடனும், ஊக்கத்துடனும் உழைத்து எம் இனம், மதம், மொழி வளர வாழ்வோமாக. சென்ற மூன்று தசாப்தத்தில எம்மைப் பீடித்த தீரா உள, உள்ள நோய்களுக்கு மேலும் ஆளாகாதிருக்க இறையருள் வழிசெய்யப் பிரார்த்திப்போமாக. □

வாழ்த்துரை



# நல்லாற்றுப்படுத்தலுக்கான அத்திபாரம்

திருமதி. ஜெயந்தா சோமராஜ்
செயலாளர்,
வலி கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நீர்வேலி கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள "நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம்" தமிழிற்கே உரித்தான பண்பாட்டினையும் விழுமியங்களையும் கட்டிக் காப்பதில் காட்டும் ஆர்வமானது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

இது போன்று எமது பிரதேசத்தில் பல மன்றங்கள் உருவாக கல்வி மான்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன் பாரம்பரிய கலைகள் ஒரு போதும் அழிந்து விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது கலைஞர்கள் போற்றப்பட வேண்டியவர்கள் மட்டுமல்லாது பாராட்டப்பட வேண்டியவர்களும் ஆவர்.

இப்படிப்பட்ட மன்றங்கள் மூலம் இளம் சமுதாயத்தினரிடம் காணப்படும் மேலைத்தேய மோகங்களினையும் பண்பாடுகளையுமு: நுள்ளிவிட்டு ஒழுக்கங்களை நிலைநாட்ட முடியும் என்பதோடு மாணவர்களிடையே நன்னெறிப்படுத்தல்களையும் உருவாக்க முடியும் என்று நினைக்கின்றேன்.

மேலும் இம் மன்றமானது "திருநீர்வை" எனும் மலரினை வெளியீடுவதையிட்டு மனம் நெகிழ்வதுடன் இதற்கு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கின்ற மலர்க்குழுவினருக்கும் மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் இவ் விழாவின் மலர் சிறப்பாக அமைய மனமார வாழ்த்துகின்றேன். □





# மனிதத்துவம் வளர்க்கும் கலைகள்


அ. மிலாசினி
கலாசார உத்தியோகத்தர்,
வலி. கிழக்கு பிரதேச செயலகம்,
கோப்பாய்.

நீர்வேலி கிராம மக்களினால் முன்னெடுக்கப்படும் கலாசார விழாவின் போது வெளிவரும் இம் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதனை முன்னிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

நீர்வைப்பதி சான்றோர் வாழ்ந்த, வாழும் பெருமைக்குரியது. கலைகளை வளர்க்கும் புண்ணிய பூமி. இத்தகு பதியில் பெருவிழா இடம்பெறுவது மகிழ்ச்சியைத் தருகிறது.

கைத்தொழில், விவசாயம் என்பவற்றில் சிறப்புப் பெற்ற நீர்வை மக்கள் கலைகளிலும் சிறப்புப் பெற்று விளங்குகின்றனர். பாரம்பரியக் கலைகளான கூத்து, ஒயிலாட்டம் போன்றவை இன்றும் நீர்வேலியில் உயிர்ப்புடன் பேணப்படுகின்றன.

மனிதனை மனிதனாக வாழ வழி சமைப்பது கலைகள் என்றால் மிகையாகாது அழியாத தன்மை கொண்ட கலைகளே மனிதனை பண்படுத்தவும் பூரணப்படுத்தவும் வழிசமைக்கின்றன. அது மனித வாழ்வை செம்மைப்படுத்தும் பெரும் பொறுப்பைச் சுமந்துள்ளது அந்த வகையில் கலைகள் போற்றிப் பேணப்பட வேண்டியவை. இவை குறித்து கலைஞர்கள் ஆற்றுகின்ற பணி உன்னதமானவையும் வரவேற்கத்தக்கவையுமாகும் கலைகளின் ஆற்றலும் ஆளுமையும் போற்றப்படவேண்டியதன் அவசியம் கருதியே இக்கலாசார விழா கொண்டாடப்படுகின்றது. இந்த விழாசிறப்பாகவும் பயனுள்ளதாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன். □



## மன்றத்தலைவரின் இதயத்திலிருந்து . . .

**இரா. குணநாதன்**
**தலைவர்.**
**நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம்**
**நீர்வேலி.**

கலை பண்பாட்டு அம்சங்கள் மனித வாழ்வியலோடு பின்னிப்பிணைந்தவை. மனிதன் தோன்றியதிலிருந்து கலை அம்சங்களும் பாண்பாட்டு விழுமியங்களும் அவனுள்ளத்தில் தோன்றி விடுகின்றன.

ஆனால் காலப்போக்கில் சூழலியல் தொடர்புகளால் அவை சிதறடிக்கப்படுவதுமுண்டு. 21 ஆம் நூற்றாண்டின் சூழலியல் தொடர்புகள் பாரம்பரிய கலை பண்பாட்டு அம்சங்களை மழுங்கடிக்கச் செய்துவருவது நாம் அனைவரும் கண்டுணரும் உண்மையாகும்.

இத்தகைய நிலைமையில் நீர்வேலி கிராமத்தின் கலை பேணி பண்பாட்டு அம்சங்களை பாதுகாப்பதுடன் கடந்தகால – நிகழ்கால சிறப்புக்களை மிளிரச் செய்யும் நோக்கோடு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ஸ்ரீமான் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் சிந்தனை ஊற்றால் உதயமானதே கிராம ரீதியான கலைபண்பாட்டு விழாவாகும்.

அந்தவகையில் அமைக்கப் பட்டதே "நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம்" ஆகும். நீர்வேலி கிராம மக்கள் அனைவரும் மன்றத்தின் தோற்றத்திற்கு உரமூட்டி அதன் எழுச்சிக்கு வித்திட்டுள்ளார்கள். இம் மன்றத்தின் செயற்பாடுகள் இத்துடன் நின்று விடாது தொடர்ந்தும் செயற்பட்டு கிராமத்துக்குப் புகழ் சேர்க்க வேண்டுமென விரும்புகின்றேன்.


நீர்வேலி கிராமம் வாழ்வியல் கலைகளுக்கும் நீண்ட பாரம் பரியத்தைக் கொண்ட கிராமமாகும். கைவினைத் தொழில்களில் கைதேர்ந் தவர்கள் நீர்வேலி கிராமத்தவர்கள். அத்துடன் நாடகம், நடனம், கூத்து, கோலாட்டம், வசந்தன் முதலான கலை அம்சங்களுக்கும் இக் கிராமம் பெயர் பெற்றது. பேரறிஞர்கள் வாழ்ந்து இலக்கண, இலக்கியத்துறைகளையும் புகழ்பெறச் செய்துள்ளனர்.

ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர், முதலியார் அத்தியார் அருணாசலம், கு. சிற்சபேசன் என்ற வகையில் பல அறிஞர்கள் இம்மண்ணில் வாழ்ந்து கலை இலக்கியத் தொண்டும் சமூகத்தொண்டும் ஆற்றி நீர்வேலிக் கிராமத்தின் எழுச்சிக்கு வித்திட்டுள்ளனர். இவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்த மூத்த தமிழ்ப்பேரறிஞர் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் ஐயா அவர்களின் பெயர் கொண்ட அரங்கில் கிராமத்தின் மத்தியில் இந்த விழா நடைபெறுவது சாலவும் பொருத்தமானதே.

மதம், மொழி, பிரதேசம் என்ற வகையில் கலை பண்பாட்டு அம்சங்கள் வேறுபடுவதுண்டு. இந்த வகையில் நீர்வேலிக் கிராமத்துக்கென தனித்துவமான கலை பண்பாட்டு அம்சங்கள் உண்டு. இம் மன்றத்தின் உதயத்தின் ஊடாக அவை புத்துயிர் பெற்று மீண்டெழுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. அத்துடன் எதிர்காலச் சந்ததியின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் மன்றம் கைகொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த வகையில் மன்றத்தின் ஆலோசகர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் மன்றத்தின் பல்வேறு செயற்பாடுகளையும் நெறிப்படுத்தி வழிப்படுத்திய அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். குறிப்பாக கிராம அலுவலர்களான திரு. சு. சண்முகவடிவேல் (நீர்வேலி தெற்கு), திரு. சு. அல்பிரட் (நீர்வேலி வடக்கு), செல்வி குணசீலி (நீர்வேலி மேற்கு) ஆகியோரின் எல்லை கடந்த சேவைகள் என்றும் நினைவில் கொள்ளத்தக்கன.

பொற்குவை தந்தோர், காசுகள் தந்தோர், பொருள் வளம் தந்தோர், சேவைகள் புரிந்தோர், விளம்பரம் தந்தோர், உடல் வளம், சிந்தனை வளம் தந்தோர் என்ற வகையில் அனைவரது கூட்டு முயற்சியின் அறுவடையே "கலை பண்பாட்டு விழா" ஆகும். நிகழ்காலத்தில் கிராமத்தின் புகழ்பெற்ற இந்நிகழ்வுக்கு என்னை தலைவராக தெரிவு செய்த அனைவருக்கும் விழாச்சிறப்புற அமைய உதவிய அன்பர்களுக்கும் என் இதயநன்றிகளைத் தெரிவித்து விழா சிறப்படைய எல்லாம் வல்ல அரசகேசரி பிள்ளையாரின் பாதாரவிந்தங்களைப் பணிந்து இறைஞ்சுகின்றேன். □



பதிப்புரை

# காகிதப் பூக்களால் ஒரு படையல்

ச. லலீசன்
(நீர்வைக்கிழார்)
பதிப்பாசிரியர்.

அன்னை மண்ணின் பெருமைகளோடு மலர்கின்றது திருநீர்வை.

நீர்வேலி கலைபண்பாட்டு மன்றச் சிறப்பு மலராக – தாயகமணங்கமழும் காகிதப் பூவாக திருநீர்வை உங்கள் கைகளில் தவழ்கின்றது.

நாம் யார்? நமது பெருமைகள் என்ன? என்ற விசாரணை இன்று எம்மவரிடையே ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல அறிகுறி.

வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் எம் சமூகம் போதிய அக்கறை காட்டாததன் விளைவாகச் சமூக ரீதியாகப் பல பின்னடைவுகளைச் சந்தித்து விட்டோம். இனிவருஞ் சந்ததியினர் மத்தியில் இத்தகைய குறைகளுக்கு இடமிருக்கக் கூடாது என்ற நோக்கில் நீர்வேலி பற்றிய சமகாலப் பதிவாக இம்மலர் வெளிவருகின்றது.

நீர்வேலிக் கிராமம் யாழ்ப்பாண மன்னர்களுடன் தொடர்புபட்ட சிறப்பிற்குரியது. இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் இராஜ வீதியும் அரசகேசரி நீர்வேலியுடன் கொண்டிருந்த தொடர்பும் இதனை உறுதிப்படுத்துகின்றன. அன்று முதல் சான்றோர் பலரையுடைய தொல்பெரும் பதியாக எங்கள் திருவூர் அமைந்திருக்கிறது.

கைத்தொழிலும் விவசாயமும் ஒன்றிற்கொன்று ஈடாகச் சிறப்புற்றுள்ளன. நீர்வேலி என்றதும் கத்தி, பூட்டு வாழைப்பழம் போன்றவை ஞாபகத்தில் உதயமாவது இயல்பே.

தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்த உறவுகளிற் பலர் இன்றும் எம்மைப் பற்றிய பிரக்ஞையுடன் வாழ்கின்றனர். இவர்தம் ஆக்கங்களும் திருநீர்வையில் பிரசுரமாகியுள்ளன.

"திருநீர்வை" மூன்று இயல்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதி வாழ்த்தியலாக அமைகின்றது. இரண்டாவது பகுதி பொதுவியல். இங்கு நீர்வேலிக் கிராமத்தைச் சார்ந்தவர்கள் தமது எழுத்துகளைப் பதிவு செய்துள்ளனர். நிறைவுப் பகுதி பதிவியலாக அமைந்துள்ளது. கிராமம் தொடர்பான ஆக்கங்கள் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

இம்மலர் வெளியீட்டிற்காக ஆக்கமும் ஊக்கமும் நல்கியோர் பலர். கிராமத்தின் மூத்தவர்களாக – இன்று நீர்வைக் குரிசில் விருதுக்குரியவர்களாக விளங்கும் நீர்வைமணி சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்களதும், சமூகஜோதி த.பரராஜசிங்கத்தினதும் வழிகாட்டல்கள் எமது பயணத்தை இலகுவாக்கிற்று.

பிரதேச செயலர் திரு. ம. பிரதீபன், மன்றத் தலைவர் திரு. இ.குணநாதன், செயலர் திரு. சு. சண்முகவடிவேல் எமது சீரிய பயணத்திற்கு நாவாயாய் அமைந்தனர். பிரம்மஸ்ரீ. தி.மயூரகிரி சர்மா எனது வலக்கரமாக அமைந்து மலராக்கப் பணியில் தன்னை இணைத்தார்.. ஷாம்பவி பதிப்பக உரிமையாளர் திரு சீ.புவீந்திரனின் அர்ப்பணிப்பும் மலர் முகிழ்ப்பிற்கு உறுதுணையாயிற்று. மலர்க் குழுவினர் வேண்டிய உதவிகளை வழங்கி உத்வேகமளித்தனர்.

எமது விழாவை முன்னெடுப்பதற்காகக் குறித்தொதுக்கப்பட்ட திகதிகளில் எமது சக்திக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளால் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் மலர் வெளியீட்டிற்குரிய ஆக்கங்களைச் சேகரிப்பதிலும் அவற்றைப் பேணுவதிலும் சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. இதனால் திருநீர்வையில் சில ஆக்கங்களை முழுமையாகப் பிரசுரிக்க இயலவில்லை. சில ஆக்கங்களில் உள்ள தகவல்கள் முழுமை பெறவில்லை.

பொது அமைப்புச் சார்ந்த நிலையில் நீர்வேலி குறித்து வெளியாகும் முதலாவது மலர் என்பதைக் கருத்திற் கொண்டு குற்றங்கள் களைந்து குணங்களை நம்மூரவர் நாடுவர் என்ற நம்பிக்கை நம்முள்ளே இருக்கிறது. எம் அன்னை மண்ணின் பெருமையை எடுத்தியம்பும் மலருக்குப் பதிப்பாசிரியராகத் தொழிற்படும் வாய்ப்பு என்வாழ்வில் கிடைத்த தவம். அத்தெய்வத்திருவாய்ப்பு என் வாழ்வில் கிடைத்த பேறு.

மலர்ச் செழுப்பிற்கு ஊற்றுக்காலாக ஆக்கங்கள் நல்கிய அனைவரையும் நன்றியுடன் பணிகின்றோம். அன்னைமண்ணின் செழிப்பிற்காய் அனைவரும் உழைப்போம். □

# நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் - நிர்வாகக் குழு



இருப்போர் (இ-வ): திருமதி. ரு. ஆனந்தவேல், திரு. இ. குணநாதன், திரு. ம. பிரதீபன், சிவஸ்ரீ. கு. தியாகராஜக் குருக்கள், திரு. த. நடராசா, திரு. சி. தர்மரத்தினம், திரு. பொ. காசிநாதன், செல்வி. தி. குணசீலி

நிற்போர் (இ-வ) : திரு. சி. பகவத்சிங்கம், திரு. ச. க. முருகையா, திரு. பொ. சரவணபவானந்தன், திரு. சு. அல்பிரட், திரு. ச. குணபாலசிங்கம் திரு. ச. லலீசன், திரு. வீ. சிவஞானம், திரு. க. சுந்தரலிங்கம், திரு. ந. ஜெயகிஸ்ணன், திரு. சு. சண்முகவடிவேல், திரு. பூ. கஜன், திரு. செ. கஜதீபன்,

# நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் - ஆலோசனைக் குழு



இருப்போர் (இ-வ): திரு. இ. குணநாதன், திரு. ம. பிரதீபன், சிவஸ்ரீ. கு. தியாகராஜக் குருக்கள், சிவஸ்ரீ. ஆ. சந்திரசேகரக்குருக்கள்,
நிற்போர் (இ-வ) : திரு. பொ. சிவாநந்தன், திரு. க. தர்மலிங்கம், திரு. த. பரராசசிங்கம்

# நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் - நிகழ்ச்சி ஒருங்கிணைப்புக் குழு



இருப்போர் (இ-வ): திருமதி. பு. சித்திரா, திரு. இ. குணநாதன், திரு. ம. பிரதீபன், திரு. க. வைரவநாதன், திரு. ந. சிவசுப்பிரமணியம், திரு. செ. சிவஞானசுந்தரம், செல்வி. அ. வினோதா

நிற்போர் (இ-வ) : திரு. க. நாகரத்தினம், திரு. சி. நிரோஜன், திரு. ந. குமரசிறி, திரு. க. கருணேசன், திரு. செ. தர்மராஜா, திரு. ம. சிவாநந்தன், திரு. பொ. அமுதலிங்கம், செல்வி. த. சங்கீதா

# பிரதேச செயலர், தலைவர், கிராம அலுவலர்கள்



(இ-வ): செல்வி. தி. குணசீலி (கிராம அலுவலர், நீர்வேலி மேற்கு), திரு. ம. பிரதீபன் (பிரதேச செயலர், காப்பாளர்), திரு. இ. குணநாதன் (தலைவர்),
திரு. சு. சண்முகவடிவேல் (கிராம அலுவலர், நீர்வேலி தெற்கு), திரு. சு. அல்பிரட் (கிராம அலுவலர், நீர்வேலி வடக்கு).

# நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் - மலர்க் குழு



இருப்போர் (இ-வ): செல்வி. தி. குணசீலி , திரு. இ. குணநாதன். திரு. ம. பிரதீபன். திரு. ச. லலீசன். திரு. து. எங்கரசு.
திருமதி. வி. மகிந்தினி

நிற்போர் (இ-வ) : பிரம்மஸ்ரீ. தி. மயூரகிரிசர்மா. திரு. சு. சண்முகவடிவேல். திரு. சு. அல்பிரட்.



# பொதுவியல்

நீர்வையூரரின் ஆக்கங்கள்

சிறுகதை



# அன்றில் பறவைகள்

நீர்வை பொன்னையன்

விருந்து
ஒடியற்கூழ் விருந்து
பென்னம் பெரிய
மண்பானையில்
பனை ஒடியல் கூழ்.
சுடச்சுட
நண்பன் கந்தசாமியின்
மனைவி கமலம்மா அக்கா
பானையில் உள்ள ஒடியல் கூழை
அகப்பையால் அள்ளி
மண் சட்டியில் வார்க்கின்றா.
ஏழெட்டு விடலைகள் நாம்
வட்டமிட்டிருப்பு
கமலம்மா அக்கா
சட்டியில் உள்ள கூழை
தேங்காய் சிரட்டையில்
ஊற்றுகின்றா.
விடலைகள் நாங்கள்
பழுத்த
பலா இலைகளைக் கோலி
கூழை அள்ளிக் குடிக்கின்றோம்.
இடைக்கிடை
தேங்காய் சொட்டுகளை
கடித்துச் சப்பி ருசித்து ரசித்து
கூழைக் குடிக்கின்றோம்.
இன்று நேற்றல்ல
வருடக் கணக்காய்
சித்திரை வருடப்பிறப்பிற்கு
முன்பின்னாய் ஒரு நாள்
ஒடியல் கூழ் விருந்து.
இரண்டொருவர் குறைந்திட
இரண்டொருவர்எம்முடன்
இணைந்திட,
ஒடியற் கூழ் விருந்து
நண்பன் கந்தசாமி வீட்டில்
நடந்து வருகின்றது விருந்து.
கந்தசாமியும் கமலம்மாவும்
விருந்தாளிகள்.
கந்தசாமி கமலம்மா
தம்பதியர் காதல் கதை
ஒடியல் கூழ் விருந்துடன்
சங்கமித்துள்ளது.
நண்பன் கந்தசாமி
காதலி கமலம்மாவை
கடத்திச் செல்வதற்கு
முதல் நாள் பகல் பன்னிரண்டு மணி.
நண்பன் கந்தசாமி வீட்டில்
ஒடியற் கூழ் விருந்து.
கமலம்மாவை கடத்திச் செல்வதற்கு
திட்டம் போட்டோம்.
திட்டமும் சரியாச்சு.
கந்தசாமியின்
காதலி கமலம்மாவை
கடத்தியுமாச்சு வெற்றிகரமாய்

விட்டுவைப்பார்களா
கமலம்மாவின் உற்றார் உறவினர்?
கமலம்மாவின் குடும்பம்
உடையார் குடும்பமாய்ச்சே.
கந்தசாமியின் நண்பர்கள்
நாங்கள் ஏழெட்டுபேர்.
எங்களை உடையாராக்கள்
பொலிசிலை மாட்டிவிட்டார்கள்.
பொலிஸ்காரர் எங்களை
பொலிஸ் நிலையத்துக்கு
கொண்டுபோய்
அடித்து உதைத்து மிரட்டி
காதலர் கந்தசாமியும் கமலமும்
மறைந்திருக்கும்
இடத்தை அறிந்திட
துடியாய் துடித்தனர்.
எங்களைப் படாதபாடு படுத்தினர்
பொலிஸ்காரர்.
பொலிஸ்காரரின் பயறு
எங்களிடம் அவியவில்லை.
காதலர் கந்தசாமியையும்
கமலத்தையும் பற்றி
எங்களுக்கு ஒன்றுமே தெரியாது
என்று உறுதியாய் கூறினோம்
நாங்கள்.
வேறு வழியின்றிபொலிஸ்காரர்கள்
எங்களை எச்சரித்து
விரட்டி விட்டனர்.
மூன்று நாட்களாய்
உடையாராக்கள்
கமலத்தைக் கண்டுபிடிக்க
படாதபாடு பட்டு ஓடித்திரிந்தனர்.
பலனேதுமில்லை.
ஆக்களும் அலைந்துலைந்து
பணமும் கரைந்ததுதான் மிச்சம்.

கமலம்மாவின் அண்ணன்
கமலநாதன்
யாழ்ப்பாணம் கச்சேரியில்
சிறாப்பர் வேலை.
சிறாப்பர் கமலநாதனுக்கு
நல்ல செல்வாக்கு.
கந்தசாமியை சுட்டுத்தள்ள
துவக்குடன் அலைந்து
திரிந்தான் கமலநாதன்.
கமலநாதனின்முயற்சி
பலிக்கவில்லை
கமலம்மாவுக்கு
ஐந்து உடன்பிறப்புக்கள்.
மூன்று ஆண்கள், இரண்டு
பெண்கள்.
கமலம்மா கடைக்குட்டி.
பெரும் சுட்டி அவள்.
உலகநாத உடையாரின்
உயிர் கமலம்.
கிடக்கின்ற வீடு வாசல்
நில புலங்கள் எல்லாம்
கடைக்குட்டி கமலத்துக்குதான்.
தன் செல்லப் பேத்தி கமலத்தை
பெரிய படிப்பு படிக்கவைத்து
அரசாங்கத்தில் பெரிய அதிகாரி
ஆக்கவேண்டும் என்ற
ஆவல் உலகநாத உடையாருக்கு.
உடையார் உலகநாதன்
தன் செல்லப் பேத்தி கமலம்மாவை
பெண்கள் கல்லூரியில்
படிப்பிக்க நினைத்தார்.
மருதனாமடம்
இராமநாதன் பெண்கள் கல்லூரி
இந்துக்களின் பெருமதிப்புக்குரிய
கல்லூரி.

பணச்செலவையும் பாராமல்
கமலம்மாவைச் சேர்த்தார்
இரமநாதன் பெண்கள் கல்லூரியில்
கமலம்மாவைச் சேர்த்தார்
உடையார் உலகநாதர்.
காலையும் மாலையும்
எட்டு மைல் தூரத்திலுள்ள
கல்லூரிக்கு
கமலம்மா காரில் பயணிப்பு.
ஆறு வருடங்களாய் பாட்டனார்
உலகநாதர்
கமலத்திற்கு பாதுகாப்பாய்
காலையும் மாலையும்
கமலத்துடன் காரில் பயணிப்பு.
கந்தசாமிதான் கார் சாரதி.
உலகநாதரின் தங்கை
தங்கரத்தினத்தின் மகன்தான்
கந்தசாமி
கந்தசாமி கமலம்மாவின்
முறை மச்சான்.
கமலத்தின் கல்லூரி
கார் சவாரியின்போது
பாட்டன் உலகநாதர்
கார்சாரதி கந்தசாமியின் பக்கத்தில்
முன் சீற்றில் இருந்து பயணிப்பு
கமலத்திற்கு பாதுகாப்பாய்.
கமலம் பத்திரமாய்
தன்னந்தனியாய்
பின் சீற்றில்.
உலகநாதருக்கு குளிர்
ஒத்துவராது.
பனிக்காலம் பாட்டனாருக்கு
தொய்வு நோய் தொல்லை.
கமலத்திற்கு துணையாய்
பாட்டனாரால் செல்லமுடியாது.
கந்தசாமி கமலத்தை
கல்லூரிக்கு பத்திரமாய்
கொண்டு சென்று வருகின்றான்.
பாட்டனார் போகாத நாட்களில்
கமலம் கந்தசாமியின் பக்கமாய்
முன்சீற்றில் இருந்து பயணிப்பு
காலத்தின் கரைவில்
கந்தசாமி கமலம்
காதல் கனிவு ஆத்மாத்தமாய்.
பாட்டனார் உலகநாதர்
கமலம் கந்தசாமி
காதலை மோப்பம் பிடிப்பு
காலதாமதம் செய்யாமல்
கமலத்தை
உறவினர் முறை மச்சான்
கனகசுந்தரத்திற்கு கல்யாணம்
கட்டிவைக்க
உலகநாதர் முடிவெடுப்பு
கனகசுந்தரம்
உடையார் பரம்பரைதான்.
கனகசுந்தரம்
யாழ்ப்பாணம் கச்சேரியில்
கிளறிக்கல் உத்தியோகம்.
கனகசுந்தரம் கமலம்மா
கல்யாண நாளும் குறிச்சாச்சு.
கந்தசாமி?
இரவு ஒரு மணியிருக்கும்
இராசதுரையும் நானும்
இலட்சுமணனும், கந்தையாவும்
எங்கள் ஊரில்
தெற்குப்புறச் சந்தியில்
கந்தசாமிக்கும் கமலத்துக்குமாக
காத்திருப்பு.

மூன்று சைக்கிள்கள்
வாழைத்தோட்டத்துக்குள்
மறைவாய்.
"மச்சான் முத்தையா"
"என்ன கந்தையா?"
"கந்தசாமியையும் கமலத்தையும்
இன்னும் காணேல்லை"
"எனக்கும் பயமாய்க் கிடக்கு."
பதட்டமாய் கூறுகிறான் கந்தையா.
நீ பயப்படாதை மச்சான்.
பத்திரமாய் வந்து சேருவினை
எங்கடை கந்தசாமியும் கமலமும்.
கந்தையனுக்கு
ஆறுதல் கூறுகிறேன் நான்.
"நேரம் போய்
கொண்டிருக்கு முத்தையா
கந்தசாமியாக்கள் எப்ப
வரப் போகினையோ?"
கந்தையா.
"அதோ ரோச்லைட்
கந்தசாமியாட்கள் வருகினை"
கமலமும் கந்தசாமியும்
வந்து சேர்ந்தனர்
பத்திரமாய்.
எல்லோர்க்கும் நிம்மதிப்
பெருமூச்சு.
கமலம் உடுத்த உடுப்புடன்
தான் வந்தாள்
பணமோ நகை நட்டுக்களோ
எதுவும் எடுத்துவரவில்லை.
கந்தசாமியின் கட்டளையும்
அதுதான்.
அயலூரிலுள்ள நாற்சந்தியில்
தயாராய் நிற்கின்றது
கதிரவேலு அம்மானின்
ஏஃபோட்டி கார்
காதலர் கந்தசாமியையும்
கமலத்தையும்
பாதுகாப்பாய் வைத்திருக்க
வன்னிப் பிரதேசத்தை நோக்கி
காற்றாய் பறக்கின்றது
கதிரவேலு அம்மானின்
ஏஃபோட்டி கார்
தன்னுடைய அருமைப் பேத்தி
கமலம் காணாமல் போனதை
அறிந்த உலகநாதர் உடையார்
இடிந்துபோனார்.
பேத்தி கமலத்தைக் கண்டுபிடிக்க
தன் கையாட்கள் எல்லாரையும்
ஏவிவிட்டார் உடையார்.
உடையார் பரம்பரையின்
பட்டம் பதவி பணமெல்லாம்
கந்தசாமி கமலத்தின்
காரியத்தில் பலிக்கவில்லை.
கந்தசாமியின் தாய் மாமன்
செல்லையா கார் சாரதிதான்.
ஆனால் அவரும்
கார் சொந்தக்காரன்தான்.
செல்லையாவுக்கு ஊரில் நல்ல
செல்வாக்கு.
உடையாராட்களின்
உருட்டல் மிரட்டல்கள்
ஒன்றும் பலிக்கவில்லை
செல்லையா அண்ணரின்
செல்வாக்கில்.
உடையார் உலகநாதர்
சரணடைந்தனர்
செல்லையா அண்ணரிடம்,
"நடந்தது நடந்துபோச்சு.
நடக்கவேண்டியதை பார்பம்

மச்சான்.
சின்னன் சிறிசுகள் தெரியாமல் பண்ணினதை
பெரிசுபடுத்தாமல் பாக்கிறதுதான் நல்லது
கந்தசாமி ஆர்?
கந்தசாமி எங்கடைஇரத்த
உறவாச்சே.
பொருள் என்ன பொருள்?
கந்தசாமி பெடியன் கடும்
உழைப்பாளி
கமலம் எங்கடை கடைக்குட்டி.
செல்லமாய் வளர்ந்தவள்.
கிடக்கிற சொத்தெல்லாம்
கமலத்துக்குத்தானே.
கந்தசாமி கமலத்தை
நல்லாய் புரிஞ்சவனாச்சே.
கந்தசாமி கமலத்தையும்
எங்கடை சொத்தெல்லாத்தையும்
காப்பாற்றுவான் எண்ட நம்பிக்கை
எனக்குண்டு."
கமலத்தின் பாட்டனார் உலகநாதர்
பௌவ்வியமாய் கூறி
செல்லையாவை
தன்வசப்படுத்திவிட்டார்.
வன்னி
தண்ணீரூற்றுக் கிராமத்தில்
மூன்று நாட்கள்
பாதுகாப்பாயிருந்த
கந்தசாமி கமலம்மா
காதல் சோடியை
கொண்டு வந்தார்
செல்லையா அண்ணர்
சொந்த ஊருக்கு.
பொலிசில் போட்ட முறைப்பாட்டை
கான்சல்பண்ண
கந்தசாமி கமலம் காதல் சோடியை
உடையார் உலகநாதருடன்
பொலிஸ் நிலையத்துக்கு
கொண்டு வந்தாச்சு.
இதையறிந்த
நண்பர்கள் நாம் எல்லோரும்
பொலிஸ்நிலையத்துக்கு
உடனே சென்றோம்.
உடையார் உலகநாதரின்
பணபலம் பலித்தது.
பொலீஸ் இன்ஸ்பெக்டர்
இராசதுரை விலைபோனார்.
கமலம் கந்தசாமி காதல் சோடியை
பலாத்காரமாய் பிரித்தது பொலிஸ் அதிகாரம்.
கமலம் வலோற்காரமாய்
உடையாராட்களின்
மோட்டார் காரில் ஏற்றப்பட்டாள்.
"ஐயோ என்னை விடுங்கோடா
என்ரை கந்தசாமியிட்டை
நான் போகப்போறன்.
என்னை விடுங்கோ
என்ரை கந்தசாமியிட்டை நான் போகப்போறன்".
கதறிக் குழறுகிறாள் அபலை
கமலம்.
கமலத்தின் கதறல் கரைக்கவில்லை
உடையாரின் கல்மனதை.
பொலிஸ் நிலையத்தில் இருந்து
உடையார் உலகநாதரின் வீட்டுக்கு
பலாத்காரமாய்
கொண்டு செல்லப்பட்ட

கமலம் கதறிக் குழறி
அட்டகாசம் பண்ணினாள்.
கமலம் தன்னுடைய உடையைக்
கிழித்து
தலையை சுவரில் முட்டி மோதி
அமர்க்களப்படுத்தி கூக்குரலிட்டு
உரக்கக் கத்திக் கதறினாள்.
ஊனுறக்கமின்றி இரவும் பகலும்
தன்னைத்தானே வதைத்துத்
துவண்டாள்
அபலை கமலம்.
வன்னிக்கு போன வேளை
கமலத்தை பேய் பிடிச்சிட்டுது
என்று கூறி உடையாராட்கள்
மந்துவிலிலுள்ள பிரசித்திபெற்ற
பேயோட்டியைக் கொண்டுவந்து
பேயோட்டிப் பார்த்தனர்.
பலனேதுமில்லை.
கமலம்மாவிற்கு கிஸ்ரீறியா
வியாதி
கல்யாணம் கட்டினால்
எல்லாம் சரியாய்போம்
எண்டு ஒரு மேதை ஆலோசனை
கூறினார்.
உலகநாதர் உடையார் உடனே
கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தார்.
கல்யாணம் திடீர் கல்யாணம்.
கனகசுந்தரம் தான் மாப்பிள்ளை
கனகசுந்தரம்
கமலம்மாவின் முறை மச்சான்.
கமலம்மாவை கல்யாணம்
கட்டினால்
உடையார் உலகநாதரின்
சொத்துக்கள் எல்லாம் தனக்கு
வந்து சேரும்
என்ற நப்பாசை
கனகசுந்தரனாருக்கு.
கமலம்மாவின் கழுத்தில்
தாலிகட்ட முன்வந்தார்.
கனகசுந்தரம் கமலம்மாவின்
திடீர் கல்யாணத்திற்கு
நெருங்கிய உறவினர்கள்
ஒரு சிலரை
இரகசியமாய் அழைத்திருந்தார்
உடையார் உலகநாதர்.
பிள்ளையார் பூசையை
மாத்திரம் செய்து
கமலத்தின் கழுத்தில் தாலி கட்டி
சோறு குடுப்பிக்க
ஏற்பாடு செய்தார் உலகநாதர்.
கமலம்மா சிலையாய்
அமர்ந்திருப்பு
புள்ளை கமலம்
கந்தசாமி குடுத்த
உந்த இரவல் சேலையை
இந்த நேரத்தில் நீ
ஏன் உடுத்திருக்கிறாய்.?
கனகசுந்தரம் எடுத்து தந்த
கூறைச் சேலையை
கெதியாய் உடுத்துவா மோனை"
உலகநாதர்
உருக்கமாய் சொல்லுகிறார்.
நான் கட்டியிருக்கிற இந்தச் சேலை
என்ரை புருசன் கந்தசாமி
எனக்கு எடுத்து தந்த சேலை
அதுதான் நான்
இந்த நேரத்தில் உடுத்தியிருக்கிறன்.
" தம்பி கனகசுந்தரம் இனி பேசிப்

பயனில்லை
கமலத்தின் கழுத்தில் கட்டு
தாலியை"
விறைப்பாய் சொல்லுகிறார்
உடையார் உலகநாதர்.
கனகசுந்தரனார் கமலத்தின்
கழுத்தில்
தாலிகட்டக் குனிகின்றார்.
கமலம்மா துள்ளி எழுகின்றாள்
பத்திரகாளியாய்.
கனகசுந்தரத்தின்
கையிலிருந்த தாலியை
திடீரெனப்பறிக்கிறாள் கமலம்.
கனகசுந்தரத்தின் தாலியை
கனகசுந்தரத்தின் மூஞ்சையில்
வீசி எறிகின்றாள் கமலம்
"எச்சில் மாங்காய்
எண்டு தெரிஞ்சிருந்தும்
அதை தின்ன
உனக்கு வெட்கமில்லையோடா?
கர்ச்சிக்கின்றாள் கமலம்.
கூடி நின்றவர்களுக்கு அதிர்ச்சி.
கனகசுந்தரம்
சகலதையும் இழந்தவனாய்
தலை குனிந்தவனாய்
அவ்விடத்தை விட்டு
அகல்கின்றான்.
புயலாய் புறப்படுகின்றாள் கமலம்
உலகநாத உடையாரின்
சற்புத்திரர் இருவர்
கமலம்மாவை
தடுத்து நிறுத்துவதற்கு
ஓடுகின்றனர்.
" நீங்கள் போகாதைங்கோடா.
அவளை நீங்கள்
தடுத்து நிறுத்தாதேங்கோடா.
இண்டையோடை
எங்களுக்கு அவளோடையுள்ள
சங்காத்தம் அற்றுப்போச்சு.
இண்டைக்கே நாங்கள்
அவளை தலைமுழுகியாச்சு.
உடைந்துபோய் கூறுகிறார்
உடையார் உலகநாதர்.
ஊரின் தெற்கெல்லைப்
புறமாயுள்ள
நாற்சந்தியில்
கந்தசாமியுடன் விடலைகள்
நாங்கள் பத்துபேர்
கமலத்தை
எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.
கமலம் புயலாய் வந்து சேர்ந்தாள்
கந்தசாமி கொடுத்த
சேலையைக் கட்டிக்கொண்டு
எப்போ வருவாள் என்று
ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த
கந்தசாமிக்கு பேரானந்தம்.
எங்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி.
அன்றைய தினமே
உற்றார் உறவினருடன்
ஊரறிய அம்மன்
ஆலய சந்நிதானத்தில்
கந்தசாமி கமலத்தின்
கழுத்தில் தாலி கட்டுகின்றான்.
"தங்கரத்தினம் அக்கா
எப்ப அக்கா
ஒடியல் கூழ் விருந்து.?
கந்தசாமியின் அம்மா
தங்கரத்தினம் அக்காவை

நாங்கள் கிண்டலாய்
கேட்கின்றோம்.
" தம்பி மோனையள்
ஒடியல் கூழ் விருந்து நாளைக்கு
மதியம்
நிச்சயமாய் நடக்கம்.
தங்கமக்கா உறுதியாய்
சொல்லுகிறார்.
தங்கம் அக்காவுடன்
அன்பு மருமகள் கமலமும்
கூட்டுச்சேர்ந்து
அடுத்தநாள் மதியம் கந்தசாமி
வீட்டில்
விடலைகள் எங்களுக்கு
ஒடியல் கூழ் விருந்து.
அன்றிலிருந்து வருடா வருடம்
சித்திரை வருடப்பிறப்பிற்கு
இரண்டொரு நாள்
முன்பின்னாய்
ஒடியல் கூழ் விருந்து
டிராக்ரர் கந்தசாமியின் கல்வீட்டில்
நடந்துவருகின்றது.
"டிராக்ரர்" கந்தசாமியும்
கந்தசாமி கமலத்தின்
இளவட்டாங்கள் இருவர்.
பதினாறு வயது மூத்தமகன்
உலகநாதர்
பதிநாலூ வயது இளைய
மகன் செல்லையா
கடைக்குட்டி தங்கரத்தினம்.
எல்லாரும்
வட்டமிட்டிருக்கின்றனர்.
கமலம்மா குரக்கன் புட்டும்
பழம் மரவள்ளிகிழங்கு கறியும்
தயிரும் போட்டு பிசைஞ்சு
குழைத்து உருண்டையாக்கி
கந்தசாமிக்கும் பிள்ளைகளுக்கும்
கொடுத்துக்கொண்டிருக்கின்றா.
எல்லோரும்
குரக்கன் புட்டை ருசித்து ரசித்து
திண்டு கொண்டிருக்கின்றனர்.
கமலத்தின் ஆனந்தப் பூரிப்பு
"கமலம்
இண்டைக்கு எங்கடை முத்தையன்
வருவன்
பகல் பன்னிரண்டு மணிக்கு
ஒடியல் கூழ் விருந்து".
" நீங்கள் ஏன் சொல்லுறியள்?
மூண்டு வரியமாய் வராத எங்கடை
தம்பி முத்தையன்
இண்டைக்கு எப்பிடி
இஞ்சை வருவான்?"
கமலத்தின் கேள்வியில் வியப்பு
கமலத்திற்கு புரியாப் புதிர்.
தம்பி முத்தையன் நிச்சயமாய்
இண்டைக்கு வருவான்
இருந்து பார்.
நாலைஞ்சு நாட்களாய்
இண்டைக்கு தம்பி முத்தையன்
வருவான் எண்டு என்ரை
மனசு சொல்லிக்கொண்டிருக்கு.
கந்தசாமி
சொல்லி வாயெடுக்கவில்லை
"கமலம் அக்கா குரக்கன் புட்டு
எனக்கும் கிடைக்குமா?
" தம்பி முத்தையன்ரை
குரல்போல கிடக்கு"
கமலம் எல்லோரும்

திரும்பி பார்க்கின்றனர்.
"தம்பி முத்தையா"
ஏககாலத்தில்
டிராக்ரர் கந்தசாமியும் கமலமும்
வியப்புடன் கத்துகின்றனர்.
எல்லோருக்கும் ஆச்சரியம,
ஆனந்தம்,
"எப்ப வந்தனி தம்பி?"
வாஞ்சையுடன் கமலம்
"இண்டைக்கு காலமை தான்
இருமோனை இப்பிடி பாசமாய்
கமலம்
"இருக்கிறான் முத்தையன்.
"இந்தா மோனை புட்டு
கமலம் குரக்கன் புட்டு
உருண்டையை
தம்பி முத்தையனுக்கு
வாஞ்சையுடன் கொடுக்கிறாள்
குரக்கன் புட்டு உருண்டையை
ஆவலுடன்
வாங்குகின்றான் முத்தையன்.
வட்டமிட்டிருக்கின்ற எல்லோரும்
மகிழ்ச்சியாய்
ரசித்து ருசித்து உண்கின்றனர்.
"கமலம் அக்கா"
"என்ன தம்பி?"
"எப்ப ஒடியல் கூழ் விருந்து?"
"பயப்பிடாதை தம்பி முத்தையா
இண்டைக்கு மதியம் ஒடியல் கூழ்
உங்கள் எல்லோருக்கும்
நிச்சயமாய் கிடைக்கும்.
இருந்து பார்"
முத்தையனுக்கு வியப்பு.
"எப்பிடி முத்தையா அண்ணை?"
நீ இண்டைக்க வருவாய்
எண்டு என்ரை மனசு சொல்லிச்சுது.
வழமையாய் கூழ் விருந்துக்கு
வாற எங்கடை
ஆட்களுக்கு சொல்லிப்போட்டன்.
மரக்கறி வகைகள்
சுண்ணாகச்
சந்தையிலை வாங்கிவரும்படி
குமார் கடைக்காறனுக்கு
சொல்லிவைச்சிருக்கிறேன்.
எங்கடை கோடிக்கை
நிக்கிற பிலாமரத்திலை
முட்டுக்காய் முத்தல் பிலாக்காயும்
வெட்டிவைச்சிருக்கிறன்.
முருங்கையிலை
முருங்கை இலக்கறியும்
முருங்கைகாய் பிஞ்சும்
ஆஞ்சு வைச்சிருக்கின்
ஒடியல் கூழுக்கு
வேறென்ன வேணும்?"
எங்கள் எல்லோருக்கும்
பேராச்சரியம்.
மதிய வேளையில்
வழமையாய் வாற நாங்கள்
எல்லோரும் வட்டமிட்டிருந்து
ஒடியல் கூழை ரசித்து ருசித்து
குடித்துக் கொண்டிருக்கின்றோம். □

> புன்னை மாதுளை பூங்கொதி மாபுளி
> தென்னை கூவிளந் தேனுகர் வண்டினம்
> துன்னு பூக வனந்தொறும் வாழையோடு
> அன்ன தாழை அடர்ந்தது சோலையே. - அறிஞர் கு. சிற்சபேசன்
> "நீர்வைநாட்டு வளம்"



கட்டுரை

# இந்துப் பண்பாட்டு மரபில் தலவிருட்ச வழிபாடு

## (மர வழிபாடு)

**ப. கணேசலிங்கம்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**இந்துநாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

உலக நாடுகளில் வாழ்ந்த மக்கள் இயற்கையின் ஒவ்வொரு கூறுகளையும் தெய்வீக நிலைப்படுத்தி வழிபட்டு வந்ததை அறிய முடிகின்றது, மக்கள் இயற்கையின் ஒவ்வொரு கூறுகளையும் தெய்வீக நிலைப்படுத்தி வழிபட்டுவந்தமைக்கும், தற்பொழுதும் கூட வழிபட்டு வருவதற்கும் பிரதான காரணங்களாக தேவையும் பயமும் அதிகரிக்கின்றன? தென்கிழக்காசிய, தென்னாசிய, மேற்குலகம் ஆகிய நாடுகளில் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த, தற்பொழுது வாழ்ந்து வருகின்ற மக்கள்,இந்துசமயக் கடவுளர்களான சிவன், சக்தி, விஷ்ணு, முருகன், விநாயகர், பிரமன் ,சூரியன் ஆகியோர்களுக்கும் மற்றும் தேவஅரசர்கள், அகத்தியர், காரைக்கால் அம்மையார், இறந்தோர் (மூதாதையர்கள்), மரம் (விருட்சம்), பாம்பு, பசு (இடபம்), நாய், உயிரினங்கள் , இயற்கைக் கூறுகள் ஆகியனவற்றுக்கும் கலைத்துவம் வாய்ந்த திருக்கோயில் களை நிறுவி வழிபாடாற்றியதையும், இன்றுவரை வழிபாடாற்றி வருவதையும் அங்கு கிடைத்த சான்றுகளிலிருந்தும், வழிபாட்டு நடைமுறைகளிலிருந்தும் அறிந்துகொள்ள முடிகின்றது.

பண்டைக் காலத்தில இந்துக் கோயில்களைச் சார்ந்து வாழ்ந்த மக்கள் தமது கல்வியையும் கலைகளையும் மருத்துவத்தையும் கோயில்களைச் சுற்றியே வளர்த்து வந்ததை அறியமுடிகின்றது. ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் கூடக் கோயிலை அணித்தே அமர்ந்து நீதி வழங்கின. மக்கள் வாழ்வில் கோயில்கள் நடுநாயகமாக அமைந்து சமயநெறியையும், அற உணர்வையும் வளர்த்தோடு மக்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவையான அனைத்துக்குமே நடுநிலையமாக இயங்கி வந்தன. இந்துக் கோயில்கள் சமய வழிபாட்டிடம் மட்டு மல்லாது சமூக நிலையங்களாகவும் விளங்குகின்றன.

இறைவனை உருவமாகவும் அருவமாகவும் வழிபடத்தொடங்கிய காலத்தில் அவ்வழிபாடு ஊர்ப்பொதுவில் ஊர் மக்கள் கூடுவதற்கு இடமாய

மைந்த நிழல் தரும் அழகுமிக்க மரத்தடியிலே வழிபாடுகள் நடைபெற்றன. இந் நடைமுறையை இன்றும் சிற்றூர்களில் காணலாம். அவ்வாறான மரங்களி லேயே இறைவன தங்குவதாக நம்பி அம்மரங்கள் பட்டுப் போன பின்னர் எஞ்சிய அடி மரத்தை வணங்கி வந்தனர். மதுரை சுந்தரேஸ்வரர் கோயிலில் பழைய கடம்பமரம் வெள்ளித்தகட்டால் அணி செய்யப்பெற்று வழிபடுவதை இன்று காணலாம். மரத்தையும் மரத்தடியில் வைக்கப்பட்ட இறை உருவத் தையும் வழிபட்ட பின்னர் மரத்தடியிலேயே கோயில்கள் கட்டப்பெற்றன. பல திருக்கோயில்களும் ஊர்களும் தலமரங்களின் பெயராலேயே அமைந் துள்ளன. கடம்பத்துறை, ஆலங்காடு, நெல்லிக்காடு முதலிய இடங்கள் தலமரத்தின் பெயராலேயே அமைந்தவையாகும்.

தலவிருட்சம் என்பது இறைவன் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள தலங்களில் அமைந்து விளங்கும் மரத்தினைச் சுட்டுவதாகும். இந்துப் பண்பாட்டு மரபிலே திருக்கோயில்கள்தோறும் தொன்று தொட்டு வழிபடப் பெற்று வரும் தலவிருட்சங்கள் மருத்துவத் திற்கும் பயன்படுத்தி நாம் பல்வேறு நலன்களைப் பெறக்கூடியதாகவுள்ளன. பாடல்பெற்ற தலங்களில் உள்ள மரங்களில் ஒன்றிரண்டு நீங்கலாக எல்லாமே ஏதேனும் ஒருவகையில் மருந்தாகப் பயன்படக் கூடியவையாகவுள்ளன. இறைவன் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள இடங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய விருட்சங் களைக் கொண்டமைந்து, மிகச் சிறப்பினைத் தருவதாகும். மரத்தையும், மரத்தடியில் வைக்கப்பட்ட இறை உருவத்தையும் வழிபட்ட பின்னர் மரத்தடியில் கோயில்கள் கட்டப்பட்டன. இறைவன் மரத்தின் கீழ் வதிவதாகத் திருமுறை களிலும் திவ்விய பிரபந்தங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சைவ, வைணவ தெய்வங்கள் கோயில் கொண்டெழுந்தருளி அருள் ஆட்சி செய்யும் தலங்களையும் அங்கு உறையும் தெய்வங்களையுப் பற்றியும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகியோர் பாடியருளிய தெய்வீகப் பாடல்கள் முறையே திருமுறைகள் திவ்வியபிரபந்தங்கள் எனச் சுட்டப்படுகின்றன. இந்தியாவிலும் இலங்கையிலும் அமைந்து விளங்கும் திருக்கோயில்களிலே பல்வேறு தலவிருட்சங்கள் அமைந்து விளங்குவதைக் காணலாம்.

மரத்தினைப் புனிதமாக மக்கள் போற்றி வழிபட்டதற்கான காரணங் களை பலஅறிஞர்கள் கூறியுள்ளார்கள். இவ்வறிஞர்களுள் க. ப.

அறவாணன், பேராசிரியர் மோனியர் வில்லியம். Fergussan ஆகியோர்களது கருத்துக்கள் முக்கியமானவையாகும். மனித மனத்தில் மரம் பற்றிய நன்றியும், மதிப்பும் தோன்றியமைக்கு பல காரணங்கள் உண்டு. இதனையே மரவழிபாடு பற்றிக் கூறவந்த க.ப.அறவாணர் பின்வருமாறு கூறியுள்ளார். "மரவழிபாடும் நன்றி உணர்வு அல்லது அச்ச உணர்வு அடிப்படையிலேயே முதற்கண் தோன்றியிருத்தல் வேண்டும். வழிபடப் பெறும் பெரும்பாலான மரங்கள் பழம் நல்குவனவாகவும் உடல் நோய்போக்கும் மருந்து மரங்களாகவும் பரந்த அளவில் கிளைபரப்பி நிழல் தருவனவாகவும் இருந்தன இருக்கின்றன. எனவே நன்மை நல்கும் மரங்கள் மீது அன்பும் நன்றியுணர்ச்சியும் மேலிட வழிபாடு உருவாயிற்று. சில மரங்கள் நச்சுப்பழங்களை நல்கின. நச்சுக்காற்றை உதிர்த்தன. அவற்றைக் கண்டஞ்சி பண்டைய மாந்தரினம் மேலும் நமக்கு அவற்றால் துன்பம் வரலாகாது என்று வணங்கி அஞ்சி ஒதுங்கியது. எனவே சில இடங்களில் நச்சுமரவழிபாடும் தோன்றியுள்ளது. மேலும் மரங்களை வழிபடும் வழக்கம பற்றிப் பேராசிரியர் மோனியர் வில்லியம் கூறும்போது "மரங்கள், புதிர்கள், செடிகள் ஆகியவற்றினுள்ளே தெய்வீக ஆற்றல் திரட்டின் மிக மேற்பட்ட இயற்கைத் தன்மைகள் இருப்பதாகக் கருதப்படுவதை முன்னிட்டு அவற்றை வழிபடுதல் எங்குமே பரவலாயிற்று எனக் கூறுகிறார்.

அறிஞர் Fergussan என்பவர் "கடவுளின் அதி உயர்ந்த கொடை மரங்களே என்று மனிதன் நினைத்தான். எனவே இக்கொடையை ஈந்த கடவுளின் ஆவி இம்மரங்களின் கொம்பரிடையே வாழ்கின்றது. இலையசைவு ஒளிகளின் பல அற்புதங்களை உணர்த்துகின்றன" என்கிறார். இவர் இக்கருத்தின் மூலம் மரவழிபாடு ஊடாகவே கடவுள் வழிபாடு தோன்றியது என்பதனை எடுத்துக் கூறுகின்றார். இவ்வாறு நன்மைகளைப் பெற்ற மனிதன் அதனைப் போற்றத் தொடங்கினான். இதன் அடிப்படையிலே மரவழிபாடு ஆதிமாந்தரால் இயற்றப்பட்டு வந்தது. இதனைப் பின்பற்றியே உலகெங்கும் ஒவ்வொரு சந்ததியினரால் மரவழிபாடு பேணப்பட்டு இன்றுவரை நிலை பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் மரவழிபாட்டின் தோற்றத் திற்கு, புனித மரங்களின் இறந்துவிட்ட முன்னோர்தம் ஆவி உறைவதாக ஏற்பட்ட நம்பிக்கையும் காரணமாக இருக்கலாம்.

மரவழிபாட்டின் தோற்றத்தை நோக்கும்போது நன்மைகள் தருவதால் மரங்களின் மீது பக்தி ஏற்பட்டு வழிபாடு உருவாயிற்று என்பதும் தீமைகள்

நல்கும் என்ற பயத்தால் மரவழிபாடு அறிமுகமாயிற்று என்பதும் தெளிவாகின்றது. அன்பு, அச்சம், ஆகிய இரு காரணங்களும் ஆதிமாந்தரின் அடிப்படை உணர்வு என்பதால் மரவழிபாடே வழிபாட்டில் மிக முந்தியது எனலாம். ஆதி மனிதனுக்கு அவனது பார்வையில் நோக்கும் போது அவனுக்கு மிக அண்மையில் நின்று நன்மையும் தீமையும் நல்கிய மரங்கள் முதலில் அவனுக்கு வழிபடுபொருள்களாயின எனலாம்.

இந்துக்கோயில்களின் தலவிருட்சங்களாக வில்வம், வன்னி. புன்னை, சரக்(கொன்றை) , பலா, மா, அரசு, ஆல் , பனை, செண்பகம் , வாழை, பாதிரி, பவளமல்லிகை, பூவரசு, மகிழ், இலந்தை, கோங்கு (முள்ளிலவு), முல்லை, மூங்கில், அலரி, இலுப்பை, கடம்பு, காட்டாத்தி, குருந்து, நெல்லி, பன்னீர்மரம், மாதவி, அத்தி, எருக்கு, சந்தனம் , தாழை, துளசி, தென்னை, நாவல், புளி, மந்தாரை, மருதம், மாவிலங்கம், வேம்பு, அசோகு, அசில் ஊமத்தை, எலுமிச்சை, கடுக்காய், கருங்காலி, கல்லத்தி, காரை, திருவை கொட்டைச்செடி(ஆமணக்கு), கோரை, சதுரக்கள்ளி, தருப்பைப் புல், தில்லை தேற்றா, நந்தியாவட்டம், நாரத்தை, நொச்சி, பராய், பாலை, பிரம்பு, புன்கு, சிறுபூனை, வஞ்சி, வாகை, வால்மிகு, விளா, விழல், விழுதி, வெள்வேல் ஆகிய தாவர வர்க்கங்கள் விளங்குகின்றன. மரத்தின் கீழோரத்திலோ இறைவன் உறைவதாகக் குறிப்பிடாமல் தலமரங்களின் பெயர்கள் தேவாரங்களில் பல பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. மேலும இத்தலவிருட்சங்கள் வழிபாட்டிற் குரியனவாக மட்டும் விளங்காது பல்வேறு மருத்துவப் பயன்பாடுள்ளதாக விளங்குவதைப் பற்றி திரு. சு. திருஞானம் அவர்கள் திருக்கோயில் மரங்களின மருத்துவப் பயன்கள் (1998) என்ற நூலில் நன்கு எடுத்துக்காட்டியுள்ளமை இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

விருட்ச வழிபாடு ஆதியானது. அநாதியானது. இந்தியாவில் சிந்துவெளி நாகரிக காலத்தில் அரசமரம் வணங்கப்பட்டதற்கான சான்றுகள் இற்றைக்கு 5000ஆண்டுகளுக்கு முன்பே காணப்படுகின்றன. மரங்கள் இருநிலையில் வழிபடப்பட்டிருக்கலாம். ஒன்று தெய்வத்தன்மையுள்ள மரங்கள். இவற்றுக்குத் தீமை செய்தல், ஊறு செய்தல், ஊறுவிளைவித்தல் மனிதனுக்கு ஆபத்தை உண்டுபண்ணும் என்ற உணர்வு இருந்தது. ஆல், அரசு, கொன்றை போன்றவை இதற்கு நல்ல உதாரணங்களாகும். அடுத்த நிலை

இம்மரங்களைத் தெய்வமுறை கோயிலாகக் மனதிற் கொண்டு வழிபடல் என்பனதாகும். இந்தியாவில் தமிழகத்தில் கூட ஆதியில் இயற்கை வழிபாடு உயிரற்ற பொருட்களுக்கு உயிர்த்தன்மை கொடுத்துவழிபடல், குலமரபுச் சின்னங்களை வழிபடல் ஆகியன முக்கியத்துவம் பெற்றன. சில குறிப்பிட்ட மரங்கள், மிருகங்கள், தெய்வீகத் தன்மை பெற்று காணப்பட்டன. கோயில்கள் கூட ஆரம்பத்தில் மரங்களின கீழேதான் காணப்பட்டன. தலவிருட்சங்களை மையமாக வைத்துக் காணப்படும் பல பழைய தலங்கள் இவற்றுக்குச் சான்று பகருகின்றன.

இந்தியாவில் உள்ள தலங்களில் ஒவ்வொரு தலத்திற்கும் ஒவ்வொரு தலவிருட்சம் புனித மரமாகப் போற்றப்படுகின்றது. இதுவே அத்தலத்துக்கும் தலப் பெருமையாக அமைந்துள்ளது. இவற்றுள் சிலவற்றை எடுத்துக்காட்டாக இங்கு குறிப்பிடலாம். திருவையாறு, திருஎறும்பியூர் திருஇராமேஸ்வரம் முதலிய முப்பதுக்கும் மேற்பட்ட கோயில்களில் வில்வம் தலமரமாக அமைந்துள்ளது. தலமரமாக இல்லாத கோயில்களிலும் வளர்க்கப்படுவதில் இருந்தே இதன் முக்கியத்துவத்தினை உணரமுடிகிறது. சிவபெருமானுக்கு பூசனை மூலிகையான இது ஒரு கற்பக மூலிகையாகும். வில்வம் இன்று பிணிக்கு மட்டுமே மருந்தென்று அமையாது எல்லாப் பிணிகளையும் நீக்கி வாழ்நாளை நீடிக்கும் தன்மையுடையதாக விளங்குகின்றது. வில்வத்தினை கூவிளம், கூவிளை என்ற பெயர்களாலும் அழைப்பர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சுவாமிகள் "நீரோடு கூவிளமும் நிலாமதியும் வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றை" என்ற தேவாரப் பாடலில் வில்வம் பற்றி குறிப்பிடுகின்றார்.

திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) திருவான்மியூர், மேலைத் திருக்காட்டுப்பள்ளி, திருப்பூந்துருத்தி முதலிய பதினைந்துக்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் தலமரமாக வன்னி விளங்குகின்றது. வன்னி மரம் இந்துக்களது வழிபாட்டிற்கு மட்டுமல்லாது மருத்துவப் பயன்பாடுகளான காய்ச்சல் போக்குதல், சளியகற்றுதல் நாடி நடையும் உடல் வெப்பத்தையும் மிகுத்தல் ஆகிய பண்புகளைக் கொண்டுள்ளது. "வம்பார் கொன்றை வன்னி மலர் தூவி" என வன்னி பற்றி திருஞானசம்பந்தர் தமது தேவார் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திருப்புளவாயில், திருப்புகலூர், திருமயிலாப்பூர், திருவெண்ணெய் நல்லூர், திருவேட்டக்குடி முதலிய சிவத்திருக்கோயில் களிலும், திருஇட வெந்தை, திருக்கோவலூர், திருப்பாடகம், திருப்புலியூர், திருப்புள்ளம், பூசக்குடி முதலிய திருமால் கோயில்களிலும் புன்னை தலமரமாக விளங்குகின்றது. இம்மரம் தாதுஅழுகல் போக்கியாகவும், உடல், சிவு நீக்கியாகவும். நாடிநடையை உயர்த்தி உடல்வெப்பு தரும் மருந்தாகவும் பயன்படுகின்றது. அத்துடன் தோல்நோய்க்குச் சிறந்த மருந்தாகவும் பயன்பட்டு வருகின்றது. திருக்குற்றாலம், திருநாவலூர், திருவாய்மூர் முதலிய பத்துக்கும் மேற்பட்ட சிவத்திருக்கோயில்களிலும் திருக்கோட்டியூர், திருக்கடித்தானம் முதலிய திருமால் கோயில்களிலும் தலமரமாக விளங்குவது பலாமரமாகும்.

*"மந்த மார்பொழில் மாங்கனி மாந்திட மந்திகள் மாணிக்கம்*
*உந்தி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைவானை"*

என திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தமது தேவாரப் பதிகத்தில் மாமரத்தினை தலவிருட்சமாகக் கொண்டமைந்த திருக்கோயிலினைச் சுட்டுகின்றார். திருமாந்துறை, திருமயிலாடுதுறை, திருநாகைத்தாரோணம், திருக்கச்சி ஏகம்பம், திரு உசாத்தானம், திருஅவிநாசி முதலிய சிவத்திருக் கோயில்களிலும் திருநீரகம், திருச்சீரீவரமங்கை முதலிய திருமால் திருக்கோயில்களிலும் தலமரமாக விளங்குவது மாமரமாகும். மாவின் துளிர், இலை, பருப்பு, பட்டை, பிசின் ஆகியவை மருத்துவப் பயனுடையதாக விளங்குவதை சித்த வைத்தியர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

திருவாவடுதுறை, திருநல்லம், திருப்பரிதிநியமம் ஆகிய சிவத்திருக் கோயில்களிலும். திருக்கச்சி, திருப்பட்குழி, திருப்புல்லாலி முதலிய திருமால் கோயில்களிலும் தலமரமாக அரசு விளங்குகின்றது. இதனை திருமரம் எனஅழைப்பர். ஊர், ஏரி, குளக்கரைகளில் வேம்புடன் இணைந்து வளர்க்கப்படுவதுண்டு. இவ்வினமரங்களை வலம்வருவதால் மகப்பேறு வாய்க்கும் என்று பரவலாக நம்பப்படுகின்றது. மற்றும் இதன் கொழுந்து வெப்பு அகற்றவும் தாகம்தணிக்கவும், வேர்பட்டை ஆகியன வீக்கம் குறைக்கவும் மருந்தாகப் பயன்படுகின்றன.

திருஅன்பிலாவந்துறை, திருப்பழுவூர். திருவாலம்பொழில், திருவாலங்காடு முதலிய சிவத்திருத் தலங்களிலும் திருமெய்யம். திருவில்லிபுத்தூர் முதலிய திருமால் கோயில்களிலும் தலமரமாக ஆலமரம் விளங்குகின்றது. திருப்பனந்தாள், திருப்பனங்காடு, திருப்பனையூர், திருமழபாடி முதலிய சிவத்திருக்கோயில்களிலும் திருக்குறுங்குடி முதலிய திருமால் கோயில்களிலும் பனைமரமே தலமரமாக விளங்கி வருகின்றது. திருத்தென்குடித்திட்டை, திருஇன்னம்பர், திருச்சிவபுரம், திருநாகேசுவரம், திருப்பென்னாகடம் முதலிய சிவத்திருக்கோயில்களிலும் திருச்சேறை, திருநந்திபுரவின்னகரம் ஆகிய திருமால் கோயில்களிலும் தலமலரமாக செம்பகமரம் விளங்குகின்றது. மலருக்காக வீடுகளிலும் கோயில் நந்தவனங் களிலும் வளர்க்கப்படுவதுண்டு. இதன் இலை, பூ, விதை, வேர், பட்டை ஆகியவை மருத்துவப் பயனுடையவையாகும்.

திருப்பழனம், திருத்தேவூர், திருமருகல், திருத்தருமபுரம் திருக்குடவாயில், திருப்பைஞ்ஞீலி, திருக்கஞ்சனூர், திருக்கழுக்குன்றம் ஆகிய சிவத்திருக்கோயில்களிலும் திருக்கரம்பனூர், திருக்கூடலூர், திருவெள்ளியின்குடி ஆகிய திருமால் கோயில்களிலும் தலமரமாக வாழை விளங்குகின்றது. திருப்பைஞ்ஞீலியில் சுஜீலி எனும் ஒருவகை கல்வாழையும் திருமருகலில் மலைவாழை இனத்தைச் சேர்ந்த வாழையும் தலமரமாக உள்ளன. திருப்பாதிரிப்புலியூர், திருவலிதாயம், திருஅவினாசி. திருவாரூர் ஆகிய சிவத்திருக்கோயில்களிலும் திருஆதனூர், திருநாகை, முதலிய திருமால்கோயில்களிலும் பாதிரி தலமரமாக விளங்ககின்றது. இவற்றுள் பாதிரிப்புலியூரில் வெண்பாகியும், திருவாரூரில் செம்பாதியும் தலமரமாகும்.

பவளமல்லிகையினைத் தலமரமாகக் கொண்டு திருக்காழி, திருக்களர், திருக்கோட்டாறு, திருநறையூர் முதலிய சிவத்திருக்கோயில்களும் திருத்தணிகை, திருத்தடிகை, திருவைகுந்தம் போன்ற திருமால் கோயில்களும் விளங்குகின்றன. திருத்தலைச்சங்காடு, திருத்தஞ்சலூர்,ஆகிய சிவத்திருக் கோயில்களிலும் திருபார்த்தர்பள்ளி. திருப்பேர்நகர், திருவெள்ளக்குளம்

முதலிய திருமால் கோயில்களிலும் புரசமரம் தலமரமாய் விளங்குகின்றது. இது பலாசம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. திருவெற்றியூர், திருவெண்ணாமலை, திருஇராமனதீச்சரம், திருநீடூர் முதலிய திருக்கோயில் களிலும் திருச்சுன்னங்குடி, திருக்கன்னமங்கை, முதலிய திருமால் கோயில் களிலும் மகிழமரம் தலமரமாயுள்ளது. மகிழம்பூ திருவண்ணாமலை, திருக்கன்னமங்கை ஆகிய தலங்களில் இறைவழிபாட்டிற்குப் பயன்படுத்தப் படுகிறது. திருக்கீழ்வேளூர், திருநனா. திருஓமாம்பலியூர் முதலிய திருக் கோயில்களில் தலமரமாக இலங்தை விளங்குகின்றது.

திருநன்னிலத்துப் பெருங்கோயில், திருமங்கலக்குடி, திருக்கோடி,. திருக்கைச்சினம் ஆகிய திருக்கோயில்களில் கோங்கு தலமரமாகும். தற்சமயம் எந்தத் தலத்திலும் வளர்ப்பதாகத் தெரியவில்லை. திருக்கருகாவூர் , திருக்காவிரிப்பூம்பட்டினம், திருக்கருப்பறியலூர், வடதிருமுல்லைவாயில் ஆகிய திருக்கோவில்களில் முல்லைக்கொடியும் கிருஉசாத்தானம், திருஇலம்பையங்கோட்டூர் ஆகிய திருக்கோயில்களில் மல்லிகையும் திருக்கடவூரில் பிஞ்சினம் என்ற பெருமல்லிகையும் தலமரங்களாகும். திருப்பாசூர், திருநெல்வேலி, திருவெண்ணெய்நல்லூர், திருவேட்களம் ஆகிய திருக்கோயில்களில் தலமரமாக மூங்கில் விளங்குகின்றது, திருநெடுங்களம். திருக்கரவீரம். திருக்கள்ளில் ஆகிய திருக்கோயில்களில் தலமரம் அலரியாகும் கரவீரம்என்பது அலரியில் மற்றொரு பெராகும். திருஇரும்பைமாகானம், திருப்பழமன்னிப் படிக்கரை, திருக்கொடிமாச் செங்குன்றூர் (திருச்செங்கோடு), திருவனந்தபுரம் ஆகிய திருக்கோயில்களில் இலுப்பை தலமரமாக உள்ளது.

திருக்கடபந்துறை (குழிக்கலை கடம்பர்கோயில்) திருகடம்பூர், திருஆலவாய் (கடம்பவனம்) –மதுரை ஆகிய திருக்கோயில்களின் கடம்ப மரத்தை தலமரமாகக் கொண்டவை. திருக்கோயில்கள் சார்ந்த ஊரும் மரத்தின் பெயரால் அமைந்துள்ளன. திருஆய்பாடி, திருச்சிற்றேமம் திருச்செங்காட்டங் குடி ஆகிய திருக்கோயில்களின் தலமரம் காட்டாத்தியாகும். திருப்பெருந்துறை

எனும் ஆவுடையார் கோயிலின் தலமரம் குருந்தமரமாகும். திருநெல்லிக்கா, திருநெல்வாயில், திருப்பழையாறை, வடதளி முதலிய திருக்கோயில்களின் தலமரம் பன்னீராகும். திருமுருகன்பூண்டி, திருத்தெளிச்சேரி, வடதிருமுல்லை வாயில் ஆகிய திருக்கோயில்களில் தலமரம் மாதவி இதனை குருகு, குருக்கத்தி, கத்திகை என்றும் குறிப்பிடப்பெறுகின்றது.

திருவொற்றியூர், திருக்கானாட்டுமுள்ளூர் ஆகிய திருக்கோவில் களில் இரண்டாவது தலமரமாக அத்தி விளங்குகின்றது. திருஎருக்கத்தம் புலியூர், திருக்கானாட்டுமுள்ளூர் ஆகிய திருக்கோயில்களில் தலமரமாக விளங்குவது வெள்ளெருக்கு.எருக்கத்தம்பூரில் விழாக்காலங்களில் வெள்ளெருக்கம்பூவால் பூசிக்கப்படுகின்றது. திருக்கானாட்டுமுள்ளூரில் வெள்ளெருக்குடன் அத்தியும் தலமரமாக உள்ளது. திருவாஞ்சியம், திருவழுந்தூர் ஆகிய தலங்களில் சந்தனம் திருக்கோயில் மரமாயுள்ளது, திருசாய்க்காடு, பல்லவனம், சங்கவனேஸ்வரம் ஆகிய திருக்கோவில்களிலும் அன்பில் திருமால்கோயில்களிலும் தலமரமாகத் தாழை விளங்குகின்றது. இது கைதை, கேதை. கண்டல் என்றும் குறிப்பிடப்பெறும். திருவாரூருக்கு அருகில் உள்ள திருவிற்குடி வீரட்டம் எனும் திருக்கோயிலின் தலமரம் துளசியாகும். இது திருமாலுக்குப் பூசனை மூலிகையாதலால் எல்லா வைணத் தலங்களிலும் கொண்டாடப்படுவதாகும். சோழநாட்டு திருவின்னகர் என்ற திருமால் கோயிலில் துளசியே தலமரமாகும். துவளம், திருத்துழாய் என்ற பெயர்களாலும் குறிப்பிடப் பெறுகிறது, திருத்தெங்கூர், வடகுரங்காடுதுறை முதலிய திருக்கோயில்களின் தலமரமாகத் தென்னை விளங்குகின்றது,

திருவானைக்கா. திருநாவலூர் ஆகிய திருக்கோயில்களின் தலமர மாக விளங்குவது நாவலாகும். பழங்காலத்தில் மக்கள் மரத்தின் அடியிலேயே தெய்வங்களை வைத்து வணங்கினர் எனும் கருத்துக்கு அரண் செய்வதாக திருவானைக்காவில் கருவறைக்கு அருகில் மிகவும் பழமையான வெண்நாவல்மரம் அமைந்திருப்பதை இன்றும் காணலாம். இதையே

"வெண்ணாவல் அமர்ந்துறை வேதியனே" என்றும் "வெண்ணாவல் விரும்பும்" என்றும் "வெண்ணாவலின் மேவிய எம் அழகா என்றும் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். திருஈங்கோய்மலை எனும் சிவத்திருக்கோயிலிலும் திருக்குருகூர் எனும் திருமால் கோயிலிலும் புளியே தலமரமாகும். திருக்காளப்பேர் எனும் காளையார் கோயிலிலும் திருத்திலத்தைப்பதியிலும் மாந்தாரை தலமரமாகும். திருவிடைமருதூர், திருஇடையாறு ஆகிய திருக் கோயில்களில் தலமரமாக விளங்குவது மருதமரமாகும். திருச்சேறையெனும் உடையார் கோயில், திருநாட்டியத்தான்குடி ஆகிய திருக்கோயில்களில் தலமரம் மாவிலங்கமாகும். திருக்குடந்தைக் காரோணம், புள்ளிருக்கு வேளூர் எனும் வைத்தீஸ்வரன் கோயில் திருவாட்போக்கி எனும் ஐயர்மலை ஆகிய திருக்கோயில்களில் வேம்பு தலமரமாயுள்ளது.

திருமாலிருஞ் சோலையெனும் திருமால் கோயிலின் தலமரம் அசோகாகும். திருக்காறாயில் என்னும் திருக்கோயிலின் தலமரம் அகிலாகும். திருமணஞ்சேரி எனும் திருக்கோயிலின் தலமரம் ஊமத்தை. திருமாகறல் திருக்கோயிலின் தலமரம் எலுமிச்சையாகும். திருக்குறுக்கை வீரட்டம் என்னும் திருக்கோயிலின் தலமரம் கடுக்காய் மரமாகும். திருஅம்பர்மாகானம் எனும் திருக்கோயிலின் தலமரம் கருங்காலி. மதுரையை அடுத்த திருப்பெருங்குன்றம் எனும் திருக்கோயிலின் தலமரம் கல்லத்தி. இது காட்டாத்தி என்றும் குறிப்பிடப்படுகிறது. கல்லால் இனத்தைச் சாா்ந்த மரவகை.சுந்தரமூர்த்தி நாயனாரும் திருப்பரங்குன்றப் பதிகத்தினுள் "கல்லால் நீழற் கீழ் ஒருநாட் கண்டதும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

தொண்டை நாட்டில் காஞ்சிநகருக்கு அருகில் உள்ள திருக்கச்சி நெறிக் காரைக்காடு என்னும் திருக்கோயிலின் தலமரம் காரையாகும். திருக்கடை முடியெனும் திருக்கோயிலின் தலமரம் கிளுவையாகும். கும்பகோணத்திற்கு மேற்கில் அமைந்துள்ள திருக்கொட்டையூர் என்ற தலத்தில் திருக்கோயில் மரமாக விளங்குவது ஆமணக்கு(கொட்டைச்செடி) ஆகும்.

திருச்சாய்காடு என்னும் தலத்தில் திருக்கோவில் மரமாவது கோரையாகும் இது ஒரு புல்வகையெனினும் தலமரமாகவே குறிப்பிடப்படுகின்றது. திருப்புள வாயில் எனும் திருக்கோயிலின் தலமரங்கள் நான்கினுள் சதுரக்கள்ளியும் ஒன்றாகும். திருத்தில்லையின் தலமரம் தில்லையாகும். தில்லை நிறைந்த தாலேயே தில்லைவனம் என்ற பெயர்பெற்று தில்லையானது. திருவாரூருக்கு அருகில் அமைந்துள்ள திருக்குவளையெனும் திருக்கோயிலின் தலமரம் கேற்றா ஆகும்.

திருவென்னியூர் திருக்கோயிலின் தலமரம் நந்தியாவட்டம். பூசனைக்குரிய மலர்களாதலால் எல்லா திருக்கோயில் நந்தவனங்களிலும் வீட்டுத்தோட்டங்களிலும் வளர்க்கப்படுகின்றன. ஓகைப்போகையூர் என வழங்கப் பெறும் திருப்பேரெயில் என்ற திருக்கோயிலின் தலமரம் நாரத்தை திருநறையூர் என்ற திருமால்கோயிலின் தலமரமாக நொச்சி விளங்குகின்றது. திருப்பராய்த்துறைத் திருக்கோயிலின் தலமரம் பராய். இது பிராய், பிறாமரம், குட்டிப்பலா என்றும் குறிப்பிடப்படுகிறது. பாபநாசம் அருகில் உள்ள திருப்பாலைத்துறை என்னும் திருக்கோயில் தலமரம் பாலை. தலப்பெயர் மரப்பெயரால அமைந்ததாகும். இது வெப்பாலை, நிலப்பாலை என்ற பெயர்களாலும் குறிப்பிடப்பட்டது, திருக்கோடிக்கா எனும் திருக்கோயிலின் தலமரம் பிரம்பு. திருப்புன்கூர் என்னும் திருக்கோயிலில் புங்கமரமே தலமரமாகும். இத்தலம் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு அருகே உள்ளது. நீடாமங்கலம் அருகில் திருஇரும்பூளையெனும் ஆலங்குடி திருக்கோயிலின் தலமரம் சிறுபூளையாகும். திருக்கருவூரானிலை எனும் கரூரில் திருக்கோயில் மரம் வஞ்சி ஆகும். இது சீந்தில் கொடி, ஆகாசவல்லி, அமிர்தவல்லி. சோமவல்லி, சாகாமூலி என்ற பெயர்களாலும் குறிப்பிடப்பெறுகின்றது. திருவாழ்கொளிப்புத்தூர் எனும் தலத்தின் மரம் வாகை.திருஊறல் (தக்கோலம்) எனும் தொண்டைநாட்டுத் திருக்கோயிலின் தலமரம் வால்மிளகாகும். திருக்காறாயில் என்னும் திருக்கோயிலின் தலமரங்களில் விளாமரமும் ஒன்றாகும். மயிலாடுதுறைக்கு அருகில் அமைந்துள்ள திருவிளநகர் எனும்

திருக்கோயிலின் தலமரம் விழல். திருவீழிமிழலை எனும் திருக்கோயிலின் தலமரம் விழுதி. வீழி என்பதும் விழுதியைக் குறிப்பதாகும். தலத்தின பெயர் வேல்காடு என மரத்தின் பெயராலேயே அமைந்துள்ளது. பூவிருந்தவல்லிக்கு அருகில் திருவேற்காடு எனும் தொண்டைநாட்டுத் தலத்தில் திருக்கோயில் மரம வெள்வேல். முலத்தின் பெயர் வேல்காடு என மரத்தின் பெயராலேயே அமைந்துள்ளது.

பண்டைய ஈழத்திலே நிலவிய வழிபாட்டு மரபுகளை வரலாற்று ஆசிரியர்கள் "யக்ஷ"நாகவழிபாடுகள் என வகைப்படுத்தியுள்ளனர். "யக்ஷ" என்ற சொல் "பூசிக்கத்தக்கவர்" "வழிபாட்டுக்குரியவர் என்ற பொருளைத் தருகின்றது. இவர்கள் அன்று தேவர்கள் போன்ற நிலையில் வழிபட்டார்கள் என்பதை அறியமுடிகின்றது. இலங்கை வரலாற்று ஆசிரியர்களுள் ஒருவரான பரணவித்தான என்பவர் பாளி நூல்களையும் வடஇந்தியச் சமயநிலையையும் மையமாக வைத்து பௌத்தம் இங்கு கால்கொண்டபோது யக்ஷ நாகவழிபாட்டு முறைகள் மரம் (விருட்சம்), மலை வழிபடுதல் போன்ற இயற்கை வழிபாடுகள், லிங்க வழிபாடு மற்றும் ஜைன பிராமணமதக் கருத்துக்கள் நிலவின எனக்கூறிச் சென்றார் மரவணக்கமும் யக்ஷ வழிபாட்டில் ஒரு முக்கிய இடம்பெற்றதை எடுத்துக் காட்டுகிறது.

ஈழதது இந்து சமயவரலாறு (1996) என்ற நூலில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் பௌத்தம் இலங்கைக்கு வர முன்னர் மரவழிபாடு காணப்பட்டதாகவும் பௌத்த இந்து சமயத்தவர்களிடையேயும் இவ்வழிபாட்டு மரபு நிலவியதாகக் கூறியுள்ள கருத்துக்கள் ஒப்புநோக்கத்தக்கன. இயற்கைச் சக்திகளை தெய்வம் உறையும் இடங்களாகக் கருதி வழிபட்ட யக்ஷ வழிபாட்டு மரபோடு இணைந்ததொன்றுதான் மரவழிபாடாகும். இவ்வழிபாட்டில் மரங்கள் உயிருள்ளவை(ஆத்மா) ஆதலால் அவற்றுக்கு ஊறு செய்யக்கூடாது என்ற நம்பிக்கை காணப்பட்டது. மரங்கள், தாவரங்களோடு பண்டைய மனிதன் கொண்டிருந்த தொடர்பும் நெருங்கிய ஈடுபாடுமே இத்தகைய வழிபாட்டின் தோற்றுவாயாக அமைந்திருக்க வேண்டும். மரம்,செடி, கொடிகள் ஆகியவற்றின்

தன்மையினை அவதானித்த மனிதன் இவை உற்பத்தியாகிப் பூத்துக் கனிகொடுத்து சந்ததியைப் பெருக்கி மடிந்ததை அறிந்து கொண்டான். இதனாற் போலும் சிருஷ்டி, வளம், சந்ததி, விருத்தி ஆகியவற்றின் அம்சங்களைக் கொண்டதாகக் கருதி இருந்திருக்கின்றான். மரங்களைத் தெய்வம் உறையும் இடங்களாகக் கண்ட மனிதன் தெய்வநிலையில் அவற்றைப் பேணவும் முற்பட்டான். மகாவம்சத்தில் நேரடியாக வழிபாட்டிற்குரியமரங்களாகப் பனையும் ஆலும் குறிக்கப்பட்டாலும் கூட பல இடங்களில் வளங்கள் பற்றி வரும் தகவல்களை உற்றுநோக்கும் போது பௌத்தம் வருமுன்னர் இவ்வளங்களும் வழிபாட்டிற்குரிய புனித இடங்களாக விளங்கியிருக்கலாம் என்று எண்ணத் தூண்டுகின்றது எனப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கூறியுள்ளார். இலங்கையில் கிராமிய மட்டத்தில் மரவணக்கம் ஒரு செலவாக்குள்ள வழிபாடாக இன்றும் காணப்படுகிறது.

இந்தியாவைப் போன்று இலங்கையில்உள்ள ஆலயங்களில் ஒவ்வொரு பிரசித்திபெற்ற தலத்திற்கும் ஒவ்வொரு புனிதமரங்கள் தலவிருட்சங் களாகப் போற்றப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக திருக்கேதீஸ்வரத்தில் வன்னி மரமும், திருக்கோணேஸ்வரத்தில் கல்லாலமரமும், கதிர்காமத்தில் வேப்பமரமும், முன்னேஸ்வரத்தில் அரசமரமும், செல்வச்சந்நிதியில்பூவரசும், மாவிட்டபுரத்தில் மாமரமும், வல்லிபுரஆழ்வாரில் கல்லாலமரமும், வற்றாப்பளைக் கண்ணகி அம்மனில் வேம்பும், காரைநகர் சிவன்கோவிலில் வன்னி, அரசு, இலுப்பை ஆகிய மூன்று விருட்சங்களும், வண்ணார்பண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வரதராஜப் பெருமாள் கோயிலில் பலாமரமும், மானிப்பாய் மருதடியில் மருதமரமும், சுன்னாகம் கதிரைமலைச் சிவன்கோயிலில் வில்வமரமும், மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயிலில் குருந்த மரமும் தலவிருட்சங்களாகப போற்றப்படுகின்றன. இவற்றை நோக்கும்போது பண்டைய வழிபாட்டின் வளர்ச்சி நிலையும் ஆலயங்களின் வரலாறுகளையும் அறிய முடிவதோடு ஒவ்வொரு கோயில்களிலும் தலவிருட்சங்கள் போற்றப் படுவதையும் உணரமுடிகிறது.

மரத்தின் பெயரினை அடியாய்பிறந்த இடங்கள் அல்லது ஊர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவை மக்களின் நம்பிக்கையையொட்டி எழுந்தவையாகும். அதாவது அவ்வூரிலுள்ள அல்லது குறிப்பிட்ட அந்த இடத்தில் நிற்கும் மரத்தின் பெயராலே அவ்வூர் அழைக்கப்பட்டது. வழிபாட்டு நடைமுறையில் வணங்கப்பட்ட மரத்தின் பெயராலும் ஊர் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தில் ஆலயம் எழுச்சி பெற்றதும் இம்மரத்தின் பெயரால் அவ்வாலயம் அழைக்கப்பட்டது. இந்தியாவில் அமைந்துள்ள ஆலயங்களுக்கு எடுத்துக்காட்டாக திருவாலங்காடு, திருப்பனந்தாள், திருப்பாதிரிப்புலியூர், மாங்காடு, திருமுல்லைவலியில் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதே போல் இலங்கையிலும் மரத்தின் பெயரில் அடியாகப் பிறந்த ஆலயங்கள் பல உள்ளன. எடுத்துக்காட்டாக மானிப்பாய் மருதடி விநாயகர், மாதகல் அரசடி சித்திவிநாயகர், ஊர்காவற்துறை புளியங்கூடல் மாகாமாரிஅம்மன் கோயில், மிருசுவில் – நெல்லிக்கிணறு கந்தசாமி கோயில், அல்லாரை அறுகம்புல் மகாகணபதிப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இந்துப் பண்பாட்டு மரபிலே விருட்சம்(மரம்) வணக்கம் பண்டைக் காலம் தொடக்கம் வணங்கப் பெற்று, இன்று திருக்கோயில் வழிபாட்டுடன் இணைந்த ஒன்றாக விளங்கிவருகின்றமை கண்கூடு. இவ்வணக்கத்தினை மக்கள் மேற்கொண்டதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. இவ்வணக்கம் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மட்டமல்லாது உலகநாட்டில் வாழ்ந்த மக்களாலும் நன்கு போற்றப்பட்ட ஒரு வணக்க முறையாகும். திருக்கோயில் வழிபாட்டு மரபிலே மரம் பல்வேறு நிலைகளில் முக்கியத்துவம் பெற்றுவிளங்கு கின்றது. அவையாவன: தலத்திற்குச் சிறப்பான மரங்கள், கோயிற் கிரியை மரபில் மரங்கள், கோயில் கலை மரபில் மரங்கள், கோயிலின் அமைப்பில் மரம்பெறும் முக்கியத்துவம் என்பன. திருக்கோயிலில் தலவிருட்சங்கள் வழிபாட்டுக்குரியனவாக மட்டுமல்லாது மக்களது வாழ்வியலில் பல்வேறு மருத்துவப் பயன்பாடுள்ளதாக விளங்கியமையால் மக்கள் இம்மரங்களைப் போற்றி வணங்கியிருக்கலாம். மேலும் மர வழிபாடு தொடர்பாக மக்களி டையே பல்வேறு நம்பிக்கைகள் நிலவுகின்றன. □



# ஆரோக்கிய வாழ்வில் உணவு முறையும் மூலிகைகளின் பங்களிப்பும்

கட்டுரை


வைத்தியகலாநிதி திருமதி. சிவஞானமணி பஞ்சராசா,
சிரேஷ்ட விரிவுரையாளர் (*Gr.1*),
சித்தமருத்துவத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கைதடி.


மானிட வாழ்க்கைக்கு உணவு, உடை, உறையுள் ஆகியன மிகவும் இன்றியமையாதது. இவற்றுள் உணவுக்கு முதலிடம் கொடுக்கப் பட்டுள்ளது. ஏனெனில் உணவின்றி மனிதன் உயிர்வாழ்தல் இயலாது. எனவே உடல், உள ஆரோக்கியத்தை பேணக்கூடிய தகுந்த உணவு வகைகளைத் தெரிவுசெய்து முறைப்படி உண்ணுதல் வேண்டும்.

ஆதி மனிதன் தனது சூழலிலுள்ள தாவரங்களையே உணவாகப் பயன்படுத்தினான். அவனுக்குத் தாவரங்களைச் சமைக்கவோ, பதப்படுத்தவோ தெரிந்திருக்கவில்லை. காலப்போக்கில் நாகரிகம் ஆரம்பித்த பின்னரே தாவரங்களைப் பதப்படுத்தியும் சமைத்தும் உண்ணத் தெரிந்துகொண்டான். அக்கால மனிதர்கள் உணவுக்காக கிழங்குகளையும், பழங்களையும் பயன்படுத்தினர். அதேபோல் நோய்களுக்கு மருந்தாக தாவரங்களையே பயன்படுத்தினர்.

உணவு நாம் உயிர் வாழ இன்றியமையாதது. அளவோடும், காலநெறியோடும் உணவு உண்பவர்க்கு நோய் அணுகாது. உணவு மிகினும் குறையினும் நோய் செய்யும். மிகுந்த சுவையுடைய உணவாக இருந்தாலும் கூட அளவுக்கு அதிகமாக உண்போமானால் துன்பம் செய்யும். எனவேதான் "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்றனர் நம் முன்னோர்கள். எனவே காலத்திற்கேற்பவும், வயதிற்கேற்பவும், நோய்களுக்கேற்பவும் உணவை உட்கொள்ளுவோமாயின் நோய்கள் ஏற்படாது ஆரோக்கியமாக வாழ முடியும்.

பிறவியின் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்பவற்றைப் பெறுவதற்கு நோயில்லா உடல் அவசியம். எனவே உடலை வளர்க்க வேண்டும் என்று திருமூலர் திருமந்திரச் செய்யுள் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

*உடம்பார் அழியினும் உயிரார் அழிவர்*
*திடம்பட மெஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.* *(திருமந்திரம்)*

உடம்பை வளர்க்கும் உபாயங்களுள் நோயில்லாது காப்பதே சிறந்ததாகும். நம்முன்னோர்கள் நோய்களுக்கு சிறிதும் இடம் கொடுத்தல் கூடாது என வலியுறுத்துகின்றனர்.

*“ எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை*
*அதிர வருவதோர் நோய்”* *(திருக்குறள் 429)*

அதாவது நோய் வருவதற்காகிய காரணிகளை நீக்கி தம் உடலை காத்துக் கொள்ளும் அறிவுடையோர்க்கு நோய் ஏற்படாது. இதற்கேற்ப நம் முன்னோர்கள் தமது உணவு முறைகளையும் பழக்கவழக்கங்களையும் தினசரி வாழ்க்கையில் புகுத்தி ஆரோக்கியமாக வாழ்ந்துள்ளனர்.

ஆரோக்கியம் என்றால் என்ன என்று உற்றுநோக்கில் சித்த மருத்துவ தத்துவத்தின்படி உயிர்த்தாதுக்கள் அல்லது முத்தோஷங்கள் எனக் குறிப்பிடப்படும் வாத, பித்த, கபம் சம நிலையில் இருத்தல் வேண்டும். சப்த தாதுக்களாகிய இரசம், இரத்தம், மாமிசம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை, சுக்கிலம் அல்லது ஆர்த்தவம் சமநிலையில் இருத்தல் வேண்டும். மலங்களாகிய சிறுநீர், மலம், வியர்வை நல்ல முறையில் வெளியேற்றப்பட வேண்டும். உணவு ஜீரணத்துக்கு காரணமான அக்கினி நல்ல நிலையில் இருத்தல் வேண்டும். மனம், ஆத்மா நல்ல நிலையில் இருத்தல் வேண்டும். இதனை

*“ சம தோஷசம தாது சமாக்கினி சம மலக்கிரியா*
*பிரசன்ன ஆத்ம இன்திரிய மனக”*

என்னும் சுலோகத்தின் மூலம் இதனை அறியலாம்.

உலக சுகாதார ஸ்தாபனம் ஆரோக்கியம் என்றால் உடல், உள, சமூக, ஆன்மிக ரீதியாக நல்ல நிலையில் இருத்தல் எனக் குறிப்பிட்டுள்ளது. நோய் நிலைமையை எடுத்துக்கொண்டால் வெளிக்காரணங்களினால் முத்தோஷங்களான வாத, பித்த, கபம் பிரகோபமடைந்து சப்ததாதுக்களாகிய இரசம், இரத்தம் என்பன தாக்கப்படுவதால் நோய் ஏற்படுகின்றது.

*“மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று.* *(திருக்குறள் 941)*

என்ற திருக்குறள் இதனைக் காட்டுகிறது.

மனிதனுக்கு ஏற்படக்கூடிய எந்த ஒரு நோய்க்கும் உணவுமுறை தான் அடிப்படைக்காரணமாக உள்ளது. நோய்க்கு மூலகாரணமாக இருப்பது

அஜிரணம் ஆகும். வயிற்றில் முதலில் கோளாறு தொடங்கித்தான் உடலில் மற்றக் கோளாறுகள் தொடங்குகின்றன. நோய் ஏற்பட்ட நிலையில் வைத்தியர் உண்ட உணவு பற்றியும், மலம் கழிப்பது இயல்பாக இருக்கிறதா என்பது பற்றியும் விசாரிப்பார். எனவே நமக்கு ஏற்படக்கூடிய சகல நோய்களுக்கும் முக்கிய காரணமாக நமது உணவும் உணவுப் பழக்கமும் காணப்படுகின்றது.

உண்ணும் உணவை ஒழுங்குபடுத்திச் சீரமைத்தால் நோய் ஏற்படாது தடுக்கலாம். சில சமயங்களில் உணவு விஷயத்தில் தெரிந்தோ தெரியாமலோ செய்து விடும் தவறுகள் காரணமாக நோய் ஏற்படுகின்றது. இந்நிலையில் உடல் பாதிப்புக்கு காரணமான உணவிலும் உணவுப்பழக்கவழக்கத்திலும் மாறுதல்களைக் கொண்டுவந்தால் நோயைக் குணப்படுத்த முடியும். உணவின் பயனை உற்றுநோக்கில் உணவானது உடலும் அதில் அமைந்துள்ள உறுப்புக்களும் அவைகட்கு ஆதாரமாகிய உயிர் அணுக்களும் பிறந்து வளர்ந்து தத்தமக்குரிய தொழிலை நிகழ்த்தி அவைகளை நிலைக்கச் செய்வதற்கு காரணமாகியுள்ளது. சுருங்கச்சொல்லின் ஆயுள், நலம், உள்ளம், வாய்ச்சொல், மெய்யின் செயல்கள் ஆகியவை உணவைப் பொருந்தியே நிற்கின்றன. எனவே உணவானது உடலுக்கு சக்தியைக் கொடுப்பதற்கு, வளர்வதற்கு, அழிவுற்ற கலங்களை புதுப்பிப்பதற்கு, உடலைப் பாதுகாப்பதற்கு அவசியமாகும். உணவின்றி 3 திங்கள் மேல் உயிர்வாழ முடியாது.

மேற்கூறிய தொழில்களைப்புரிய அறுசுவை உணவு அவசியமாகும் எனக் குறிப்பிட்டுள்ளனர். உணவில் சுவை என்பது ஊட்டம் தரும் பகுதிகளின் இயற்கை அடையாளங்களாகும். இதனை அறிந்த தமிழ் மக்கள் தாம் உண்ணும் உணவுகளில் அறுசுவைகளையும் கலந்து உண்டு வந்தனர்.

**அறு சுவைகளின் தொழிலை உற்றுநோக்கில்**

| | | |
|---|---|---|
| துவர்ப்பு | ஆற்றல் | குருதி உண்டாகும். |
| கார்ப்பு | வீரம் | உமிழ்நீர் சுரக்கும் |
| இனிப்பு | வளரும் | தசை வளரும் |
| உவர்ப்பு | தெளிவு | எலும்பு வளரும் |
| கைப்பு | மென்மை | நரம்பு சக்தி மிகும் |
| புளிப்பு | இனிமை | கொழுப்பு வளரும், |

உடலை அழகுடையதாக்கும், சப்த தாதுக்களை வளர்க்கும்.

நாம் உண்ணும் உணவு மூலம் மன ஆரோக்கியத்தையும் பேண முடியும். மனதைப்பற்றிக் கவனிப்பின் 3 குணங்கள் காணப்படுகின்றன.

1. **இரஜோ குணம் – கொடூரமான குணம்**
2. **தமோ குணம் – மந்தமான குணம்**
3. **சத்வ குணம்/ சாத்வீக குணம். நல்ல குணம்**

நாம் உண்ணும் உணவில் புலால் உணவுகளை கூடுதலாகச் சேர்ப்பதால் இரஜோ குணம் கூடுதலாக ஏற்படும். தாவர உணவுகளை கூடுதலாகச் சேர்ப்பதால் அதிலும் உடனடி மரக்கறிகளைச் சேர்ப்பதன் மூலம் சத்வ குணம் அல்லது சாத்வீக குணத்தைப் பெற முடியும். பழைய உணவுகளை கூடுதலாக எடுப்பதனால் தமோ குணம் ஏற்படும்.

அற உணர்ச்சியை ஒழித்து மற உணர்ச்சியை தரும் ஊண் வகைகள் தீண்டாப்பொருட்களாகவே நம் நாட்டில் பண்டய காலம் தொட்டு கருதப்பட்டு வந்தன. ஆசிரியர் இளங்கோவடிகள் "ஊனுூன் துறமின்" என தெளிவாக சிவப்பதிகாரத்தில் கூறியுள்ளார். திருவள்ளுவர் புலால் மறுத்தல் என்னும் அதிகாரத்தில் 10 குறட்பாக்களால் புலால் உண்ணக்கூடாது என வலியுறுத்தியுள்ளார். இவற்றை உற்றுநோக்கில் தாவர உணவே நாம் நோயின்றி வாழ சிறந்ததாகும்.

நாம் உண்ணும் உணவில் காபோவைதரேற்று (4 பங்கு), புரதம் (1 பங்கு), கொழுப்பு(1பங்கு), உயிர்ச்சத்துக்கள் (விற்றமின்கள்), கனியுப்புக்கள் என்பன தகுந்த அளவில் இருத்தல் வேண்டும். இதை நிறையுணவு என்பர். இவற்றுடன் நார்ச்சத்தும் (Dietary fibers) அவசியம் தேவை. இந்த நார்ச்சத்து தாவர உணவிலேயே கூடுதலாகக் கானப்படுகின்றது. நார்ச்சத்து குறைவாக எடுப்பவர்களுக்கு மூலரோகம், புற்றுநோய், Diverticulitis போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகும். கிராமப்புற ஆபிரிக்கர்கள் தாவர உணவுகளையே கூடுதலாகப் பயன்படுத்துவதால் அவர்களுக்கு மேற்கூறிய நோய்கள் ஏற்படுவதில்லை. நார்ச்சத்து கூடுதலாக இலைக்கறி வகைகளில் காணப்படுகின்றது.

இலைக்கறி வகைகளாவன தோட்டக்கீரை, பொன்னாங்காணி, வல்லாரை, கருசலாங்கண்ணி, புதினாக்கீரை, சாரணை, பயிரி, முளைக்கீரை, கங்குன்ஃவள்ளல்க்கீரை, தொய்யில் கீரை, பனங்கீரை, அறக்கீரை, சிறுகீரை, முசுட்டைஇலை, முடக்கொத்தான், பிரண்டைக்கொழுந்து, கறிமுல்லை இலை, பசளி, தூதுவளை, மொசுமொசுக்கை, சண்டி இலை, தவசிமுருங்கையிலை, முருங்கையிலை, அகத்தியிலை, மணித்தக்காளி இலை, கறிவேப்பிலை, குறிஞ்சாஇலை, கொவ்வை இலை, வாதநிவாரணிஇலை என்பனவாகும்.

மேற்கூறிய இலைக்கறி வகைகளில் ஒன்றை கறியாக வறையாக / சொதியாக / சம்பலாக அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வதனால் ஆரோக்கியத்தைப் பேண முடியும். பொதுவாகக் கீரைவகைகளை கறிசமைக்கும் போது தேசிப்புளி சேர்ப்பதனால் கீரையிலுள்ள இரும்புச்சத்தை குடலில் அகத்துறிஞ்சும் நிலைக்கு மாற்றுவதற்கு தேசிப்புளியியுள்ள விற்றமின் C உதவுகின்றது.

**உணவு மூவகை மாறுபாடு இல்லாது இருத்தல் அவசியம்.**

1. *சுவை வீரியங்களால் மாறுகொள்ளாமை.*

   *அறுசுவைக்கும் வாத, பித்த, கப ஆகிய முத்தோசங்களிற்க்கும் இடையிலுள்ள தொடர்பை உற்றுநோக்கின்*

   *இனிப்பு, உப்பு, புளிப்பு கபத்தைக் கூட்டும்.*

   *உப்பு, புளிப்பு, கார்ப்பு பித்தத்தைக் கூட்டும்.*

   *துவர்ப்பு, கார்ப்பு, கைப்பு வாதத்தைக் கூட்டும்.*

எனவே எந்தச் சுவைமிகுந்ததால் நோய் ஏற்பட்டதோ அந்தந்தச் சுவையுள்ள உணவுகளைக் குறைப்பதன் மூலம் நோயைக் குணமாக்கலாம் அல்லது எந்தச் சுவை குறைந்ததால் நோய் ஏற்பட்டதோ அந்தந்தச் சுவையுள்ள உணவுகளைக் வழங்குவதன் மூலம் குறிப்பிட்ட தோஷத்தை சமநிலைக்குக் கொண்டுவந்து நோயைக் குணமாக்கலாம்.

உதாரணமாக நீரிழிவு நோயில் இரத்தத்தில் இனிப்பு சுவை அதிகரித்துக் காணப்படும். இந்நிலையில் இனிப்பு சுவை உடைய உணவைத் தவிர்ப்பது அவசியம். அதே போன்று வாத தோஷம் பிரகோபித்து உருவாகும் மூட்டு வாத நோயில் துவர்ப்பு, கார்ப்பு, கைப்பு சுவையுள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். இனிப்பு, உப்பு, புளிப்பு சுவையுள்ள உணவுகளை உள்ளெடுத்தல் நலம்.

இதற்கு அமைவாக மிளகு, சீரகம், மஞ்சள், காயம், சுக்கு / இஞ்சி, ஏலம் வெந்தயம், உள்ளி இவற்றை அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளுதல் மிகுந்த பயனைத் தரும்.

2. *உண்பாண் பகுதியோடு மாறுகொள்ளாமை.*
   *இதில் ஆண், பெண் என்ற பால் வேறுபாட்டிற்கு ஏற்றாற் போல் உணவு அமைதல் வேண்டும்.*
   *பெண்களை எடுத்துக் கொண்டால் அவர்களுடைய உணவுப் பழக்க வழக்கங்கள் ஒவ்வொரு நிலையிலும் வேறுபடும்.*
   *பருவமடைந்த பெண்களின் உணவு*

இக்காலத்தில் ஏற்படும் இரத்த இழப்பால் உண்டாகும் பலவீனத்தை நிவர்த்தி செய்யவும், கர்ப்ப உறுப்புக்கள் வலுப்பெறவும், திருமணத்தின் பின் தாய்மையடையவும் உதவும் முகமாக உணவு முறை அமைய வேண்டும். இதற்கு உழுந்து, நல்லெண்ணெய், கத்தரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு என்பன அதிகளவில் பயன்படுத்த வேண்டும். அத்துடன் பருப்பு, கீரை, தயிர், வெண்ணெய், நெய், பழவகை, பசுப்பால் எனபனவும் சிறந்ததாகும்.

## *கர்ப்பிணிகளின் உணவு*

இவர்களுக்கும் உழுந்து, நல்லெண்ணெய் அதிகம் எடுத்தல் சிறந்ததாகும். உழுந்தானது கரு வளர்ச்சிக்கும், கருப்பை, இடுப்பென்பகளுக்கு பலத்தைக் கொடுப்பதற்கும் உதவும். அத்துடன் மலச்சிக்கலைத் தவிர்க்க இலைக்கறிவகைகள், பழங்கள் என்பவற்றை நாளாந்தம் உணவில் சேர்க்க வேண்டும். பாலுடன் குங்குமப்பூ சேர்த்து உட்கொள்ளலாம். குங்குமப்பூ இரத்தத்தை சுத்தி செய்வதுடன் பிரசவத்தின் பின் ஏற்படக்கூடிய இரத்த ஓட்டத்தை நீக்கி தாயினதும் சேயினதும் ஆரோக்கியத்தைப் பேண உதவி

பிரசவித்த பெண்களின் உணவில் சரக்கு சேர்த்துக் கொடுக்கப்படும். இதில் மல்லி, நற்சீரகம், மஞ்சள், மிளகு, இஞ்சி, உள்ளி என்பன கூடுதலாக சேர்க்க வேண்டும்.

ஆண்களுக்கு அவர்களின் வேலைக்கு தகுந்தாற் போல் உணவு அமைய வேண்டும். வயது, தேக உழைப்பு, தேக அமைப்பு என்பவற்றிற்கு ஏற்பவும் உணவு அமைய வேண்டும்.

### 3. காலதேச இயல்புக்கு மாறுகொள்ளாமை.

பருவ காலங்களுக்கு ஏற்ப உணவை உட்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தைப் பேண முடியும்.

| பருவகாலங்கள் | உபயோகிக்கத்தக்க உணவு |
|---|---|
| இளவேனில் - சித்திரை, வைகாசி (கபம் விருத்தியடைந்திருக்கும்) | கைப்பு,கார்ப்பு, துவர்ப்பு சுவையுள்ள இலகுவான உணவுகள், வேப்பம் , இலுப்பைப் |
| முதுவேனில் - ஆனி, ஆடி(வாதம் தன்னிலை விருத்தி) | இனிப்பு சுவையுள்ள இலகுவில் ஜீரணிக்கக்கூடிய உணவுகள், காற்றோட்டிக்காய் |
| கார்காலம் - ஆவணி, புரட்டாதி (வாதப்பிரகோபம், பித்தம் தன்னிலை விருத்தி ) | இனிப்பு, புளிப்பு, உப்பு சுவையுள்ள இலகுவான உணவுகள், தேன் கலந்த உணவுகள், ஆறிப்போன உணவுகள் உண்ணக்கூடாது |
| கூதிர் காலம் - ஐப்பசி, கார்த்திகை(பித்தம் பிரகோபம்,வாதம் தன்னிலை அடைதல்) | இனிப்பு, கைப்பு, துவர்ப்பு சுவையுள்ள இலகுவான உணவுகள், சம்பா அரிசி, பயறு |
| முன்பனி – மார்கழி, தை (பித்தம் தன்னிலை அடைதல்) | இனிப்பு, புளிப்பு, உப்பு சுவையுள்ள இலகுவான உணவுகள். |
| பின்பனி – மாசி , பங்குனி (கபம் தன்னிலை விருத்தி) | இனிப்பு, புளிப்பு, உப்பு சுவையுள்ள இலகுவான உணவுகள். |

### உணவு உண்ணும் நேரம்

உணவை ஒரு முறை உண்பவன் யோகி
இரு முறை உண்பவன் போகி
மூன்று முறை உண்பவன் ரோகி

என சித்தர்கள் கூறியுள்ளனர். எனவே பலமுறை உண்பவன் பல நோய்களுக்கு ஆளாக நேரிடும்.

உணவைத் தவிர்க்க விரும்பினால் இரவு உணவைத் தவிர்த்துப் பால், பழம் உட்கொள்வது நலம்.

காலை உணவாக இலைக்கஞ்சி, பயறு, கடலை, கௌபி இவற்றில் ஒன்றையும், மதிய உணவாக தவிட்டரிசிச் சோற்றுடன் மரக்கறி, இலைக்கறி என்பனவற்றைப் பயன்படுத்தல் ஆரோக்கியத்தைப் பேண உதவும்.

ஒருமுறை உண்ட உணவு ஜீரணமடைந்த பின்னரே மறுபடி உண்ண வேண்டும். இதனை திருவள்ளுவர் பின்வரும் குறள் மூலம் தெளிவுபடுத்தி யுள்ளார்

*"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்."* *(திருக்குறள் 942)*

உணவை மட்பாண்டங்களில் சமைத்து உண்பதே சிறந்ததாகும். இதன் மூலம் புற்றுநோய் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். உணவு உண்ணும் போது தரையில் இருந்து (பத்மாசனத்தில் இருந்து) வாழை இலையில் அல்லது வெள்ளித்தட்டில் உண்பது ஆரோக்கியத்துக்கு சிறந்தது.

## *நோய் நிலைமைகளில் உணவுகள்*

### *ஜலதோஷம் :-*

மிளகில் இரசம் செய்து சாப்பிடலாம். கையாந் தகரையைக் குழம்பு செய்து சாப்பிடலாம், தூதுவளங்காய் வற்றலை உணவுடன் சேர்த்துக் கொள்ளலாம், தூதுவளம் இலையை சம்பல் செய்து உணவாகப்பயன்படுத்தலாம், மொசுமொசுக்கை இலையை றொட்டியாகச் செய்து சாப்பிடலாம்.

### *நீரிழிவு:-*

சிறுகுறிஞ்சா, கொவ்வை, ஆவாரை, கருவேப்பிலை என்பவற்றின் இலையை வறையாகச் செய்து சாப்பிடலாம். பாவற்காய் கறி, சம்பல் செய்து சாப்பிடலாம், காலை உணவாக கடலை, பயறு, கௌபி, உழுந்தில் செய்த உணவுகள், சாப்பிடலாம், பச்சையரிசிச் சோறு, குரக்கன் மாவில் செய்த உணவுகள், தவிட்டரிசியில் செய்த உணவுகள் சாப்பிடலாம்.

### *கல்லடைப்பு:-*

சுரைக்காய், நீர்த்துப்பூசனிக்காய், வாழைத்தண்டு, கீரைத்தண்டு, முள்ளங்கி கறி செய்து சாப்பிடலாம். இளநீர் அதிகம் குடிக்கலாம், வெள்ளரிக்காய், வெள்ளரிப்பழம், வெள்ளரிப்பிஞ்சு சாப்பிடலாம்.

*மூலநோய்:-*

மூலநோய்க்கு மலக்கட்டு ஒரு காரணமாகும். எனவே மலக்கட்டை நீக்கக்கூடிய இலைக்கறி வகைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கருணைக்கிழங்கு, தாமரைக்கிழங்கு கோகிலாக்கிழங்கு என்பவற்றில் ஒன்றை தினமும் கறி செய்து உட்கொள்ளுதல் சிறந்தது. அத்துடன் நிறைய மோர் குடிப்பதும் சிறந்ததாகும்.

*அதிகுருதியமுக்கம்:-*

இவர்கள் உள்ளி, வெங்காயம், சுரைக்காய், நீர்த்துப்பூசனிக்காய், வெள்ளரிக்காய், வெள்ளரிப்பழம், ஆகியவற்றை உணவாகப் பயன்படுத் தலாம்.

*முடிவுரை:-*

ஆரோக்கிய வாழ்வை அமைத்து நலமே வாழ்வோம். □


## உதவியன


1. மே. துரைஸ்வாமி ஐயங்கார். அஷ்டாங்க கிருதயம்.1920
2. கு.ச.முருகேச முதலியார். குணபாடம் (மூலிகை வகுப்பு). 1988
3. நோயில்லா நெறி
4. மு.வரதராசனார். திருக்குறள் தெளிவுரை.1970
5. ஐ.பொன்னையா. பரராச சேகரம். 1932
6. M.Swaminathan. Hand Book of Food and Nutrition


சிவசங்கரபண்டிதர் பற்றி . . .

*சீர் பட்ட தெய்வமறை ஆகமங்களின் தீம் பொருள் தன்*
*நாப்பட்டெழுந்த சிவசங்கரபண்டித நாயகன் சொற்*
*பாற்பட்டு வந்த கிறிஸ்து மத கண்டனப் பகுவாய்*
*வாய்ப்பட்டும் வாழ்வதுண்டோ பைபிள் காணினி வையகத்தே.*

*- சி. வை. தா. அமிர்தலிங்கம்பிள்ளை*
*(சி. வை. தாமோதரம்பிள்ளையின் புதல்வர்)*



சிறுகதை

# குருதட்சணை

நீர்வை கு. தியாகராசா

வெளிநாட்டிலிருந்து வந்த வடிவேலுவுக்கு வீட்டில் தடபுடலான வரவேற்பு நடந்தது. வடிவேலுவின் அம்மா ஓடி ஓடி மகனுக்கேற்ற சமையல் செய்வதில் மும்மரமாக ஈடுபட்டிருந்தாள். வளவுக்குள் இருந்த மாட்டுக் கொட்டிலில் நின்ற மாடுகளுக்குத் தீனிபோட்டுக் கொண்டிருந்த தன் கணவனை உரக்க அழைத்து, மரக்கறிக் கடைக்கு அவசரமாக அனுப்பி விட்டு உடுப்பை அள்ளிக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள். எப் போதும் குளித்து விட்டுதான் சமையல் செய்வாள் வடிவேலுவின் அம்மா. இது வடிவேலுவின் அம்மம்மா சிறு வயதில் இருந்தே மகளுக்கு கற்றுக் கொடுத்த பாடம்.

பன்னிரண்டு வருடங் களுக்கு முன் கனடாவுக்குச் சென்றிருந்த வடிவேலு இன்று காலை தான் ஊருக்கு வந்தான். பயண அலுப்புத் தீர வீட்டின் படுக்கை அறையில் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான். ஏதோ சத்தம் கேட்டு நித்திரை கலைந்து எழுந்த வடிவேலு நேரே கிணற்றடிக்குச் சென்றான். கிணற் றின் நீரை அள்ளி கால் முகம் கழுவினான். கழுத்தில் இருந்த தேங்காய்ப்பு தூயால் முகத்தைத் துடைத்தபடி, "அம்மா ! நடராசா வத்தி யார் வீட்டை போட்டு வாறன் சமையுங்கோ" என்று கூறியபடியே சேட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு வாத்தியார் வீடு நோக்கிச் சென் றான்.

நடராசா வத்தியார், வடிவேலுவின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு மனிதர். மனிதரல்ல வடிவேலுவைப் பொறுத் தமட்டில் அவர் அவனின் கண்கண்ட தெய்வம் என்றுகூடச் சொல்லலாம்.

வடிவேலுவுக்கு அப் போது வயது பன்னிரண்டு இருக்கும். ஆண்டு எட்டில் படித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவன்

தகப்பன் வேலுப்பிள்ளை வடிவேலுவைக் கூப்பிட்டு, "தம்பி, நீ இதுவரை படித்தது போதும். இனி என்னுடன் தோட்டத்திற்கு வந்து, தோட்ட வேலைகளில் உதவி செய்" என்று சொல்லிவிட்டார். தகப்பன் சொல்லைத் தட்டியறியாத வடிவேலுவும் விருப்பம் இல்லா விட்டாலும், சரி என்று நின்று விட்டான்.

நாலு நாட்களாக வடிவேலு பாடசாலைக் குப் போக வில்லை நாலாம் நாள் விளக்கு வைத்த நேரம் "வேலுப்பிள்ளை! வேலுப்பிள்ளை!" என்று யாரோ வடிவேலு வீட்டுப் படலை யில் கூப்பிடும் குரல் கேட்டது. குரலில் இருந்து அது நடராசா வாத்தியார் தான் என்று மட்டுக்கட்டிக்கொண்ட வேலுப்பிள்ளை, "வாத்தியாரே. வாருங் கோ, சொல்லி அனுப்பி யிருந்தா நானே வந்திருப் பன். நீங்கள் ஏன் பொழுதுபடும் நேரத்தில் அலைக் கழிந்தனீங்கள்" என்றபடியே ஓடிச் சென்று வாத்தியாரைக் கூட்டிவந்து வீட்டின் முற்றத்தில் போட்டிருந்த வாங்கில் உட்கார வைத்து விட்டு அவரின் முன்னால் பணிந்து நின்றார்.

"அதுசரி வேலுப்பிள்ளை, பெடியனை ஏன் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று நிப்பாட்டினனி... நாலு நாளாய் அவன் பள்ளிக்கூடம் வரவில்லை" என்று சற்று உறைப்பாக வாத்தியார் கேட்டார்.

"ஓம் வாத்தியார், என்ரை பாடும் கஷ்டம். தோட்ட வேலைகளுக்கும் உதவிக்கு ஆள் இல்லை. படிச்சாப் போல எல்லோருக்கும் அரசாங்க உத்தியோகம் கிடைக்கப் போகுதே, அது தான் அவன் படிச்சது காணும் என்று நிப்பாட்டிப் போட்டனான்." என்றார் வேலுப்பிள்ளை.

"வேலுப்பிள்ளை, சும்மா விசர்க்கதை கதையாதை. அவன் படிக்கக்கூடிய பிள்ளை. அவனைக் கெடாதை. உனக்குக் கஷ்டமென்றால் அவன்ரை படிப்புச் செலவு எல்லாத்தையும் நானே பொறுத்துக் கொள்கிறேன். நாளைக்கு அவனைப் பாடசாலைக்குக் கட்டாயமாக அனுப்பு" என்று சொல்லி விட்டு வாத்தியார் சென்று விட்டார்.

நடராசா வாத்தியார் தலையிட்டதால் வடிவேலுவின் கல்வி தொடர்ந்தது. வடிவேலுவும் ஊக்கத்துடன் படித்தான். க. பொ. த. உயர்தரமும் பாஸ் செய்து விட்டான். அதுவரை அவன் கல்வி கற்க ஏற்பட்ட

செலவை நடராசா வாத்தியாரே ஏற்றுக்கொண்டார்.

க. பொ. த. உயர்தரம் பாஸ் செய்த பின் வடிவேலு தன் தகப் பனுக்கு உதவியாகத் தோட்ட வேலைகளில் பங்கேற்று வந்தான்.

ஒரு நாள் வடிவேலுவை, ஆள் விட்டு தன் வீட்டுக்குக் கூப்பிட்டார் வாத்தியார். வடிவேலு வும் விரைந்து சென்றான். " தம்பி வடிவேலு ! இந்தக் காலத்தில் ஏ. எல் உடன் வேலை எடுப்பது கஷ்டம். எத்தனையோ பொடியள் ஏ. எல் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்குதுகள். உனக்கு விருப்பம் என்றால் உன்னை என் செலவில் வெளிநாடு அனுப்பி வைக்கிறேன். நீ வெளி நாடு போய் உழைத்து உனக்காக நான் படப்போகும் கடனைத் தீர்க்கலாம்"

அதன்பின் வாத்தியாரே எல்லா ஏற்பாடுகளும் செய்து வடிவேலுவை வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்தார். வடிவேலு வெளி நாடு சென்று உழைத்து வாத்தி யாருக்குக் கொடுக்க வேண்டிய கடனையும் கட்டி தன் குடும்பத் தையும் நல்ல நிலைக்குக் கொண்டு வந்து விட்டான். தான் இந்த நிலைக்கு வரக் காரணமாக இருந்த நடராசா வாத்தியாரை அவன் கண் கண்ட தெய்வமாக மதிக் கிறான்.

" வாத்தியார் ! வாத்தியார் !" என்று வாத்தியாரின் கேற்றடியில் நின்று வடிவேலு கூப்பிட்டான். முற்றத்தில் நின்ற பூங்கன்றுகளுக்கு நீ பாச்சிக் கொண்டு நின்ற வாத்தியாரின் ஒரே மகள் அன்பு உள்ளே சென்றாள்.

"ஆரது வடிவேலுவே, வா தம்பி... இன்று வெளிநாட்டால் நீ வருவாய் என்று உன் அப்பா சொன்னார்"

"சற்று முன்தான் வந்தனான் ஐயா. ஏதோ உங்களைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது வந்து விட்டேன்" என்று சொல்லிய படியே வாத்தியாரின் இரு பாதங்களை யும் பணிவுடன் தொட்டு வணங் கினான் வடிவேலு.

"நல்லாய் இரு. கடவுள் உன்னை ஆசிர்வதிப்பார்" என்று கூறியபடியே வடிவேலுவை அழைத் துச்சென்று முன் விறாந்தையில் போட்டிருந்த கதிரையில் அமர வைத்து தானும் ஓர் கதிரையில் அமர்ந்து கொண்டார்.

"ஏதோ உங்கள் உதவி யாலும் தயவாலும் நானும் என் குடும்பமும் நல்லாய் இருக்கிறம் வாத்தியார். அதுசரி உங்கள் சுகங்கள் எப்படி? அதை முதலில் கூறுங்கள்"

"எனக்கு என்னடா குறை. ஓய்வூதியம் வருகிறது. நேரத்துக் நேரம் மனைவியும் என் அருமை மகள் அன்புவும் சமைத்துப் போடு

கிறார்கள். கடவுளே என்று ஒரு குறையும் இல்லை. ஒரே ஒரு குறைதான். அன்புவுக்கு இருபத் தைந்து வயதாகிறது. இன்னமும் திருமணம் செய்து வைக்கவில்லை அது தான் என் கவலை"

"ஏன் ஐயா அன்புவுக்கு வரன் பார்க்க வில்லையா?

"பல இடங்களிலும் பார்த் தேன். ஆனால் அவர்கள் கேட்கும் சீதனப் பணத்தை என்னால் கொடுக்கமுடியவில்லை. கொஞ் சமா கேட்கிறார்கள்? பத்து இலச்சம் இருபது இலட்சமல்லோ கேட்கி றார்கள் ! அவ்வளவு பணம் என்னி டம் ஏது?"

உழைக்கும் போதும் நான் சேர்க்கவில்லை. இப்போது நான் வைத்திருக்கும் பணத்தைக் கூட்டிப் பெருக்கிப் பார்த்தாலும் ஒரு இலட்சம் கூடத் தேறாது.அன்புவின் கவலைதான் எனக்கு அவளை யாராவது ஒருவன் கையில் கொடுத்து விட்டால் என் கவலை தீர்ந்தது."

"நீங்கள் உங்கள் உழைப் பின் பெரும் பகுதியை ஏழைப் பிள்ளைகளுக்கு புத்தகம், கொப்பி, பேனை. பென்சில் என்று வேண்டிக் கொடுத்தே செலவழித்தீர்களே. போதாததற்கு சில மாணவர் களுக்கு வசதிக்கட்டணம் கூட கட்டிப் படிக்கவைத்தீர்கள். இது எல்லாம் நான் தெரிந்த விடயம் தானே. ஏணி போல நீங்கள் இருந்த இடத்திலேயே இருக்கிறிர்கள். உங்களைப் படிப்படியாகப் பயன் படுத்திப் பலர் மேலே சென்று விட்டார்கள்"

"வடிவேலு ! அது தான் ஒரு ஆசிரியரின் கடமை. என்னால் பலரும் முன்னேறியுள்ளனர். என்றாயே அதைக் கேட்க எனக்கு எவ்வளவு பெருமையாக உள்ளது" என்றார் நடராசா வாத்தியார் சற்றும் சலனமின்றி.

இப்படிப் பல விடயங்களை யும் பேசி விட்டு மதியச் சாப்பாட்டு நேரம் தன் வீடுவந்து சேர்ந்தான் வடிவேலு, அப்பாவும் மகனும் சாப்பிட வடிவேலுவின் அம்மா இருவருக்கும் உணவு பரிமாறி னாள். வடிவேலுவின் அப்பா லேசாகச் செருமி விட்டு மகனைப் பார்த்துச் சொன்னார்,

"தம்பி, உனக்கு வயது முப்பத்திரண்டாகிறது. இனியும் கல்யாணம் செய்யாது இருப்பது முறையல்ல.

இம்முறை கல்யாணத்தை செய்துகொண்டு நீ கனடாவுக்குப் போ. இப்ப போனா இனி எப்ப வருவியோ யார் கண்டது?

"அப்பா ! எனக்குக் கல்யாணம் செய்வதில் ஆட் சேபனை இல்லை. நான் இன்று இந்த நிலையில் இருப்பதற்கு நடராசா வாத்தியாரே காரணம். தன் சொந் தச் செலவில் என்னைப் படிப்பித்து பின் யாரிடமோ கடன் பட்டு என்னை வெளிநாட்டிற்கும் அனுப்பி வைத்தார்.

ஆனால் அவரின் நிலை இன்று என்ன? தன் ஒரே மகளான அன்பைத் திருமணம் செய்து கொடுக்க சீதனப் பணம் இல்லாது கவலைப் பட்டுக்கொண்டிருக் கிறார். எனக்குத் திருமணம் செய்து வைக்க நீங்கள் விரும்பினால் அவர் மகள் அன்பைச் செய்துவையுங்கள். சீதனம் எதுவுமே கேட்க வேண டாம்".

"தம்பி, வாத்தியார் உனக்குச் செய்த உதவியால் தான் நம் குடும்பம் நன்கு இருக்கிறது. அப் பேர்ப்பட்ட ஒரு உத்தமர் தன் ஒரே மகளைத் திருமணம் செய்து கொடுக்க முடியாது கவலைப்படு கிறார். என்கின்றாய். மன வேதனை யாக இருக்கிறது. நன்றி மறப்பது நன்றன்று. உன் முடிவு சரியானதே நான் நாளைக்கே சென்று அவரைச் சந்தித்து பெண் கேட்கிறேன். இந்த வைகாசியிலே திருமணத்தை முடித்துவிடலாம்" என்றார்.

"தன் குரு துரோணாச் சாரியாருக்கு ஏகலைவன் தன் பெரு விரலையே குரு தட்சணை யாகக் கொடுத்தான்.

வடிவேலுவோ தன் குரு நடராசா வாத்தியாருக்கு குரு தட்சணையாக தன்னையே மனமு வந்து கொடுக்கிறான்.

இதில் ஏகலைவன் உயர்ந்த வனா? இல்லை வடிவேலு உயர்ந்த வனா? என்று சிந்தித்த படியே வடிவேலுவின் அம்மா இரு வருக்கும் உணவு பரிமாறி னாள். □

(யாவும் கற்பனை)

## 1950களில் எங்கள் நீர்வையின் எழிற்கோலம்


*நீர்வேலி யென்பேர் நீள்பதி வழியிற்*
*சேரிரு புறமுந் தண்ணென் றிருக்கும்*
*வாழைக் குழாங்கள் வளர்ந்தினி தோங்கி*
*மாழைமென் னோக்கி வானை அளாவிடும்*
*கோழிச் சேவல் பெடையொடு கூடி*
*வாழைப் பாத்தி கிளறிடும் போது*
*காதலர்ப் பிரிந்து நலிவுறு மாதர்*
*துனிபுக வெய்தித் துரத்துபு வாழைநற்*
*றடலா னெறிந்து தட்டிக் கலைக்க*
*நீடிய கமுகிற் சோடாய்ப் பறந்து*
*கூடிப் பாளையின் நாடி யிருத்தலும்*
*வீழ்த்திடு பாக்குச் சாய்ந்திடு கதலிக்*
*குலைமே லெற்றப் பொலுபொலு வென்று*
*வழியதின் வீழும் பழமது பொறுக்கிப்*
*போவோர் வருவோர் பசிதனைத் தணிப்பர்.*

*- காதலியாற்றுப்படையில் பேராசிரியர் கா. கணபதிப்பிள்ளை*

மனிதர்களின் மேலான

கட்டுரை

# ஈழத்தில் இசைக்கல்வியின் வளர்ச்சி



க. கருணேசன் *B. Music*
(இசை ஆசிரியர்)
நீர்வேலி மேற்கு.

உணர்வுகளில் ரசனை உணர்வும் ஒன்று. இவ் உணர்வினாலேயே மனிதன் மனிதனாக வாழ்கின்றான். இவ் ரசனை உணர்வானது கலைகள், கலாசாரங்கள் போன்றவற்றினால் ஏற்படுத்தப் படுகின்றன. ஒரு நாடு உடல் நலம்மிக்க மக்களை கொண்டிருப்பதற்கு அங்கு நலம் மிக்க கலை வளங்களும் கலைச்சாதனங்களும் இருப்பது அத்தியாவசிய மாகின்றது. இந்த வகையில் ஆரம்பகாலத்திலிருந்து இற்றைவரைக்கும் ஈழத்தில் இசைக்கல்வி வளர்ச்சி பற்றி இங்கு நோக்கலாம்.

ஆரம்பத்தில் பியானோ, வயலின் முதலிய வாத்தியத்துறைகளில் லண்டன் பரீட்சைகள் கொழும்பில் நடைபெற்றன. கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள பாடசாலைகளில் உயர் வகுப்புக்களில் படித்த மாணவர்களில் சிலர் இப்பரீட்சைக்குத் தோற்றினர். கிறிஸ்தவப் பாடசாலைகளில் பாடல்களும் கூட்டியற் கானங்களும் தனியிடம் வகித்தன. வடக்கு, கிழக்கு பாடசாலைகளில் நாவலர், சேர். பொன். இராமநாதன் முதலியவர்களின் முயற்சியால் இசைக்கல்வியின் முதற்கட்டமாக தேவாரங்கள் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இலங்கை கலைச்சங்கம் கொழும்பில் ஆண்டு தோறும் இசையுடன் தொடர்புடைய கண்காட்சிகளை நடாத்தியது.

இக்கால கட்டத்தில் ரவீந்திரநாத் தாகூரும் அவரது இசை நடன மாணவரும் 1934ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கு வருகை தந்து "சர்பவிமோசனம்" எனும் தமது நாட்டிய நாடகத்தை கொழும்பு றீகல் மண்டபத்தில் மட்டுமன்றி இலங்கையின் பல்வேறு மாகாணங்களிலும் மேடையேற்றினர். இதனைத் தொடர்ந்து உதயசங்கரும் மேனகையும் தமது இந்நிகழ்ச்சிகள் வெறும் அழகியல் நயமாக இலங்கை மக்களிடம் இடம் பெறாது அழகியற் கலைகளை வரன்முறையாகக் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தைத்

தூண்டியதுடன் இந்நாட்டிற்குரிய தனித்துவமான அழகியற்கலை வடிவங்களைச் செப்பனிட வேண்டிய கல்வித் தேவைகளையும் உருவாக்கின. இதன் காரணமாக எமது மாணவர்கள் இந்தியாவில் சாந்தி நிகேதன், இலக்குமணபுரி சென்னை கலாசேத்திரம் ஆகிய இடங்களுக்குச் சென்று இசை பயின்று திரும்பி வந்த போது அவர்கள் எமது பாடசாலைகளில் இசை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர்.

அழகியற்கல்வி வளர்ச்சிக்கெனத் தனித்த நிறுவன அமைப்புக்களைக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பிற்காலத்தில் உணரப்பட்டது. சிங்கள மக்களின் அழகியற் கல்வி வளர்ச்சிக்காக "லங்கா காந்தலசபா" அமைக்கப்பட்டது. அது ஓர் உதவிக்கல்விப் பணிப்பாளரின் கீழ் இயங்கியது அவ்வாறே தமிழ் மக்களின் இசை நடனக்கலைகளை வளர்க்கும் முகமாக வட இலங்கை சங்கீதசபை 1931இல் தாபிக்கப்பட்டது. தமிழரின் பண்பாட்டை வளர்ப்பதில் உயிர்நாடியாக விளங்கிய இச்சபை இசையை வளர்ப்பதில் முக்கியபங்கை வகித்தது. 1933, 1934ஆம் ஆண்டுகளில் இச்சபை விடுமுறைக் காலங்களில் இசை வகுப்புக்களை நடாத்தியது. பேராசிரியர் J.P. கணேசையர் இந்தியாவில் இருந்து வருகை தந்து இவ்வகுப்புக்களை நடாத்தி நன்கு திறமையடைந்த மாணவர்களைத் தன்னுடன் அழைத்துச் சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசை பயில வழி செய்தார். இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இசைதுறையில் பட்டம் பெற்றோர் அதிகரிக்க இசையில் வளர்ச்சியும் ஏற்பட்டது இவ்வாறு ஆரம்பத்தில் சென்று பட்டம் பெற்றவர்களில் திரு. K. பாலசுப்பிரமணியம், T. சந்திரசேகரம், K. வேலாயுதபிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

இத்தாபனம் யாழ் கல்வித்திணைக்களப் பணிப்பாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கும் ஒரு சபை ஆகும். இச்சபை முதலாம் ஆண்டு தொடக்கம் ஆறாம் ஆண்டுவரை (ஆசிரியர் தரம்) தனியே பரீட்சைகளை நடாத்தி தராதரப் பத்திரங்களை வழங்குகின்றது. இப்பரீட்சைகள் அகில இலங்கை ரீதியிலும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. தமிழ் மாணவர்கள் இசைத்துறையிலே ஓரளவு அத்திவார அறிவைப் பெறுவதற்கு இச்சபையினரின் முயற்சி மிகவும் வழிகோலியது. அக்காலத்திலே பல்கலைக்கழகங்களிலோ, தனியார் இசைக்கல்லூரிகளிலோ, பாடசாலைகளிலோ, இசைக்கல்வி ஒரு


பாடமாக இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தியாவிலிருந்து கற்றுத் திரும்பிய ஆசிரியர்களுக்கு தொழில் வாய்ப்பையும் அவர்கள் மூலமாக ஏனைய இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் இசையின் மேல் நாட்டத்தையும் ஏற்படுத்தியது. ஆகவே, ஈழத்து இசைக்கல்வி வளர்ச்சியில் வட இலங்கைச் சங்கீதசபை மிகமுக்கிய பங்கினை வகிக்கின்றது.

1923ஆம் ஆண்டு இலங்கையின் ஒலிபரப்புச்சேவை ஆரம்பிக்கப் பட்மையும் 1941ஆம் ஆண்டு சேர். கந்தையா தலைமையில் ஒலிப்பரப்புப் பற்றிய சிறப்புக்குழு நியமிக்கப்படமையும் இசைவளர்ச்சிக்கு ஒலிபரப்புத்துறை ஆற்றிய பங்கைக் காட்டுகின்றன. இதன் மூலமாக படித்தோர் மட்டத்தில் இசைக்கு இருந்த சிரத்தை அதிகரித்ததுடன் மாணவர்களின் ரசனை உணர்வும் அதிகரித்தது.

1960களிலே 175இசை ஆசிரியர்கள் பாடசாலைகளில் நியமனம் பெற்றார்கள். இக்கால கட்டத்தில் யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவின் ஆதரவிலான ஆண்டு இறுதிப்போட்டி நாட்டுப்பாடல், நடனம் என்பவற்றிற்கும் பெரும் ஊக்கமளிப்பதாக அமைந்தது. மாவட்ட ரீதியிலான போட்டியில் 20இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் பங்குபற்றின. கல்விப்பொதுத்தராதர சாதாரண, உயர்தரப்பரீட்சைக்கு பாடசாலை மாணவர்கள் சங்கீதத்தை ஒரு பாடமாக மேற்கொண்டனர். 1961இல் பத்தாயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சைக்கு சங்கீதத்தை ஒரு பாடமாக எடுத்தார்கள். இக்கால கட்டத்தில் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி களிலேயும் சங்கீதம் ஒரு கட்டாயபாடம் ஆக்கப்பட்டது.

இசைக்கல்வியின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறையின் இசைக்கலைமாணி, இசைக்கலைமணி கற்கைநெறிகள் சிறப்பான பங்கு வகிக்கின்றன நுண்கலைமாணிப் பட்டப்படிப்பு சில வருடங்களுக்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டது. இது கணிசமான அளவு மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பினை இசைத்துறையில் வழங்கியதுடன் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு இசையை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும் உயர்த்தியது.

இவற்றைவிட தனியார் இசைமன்றங்கள், ஆலயக்கிரியைகள் ஆகியனவும் இசைக்கலைக்கு கொடுக்கும் முக்கியத்துவம் இலங்கையில் இசைக்கல்வி சிறப்பான வளர்ச்சி பெற்றுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது. □



ஆலோசனை

# புகைத்தலைத் தவிர்ப்போம்

வைத்திய கலாநிதி வே. ஜெகரூபன்
மனநல மருத்துவமனை,
அங்கொடை.

புகைக்கும் பழக்கத்தை மனிதர்கள் கி. மு. 5000 ஆண்டளவிலிருந்து மேற் கொண்டு வருவதாக ஆய்வளர்கள் தெரிவிக்கின்றனர் அன்றிலிருந்து இன்று வரை புகைத்தலுக்கு எதிரான போராட்டங்களும் நிகழ்ந்து தான் வருகின்றன.

புகையிலை ஏறத்தாழ 125 நாடுகளில் பயிரிடப்படுகிறது. நெல் பயிரிடப்படும் நாடுகளின் எண்ணிக்கை அதைவிடக் குறைவு என்பது கவனிக்கத் தக்கது.

உலகில், ஒரு நாளுக்கு சராசரியாக 1500 கோடி சிகரெட்டுக்கள் விற்பனையாகின்றன. உலக சனத்தொகை ஏறத்தாழ 700 கோடி என்பது கவனிக்கத்தக்கது.

இலங்கையில் மட்டும் சட்டரீதியாக விற்கப்படுகின்ற சிகரெட்டுக்களின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு 470 கோடி என்பது 2002 ஆம் ஆண்டு புள்ளிவிபரம்.

உலகில் புகையிலை பாவனை காரணமாக மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2004 ஆம் ஆண்டு 5.4 மில்லியன் ஆகும். இது 2025 ஆம் ஆண்டு 7 மில்லியனாக எதிர்பார்க்கப்படுகிறது.

உலகில் வீதி விபத்துக்களாலோ, எயிட்ஸ் நோயினாலோ ஆண்டு தோறும் மரணிப்பவர்களை விட புகை பிடிப்பதால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

புகையிலையில் அதிகளவில் காணப்படும் நச்சுப் பதார்த்தம் நிக்கொட்டின் ஆகும். இதைத்தவிர அநட்டோன், அம்மோனியா, மெதனோல், காபன்

மொனொக்சைட்டு, மீதேன் முதலிய பத்துக்கும் மேற்பட்ட நச்சுப் பதார்த்தங்கள் புகை பிடிப்பதால் மனித உடலில் சேர்வதாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

புகை பிடித்தலால் பலவித நோய்கள் ஏற்படலாம். புற்று நோய் அவற்றில் முதன்மையானது. சுவாசப்பை, குரல்வளை, வாய்க்குழி, சதையி முதலிய உறுப்புகளில் புற்றுநேய் ஏற்படுவதற்கு புகைத்தல் காரணம் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

மாரடைப்பு, மூச்சுக்குழாய் அழற்சி, இரப்பைப்புண் முதலிய நோய்களும் புகைத்தலுடன் தொடர்புடையன.

மாரடைப்பு காரணமாக மரணமடைபவர்களில் 25% ஆனவர்கள் புகை பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பதை மருத்துவ ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

ஆண் மலட்டுதன்மைக்கும் ஆண்குறி விறைப்பின்மைக்கும் புகைத்தல் காரணமாகின்றது. குழந்தைப் பேறு இல்லை என்று வைத்திய சாலைகளுக்கு வருபவர்களுக்கு "புகைத்தலை நிறுத்தவும்" என்பது முதலாவது அறிவுரை ஆகும்.

பெண்களில், சீரற்ற மாதவிடாய், குறித்த வயதை அடையு முன்பே மாதவிடாய் நிறுத்தம் போன்றன புகைத்தலின் காரணமாக ஏற்படுகின்றன.

கர்ப்பத்தடை மாத்திரைகளைப் பாவிக்கும் பெண்கள் புகை பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தால் இருதய நோய்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம் என்பது ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டது.

கர்ப்ப காலத்தில் புகைபிடிப்பதனால், கருச்சிதைவு, குறைமாதப் பிரசவம், நிறை குறைந்த பிள்ளைகள், சிசு மரணம் முதலியன ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகும்.

சிகரெட்டிலுள்ள பல நச்சுப்பதார்த்தங்கள் தாய்ப்பாலுடாக குழந்தையைச் சென்றடையக் கூடியன. எனவே பாலூட்டும் தாய்மார்கள் புகை பிடிப்பதை கட்டாயம் நிறுத்த வேண்டும்.

வாழ் நாளில் புகைபிடிக்காத மனிதர்களின் உடலைக்கூட சுவாசப் பாதையின் வழியாக புகை சென்றடையக்கூடியது. (Passive Smoking) புகைக்கு அடிமையான கணவனுக்கு அருகில் நித்திரை கொள்ளும் பெண்களுக்கு புகையின் தாக்கம் இருப்பது நிரூபிக்கப்பட்டது.

கதவுகள், யன்னல்கள் மூடிய கட்டடங்களின் அல்லது வாகனங்களின் உள்ளே உள்ள ஒருவர் புகைக்கும் புகை சூழ உள்ள அனைவரையும் பாதிக்கின்றது.

உலக சுகாதர நிறுவனத்தின் (WHO) கருத்துப்படி ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 6 லட்சம் பேர் மறைமுக புகைத்தலினால் மரணிக்கிறார்கள்.

மனிதர்கள் தங்களின் குழந்தைப் பருவத்திலிருந்தே மற்றைய மனிதர்கள் புகைபிடிப்பதைப் பார்த்து பழகிக் கொள்கிறார்கள். புகைபிடிக்கும் மனிதர்களில் பெரும்பாலானவர்களின் தந்தை, அல்லது தாயின் சகோதரர்கள் மற்றும் மூத்த சகோதரர்கள் புகைபிடிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

தந்தை, உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சமுதாயத்தினால் மதிக்கப்படு கின்றவர்கள் புகைப்பிடிப்பதை நியாயப்படுத்தும் ஒன்றாக புகைபிடிப் பவர்கள் கருதுகிறார்கள்.

புகைத்தலை ஊக்கிவித்தலில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன சினிமாவில் அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கதாநாயகர்கள் புகைபிடிப்பதாக காட்சிகளை அமைப்பதை சிகரட் நிறுவனங்கள் ஊக்குவிக் கின்றன.

புகைத்தல் தங்களது "இமேஜை" ஒரு படி உயர்த்திக் கொள்ளவதாக கட்டிளமைப் பருவ ஆண்கள் கருதுகிறார்கள்.

புகைப்பதால் களைப்பு குறைவடையும் என்பதும் உடலின் சக்தி கூடும் என்பதும் போலி நம்பிக்கைகளாகும்.

பெரும்பாலான இளைஞர்கள் பகிடியாக ஆரம்பிக்கும் இப் பழக்கம் பின் நாளில் கைவிட முடியாத நோயாக மாறுவது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

நமது நாட்டில் 21 வயதிற்கு குறைந்தவர்களுக்கு சிகரட் விற்கக் கூடாது என்பது சட்டமாகும். சில நாடுகளில் இது 18 வயதாகும்.

சுருட்டு மற்றும் பீடியை விட சிகரட் நல்லது என்பது போலி நம்பிக்கையாகும். எல்லாவற்றிலும் உள்ளது உடலுக்கு கேடு விளைவிக்கும் நச்சுப் பதார்த் தங்களாகும்.

திருமண வைபவங்களிலும் மற்றும் பல விழாக்களிலும் சுருட்டு சிகரட் பரிமாறப்படுவது ஒரு கலாசாரமாகி வருவது வருந்துதற்குரியது.

நண்பர்கள் பலர் சிகரட் பிடிக்கும் போது அவர்களின் மத்தியில் ஒருவர் புகை பிடிக்காமல் இருப்பது கேவலமாகப் பார்க்கப்படும் நிலைமை வருந்துதற் குரியது.

ஆரம்பத்தில் சிகரட் புகைக்கப் பழகிக் கொள்பவர்கள் பின்னர் கஞ்சா, ஹெரோயின் என பல்வேறு போதை வஸ்துக்களையும் பழகிக் கொள்கிறார்கள்.

புகைத்தலுக்கு அடிமையானவரை மீட்பதற்கு மனநல வைத்திய சேவையை நாடுவது அவசியமாகும். □

## ஏர்வெல்லும் எம்மூரில் தான்

*(நேரிசை வெண்பா)*

*நீள்புவியில் நீர்வேலி நின்று நிலைத்திடவே*
*நாள்முழுதுங் கண்ணளிக்கும் ஆறுமுகன் - தோள்விம்மத்*
*தேர்வந்தான் வள்ளியொடு தெய்வானை தான்களிக்க*
*ஏர்வெல்லும் எம்மூரிற் தான்*

*- நீர்வைக்கிழார்*

*நீர்வைக் கந்தசுவாமி கோவில்*
*இரதோற்சவ மலர் (உதயன் 16.04.2011)*



கட்டுரை

# Z புள்ளி பற்றிய கண்ணோட்டம்

சிறிவதனி சிவஞானசுந்தரம்,
இராஜ வீதி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையின் கல்வித்திட்டங்களில் பல்வேறு மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் தற்போது பல்கலைக் கழகம் மற்றும் கல்வியியற்கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக Z Score கணிப்பீட்டுமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

## Z Score ஐ எவ்வாறு கணிக்கிறார்கள்?

01. 3 பாடங்களுக்குரிய மொத்தப் புள்ளிகளுக்கேற்ப அதியுயர்புள்ளி பெற்ற மாணவர்களும், மாவட்டரீதியான தரப்படுத்தல்களுக்கு உட்பட்ட மாணவர்களில் உயர்புள்ளி பெற்றமாணவர்களும் விசேட சலுகை அடிப்படையில் சில பாடங்களுக்குத் தோற்றி உயர்புள்ளி பெற்றவர்களும் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாயினர்.

02. 2000ஆம் ஆண்டில் 04பாடங்களுக்குத் தோற்றியோரும் பின்னர் 03 பாடங்களில் பரீட்சைக்குத் தோற்றியோரும் சராசரிப்புள்ளி அடிப்படை யில் தெரிவு செய்யப்பட்டனர். இரு பிரிவினரும் (4ஆம்பாடம், 3ஆம் பாடம் ) ஒரே நிலையில் வைத்து சராசரிப் புள்ளி அடிப்படையில் தெரிவானர்.

    A = 280/4= 70, B=210/3=70 ( இங்கு A,B மாணவர்கள் பெயர். )
    இங்கு 4பாடம் இலகுவானதாயின் புள்ளிகள் கூடும்.

03. ஒரு கற்கை நெறிக்குள் வேறு வேறு பாடத் தெரிவும் அவற்றிற்கான பரீட்சைப் பெறுபேறும் தொடர்ச்சியாக ஒரே தன்மை வாய்ந்ததாக இருந்தால் கடினமான பாடம், இலகுவான பாடம் என்ற மனப்பாங்கு காணப்படுகின்றது.

    உதாரணமாக 4பாடங்கள் பௌதிகவியல், விலங்கியல், இரசாயனவியல் விவசாய விஞ்ஞானம் எனின் இங்கு கூடுதல் புள்ளிபெறலாம்

04. பாடங்களுக்குரிய பரீட்சை நேரங்களிலும் வித்தியாசம் உள்ளது, இந்து நாகரிகம் 6 மணித்தியாலம், புவியியல் 9மணித்தியாலம். இதில் இந்துநாகரிகத்தில் 60 புள்ளிகள் பெற்றவரும் புவியியல் பாடத்தில் 60 புள்ளிகள் பெற்ற மாணவரும் சமமாகக் கருதப்பட்டனர். இதில் விடைத்தாள் பத்திரம், பரீட்சை முறை வேறுபட்டதாக உள்ளது.

05 கடின பாடங்களைத் தவிர்த்து இலகுவான பாடங்களைத் தெரிவு செய்து கூடிய புள்ளிகளைப்பெற்று பல்கலைக்கழகம் செல்லலாம் என்ற வழியை கலைத்துறையில் பலர் பின்பற்றினர்.

| பாடங்கள் | கமல் | | ரவி | |
|---|---|---|---|---|
| | புள்ளி | நிலை | புள்ளி | நிலை |
| தமிழ் | 62 | 1 | 50 | 3 |
| அரசியல் | 58 | 1 | | |
| இந்துநாகரிகம் | | | 75 | 2 |
| அளவையியல் | | | 80 | 2 |
| புவியியல் | 60 | 1 | | |
| மொத்தம் | 180 | 2 | 205 | 1 |
| பாடங்கள் | சுரேஸ் | | நிமல் | |
| | புள்ளி | நிலை | புள்ளி | நிலை |
| இணைந்தகணிதம் | 75 | 2 | 90 | 1 |
| இரசாயனவியல் | 68 | 1 | 65 | 2 |
| பௌதிகவியல் | 70 | 1 | 68 | 2 |
| மொத்தம் | 213 | 2 | 223 | 1 |

நிமல் தெரிவானார். ஆனால் சுரேஸ் என்ற மாணவனைவிட நிமல் இரண்டு பாடங்களில் பின்னிலையில் உள்ளவர்.

Z Score கணிக்கும் முறை

$$\text{சமன்பாடு} = \frac{X - \bar{X}}{\sigma}$$

X மாணவன் ஒருவன் குறித்தபாடத்தில் பெற்ற புள்ளி

$\bar{x}$ குறித்தபாடத்திற்கான சராசரி இடை

б - குறித்த பாடத்திற்கான நியம விலகல்.

இடை $\bar{X}$ = $\frac{\text{மொத்தப் புள்ளி}}{\text{மாணவர் எண்ணிக்கை}}$

பரீட்சையின் போது ஒரு பாடம் இலகுவாயின் பாடத்தின் மொத்தப் புள்ளி அதிகரிக்கப்படுவதால் இடையும் அதிகரிக்கும். அதுபோல எல்லா மாணவர்களும் குறைந்த புள்ளியைப் பெறும் போது இடையும் குறைந்துவிடும்.

நியமவிலகல் $\sigma = \sqrt{\frac{\Sigma(x - \bar{x})}{n}}$

X - மாணவர்கள்பெற்ற புள்ளிகள்

$\bar{X}$ - பாடத்தின் இடை

n - பரீட்சைக்குத் தோற்றிய மாணவ் எண்ணிக்கை

$\Sigma$ – கூட்டுத்தொகை

A,B,C,D,E எனும் 5 மாணவர்கள் பௌதிகவியலில் பெற்ற புள்ளிகள்

A= 42 ,B= 44, C= 47 ,D=48 ,E=49

42+44+47 +48+49=230 $\bar{X}$=230/5=46

| X | X -$\bar{X}$ | (X -$\bar{X}$)$^2$ |
|---|---|---|
| 42 | 42 - 46 = -4 | 16 |
| 44 | 44 - 46 = -2 | 4 |
| 47 | 47 - 46 = 1 | 1 |
| 48 | 48 - 46 = 2 | 4 |
| 49 | 49 - 46 = 3 | 9 |

நியமவிலகல் காண்போம்

5 மாணவர்களும் கிட்டத்தட்ட ஒரே அளவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இதனால் இடைப்பெறுமானமும் இப்புள்ளிகளுக்கு கிட்டிய பெறுமானத்தைக் கொண்டுள்ளது. விலகல் 26 ஆக உள்ளது. எல்லா மாணவர்களின் புள்ளிகளும் இடைக்கு அண்மித்து காணப்படும் போது நியமவிலகல் சிறியபெறுமானமாக அமைந்திருக்கும். ஆகவே நியமவிலகலைக்

கொண்டு ஏனைய புள்ளிகள் இடைக்கு அண்மையிலா? அல்லது தொலைவிலா? உள்ளது என்பதனை நாம் ஒப்பிட்டுக் கூறமுடியும்.

$$\sigma = \sqrt{\frac{\sum(x-\bar{x})^2}{n}}$$

$$\sigma = \sqrt{\frac{34}{5}} = \sqrt{6.8} = 2.6$$

உதாரணமாக A,B,C,D,E எனும் 5 மாணவர்கள் தமிழ்பாடத்தில் பெற்ற புள்ளிகள்

A= 22 ,B= 32, C= 54 ,D=68 ,E=84

| X | $X - \bar{X}$ | $(X - \bar{X})^2$ |
|---|---|---|
| 22 | 22 - 52 = -30 | 900 |
| 32 | 32 - 52 = -20 | 400 |
| 54 | 54 - 52 = 2 | 4 |
| 68 | 68 - 52 = 16 | 256 |
| 84 | 84 - 52 = 32 | 1024 |
| | | 2584 |

நியமவிலகல் $\sigma = \sqrt{\frac{\sum(x-\bar{x})^2}{n}}$

$$\sigma = \sqrt{\frac{2584}{5}}$$

$$\sigma = \sqrt{516.4}$$

$$\sigma = 22.7$$

(நியமவிலகல் 22.7 என்பது மிகப் பெரிய பெறுமானம். காரணம் மாணவர்கள்

பெற்ற புள்ளிகள் கூடிய வித்தியாசத்தைக் கொண்டதாகும்)

2004ஆம் ஆண்டு பரீட்சைத் திணைக்களத்தின் க. பொ. த. (உ/த) சில பாடங்களில் இடை நியமவிலகல் முறையே

| பாடங்கள் | இடை | நியமவிலகல் |
|---|---|---|
| Physics | 40.56 | 15.94 |
| Chemistry | 32.59 | 15.49 |
| Combined Maths | 37.72 | 21.32 |
| Zoology | 46.0 | 14.75 |

Combined Maths நியமவிலகல் மிகவும் கூடிப் பெறுமானம் (21.32) ஆகும். இதனால் இப்பாடத்தில் புள்ளிகளும் இடைப்புள்ளியிலிருந்து மிகவும் கூடுதலாக வேறுபட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

Z Score ஐ எவ்வாறு அதிகரிக்கலாம்.

$$Z = \frac{X-\bar{X}}{\sigma}$$

சாதாரண கணிதமுறைப்படி Z புள்ளி அதிகரிப்பதற்கு $X-\bar{X}$ அதிகமாகவும் குறைவாகவும் இருத்தல் வேண்டும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகும்.

இங்கு $X-\bar{X}$ ஆனது அதிகரிப்பதற்க்கு $\bar{X}$ ஐ விடX மிகஅதிகமாக இருத்தல் வேண்டும். அதாவது ஒரு குறித்த மாணவர்களின் புள்ளி சராசரி அல்லது இடைப்புள்ளியை விட மிக அதிகமாக உள்ள போது அம்மாணவனின் Z புள்ளி அதிகரிக்க வாய்ப்புண்டு. இதனால் ஒரு மாணவர் கடினமான அல்லது மற்றவர் செய்யமுடியாத ஒரு பாடத்தில் மிகவும் நன்றாகச் துலக்கமுற்று கூடிய புள்ளியைப் பெற்றால் தனது X புள்ளியை அதிகரிக்கச் செய்ய முடியும். மாறாக ஒரு பாடத்தில் எல்லா மாணவர்களும் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் போது Xம் அதிகரிப்பதால் $\bar{X}$ புள்ளி அதிகரிக்க இடமுண்டு.

நாம் எல்லோரும் Z Score பற்றிய பூரண விளக்கத்தைப் பெற்று அதற்கேற்ப பாடங்களை தெரிவு செய்து Z Score ஐ அதிகரிக்கச் செய்து பல்கலைக்கழக, கல்வியற்கல்லூரி அனுமதிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

## Z Score இன் நன்மைகள்

- திறமை மட்டங்களை அறிதலுக்கு சிறந்தமுறை
- தெரிவுகளை மேற்க்கொள்வதற்க்கு சிறந்தமுறை
- இதன் முழுமையான தெரிவு நேர்மையானதாக அமையும்.

ஒரு கிராமம் கல்வியில் முன்னேற வேண்டுமானால் அதன் கல்விப்பாதையை நிர்ணயிப்பது க.பொ.த. உயர்தரத்தின் Z Score புள்ளிகளே என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இது மட்டுமல்ல Z Score ஐ எவ்வாறு அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்பதும் முக்கியமாகும். □



நீர்வைக்கவிஞர் இ. முருகையனுக்காக...

*நாட்டின் நலம்நாடி நாட்டமுடன் நற்கவிதை*
*தீட்டி உணர்வுகளைப் பொங்குவித்தோன் - பாட்டாலே*
*உண்மை வழியுரைத்த எங்கள் முருகையன்*
*வண்மை தமிழுலகில் வாழும்*

*கண்கெட்ட மாந்தர்க்குக் கண்ணொளி யாய்க்கவிதை*
*புண்பட்ட நோயர்க்கும் புத்திமதி பண்பட்ட*
*உன்னுணர்வை உள்வாங்கி உன்னதப் பாவுரைத்து*
*தன்னுணர்வை நாட்டும் தமிழ்*

*குற்றங் கடிந்து குணதிசைக் காய்கதிர்போல்*
*பற்றும் உனதெழில் பாட்டு நற்றமிழர்*
*ஈராண்டென்ன ஈரா யிரமினி வந்தாலும்*
*ஈர நினைவிருக்குங் காண்*

*- நீர்வைக்கிழார்*
*(முருகையனின் இரண்டாவது ஆண்டு நினைவில்*
*உதயன் 26.06.2011)*

கட்டுரை



# முதியோரே நமது தேசியச் சொத்தாவர்

மீரா. ஞானேஸ்வரன்,
கரந்தன்,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

இன்றைய நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது சுகாதார மருத்துவத் துறையினை அதி உன்னத நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. இதனால் இன்றைய சமூகச்சூழலில் நாம் பல்வேறு மாற்றங்களைக் காணக் கூடியதாக உள்ளது. மருத்துவத் துறை வளர்ச்சி குறைந்த பண்டைய காலங்களில் சராசரி ஆயுட் காலம் 20 –30 வயது வரை இருந்தது. இந்த நிலை மாறி தற்போது 70 – 100 வயது வரை ஆயுட் காலம் அதிகரித்துச் சென்றுள்ளதைக் காண முடிகின்றது. இதனால் இன்றைய கால கட்டங்களில் சமூகம் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக முதியோர் கருதப்படுகின்றனர்.

இன்றைய முதியோர்கள், நேற்றைய சமூகத்தின் இளைஞர்கள் நேற்றைய சமூகத்தின் பல்வேறு மாற்றங்களுக்கு வித்திட்டவர்கள் என்பதனை நாம் மறந்து விடலாகாது. "படித்துத் தெரிவதும் பட்டுத் தெளிவதும் பயிற்சி வழி அனுபவத் தொழில்" இதுவே அதன் நம்பகத் தன்மையினை ஏற்படுத்தி விடுவதனை உணர்கிறோம். அனுபவ ஆசான்களின் கூற்று எமக்கு ஆறுதல் கொடுக்கும் சிகிச்சையாக உள்ளது. அதனால் தான் கூட்டுக் குடும்ப வாழ்வியலில் முதுமை அனுபவம் மிகவும் மதிக்கப்பட்டது. இதனால் முதியோரை ஒரு நாட்டில் தேசிய சொத்தாவர். எனவே இவர்களை நாம் புறந்தள்ளாது பேணிப் பாதுகாக்க வேண்டியது சமூகத்திலுள்ள ஒவ்வொருவரினதும் தலையாய கடமை எனில் அது மிகையாகாது.

இன்று உலகில் முதியோர்கள் முக்கிய இடம் வகிக்கின்றார்கள் ஒருவரின் வாழ்க்கைச் சக்கரத்தில் குழந்தைப் பருவம், விடலைப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப்பருவம் என மாறி மாறி சூழல் சக்கரமாக அமைகிறது. இதில் முதுமைப் பருவம் என்பது இறுதிப் பருவ நிலையாகும். இன்று உலக சனத்தொகை 600 கோடிகளையும் தாண்டிச் சென்று விட்டதனை நாம் காணக் கூடியதாக உள்ளது. இன்று விருத்தி பல மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது. இதனால் சமூகத்தில் முதியோர் தொகை அதிகரித்துள்ளது.

இன்று வயோதிபர் அல்லது முதியோர் என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்ட போதும் 1982 ஆம் ஆண்டில் World Assembly on Aging இதன் படி 60 வயதுக்கு மேற்பட்டோரே முதியோர் என வரைவிலக் கணப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை ஒக்ரோபர் 1ஆம் திகதியினை சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதன் நோக்கம் - சுகந்திரம், கவனம், சுயபூர்த்தி, மகத்துவம் போன்றவற்றை முதியோரிடம் பேணுதலாகும். இலங்கையில் முதியோர் தொடர்பான பாதுகாப்புச் சட்டம் இல -09 2000 மே மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தை அமுல் படுத்தும் பொறுப்பு சமூக வேவை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்று கணிசமான அளவு அதிகரித்துள்ள முதியோர் தொகை 2025 இல் 15 சதவீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முதியோர் எனும் போது வயதால் முதிர்ச்சியடைந்தவர்கள் மற்றும் உடல் உளரீதியாக தளர்ச்சியுற்றவர்களைக் குறிப்பிடலாம். பெரும்பாலான வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் கிராமப்பகுதி மக்கள் தமக்கு பேரப் பிள்ளைகள் பிறந்ததும் தாம் இளைப்பாறும் பருவத்தை அடைந்து விட்டதாகக் கருதுகின்றனர். வறிய குடும்பங்களில் முதியோர் இளைப்பாறுதல் என்பது அவர்களால் எவ்வித தொழில்களும் செய்ய முடியாது அல்லது உடல் ரீதியாக தளர்வு ஏற்படுகின்ற போது முதுமை அடைந்ததாகக் கருதுகின்றனர். இந்தியா போன்ற சனத்தொகை அதிகரித்த நாடுகளில் வறுமை இளைப்பாற அனுமதிப் பதில்லை இவர்கள் தாம் இளைப்பாறும் வயதினை இறைவனிடம் ஒப்படைத் துள்ளதாகக் கருதுகின்றனர். வறிய குடும்பங்களில் முதியோர் இளைப்பாறுதல் என்பது அவர்களால் எவ்வித தொழில்களும் செய்ய முடியாது அல்லது உடல் ரீதியாக தளர்வு ஏற்படுகின்ற போது முதுமை அடைந்ததாகக் கருது கின்றனர்.இந்தியா போன்ற சனத்தொகை அதிகரித்த நாடுகளில் வறுமை இளைப்பாற அனுமதிப்பதில்லை இவர்கள் தாம் இளைப்பாறும் வயதினை இறைவனிடம் ஒப்படைத்துள்ளதாகக் கருதுகின்றனர்.

இன்று முதியோராய் உள்ளவர்கள் தற்போதைய சிறுவர்களின் கலங்கரை விளக்காகத் திகழ்பவர்கள் சிறுவர்களை ஒரு றோஜாச் செடியின் மொட்டுக்கு ஒப்பிட்டால் முதியோரே அச் செடியில் பூத்துக் குலுங்கும் றோஜாப் பூக்களுக்கு ஒப்பிடலாம். றோஜாவைப் போலவே இவர்களது உணர்வுகளும்

மிருதுவானவையும் அற்புதமானவையுமாகும். இவர்களின் விருப்பு வெறுப்புக் களும் சிந்தனைகள் அனைத்தும் அனுபவமும் நுணுக்கமும் வாய்ந்தவையு மாகும். ஒரு பண்பாடான சமூகத்தில் கண்ணெனப் போற்றப்பட வேண்டிய வர்கள் முதியோராவர்.

பொருளாதார ரீதியில் செயல் திறன் அற்றதும் நலிவுற்றதுமான பிரிவினருக்கு சமூகம் பாதுகாப்பினை வழங்குவது தேசிய பொறுப்பாகும். என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய பொருளாதார சமூகரீதியில் அதிகம் அல்லது எளிதில் பாதிக்கப்படுபவர்கள் தொழில் புரியும் வயதைக் கடந்த முதியோர், தமது வருமானத்தினால் தமக்கே ஆதரவு வழங்க முடியாத மிக வறியவர்கள், அநாதைகள், ஊனமுற்றோர் போன்றவர் களாவர்கள் இவர்களுள் கண்ணெனப் போற்றப்பட வேண்டியவர்கள் முதியோர் களே. இவர்களுக்காகவே ஒவ்வொரு தேசிய அரசும் முதியோரைத் தமது தேசிய சொத்தென மதித்து அவர்களுக்கு ஒய்வூதியம், சமூக நல சேவைகள் எனப் பல்வேறு வசதிகளையும் தமது சொந்தச் செலவில் இலவசமாக வழங்கி வருகின்றது.

முதியோர்கள் குழந்தையாக, சிறுவனாக, இளைஞனாக, உறுதி மிக்க உழைப்பாளனாக இருந்து முதியோராகின்றனர். அவர்கள் தாம் சார்ந்த குடும்பத்தினருக்கும் சமூகத்திற்கும் தம் ஆற்றலுக்கேற்ப பங்களிப்புச் செய்தவர்கள் இத்தகைய முதியோர்களைப் பாதுகாக்க வேண்டியது குடும்பம், சமூகம் ஆகியவற்றின் கடமை. எனினும் மாறி வரும் சமூக பொருளாதார நிலைகளினால் முதியோர் பராமரிப்பு உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டு அவர்கள் சமூகத்திற்கு சுமையாகக் கருதப்படுகின்ற நிலை உருவாகி வருகின்றது. முதியோர்கள் சமூகத்திற்கு செய்த பங்களிப்பினை இவர்கள் மறந்து விடுகின்றார்கள். பல நாடுகளில் முதியோர்களை பிள்ளைகள் கட்டாயம் பராமரிக்க வேண்டும் எனச் சட்டங்கள் இயற்றப்பட்ட போதிலும் இது ஓரளவே நிறைவேற்றப்பட்டுள்ளது. அல்லது நிறை வேற்றப்படுகின்றது.

நாம் முதியோரைத் தேசிய சொத்தெனக் கூறக் காரணம் தற்போது முதியோனாய் உள்ள ஒருவனே நேற்றைய உழைப்பாளன் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியினை நாட்டுக்காகவும் சமூகத்திற்காகவும் தன்னைப் பற்றிப் பொருட்படுத்தாது வியர்வை சிந்தி உழைத்தவன் தனது நாட்டின் ஒவ்வொரு விடயங்களிலும் அக்கறை எடுத்தவன் இந்த நாட்டிற்காக இளம் சிறார்களையும் உழைப்பாளர்களையும் தந்ததுடன் தனக்குப் பதிலாக விட்டுச் செல்பவன் ஆகவே அம் முதியோரே ஒவ்வொரு நாட்டினதும் சமூகத்தினதும் தேசிய சொத்தாவர்.

வயோதிபர்கள் தமது வயோதிப காலத்தை மகிழ்ச்சியாகக் கழிக்கவரும் வகையில் முதியோர் இல்லங்களை நடத்திச் செல்வதன் மூலம் வயோதிபர்களை தேசிய சொத்தாக அரசும் தனியாரும் கருதுகின்றனர். இலங்கையில் 158 முதியோர் பராமரிப்பு நிலையங்கள் உள்ளன. இதில் 3 மட்டுமே அரசு நடத்துகின்றது. வயோதிப சமூகப்பாதுகாப்புத்திட்டத்தின் இறுதிக் குறிக்கோளாக்க காணப்படுவது வயோதிப காலத்தை மரியாதையுடன் கழிப்ப தாகும். உண்மையில் "முதுமை என்பது ஒரு சாபமல்ல அது வாழ்வில் பரிபூரணத்துவம் அடைவதற்கான ஒரு வரம்" என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

முதுமைப் பருவம் வந்து விட்டால் மனிதர்கள் குழந்தைகளாகி விடுகின்றனர் இன்பத்தில் முதியவர்கள் மற்றவருடன் கதைக்க ஆவலாக இருப்பார்கள். கதைக்கம் போது அவர்கள் எண்ணங்கள், அனுபவங்கள், அபிலாசைகள், எச்சரிக்கைகள் முதலியவற்றை விபரமாக எடுத்துக் கூறுவர். எனவே முதியோரைக் கௌரவிப்பது என்பது குடும்ப அலகில் இருந்து சமூகம், பிரதேசம், தேசியம், பல்தேசியம், பிராந்தியம் என்ற பல்வேறு மட்டங்களுக்கும் முன்னெடுத்துச் செல்வதன் மூலமே முதியோரே எமது சொத்தென உறுதிப் படுத்தலாம். முதுமைப் பருவத்தில் முதியோர்கள் அமைதியாகவும் பிறருக்கு குறிப்பாக தம் பிள்ளைகளுக்கு கஷ்டம் கொடுக்காமல் வாழவே விரும்பு கின்றனர். அனைவரும் ஒரு நாள் முதுமைப் பருவத்தை அடைந்தே தீர வேண்டும் என்பதால் நாம் ஒவ்வொருவரும் நமது வருங்காலத்தை எண்ணி இன்றைய முதியோர்களைக் கவனித்தல் நல்லது. "தாத்தாவிற்கு தந்தை உணவளித்த ஒட்டைச் சட்டியை மகன் தன் தந்தைக்காக எடுத்து வைத்துக் கொண்ட" கதையை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். இதன் மூலம் நாமும் எதிர்காலத்தில் முதுமையடையப் போகின்றவர்கள் என்பதனை உணர வேண்டும். இன்றைய குழந்தைகள் நாம் முதியோரை எப்படி நடத்துகின்றோம் என்பதனை கூர்ந்து கவனிக்கின்றார்கள் நாம் முதியோரை எப்படி நடத்துகின்றோம் என்பதை கூர்ந்து கவனிக்கின்றார்கள். நாம் முதியோரை நடத்தும் விதம், பேசும் வார்த்தைகள் என்பன குழந்தைகளின் மனதில் பதிந்து விடும். பின் முதியோரானதும் அவர்கள் அதையே எமக்குப் பயன்படுத்து கின்றார்கள் என்பதையும் நாம் மறந்து விடலாகாது. "எம் முன்னோரைக் காட்டிலும் நான் அதிக தொலைவு பார்க்கக் காரணம் அவர்களின் தோள் மீது நான் ஏறி நின்று பார்த்ததேயாகும்" என்றார் ஒரு அறிஞர்.

இதனால் நாம் முதியோரை நமது குடும்பச் சொத்து மாத்திரமல்ல அவர்கள் எமது தேசிய சொத்தாவர் என உணர்ந்து பாதுகாக்க வேண்டும். பாட்டன் பாட்டியினர் தமது மூன்றாவது சந்ததியினராகிய பேரப் பிள்ளைகளின்

வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் சிற்பிகளாவர். எனவே அவர்களைத் தனிமைப்படுத்தக் கூடாது. "தனிமையே முதுமையின் முதல் எதிரி" என்றார் ஒரு அமெரிக்க அறிஞர்.

"முதியோர்களின் நெற்றியிலே சுருக்கம் விழுவதனை எம்மால் தடுக்க முடியாது. ஆனால் அவர்களின் நெஞ்சங்களில் சுருக்கம் ஏற்படுவதனை நாம் தடுக்கலாம்" முதியோருக்கு அளிக்கப்படும் கௌரவம் கடவுளுக்க செய்யப்படும் மரியாதையாகக் கருதப்பட வேண்டும். முதுமை வாழ்வின் இரண்டாம் பிள்ளைப் பிராயம். அன்பிற்காக ஏங்கும் பருவம். எனவே நாம் அவர்களை ஏங்க விடாது குடும்ப சொத்தென மதித்து பேணுவோமாக இருந்தால் குடும்பச் சொத்து மாத்திரமல்ல தேசிய சொத்து என்ற நிலை உருவாகும்.

மேலும் வயோதிபர்கள் தமது வயோதிப காலத்தை மகிழ்வுடன் கழிப்பதற்கு உழைக்கும் காலத்திலேயே பல்வேறு முன் உபாயத்திட்டங்களை மேற் கொள்வதன் மூலம் முதியோர்கள் தமது முதுமைக் காலத்தினை மகிழ்வுடன் கழிப்பதற்கு ஏதுவாகின்றது. அதாவது முதியோரின் நீண்ட கால கவனிப்புக்காக தனியார்துறை தொழில் முயற்சிகளால் நடைமுறைப் படுத்தப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டங்களைப் பிரபல்யப்படுத்துவதன் மூலம் மற்றும் விரைந்த வயோதிப நிலையை எய்துவதிலிருந்து உருவாகும் பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட துறைகளின் பாதகமான தாக்கங்களிற்குத் தீர்வு காணும் நோக்கில் அனைத்தையும் உள்ளடக்கிய தேசிய வயோதிக் கொள்கை ஒன்றினை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான தகவல்களையும் தரவுகளையும் சேகரிப்பதற்காக ஆராய்ச்சி நடவடிக்கைககள் விரிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது.

வயோதிப நிலையை அடையும் முன் உழைக்கும் காலத்தில் வயோதிபக் காப்புறுதித் திட்டங்கள் போன்ற நீண்ட கால சேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து கொள்ளல், வயோதிப சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் இணைதல் போன்றவை முதியோர்கள் தமது முதுமைக் காலத்தினை மகிழ்ச்சியுடன் கழிக்க மிகவும் ஊறுதுணையாக அமைகின்றது.

எனவே இவ்வாறான அரிய திட்டங்கள் மூலமும் எமது கடமை உணர்வின் மூலமும் எமது இனிய அன்பான கவனிப்பாலும் எமது முதியோரைப் பேணி அவர்களை எமது தேசிய சொத்தாக மதித்து வாழ்வோமாக. □

கட்டுரை



# வாஸ்து சாஸ்திரம்

பரமேஸ்வரன் ரமேஷ்
கட்டடக்கலை பட வரைஞர்,
நீர்வேலி.

## வாஸ்து சாஸ்திரம் என்றால் என்ன ?

கோயில் கட்டுவதற்கும், வீடுகளை உருவாக்குவதற்கும் மற்றும் கிராம நகர நிர்மாணங் களுக்கும் பயன்படுகின்ற இலக்கணத் தையே வாஸ்து சாஸ்திரம் என்கி றோம்.

இந்தச் சாத்திரம் சமயம் சார்ந்தது அல்ல.அதனை ஒரு விஞ்ஞானக் கலையாகவே கருதுகின் றனர். இந்தக் கலையை அடிப்படை யாக வைத்தே கட்டடக் கலை உலகெங்கும் வளர்ந்துள்ளது.

நம் உடம்பில் ஒவ்வொரு அங்கங்களும் ஒவ்வொரு விகிதத் திட்டத்தில் அமைந்திருக்க வேண்டும் அப்போது தான் உடல் இலட்சணமாக இருக்கும். அக அமைதி, மகிழ்ச்சி என்பன ஏற்படும். இது போலத்தான் கட்டடங்களை அமைக்கும் போதும் குறிப்பிட்ட பிரமாணங்களைக் கைக் கொள்ள வேண்டும் இல்லையேல் அங்கு வாழ்வோரைப் பாதித்து ஏற்ற பலன்கள் கிடைக்காமல் போகும்.


## வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே வாஸ்து

வாஸ்து சாத்திரத்தின் வரலாற்றை நோக்கும் போது நமது தொன்மையான நாகரிகமான சிந்து வெளிக் காலத்திலேயே வாஸ்து சாத்திரம் கைக்கொள்ளப் பெற்ற மையைக் காண முடிகிறது. சிந்து வெளி நாகரிக காலத்தில் நகரங் களையும் கிராமங்களையும் திட்ட மிட்டுக் கட்டினார்கள் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கணிப்பு ஆகும். ஆயினும் இவை வேத காலத்திலேயே மகரிஸி களால் ஏற்படுத்தப்பட்டன என வாஸ்து நூல்கள் கூறுகின்றன.

## வாஸ்துவின் முக்கியத்துவம்

சரியாக வடிவமைக்கப்படாத மனைகளினால் மனச்சுமை, மனத் தளர்ச்சி ஆகியவை ஏற்படும். மட்டமான வடிவமைப்புக்களினால் மன அழுத் தமும் உடற் கோளாறுகளும் ஏற்படு கின்றன. பூமியின் காந்த சக்தி, கோள்களின் ஆட்சி முதலிய அனைத் தையும் உள்வாங்கிய வாஸ்து சாஸ்திர விதிப்படி அமைக்கப்பட்ட மனைகளால் பொருள்வளம் பெருகும். மகிழ்ச்சி ஏற்படும்.

தற்போதுள்ள மக்கள் தொகைப் பெருக்கத்தால் வீடு கட்டுவதற்கு போதிய இடம் கிடைப்பது கடினம். மாடித்தொகுதி வீடுகளில் வசிப்போர் (flat) வாஸ்துவைக் கைக்கொள்வது கடினம். இவர்கள் வாஸ்துபூஜை செய்வதாலும், வாஸ்து சாந்தி மந்திரங்கள் ஜெபிப்பதாலும் வீட்டில் உள்ள துர்ச்சக்திகளைப் போக்கி வாஸ்து புருசனின் ஆசியைப் பெற்று சந்தோஸமாக வாழலாம்.




படுக்கை அறையின் 1/7 பங்கு காற்று இடைவெளி இருத்தல் வேண்டும். ( யன்னல் ) கதவு சேர்க்கப்பட மாட்டாது.

**எல்லோருக்கும் பயன்படக் கூடிய வாஸ்து சாஸ்திர விதிகள் சிலவற்றை நோக்குவோம்.**

### இராசிப் பொருத்தம்.

வீட்டின் தலைவனுடைய சாதகப்படியே வீட்டை அமைக்க வேண்டும். வீட்டுத் தலைவனுடைய ராசிக்கு 3 – 10 – 11 ஆம் இராசியில் வீடு அமைவது உத்தமம். 2 –4– 5–7 –9 ஆம் இராசியில் வீடு அமைவது மத்திமம்
1– 6 –8– 12 ஆம் இராசியில் வீடு அதமம்.

### அத்திவாரம் வெட்ட உகந்த நாள்கள்

- சித்திரை, வைகாசி, ஆனி, பங்குனி, தை மாதங்களில் குரு.சுக்கிரன் ஆகிய இருவரும் அஸ்த மனம் இருக்க வேண்டும்.
- மேற்படி நாளில் அச்சுவினி, ரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம்,மகம், உத்தரம், அத்தம்,
- சித்திரை, சுவாதி, அனுசம், கேட்டை, உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி இவற்றில் ஏதாவது ஒரு நட்சத்திரத்தில்
- அமாவாசை, பிரதமை, பௌர்ணமி இல்லாத நாள்களில்

◆ திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளில் அடிமனை கோலினால் சுபம்.

## வீடுகட்ட ஆரம்பித்தல்

சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி, ஆகிய மாதங்களில் திங்கள், புதன், வியாழன், வெள்ளி, ஆகிய நாள்களில் ஆரம்பிக் கலாம்.

## வாஸ்து புருச இயந்திரம் வைத்தல்.

வீட்டைக் கட்ட ஆரம்பிக்கும் போது வாஸ்து புருசனுடைய யந்திரம் வைப்பது சிறப்பானது. வீட்டிற்கு அதிபதி வாஸ்து புருசன். இவரது அருள் கிடைத்தால் தடையில்லாமல் வீடுகட்ட முடியும் என்கிறார். வாஸ்து புருசன் யந்திரம் தங்கத்தில் அல்லது வெள்ளி யில் ஆன தகட்டில் எழுதி ராசவாசல் மண் அல்லது புண்ணிய தலங்களின் மண், புற்று மண், நண்டுப் புற்ற மண், ஆனைக் கோட்டு மண், எருதுக் கோட்டு மண் (கோட்டு – கொம்பு), குளத்து மண், கொழு மண் இவைகளைச் சமமாகக் கலந்து நவரத்தினங்கள் என்பவற்றோடு வீடு கட்டுவதற்காக தீர்மானிக்கப்பட்ட இடத்தில் ஈசானிய மூலையில் அத்தி வாரத்திற்கு உட்பக்கம் அமையுமாறு இந்த யந்திரத்தை பிரதிட்டை செய்ய வேண்டும்.

## வாஸ்து இயந்திரம் வைப்பதற்கு மிகவும் உகந்த நாட்கள்.

வாஸ்து புருசன் எழுந்தருளும் நாட்களில் யந்திரம் வைப்பது மிகவும் அனுகூலமளிக்கும். சித்திரை மாதம் 10 ஆம் திகதி, வைகாசி 21 ஆம் திகதியும், ஆடி , ஐப்பசி மாதங்களில் – 11 ஆம் திகதியும் ஆவணி மாதம் 06 ஆம் திகதியும் கார்த்திகை மாதம் 8 ஆம் திகதியும் மாசி மாதம் 22 ஆம் திகதி யும் வாஸ்து புருசன் எழுந்தருளி யிருப்பார்.

## வீடுகட்டுவதற்கு ஆகாத இடங்கள்.

தெற்கு மேற்கு திசைகள், தாழ்ந்துள்ள நிலம், முக்கோண வடிவான நிலம், சந்நியாசிகள், பேய்வித்தைக்காரர், பேய் பிடித்தவர், சண்டாளர் வசித்த இடங்கள், கோயில்கள் இருந்த இடங்கள், மயானம், யுத்தம் செய்த இடங்கள் முதலியன வீடு கட்டுவதற்கு ஆகாது எனக் கூறப்படுகின்றன.

மேலும் துலா, கோபுரம், அரசு, வன்னி வில்வம் இவைகளின் நிழலும் வீட்டில் படுதல் ஆகாது.

## வீடு கட்டுவதற்கு உகந்த மாதங்கள்.

சித்திரையில் – வடக்கு வாயில் வீடு, வைகாசியில் – வடக்கு, தெற்கு வாயில் வீடுகள், ஆடியில் – கிழக்கு வாயில் வீடு, ஆவணியில் – கிழக்கு, மேற்கு

வாயில் வீடுகள், ஐப்பசியில் – தெற்கு வாயில் வீடு, கார்த்திகை– தெற்கு, வடக்கு வாயில் வீடு, தையில் – மேற்கு வாயில வீடு, மாசியில் – மேற்கு, கிழக்கு வாயில் வீடுகளும் எழுந்திருப்பு முகூர்த்தத் தில் எல்லா வாயில் வீடுகளும் அமைப்பது நல்லது. ஆனி புரட்டாதி, மார்கழி பங்குனி மாதங்களில் வீடுகள் அமைப்பது நல்லதல்ல.

**அறைகள் அமைக்கும் விதம்.**

*வடகிழக்கு அல்லது ஈசானியம்:*
தானியங்கள் சேகரித்து வைப்பதற்கு உகந்த இடம்.

*தென் மேற்கு (நிருதி மூலை) :*
படிக்கும் அறை அமைக்க அல்லது களஞ்சிய அறை (Store room) அமைப்பதற்கு உகந்த இடம்.
*தெற்கு :* சாப்பாட்டு அறை
*வட மேற்கு (வாயு மூலை) :* பூஜை அறை வைப்பதற்கு உகந்தது
*வடக்கு :* பொன் நகைகள் வைப்பதற்கு உகந்தது.
*தென் கிழக்கு* (அக்கினி மூலை): சமையல் அறை
*கிழக்கு :* குளிக்கும் அறை

(மனைக்குக் தெற்கே குப்பை கொட்டும் இடமும் வடக்கே பசுத் தொழுவமும் கிழக்கே குளிக்கும் இடமும் அமைப்பது சிறந்தது எனச் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

**கிணறு அமைத்தல்**

வடகிழக்கு திசையில் கிணறு தோண்டுவதே நன்மை அளிக்கும். அங்கு வசதி இல்லாவிட்டால் வடக்கு, மேற்கு திசைகளில் தோண்டலாம், தெற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, மனையின் நடுப்பகுதி ஆகியவற்றில் கிணறு அமைக்கக் கூடாது.

**வாசல்**

வாசல் கதவுகள் அனைத்தும் ஒரே சாதி மரத்தினால் செய்யப் பட்டவையாக இருக்கவேண்டும். கதவு ஒற்றைப்படைப் பலகையாக இருக்க வேண்டும். கதவு செய்ய வேம்பு, மாமரம், தேக்கு, மருது, இலுப்பை, சந்தனம் போன்ற மரங்களை உபயோகப்படுத்தலாம்.

**வீடு அமையும் நிலச் சூழலில் இருக்கக் கூடிய மரங்கள்**

தென்னை, பலா, வாழை, கமுகு, மாதுளை, வேம்பு, எலுமிச்சை, நாரத்தை முதலிய மரங்களும் முல்லை, மல்லிகை, துளசி போன்ற செடிகளும் இருக்கலாம்.

## வீடு அமையும் நிலச் சூழலில் இருக்கக் கூடாத மரங்கள்

வீட்டு மனையில் புளிய மரம், அத்திமரம், நெல்லி மரம், வில்வ மரம், இலுப்பை மரம், முருங்கை மரம், பனை மரம், நாவல் மரம், ஆல மரம், அரச மரம், எருக்கஞ் செடி போன்றவை இருத்தல் நல்லதல்ல.

## தென் மேற்கில் ஆகாது

நாம் வாழும் வீட்டின் தென் மேற்குத் திசையில் கிணறு, மலசலகூடக் குழி (septic tank) ஆகியவை அமைக்கக் கூடாது. அவ்வாறு அமைத்தால் கஸ்டம் பெருகும் என வாஸ்து சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

## வீடு குடிபுகுதலுக்குத் தேவையானவை

தீபம், விநாயகர்,இலச்சுமி, சரஸ்வதி படங்கள், பூரண கும்பம், மலர் மாலை, கண்ணாடி, மஞ்சள், வெற்றிலை, பால், பழம், நைவேத்தியங்கள், உப்பு, நெல், நிறைநாழி, முதலியவை, பொன், வெள்ளி, நவரத்தினம், நவவஸ்திரம், ஆபரணம், இலைகளை மங்கல வாத்தியத்தோடு சுமங்கலிகள் கொண்டுவர வீட்டில் பிரவேசிக்க வேண்டும்.

## கட்டடங்களைக் கட்டுவதற்காக கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள்
### (அரச விதிமுறைகள் சார்ந்தவை)

கட்டடங்களைக் கட்டுவதாயின் வீடமைப்பு நகர சீர்திருத்தச் சட்டத்தின் பிரகாரமே அவற்றை மேற்கொள்ள வேண்டும் இச்சட்டமானது பிரதேச சபைகளுக்கு வேறாகவும் மாநகர, நகரசபைகளுக்கு வேறாகவும் அமைந்துள்ளது.

நமது கிராமச் சூழல் பிரதேச சபையைச் சார்ந்திருப்பதால் அது சார்ந்த வகையில் விதிமுறைகளை நோக்குவோம்.

## கட்டடம் அமைப்பதற்காக விண்ணப்பித்தல்

- புதிய கட்டடங்களை அமைத்தல் அல்லது மாற்றம் செய்தல் என்பவற்றிற்றுக்கு உள்ளூராட்சி மன்றத்திடம் அனுமதி பெறப்பட வேண்டும்.
- சபையால் நிறைவேற்றப்பட்ட துணைவிதிகளின் பிரகாரம் விண்ணப்பப் படங்கள் தயாரித்து சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட கட்டடத்திற்கான அமைவுச் சான்றிதழ் பெறாது குடிபுகுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

- தற்காலிக கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி பெற்றுக் கொள்ளலாம். இது ஒரு வருடகாலத்திற்கு மாத்திரம் செல்லுபடியாகும்.
- கட்டட விண்ணப்பம் உள்ளூராட்சி சபைக்கு வழங்கப்பட்டு இரண்டு மாத காலத்துள் அதற்குரிய முடிவு விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.
- அமைவுச் சான்றிதழ் பெறுவதற்கு மனுச் செய்து 30 நாள்களுக்குள் அதற்குரிய முடிவு அறிவிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் நீதி மன்றத்துக்குச் செல்ல முடியும்.
- உத்தேசக் கட்டடம் சுகாதார முறைப்படி உரிய காற்றோட்ட வசதி களுடன் உள்ளது என அது சார்ந்த அதிகாரியின் சிபார்சு கிடைக்கப்பெற வேண்டும்
- படங்கள் சம்பந்தமான மேலதிக விபரங்கள் தேவைப்படின் விண்ணப்ப தாரரை சபைக்கு அழைத்து அது சம்பந்தமான விளக்கங்கள் கேட்டப் படலாம்.
- அங்கீகரிக்கப்பட்ட படம் விண்ணப்பதாரருக்கு கிடைத்த பின் கட்டட வேலையை ஆரம்பிப்பதற்கு முன் சபைக்கு ஏழு நாட்கள் அறிவித்தல்.
- கொடுத்துதான் வேலை ஆரம்பித்தல் வேண்டும் அதேபோல் தொடர்ச்சியாக மூன்று மாத காலம் இடைநிறுத்தம் செய்யப் பட்டிருந்தால் மீண்டும் வேலையை தொடங்கும் போது ஏழு நாட் களுக்கு முன் அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு ஒரு வருட காலத்திற்குள் எவ்வித கட்டட வேலைகளும் ஆரம்பிக்கப்படாது விட்டால் அங்கிகரிக்கப்பட்ட விண்ணப்பம் செல்லுபடியாகாது.

## கட்டடம் உள்ள காணிக்கான பாதை

புதிதாக அமைக்கப்படும் கட்டிடம் உள்ள காணிக்கு 20 அடி அகலமான பாதை இருத்தல் வேண்டும் அவ்வாறு இல்லாவிடில் காணிக்கு அண்மையில் உள்ள வீதிக்கு இடையில் உள்ள நிலம் எந்த வித தடையும் இல்லாத வெளிநிலம் என்ற சிபாரிசுடன் நிரூபிக்கப்படும் இடத்து 10 அடி அகலப்பாதை ஏற்றுக்கொள்ளப்படும்.

## வசிப்பிட வீட்டு அறைகள்

கட்டப்படும் வீட்டுக்கு படுக்கை அறை ஒன்று மட்டுமே இருந்தால் அதன் நிலப்பரப்பு 120 சதுர அடியாக இருத்தல் வேண்டும் ஒரு படுக்கை அறைக்கு கூடுதலான படுக்கை அறைகள் இருப்பின் இரண்டாவது படுக்கை அறை 100 சதுர அடியாகவும் மற்ற அறைகள் 90 சதுர அடிக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

சாதாரணமாக 9 அடி உயரமாக இருத்தல் வேண்டும் ஆனால் 7 அடி உயரத்திற்கு குறைவாக இருக்கக் கூடாது அறையின் ஒரு சுவராவது வீட்டின் வெளிப்பக்கமாக அமைத்தல் வேண்டும். அறையின் விஸ்தீரனத்தில் 1/7 பங்கு யன்னல் வெளியாக இருத்தல் வேண்டும். ஆனால் கதவுகள் வெளிச்சுவரில் நிறுவப்பட்டிருந்தால் இது 1/15 பங்காக அமையலாம் சாதரண வீடு ஒன்றிற்கு எல்லைப்புறத்தில் இருந்து குறைந்தது 7 1/2 அடி இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் வெளிகள் வைக்க முடியாது.

## வீடு கட்டுவதற்குரிய நிலம்

வீடு கட்டுவதற்கு ஆக குறைந்தது 3/4 பரப்பு நிலம் இருத்தல் வேண்டும்.

## வீட்டின் எல்லைப்புற மதில்

வீட்டின் பொதுப் பாதையில் இருந்து மதில் கட்டுவதற்கு தூரம் இங்கு நோக்கப்படுகின்றது. நமது நாட்டில் உள்ள வீதிகள் 3 வகை அமைப்புக்களால் பராமரிக்கப்படுகின்றன.

01) *பிரதேச சபை வீதி*
02) RDA *வீதி*
03) RDD *வீதி*


பிரதேசசபை வீதியாயின் மையத்தில் இருந்து 15 அடி (4.5 மீற்றர்) நிலத்தில் மதில் அமைக்க வேண்டும்.

RDA வீதி ஆயின் மையத்தில் இருந்து 15 மீற்றர் (50 அடி)
RDD வீதி ஆயின் மையத்தில் இருந்து 10 மீற்றர் (33 அடி)

ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் இருக்கும் தனிப்பட்ட ஒழுங்கை ஆயின் ஒழுங்கை மையத்தில் இருந்து 10 அடி (3 மீற்றர்) இருத்தல் வேண்டும்.

## கிணறு - மலசலகூட இடைத்தூரம்

கிணற்றுக்கும் மலசல கூடகுழிக்கும் இடைப்பட்ட தூரம் 50 அடியாக இருத்தல் விரும்பத்தக்கது. Seal pit ஆயின் 25 அடியாக இருத்தல் வேண்டும்.



கட்டுரை

# வெங்காயச் செய்கை

ச. சதீஸ்வரன்,
உதவி விவசாய பணிப்பாளர்,
கிளிநொச்சி.

அல்லியம் (Allium) எனும் தாவரவியற் பெயரைக்கொண்ட வெங்காயமானது அதிகளவில் உணவுக்காகவும் உணவுச்சுவையூட்டியாகவும் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இதன் இலை மரக்கறியாகவும், பயன்படுத்தப்படுகிறது. ஒரு மனிதனின் வருடத்திற்கான வெங்காயத்தேவை 10 கிலோ ஆகும்.

யாழ்ப்பாண மக்களின் இன்றியமையாத உணவுக் கூறாகவும், முக்கிய பணப்பயிராகவும் வெங்காயம் விளங்குகிறது. வருடத்திற்கு அண்ணளவாக 3,000 கெக்டரில் பயிரிடப்பட்டு கெக்டருக்கு சராசாரியாக 17 தொன் விளைவு பெறப்படுகிறது.

**வெங்காயச் செய்கையில் அதிக இலாபமீட்ட நீங்கள் செய்ய வேண்டியவையாவன**

**பருவத்தில் பயிர் செய்தல்:-**

சிறுபோகத்தில் ஏப்ரல் இறுதி முதல் ஜீலை நடுப்பகுதி வரையான காலப்பகுதியும், பெரும் போகத்தில் டிசம்பர் நடுப்பகுதியிலிருந்து ஜனவரி வரையிலான காலப்பகுதியும் வெங்காயச் செய்கை ஆரம்பிப்பதற்கு உகந்த காலமாகும்.

**உகந்த வர்க்கத் தெரிவு:-**

வெங்காயத்தில் குமிழ் வெங்காயம் (Bulb-onion), கூட்டு வெங்காயம் (Cluster onion) என இரு வகைகள் உண்டு. பெரிய வெங்காயம் அல்லது பம்பாய் வெங்காயம் முதலாவது வகையையும், சின்னவெங்காயம் அல்லது ஈரவெங்காயம், வேதாள வெங்காயம் என்பன இரண்டாவது வகையையும் சார்ந்தது.

**சிபார்சு செய்யப்பட்ட விதையளவுகளை உபயோகித்தல்**

- பெரிய வெங்காயம் : 3 3 ½ கிலோ / ஏக்கர் விதைகள்
- சின்ன வெங்காயம் : 480-600 கிலோ / ஏக்கர் குமிழ்கள்
- வேதாள வெங்காயம்: 700-800 கிலோ / ஏக்கர் குமிழ்கள்

**பயிரிடப்படக்கூடிய வர்க்கங்களாவன**


| வர்க்கம் | காலம்(நாற்று நட்டதிலிருந்து அறுவடைவரை) | குமிழின்நிறம் | காரத் தன்மை |
|---|---|---|---|
| பெரிய வெங்காயம் | | | |
| 1) பூசா ரெட் | 85-90 | மென்சிவப்பு | அதிகம் |
| 2) பொம்பே ரெட் | 110-120 | ஊாத சிவப்பு | அதிகம் |
| 3) என்- 53 | 90-100 | கடும் மென்சிவப்பு | அதிகம் |
| 4) நாசிக் ரெட் | 85-90 | கடும் சிவப்பு | |
| 5) அக்றிபௌன்ட் ரெட் | 90-100 | றோசா நிறம் | |
| 6) கற்பிட்டி வர்க்கம் | 80-85 | இளம் சிவப்பு | நடுத்தரம் |
| | | | |
| சின்ன வெங்காயம் | | | |
| யாழ்ப்பாண உள்ளூர் | 55-65 | கடும் ஊதா | ஆதிகம் |
| வல்லரை / பெலாரி | 60-65 | பளுப்பு இளஞ்சிவப்பு | குறைவு |
| | | | |
| வேதாள வெங்காயம் (கல் வேதாளம், வடலி வேதாளம், முறி வேதாளம்) | 75-90 | மென் சிவப்பு | குறைவு |

பெரிய வெங்காயத்தை பொறுத்தவரையில் இருவிதமான நடுகைப் பொருட்களை தோட்டத்தில் நடுகை செய்வதற்கு பயன்படுத்தலாம்.


1. விதைகளை மேடைகளில் நட்டுப்பெற்ற நாற்றுக்கள்.
2. விதைகளை மேடைகளில் நட்டுப்பெற்ற உலஉ குமிழ்கள்

சின்ன வெங்காயச் செய்கையில் பொதுவாக குமிழ்கள் நடுகைப் பொருளாக உபயோகிக்கப்படுகிறது. பொதுவாக 8 x 10 செ.மீ இடைவெளி களில் நடுகை செய்யப்படுகிறது.

அறுவடை செய்து 4 6 வாரம் குமிழ்கள் உறங்கு நிலையில் காணப்படும். உறங்கு நிலை முடிவடைந்த பின்னஉ அவற்றை நடுகைக்கு தெரிவு செய்தல் உதந்தது. வெங்காயத்தை நெடுக்கு வெட்டுமுகமாக வெட்டிப்பார்க்கும் போது நடுப்பகுதியில் குருத்து வளர்ந்து காணப்பட்டால் அது உறங்கு நிலையை கடந்து உள்ளது என உறுதி செய்யலாம்.



சின்னவெங்காயம்



வேதாளவெங்காயம்



பெரியவெங்காயம்








**நிலத்தை தயார் செய்தல்**

பயிர் செய்கைக்காக நிலத்தை தயார் செய்யும்போது அங்கு காணப்படும் களைகள், கற்கள் போன்றவற்றை அகற்றுவதனுடன் 20 செ.மீ ஆழத்திற்கு இரண்டு சில்லு உழவு இயந்திரத்தின் சுழல் கலப்பையை உபயோகித்து மண்ணை தூர்வையாக்குதல் உகந்தது. பொதுவாக இருமுறை களில் பாத்திகள் அமைக்கப்படலாம்.

1. உயர்பாத்தி: 75 செ.மீ. அகலமான 3 மீற்றர் அல்லது அதைவிட நீளமான 15 செ.மீ உயரமான பாத்திகளை அளப்பதோடு அவற்றுக் கிடையில் 30 செ.மீ அகலமான கானையும் அமைத்தல் வேண்டும். இது பெரும்பாலும் பெரும்போக செய்கைக்கு உகந்தது.

2. தாழ்பாத்தி: 1.2 மீ x 1.2 மீ அளவுடைய தாழ் பாத்திகளாக அமைத்தல். இது காலபோகச் செய்கைக்கு பொருத்த மற்றது. நுண் நீர்ப்பாசனத்தின் கீழ் செய்கைபண்ணும்போது, பாத்தியின் நீள அகலம் தேவைக்கேற்ப மாற்றப் படலாம்.




**மண்வளத்தை விருத்தி செய்தல்**

விவசாயத் திணைக்களத்தினால் யாழ் மாவட்டத்தில் ஒரு ஏக்கர் வெங்காயச் செய்கைக்கான சிபார்சு செய்யப்பட்ட இரசாயனப் பசளை அளவுகளாவன (கிலோ)

| உகந்த காலம் | யூரியா | MOP | TSP |
|---|---|---|---|
| நடுவதற்கு1-2 நாட்களுக்கு முன் அடி உரமாக | 26 | 40 | 20 |
| நட்டு 3வது வாரம் மேற்கட்டு பசளையாக | 26 | - | - |
| நட்டு 6வது வாரம் மேற்கட்டு பசளையாக | 26 | - | 14 |

வெங்காயத்திற்கு பசளை இடும்போது மண் ஈரப்பதன் கொண்டதாக இருத்தல் வேண்டும். வரிசையில் பயிர் செய்யப்படின் சிபாரசு செய்யப்பட்ட அளவிலும் 25% தினை குறைவாக பயன்படுத்த முடியும். சேதனப்பசளைகளை நடுகை செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக ஏக்கருக்கு 4 தொன் எனும் அளவில் இடுவதன் மூலம் சுடியபலனைப் பெறமுடியும்.

**நீர் முகாமைத்துவம்**

வெங்காயச் செய்கைக்கு நீர்ப்பாசனமானது மேற்ப்பரப்பு நீர்ப்பாசன மாகவோ அல்லது நுன் நீர்ப்பாசனமாகவோ மேற்கொள்ளப்படலாம்.

**மேற்பரப்பு நீர்ப்பாசனம்:**

- ❖ குமிழ்களை இலகுவாக நடுவதற்கு, நட முன்னர் பாத்தியில் 3 செ.மீ ஆழத்திற்கு நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும்.
- ❖ நடுகை செய்யப்பட்ட ஆரம்ப காலப்பகுதியில் பூவாளியினால் நீர் விடுவது உகந்தது. இதன் மூலம் பயிரின் ஆரம்ப வளர்ச்சியை விரைவு படுத்த முடியும்.
- ❖ பின்னர் 3–4 நாட்களுக்கு ஒரு தடவையும், நான்கு வாரங்களின் பின்னர் 5 தொடக்கம் 6 நாட்களுக்கு ஒரு தடவையும் நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும்.
- ❖ மண்ணின் ஈரலிப்புக்குகேற்ப நீர்ப்பாசன கால இடைவெளியை மாற்றலாம். எனினும் நீர் பற்றாக்குறையினால் வெங்காயத்தாளின் நடுப்பகுதி உடையும் நிலைஏற்படாது பாதுகாக்குதல் வேண்டும்.

**b. நுண் நீர்ப்பாசனம்**

- ❖ தூவற் நீர்ப்பாசனம், துளிநீர்ப்பாசனம் போன்ற முறைகளை மேற் கொள்ளுவதன் மூலம் அதிக விளைச்சலை பெறக்கூடியதாக இருப்பதுடன் மேற்ப்பரப்பு நீர்ப்பாசனத்தை விட 30 தொடக்கம் 50 வீதமான நீரைச் சேமிக்க முடியும்.
- ❖ மேலும் நுண் நீர்ப்பாசனத்தின் போது நீரில் கரையக்கூடிய பசளைகளைப் பயிருக்கு விசேடமான பசளைட்யிடும் உபகரணத்தை பொருத்துவதன் மூலம் வழங்க முடியும். ஓப்பீட்டளவில் இதன் ஆரம்பச் செலவு அதிகமாகவுள்ள போதும் இதனை பிரயோகிப் பதனூடாக நாம் கூடிய இலாபத்தை அடையலாம்.

**களைக்கட்டுப்பாடு**

களைகளை கையியால் பிடுங்கி அகற்றுவாதாயின் நடுகை செய்து 2ம், 4ம், 6ம் வாரங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். பொருத்தமான களைநாசினிகளை சிபார்சு செய்யப்பட்ட அளவுகளில் பயன்படுத்துவதன் மூலம் நடுகை செய்யப்பட்டதிலிருந்து மூன்று தொடக்கம் 4 வாரங்கள் வரை களைகளைக் கட்டுப்படுத்தலாம். அதன் பின்னர் தோன்றும் களைகளை கையால் அகற்றுதல் வேண்டும்.

வெங்காயச் செய்கைக்கு சிபார்சு செய்யப்பட்ட களை நாசினிகளாவன:

| பொதுப் பெயர் | உபயோகளவு | விசிறும் காலம் | முக்கியமான வியாபாரப்பெயர்கள் |
|---|---|---|---|
| கிளைபோசேற் 360 g/l SL | 800-1000 ml/Ac | நிலம் பண்படுத்தலுக்கு 2 வாரம் முன்னதாகக் கோரைப்புல் அதிகம் காணப்பட்டால் | பவர்செட்-36, டீ-டாஸ், ரவுண்அப், கிளின் அவுட், கவுண்டர், டக்கவுண், ரீபோட். |
| ஓக்சிபுளோபென் 240 g/l EC | 200 ml/Ac | குமிழ்களை நட்டு இரண்டு நாட்களுக்குள் குமிழ் ஈரமாகவிருக்கும்போது | கோல் 2XL, கொண்ட்ரோல்-240, |
| ஆலாக்குளோர் 480 g/l EC | 200 ml/Ac | குமிழ்களை நட்டு இரண்டு நாட்களுக்குள் குமிழ் ஈரமாகவிருக்கும்போது | அலாக்குளோர் |

3. பீடைக்கட்டுப்பாடு:

| பீடை | அறிகுறிகள் | கட்டுப்பாடு |
|---|---|---|
| வெங்காயத்தாள் கோதி | • வெங்காயத்தாளின் நுனியில் முட்டையிட்டு முட்டைகள் மயிரினால் மூடப்பட்டுக்காணப்படும்.<br>• உடலின் பக்கவாட்டில் துல்லியமான கோடுகளை உடைய பச்சை நிறமான புழுக்கள் காணப்படும்<br>• வெங்காயத்தாளின் வெளிப்பகுதி அரித்துத் துளைகள் காணப்படுவதோடு உட்பகுதி சிகரட் சாம்பல் போன்று வெண்மையாகக் காணப்படும். | • அடிக்கடி பயிர்களை அவதானித்து முட்டை குடம்பி என்பவற்றை சேகரித்து அழித்தல்.<br>• நட்டு ஒரு கிழமைக்குள் காபோபியூரான் (8 kg/ac) பிரயோகித்தல்.<br>• பொருத்தமான பூச்சிநாசினிகளைப்பயன்படுத்தல். ஊம் டயசினேன், டைகுளோரோன் |
| பனிப்பூச்சி | • இலைகளில் வெண்ணிறப்புள்ளிகள் காணப்படும்.<br>• சேதம் அதிகமாகும் போது இலைகள் சுருங்கிக் காயும் | • பென்தியோன் / காபனில் உபயொகிக்கலாம். |
| விலங்குப்புழு | • தாக்கப்பட்ட பயிர்களின் தாள்கள் அடியுடன் சுருண்டு பச்சை நிறமாகக் காணப்படும். | • காபோபியூரான் சிபாரிசு செய்யப்பட்ட அளவில் உபயோகித்தல். |

9. நோய்க்கட்டுப்பாடு:

| பீடை | அறிகுறிகள் | கட்டுப்பாடு |
|---|---|---|
| ஊதாப்புள்ளி | • இலையின் நுனியில் வெண்ணிற அடையாளங்கள் தோன்றும். இவை ஒன்றிணைந்து கண்போன்ற தோற்றத்தைக் கொடுக்கும்.<br>• பின்னர் அவை கடும் ஊதா நிறமாகத் தோன்றும்.<br>• பாதிக்கப்பட்ட தாவரங்களில் இலைகள் நுனியிலருந்து கீழ் நோக்கிச் சிறிது சிறிதாக உலரும்.<br>• இலைகள் புள்ளிகள் உருவான இடத்தில் முறியும். | • நீர் வழிந்தோடக்கூடிய இடத்தில் பயிர்செய்தல்.<br>• இந்நோயால் பாதிக்கப்படாத பயிர்களிலிருந்து நடுகைக்கான குமிழ்களைத் தெரிவுசெய்தல்.<br>• குமிழ்களை நடுவதற்கு முன்னர் 30 நிமிடங்கள் பங்கசு நாசினியில் அமிழ்த்தி விதைப்பரிகரணம் செய்தல்<br>• பயிர்களில் நோய் அவதானிக்கப் பட்டதும் பங்கசு நாசினியை இலைகள் நன்கு நனையுமாறு விசிறல். |
| இலைச்சுருளெல் | • இலைகள் போலித்தண்டுகள் சுருளும்.<br>• நாற்றுக்களின் வளர்ச்சி மந்தமாகும்.<br>• வெண்மஞ்சள் நிறமாள மடிந்த சுருண்ட இலைகள் உருவாகும்.<br>• வளர்ச்சி பாதிக்கப்பட்டு குமிழ அழுகும். | • ஒரே இடத்தில் தொடர்ந்து பயிர் செய்வதைத் தடுத்தல்.<br>• விதைப்பரிகரணம்.<br>• பயிர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளபோது தியோபனேற் மீதைபில், 02 குளோரோ தலோனின் போன்ற பங்கசு நாசினிகளை 10 நாட்களுக்கு ஒரு தடைவ மாறி மாறிப் பிரயோகிக்கவும். |
| கீழ்ப் பூஞ்சணம் | • இலைகளின் மேல் நீள்வட்டவடிவான புள்ளிகள் தோன்றும்.<br>• இலை நுனி உலர்ந்து போகும்.<br>• முதிர்இலைகளில் வெண்ணிறப்புள்ளிகள் தோன்றும். | • நீர் வழிந்தோடக்கூடிய இடத்தில் பயிர் செய்தல்.<br>• நோய்த்தாக்கமற்ற பயிர்ச்செய்கையிலிருந்து உலர்குமிழ்களைப் பெறல்.<br>• புளொபினெப், மங்கோசெப் போன்ற பங்கசு நாசினிகளை உபயோகித்தல். |
| அடிஅழுகல் | • நாற்றுக்கள் காயும், வேர்கள் இறக்கும்.<br>• குமிழ் அடி, குமிழ் என்பன அழுகும். | • இலைச் சுருளெலுக்கு சிபாசு செய்யப்பட்ட முறைகள் இதற்கும் உகந்தது. |
| பக்ரீரியா மெல்லழுகல் | • குமிழ்களின் கழுத்துப்பகுதியும் நடுப்பகுதியும் அழுகும். கழுத்துப்பகுதியில் இலைகள் முறிந்து விழும்.<br>• பாதிக்கப்பட்ட குமிழ்களை நசிக்கும்போது உட்பகுதிவெளித்தள்ளப்படுவதுடன் கந்தக மணத்தினைக் கொடுக்கும். | • நோயால் பாதிக்கப்பட்ட தாவரங்களை அழித்தல்.<br>• நீர் வடிப்பினை அதிகரித்தல்.<br>• குறித்த காலத்தில் அறுவடை செய்து மிக விரைவாக விளைச்சலைக் காயவிடல். |

## அறுவடையும், அறுவடையின் பின்னான தொழில்நுட்பப் பாவனையும்

❖ கழுத்துப்பகுதி காயந்து கபில நிறம் அடைந்தவுடன் குமிழ்களுக்கு குமிழ்களுக்கு சேதம் ஏற்படாதவாறு கழுத்துப்பகுதியில் சிறிதளவு மீதம் இருக்கத்தக்கதாக இலைகளை வெட்டி குமிழ் களை வேறாக்கி காற்றோட்டமுள்ள கொட்டில்களில் மரச்சட்டங்களினால் அமைக்கப் பட்ட இராக்கைகளில் 2-3 குமிழ் உயரத்திற்கு பரவி களஞ்சியப் படுத்தலாம்.

- பிரதேசம், காலநிலை, வர்க்கம் என்பவற்றிற்கேற்ப களஞ்சியப் படுத்தக்கூடிய காலம் வேறுபடும். பொதுவாக சின்ன வெங்காயத்தை 3–4 மாதங்கள் வரையும் வேதாள வெங்காயத்தை 1–2 மாதங்கள் வரையும் களஞ்சியப்படுத்தலாம்.
- குமிழ்களுக்குச் சேதம் ஏற்படாதவாறு காற்றோட்டமான கொள்கலன் களில் அல்லது சாக்குகளில் கொண்டு செல்லலாம்.

| | | | |
|---|---|---|---|
| **விளைச்சல்:-** | பெரிய வெங்காயம் | : 8–10 | தொன்/ ஏக்கர் |
| | சிறிய வெங்காயம் | : 5–6 | தொன்/ ஏக்கர் |
| | வேதாள வெங்காயம் | : 6–8 | தொன்/ ஏக்கர் |

**முக்கிய தகவல்கள்**

- வேதாள வெங்காய உண்மை விதையுற்பத்தியும் பாவனையும்
- அண்மைக்காலமாக வேதாள வெங்காய விதையுற்பத்தியும் பாவனையும் அறிமுகப்படுத்தப்பட்டுவருகின்றது.
- ஏக்கர் ஒன்றிற்கு 2.5–3.2 கிலோ வேதாள வெங்காய விதைகள் தேவைப்படும்.
- ஏக்கர் ஒன்றிலிருந்து 150 கிலோ வேதாள வெங்காய விதைகளை உற்பத்தி செய்யமுடியும்.
- இம்முறை மூலம் நடுகைப் பொருட்களுக்கான செலவில் 85 % வரை குறைக்கலாம்.
- தாய்க்குமிழ்களில் பூக்கள் உருவாகுவதை சீராக்குவதற்காக $10^0C$ இல் 10 நாட்கள் சேமித்து வசந்தகாலநிலைப்படுத்தப்படும்.
- தாய்க்குமிழ்கள் 6' x 6' அங்குல இடைவெளியில் நடப்படும்.
- கடுமையாக காற்று வீசுமாயின் மலர்மொட்டுகள் உருவாகிய பின்னர் பாத்தியிலிருந்து ஒன்றரையடி உயரத்தில் 2' x 2' அங்குல அளவான மீன் வலைகளை கட்டி பூக்காம்புகளுக்கு முட்டுக்கொடுத்தல் வேண்டும்.
- பூக்கள் உருவாகும்போது நாள்தோறும் காலை 10 மணியளவில் அனைத்துப் பூக்களையும் உள்ளடக்கத்தக்கவாறு செயற்கையாக மகரந்தச் சேர்க்கை செய்தல் வேண்டும்.
- பூக்களில் விதைகள் கொண்ட பகுதி அரைவாசி கபில நிறமாகமாறி யதும் காம்பின் நுனிப்பகுதியுடன் பூக்களை வெட்டியகற்றி சில நாட்கள் நிழலில் காயவைத்தல் வேண்டும்.
- நன்கு உலர்ந்த பூக்களை கையினால் கசக்கி விதைகளை வேறாக்கி குறைந்த வேகத்தில் சுழலும் காற்றாடியினால் தூசி களை வேறாக்கப்பட்டு விதைகள் பொதியிடப்பட்டு களஞ்சியப் படுத்தப்படும்.

**விவசாயிகளின் அனுபவத்தின்படி,**

❖ செம்மண்ணில் உற்பத்திசெய்யப்பட்ட குமிழ்களை மீண்டும் செம்மண்ணில் நாட்டும்போது கிடைக்கப்பெறும் விளைவைவிட மணல் தன்மையான மண்ணில் நாட்டும்போது கிடைக்கப்பெறும் விளைவு அதிகமாகும் நோய்தாக்கமும் ஒப்பிட்டளவில் குறைவாகும்.

❖ இவ்வாறானதன்மை மணல்தன்மையான மண்ணில் உற்பத்தி செய்யப்பட்ட குமிழ்களை செம்மண்ணில் நாட்டும்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

❖ செம்மண்ணில் உற்பத்திசெய்யப்பட்ட குமிழ்களைவிட மணல் தன்மையான மண்ணில் விளைந்த குமிழ்கள் நீண்டகாலத்திற்கு சேமித்து வைக்கக் கூடியதாக உள்ளது.

❖ வேதாள வெங்காய வர்க்கத்தின் கல்வெங்காயத்தை நீண்ட காலம் சேமித்து வைக்கலாம்.

❖ புருவங்களில் நடப்படும் குமிழ்கள் அதிக விளைவைத்தரும்.

❖ வெங்காயத்தை நட்டு முதலாவது தடவை களை கட்டியபின்னர் ஊடுபயிர்களாக இராசவள்ளி, கரணைக்கிழங்கு. மரவள்ளி போன்றவற்றை பாத்திகளின் வரம்பு மூலைகளில் நடவதன்மூலம் கூடிய இலாபத்தைப்பெறமுடியும்.

**விவசாய ஆராய்சிகளின்படி,**

❖ உண்மை விதைகள்மூலம் உங்பத்தி செய்யப்படும் குமிழ்களை மீண்டும் நடுகைப்பொருட்களாகப் பயன்படுத்தும்போது விளைவை 2–3 மடங்காக அதிதரிக்கலாம்.


❖ நடுத்தர அளவான குமிழ்களைத் தெரிவுசெய்து நடுகை செய்வதனால் அதிக விளைவைப்பெறலாம்.

❖ விதைகளை / குமிழ்களை தொற்றுநீக்கம் செய்து பயிரிடவதன்மூலம் குமிழ் அழுகாது பாதுகாக்கலாம்.

❖ மட்டம்பெயரும் காலங்களில் நீர்பாசனத்தை மட்டுப்படுத்துவதன் மூலம் விளைவை அதிகரிக்கலாம்.

❖ ஒரு மாத காலம்வரை சேமித்து வைக்கும்போது ஏறத்தாள 15 சதவிதம் வரை நிறை இழப்பு அவதானிக்கப்பட்டுள்ளது.

குறுகிய காலத்தில் அதிகளவில் பணம் ஈட்டக்கூடிய வெங்காயச் செய்கையில் மேற்குறிப்பிட்ட முக்கிய விடயங்களைக் கருத்திற் கொள்வதன் மூலம் உச்சப்பயனை அடையமுடியும்.□



கட்டுரை

# ஈழத்துத் தமிழ்ச் சொற்பொழிவின் செல்நெறி

செந்தமிழ்ச் சொல்லருவி
**ச. லலீசன்**
M. A. (தமிழ்) M. Ed.
**விரிவுரையாளர்,**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**

## முகவுரை

தமிழில் சொற்பொழிவு என்ற வடிவம் நீண்ட வரலாற்றை உடையதா? அன்றி மேனாட்டார் வருகையால் எம்மிடையே புகுந்து கொண்ட ஒரு வடிவமா என்பது குறித்து வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. ஆயினும் இதன் தொடக்க காலமாகச் சங்ககாலத்தைக் கொள்வதற்கான ஆதாரங்கள் பல உள்ளன. சிலப்பதிகாரத்தில் நாடுகாண்காதையில் சமணசமயக் கடவுளான அருகக் கடவுளின் பெருமைகள் குறித்து தருமசாரணர் உரையாற்றுகின்றார். மணிமேகலையில் "சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதையில்" சமய உண்மைகளை வெளிப்படுத்துவதற்காக "உரைச்செயற்பாடு" இடம்பெறுகின்றது. இவ்வாறு பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் சொற்பொழிவுச் செயற்பாட்டுடன் தொடர்புடைய வடிவங்கள் கையாளப்பட்டிருக்கின்ற நிலையில் ஈழத்திலும் தமிழ்ச் சொற்பொழிவினுடைய தொடக்கம் நீண்ட பாரம்பரியத்திற்குட்பட்டதாக இருந்திருக்க முடியும் என்றே கருதமுடிகின்றது.

சொற்பொழிவு, சொற்பெருக்கு, பிரசங்கம், உபந்நியாசம், உரை, பேச்சு, போன்ற பதங்கள் ஆற்றுகை நிலையில் சிறிய சிறிய வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் இக்கட்டுரையில் இவை யாவற்றையும் குறிப்பதற்கான கலைச் சொல்லாகச் "சொற்பொழிவு" என்ற பதம் கையாளப்படுகின்றது.

## ஈழத்தில் சொற்பொழிவின் தோற்றமும் வளர்ச்சியும்

சொற்பொழிவானது வாய்மொழி மூலமான ஆற்றுகைக் கலையாக இருப்பதாலும் ஈழத் தமிழர்களிடையே ஆவணப்படுத்தும் பண்பு அரிதாக இருப்பதாலும் ஈழத்தில் சொற்பொழிவுச் செயற்பாடு குறித்த சான்றுகளைப் பண்டைய இலக்கியங்கள் வாயிலாகப் பெறமுடியவில்லை. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு குறித்த ஓரளவு தெளிவான தகவல்கள் யாழ்ப்பாண மன்னர்கள் காலத்துடனேயே (கி.பி. 13 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே) ஆரம்பமாகின்ற

நிலையையும் இங்கு சுட்டிக்காட்டல் பொருந்தும். இதனால் ஐரோப்பியர் வருகைக்கு முன் ஈழத்தில் சொற்பொழிவுப் பாரம்பரியம் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்தில.

ஈழத்துத் தமிழ்ச் சொற்பொழிவின் புத்தெழுச்சி ஐரோப்பியர் வருகையுடனேயே ஏற்பட்டது. அமெரிக்க மிசனறிமாரால் 1823 ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்ட செமினறியின் (Batticotta Seminary) பாடத்திட்டத்தில் மூன்றாம் வருடக் கல்விப் பாடமாகப் "பேச்சு" என்ற கலை போதிக்கப்பட்டது[01].

ஈழத்தில் புராணபடன மரபுக்கு முக்கியத்துவம் வழங்கும் நிலை நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இதனைப் புராணப் பிரசங்கம் எனக் குறிப்பிட்டனர். புகழ் பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் ஒல்லாந்தர் காலத்தில் இருபாலைச் சேனாதிராய முதலியார் புராணப் பிரசங்க மரபைத் தொடக்கி வைத்தார்[02] புராணப் பிரசங்கம் என்பது ஒரு பாடலை விரித்துப் பொருள் உரைத்தல் ஆகும். இது ஒரு வகையில் சொற்பொழிவுச் செயற்பாட்டிற்கான அடிப்படை எனக் கருத முடிகின்றது.

> *" இந்துக் கோவில்களில் புராணம் படிக்கப்பட்டு விளக்கவுரைகள் வழங்கப்பட்ட பொழுதிலும் இந்துக்கள் குறிப்பிட்ட ஒரு பொருளில் தர்க்க ரீதியாக விடயங்களை நிரைப்படுத்திச் சொற்பொழிவு செய்யும் ஆற்றலை வளர்க்கவில்லை"*[03]

என எஸ். ஜெபநேசன் குறிப்பிடுகின்றார். இதற்கான காரணங்களைத் தேடும் போது தமிழகத்தில் சொற்பொழிவுச் செயற்பாடு மந்தநிலை அடைந்திருந்தமைக்கு ரா.பி. சேதுப்பிள்ளை கற்பித்த காரணங்களை இங்கும் பொருத்திப் பார்க்க முடிகின்றது.

> *"பாரத நாட்டில் வேற்றரசு வீற்றிருந்த நாளில் மேடைப் பேச்சு தங்கு தடையின்றி நடந்ததில்லை. "இம்மென்றால் சிறைவாசம்! ஏன் என்றால் வனவாசம்!" என்று பாரதி பாடிய வன்கண்மையைக் கண்கூடாகக் கண்டது இந்நாடு"*[04]

தமிழில் சொற்பொழிவானது சமயத் தளத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது படிப்படியாக அரசியல் சமூகவியல் எனப் பயணித்து இன்று தொழில்சார் சொற்பொழிவாளர்களையும் உருவாக்கியிருக்கின்றது.

சொற்பொழிவு என்ற சொற்கையாட்சி 20 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு முன்னர் பிரசங்கம் என்ற வடசொல்லே பெரும் பயன்பாட்டில் இருந்தது. ரா.பி. சேதுப்பிள்ளையின் கூற்று இதனை ஆதாரப்படுத்தும்

"இக்காலத்தில் சொற்பொழிவு என்ற சொல்லைத் தமிழறிஞர்கள் வழங்குகின்றார்கள். வானத்து நின்று பொழியும் மழை போல மேடையினின்று பொழியும் சொல்மாரியைச் சொற்பொழிவு என்ற சொல் உணர்த்துவதாகும். முப்பது ஆண்டுகளுக்கு முன்னே சொற்பொழிவு ஆற்றுப்படை என்ற நூலை இயற்றினார் ஒரு தமிழறிஞர். சொற்பொழிவு செய்யும் முறைகளை எடுத்துரைத்துப் பேச்சாளருக்கு நெறி காட்டுவது அவ்வுரைநடை நூல். ஆயினும் சொற்பொழிவு என்னும் சொல் புதுச்சொல்லாய் இருந்தமையால் அந்நூலை ஏளனம் செய்யத் தலைப்பட்டனர் பலர். சின்னாளில் இறந்து பட்டது அந்நூல். ஆனால் சொற்பொழிவு என்பது வழக்காற்றில் வந்துவிட்டது."[05] என்கிறார்.

ஐரோப்பியருடைய காலத்தில் சமயப் போராட்டம் முதன்மை பெற்றிருந்ததால் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பும் ஊடகமாகச் சொற்பொழிவு பயன்பட்டது. ஈழத்துச் சொற்பொழிவுத் துறையில் மிக முக்கியமானவராகத் திகழும் ஆறுமுகநாவலர் 1848 ஆம் ஆண்டு பிறப்பதற்கு முதனாளிரவு வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் தனது முதலாவது பிரசங்கத்தை நிகழ்த்தினார்.[06]

ஆனால் அவரது இறுதிச் சொற்பொழிவு அவரது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதாகவும் மக்கள் மனோநிலையைக் குறித்துக்காட்டுவதாகவும் அமைந்திருக்கின்றது.

"நான் உங்களிடத்தில் கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது முப்பத்திரண்டு வருட காலம் உங்களுக்குச் சைவசமயத்துண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவசமயம் குன்றிப்போமென்று பாதிரிமார் சொல்லுகின்றார்கள். ஆதலால், நான் உயிரோடிருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப் போலப் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால், உங்களுடைய வைவுகளைக் கேட்டுக்கேட்டுக் கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போல ஒருவரும் வரார். இதுவே என்னுடைய கடைசிப் பிரசங்கம்."[07]

இவ்வாறு சமயத் தளத்தில் பயிலப்பட்டு வந்த சொற்பொழிவு பெரிய புராணம், கந்த புராணம் ஆகிய தமிழ்க் காப்பியங்களை இந்து சமயத் தளத்தில் இரசனை முறையில் எடுத்தியம்புவதான உரைகளைக் கொண்டு அமைந்தது. ஆறுமுகநாவலர், வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை, சபாபதி நாவலர், சதாவதானி கதிரைவேற்பிள்ளை போன்றோர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இக்கலையைத் தமிழகத்திற்கும் எடுத்துச் சென்றனர். ஏனைய சமயத்தவரும் தத்தம் கோவில்களைத் தளங்களாகக் கொண்டு சொற்பொழிவுகளை ஆற்றினர்.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் கட்சி அரசியல் சார்ந்து சொற்பொழிவாற்றும் நிலை மேலெழுந்தது. ஈழத்தில் அமிர்தலிங்கம், ஆலாலசுந்தரம், செ.இராசதுரை, புதுமைலோலன், வி.பொன்னம்பலம் போன்றோர் பிரபலம் பெற்ற அரசியற் சொற்பொழிவாளர்களாகத் திகழ்ந்தனர். பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியானின் தமையனாராக விளங்கிய புதுமைலோலன் ஈழத்தின் முதலாவது சொற்பொழிவுப் பயிலகத்தை நிறுவிய பெருமைக்குரியவர். இவர் தொடக்கநிலைப் பேச்சாளர்களுக்கு உதவும் முகமாக “அண்ணா சொற்பயிற்சி மன்றம்” என்ற பெயரில் ஒரு நிலையத்தை யாழ்நகரில் நிறுவி நடத்தினார் என அறியமுடிகின்றது.[08] செ. இராசதுரை அரசியல் மேடைகளில் இலக்கியச் செய்திகளுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்கி உரையாற்றினார்.

ஈழத்தில் பெண் சொற்பொழிவாளர்களுடைய எழுச்சி 1950களிலேயே இடம்பெற்றது. பெண்கல்விக்குரிய வாய்ப்புக்களின் பின்னணியிலேயே இவ் எழுச்சியை நோக்கமுடியும். தங்கம்மா அப்பாக்குட்டி, மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வசந்தா வைத்தியநாதன், மனோன்மணி சண்முகதாஸ் சத்தியதேவி துரைசிங்கம், பொன்.பாக்கியம் போன்றோர் பிரபலம் பெற்ற சொற்பொழிவாளர்கள் ஆவர். இவர்களின் ஆற்றுகை முறைமையில் ஆண்குரல் இழையோடியிருப்பதாகக் கருதப்படுகின்றது..

தமிழ் இலக்கியங்களைச் சொற்பொழிவாற்றுகின்றவர்கள் இரசனை முறைத் திறனாய்வுப் போக்கையே தமது சொற்பொழிவுகளில் கையாள்கின்றனர். நாவலர் தொடங்கி வைத்த கந்தபுராண இலக்கியப் பாரம்பரியம் யாழ்ப்பாணத் தவர்களுடைய கலாசாரமாகத் தொற்றிக் கொண்டது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை இக்கலாசாரத்திற்கு வலுச்சேர்த்தோருள் முக்கியமானவர்.

1980களின் பின் சொற்பொழிவுத் துறையில் புகுந்துகொண்ட இ.ஜெயராஜ் கம்பராமாயண இரசனை மரபுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்கினார். 1990களில் யாழ்ப்பாணப் பண்பாடு கம்பராமாயணப் பண்பாடோ? என வியக்கவைக்கும் அளவிற்கு கம்பராமாண இலக்கியம் குறித்த எழுச்சியை இவரது சொற்பொழிவுகள் ஏற்படுத்தின.

தமிழ் இலக்கியங்களை அடிநிலை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதற்குச் சொற்பொழிவுப் பண்பாடே பெரும்பங்காற்றுகின்றது. பெரியபுராணம், கம்பராமாயணம், கந்தபுராணம் முதலிய இலக்கியங்கள் குறித்தான சொற்பொழிவுகள் இன்றும் கோவில்களை அடியொற்றி நிகழ்த்தப்படுகின்றன. இரசனை முறையில் இருந்து விலகி அமைப்பியல், பின்நவீனத்துவம் சார்ந்த பார்வைகளை வெளிக்காட்டச் சில இளம் சொற்பொழிவாளர்கள் முயல்கின்றமையையும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தம்.

**சொற்பொழிவும் மாற்றுவடிவங்களும்**

சொற்பொழிவு என்ற கலையுடன் தொடர்புடைய மாற்று வடிவங்களாகப் பல வடிவங்கள் கையாளப்படுகின்றன. பட்டிமண்டபம், வழக்காடுமன்றம், சுழலும் சொற்போர், தர்க்கப்பிரசங்கம், உரையரங்கம், அரட்டையரங்கம், இசைச்சொற்பொழிவு (கதாப்பிரசங்கம்), நேர்முகவர்ணனை முதலியனவற்றை மாற்று வடிவங்களாக இனங்காட்டலாம்.

இதைவிடப் பொது நிகழ்வுகளில் பல்வேறு உரைகள் நிகழ்த்தப்படுகின்றன. அஞ்சலியுரை, அருளுரை, அறிமுகவுரை, ஆசியுரை, ஆய்வுரை, ஏற்புரை, கருத்துரை, சிறப்புரை, தர்க்கவுரை, தெய்வீகவுரை, தொகுப்புரை, நயப்புரை, நன்றியுரை, நிறைவுரை, நினைவுரை, பாராட்டுரை, பிரார்த்தனையுரை, மொழிபெயர்ப்புரை, வரவேற்புரை, வாழ்த்துரை, விமர்சனவுரை, விளக்கவுரை, வெளியீட்டுரை என இவற்றைப் பலவாறாக நோக்க முடியும்.[09] இந்த உரைகள் வெவ்வேறு அர்த்தமுடையவையாயினும் இவற்றை ஆற்றுபவர்கள் இவ்வுரைகள் பற்றிய போதிய தெளிவைக் கொண்டிருக்காத நிலைமை காணப்படுகின்றது. இலக்கிய நூல் வெளியீடுகளின் போது வெளியீட்டுரை, ஆய்வுரை, நயப்புரை என்பவற்றிற்கான அடிப்படை வேறுபாடுகளைப் பலர் அறிந்திருக்காத நிலைமையிருப்பதையும் வேதனையுடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

### சொற்பொழிவு ஆற்றுகை முறைமை

சொற்பொழிவு ஆற்றுகை முறைமையிலும் தற்காலத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆரம்ப காலங்களில் பல சொற்பொழிவாளர்கள் கடவுள் வணக்கப்பாடல் அல்லது தமிழ் வணக்கப் பாடல்களுடனேயே சொற்பொழிவுகளை ஆரம்பித்தனர். அதனைத் தொடர்ந்து சபையோரை விளித்தனர். ஆனால் தற்போது பாடல்களைப் பாடிச் சொற்பொழிவுகளை ஆரம்பித்தால் அது உபந்நியாசம் என்ற வகைப்பாட்டில் நோக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது. பெரியோர்களை விளிக்கும் போது வருகையாளர்கள் யாவரையும் விளிப்பது சொற்பொழிவின் கனதியைக் குன்றச் செய்துவிடும். அழைப்பிதழில் உள்ள அத்தனை பெயர்களையும் விளித்து நேரத்தை விழுங்கக் கூடாது. பேசப் போகும் விடயத்திற்கே அதிக முக்கியத்துவம் உண்டு.

*"அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய*
*நூல்இன்றிக் கோட்டி கொளல்" (திருக்குறள்: கல்லாமை 01)*
என்கிறார் வள்ளுவர்.

பேசப் போகும் விடயம் பற்றிக் குறிப்பிடும் ஆ. முத்துசிவன்

*"விஷயத் தெளிவு எவ்வாறு இருக்க வேண்டும் என்றால் அத்தனை விஷயங்களையும் ஒரு தபால் தலைக்குள் அடக்கிக்கொள்ளும்படி அவ்வளவு தெளிவாக இருக்க வேண்டும்"*[10]

என்கிறார். பொருளுடன் உசரிப்பு, தொனி, தெளிவு, மெய்ப்பாடு முதலிய அம்சங்களுக்கும் சொற்பொழிவாளான் முதன்மை வழங்க வேண்டும். இதன் மூலமே சிறப்பான ஆற்றுகையை வெளிப்படுத்த முடியும்.

சொற்பொழிவுகளில் நகைச் சுவைக்கு முக்கியத்துவம் வழங்கும் போக்கும் அண்மைக்காலங்களில் தலைதூக்கியுள்ளது. பேசப் போகும் விடயத்துடன் அடிபொற்றியதாக அமையாமல் வேறு தளங்களில் நகைச்சுவைகள் அமைவது சொற்பொழிவின் ஆரோக்கியத்தைக் கெடுப்பதாகவே அமையும்.

சொற்பொழிவுச் செயற்பாட்டிற்கான் நேரம் பற்றிய பிரக்ஞை முக்கியமானது. உலக மயமாக்கலின் விளைவாகவும் இலத்திரனியல் சார்ந்த பொழுது போக்கு ஊடகங்களின் பெருக்கம் காரணமாகவும் சொற்பொழிவின்பால் நாட்டங்கொள்ளும் நுகர்வோருடைய எண்ணிக்கை குறைந்து வருகின்றது. இச்சவாலை எதிர்கொள்ளச்

சொற்பொழிவாளர்கள் பல்வேறு உத்திகளைக் கையாள்கின்றனர். குரலை ஏற்றி இறக்கிப் பாத்திரக் கூற்றுக்களைத் தம்முள் புகுத்தி நாடகப் பாணியில் பேசுதல், சொற்பொழிவின் நிறைவில் சபையோரிடம் வினாக்களைத் தொடுத்துச் சரியான விடை கூறியோருக்குப் பரிசுகள் வழங்குதல் முதலியன இவற்றுள் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். எது எவ்வாறெனினும் விளிப்பு, தொடுப்பு, முடிப்பு என்ற நிலையில் சொற்பொழிவுச் செயற்பாடு முக்கிய மூன்று கூறுகளைக் கொண்டு அமைந்திருக்கும்.

## இலக்கிய அந்தஸ்து

பிரபல சொற்பொழிவுகளை நூலுருவில், இறுவட்டு வடிவில் வெளியிடும் நிலையும் காணப்படுகின்றது. நூலுருவில் வெளியிடப்பட்ட சொற்பொழிவுகள் சொற்பொழிவு இலக்கியம் என்ற வகுதிக்குள் அடக்கப்படுகின்றன. சொற்பொழிவின் முக்கியத்துவம் கருதி அதனை நவீன இலக்கிய வடிவங்களுள் ஒன்றாகக் கொள்ளலாம் என்ற முன்மொழிவை க. சிவகாமி வழங்கியுள்ளார்.

*"பிரசங்கம் என்பது கட்டுரை இலக்கியத்தின் மாற்று வடிவம் என ஏற்கலாம். கடித இலக்கியம் போன்று இதுவும் இன்னும் தோற்ற நிலையிலேயே உள்ளது. சொற்பொழிவு, பிரசங்கம், சொற்பெருக்கு, சிறப்புரை, உரை, உபந்நியாசம், மேடைப்பேச்சு எனப் பலவாறாக வழங்கப்படும் இவ்விலக்கியம் மேடையைத் தன் பிறப்பிடமாகக் கொண்டுள்ளது"* என்கிறார்.[11]

## சொற்பொழிவுக் கலையை மேம்பாடடையச் செய்வதற்கான விதப்புரைகள்

சமூக மாற்றங்களை ஏற்படுத்த வல்ல சொற்பொழிவுத் துறையின் நிலை இன்று ஆரோக்கியமாக இருப்பதாகக் கருத முடிவில்லை. குறிப்பாக ஈழத்தின் சொற்பொழிவுத் துறையில் இளம் சொற்பொழிவாளர்களுடைய பங்களிப்புக் குறைவாகவே இருக்கின்றது. இந்நிலையில் இத்துறைசார் வளர்ச்சிக்காக மேல்வரும் விதப்புரைகள் முன்வைக்கப்படுகின்றன.

★ சொற்பொழிவாளர்கள் தாம் பேசப் போகும் விடயம் பற்றிய பூரண தெளிவைக் கொண்டிருத்தல்

★ மாணவர்களிடையே சொல்வன்மைப் போட்டிகளை நடத்துதல்

★ சொல்வன்மைப் போட்டிகளுக்குத் துறைசார்ந்த நடுவர்களைத் மத்தியஸ்தர்களாக நியமித்தல்

★ சொற்பொழிவாளர்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி ஊக்குவித்தல். கலாபூசணம், சாகித்தியரத்னா முதலிய விருதுகள் சொற்பொழிவுத் துறைக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

★ சொற்பொழிவுகளை இறுவட்டு வடிவிலோ நூலுருவிலோ ஆவணப்படுத்தல் அருகிவரும் மரபுக் கலைகள் என்ற வரிசையில் (குறிப்பாகப் பிரசங்கம், கதாப்பிரசங்கம்) கணிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படல்.

★ சொற்பொழிவுப் பயிலகங்கள் நிறுவப்படல்

★ வானொலி, காணொலி போன்ற ஊடகங்களில் இலக்கியம், மற்றும் துறைசார்ந்த (உளவியல்) சொற்பொழிவுகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல்

நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டுள்ள ஈழத்தின் சொற்பொழிவுச் செல்நெறி, கால மாற்றங்களுக்கேற்பத் தன்னுள்ளும் மாற்றங்களைக் கண்டு தனது இருப்பை நிலைநிறுத்தி வருகின்றது. □

**அடிக்குறிப்புக்கள்**

01. சிவலிங்கராஜா, எஸ்., கலாநிதி, ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, தனலக்குமி புத்தகசாலை, திருநெல்வேலி (2001)

02. கணேசையர். சி. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களம்.(மீள் பதிப்பு) 2006

03. ஜெபநேசன். எஸ்., பேராயர், கலாநிதி, தமிழ்ச் சமுதாயத்தில் பிரசங்க மரபின் தோற்றமும் வளர்ச்சியும் சில குறிப்புக்கள், யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும் ஓர் அறிமுகக் கையேடு, (தொகுப்பு : மனோன்மணி சண்முகதாஸ், மயில்வாகனம் இரகுநாதன்) கோகுலம் வெளியீடு 2, (2006) ப.144

04. சேதுப்பிள்ளை. ரா.பி., தமிழகம்: அலையும் கலையும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 05, (1958) ப.145

05. மேலது

06. கணபதிப்பிள்ளை. சி., பண்டிதமணி, நாவலர் பெருமான், நாவலர் நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ். (1979) (பக்கம் குறிப்பிடப்படவில்லை)


07. யோகேஸ்வரி கணேசலிங்கம்., நாவலர் வழியில் தமிழறிஞர், பெசன்ட் நகர், சென்னை (2000) ப.65.

08. சந்திரமோகன்.ந., நீங்களும் பேச்சாளராகலாம், அன்பு வெளியீடு, யாழ்ப்பாணம். (1972) ப.67.

09. லலீசன்.ச., தமிழில் பிரசங்க மரபு, தமிழில் முதுகலைமாணிக் கற்கைநெறிக்காக யாழ். பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, (2009) ப. 48

10. முத்துசிவன். அ., மேடைக்கலை, கார்த்திகேயினி பிரசுரம், புதுக்கோட்டை ஸ்டேட் (1942)

11. சிவகாமி.ச., முனைவர், சொற்பொழிவிலக்கியம், உலகத் தமிழிலக்கிய வரலாறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை (2005) ப. 443


பதிவியல்
நீர்வைபற்றிய ஆக்கங்கள்





# நீர்வேலிக் கிராமம் - ஒரு பார்வை

சு. சண்முகவடிவேல்,
கிராம அலுவலர்,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

இலங்கை வள நாட்டின் சிரசுபோல அமைந்த யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர்பிரிவில் அமைந்துள்ளது நீர்வேலிக்கிராமம்

யாழ்ப்பாண நகரிலிருந்து பருத்தித்துறை செல்லும் வீதியில் 7ஆவது மைலில் அமைந்துள்ளது இக்கிராமம். வலிகாமம் கிழக்குப்பகுதியின் பலபாகங்களிலுமிருந்து பாய்ந்துவரும் மழைநீரைத் தன்னுள் அடக்கி அதனைத்தனக்கு நீராலான வேலியாக்கி தனது கிழக்கெல்லையாக அமைத்துக் கொண்டதால் "நீர்வேலி" என்னும் பெயரைக் கொண்டது இக்கிராமம். இதனை "ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம்" என்னும் நூலிலும்" புகழ்பூத்த நீர்வேலி, என்னும் நூலிலும் காணலாம்.

இந்நீர் நிலையானது தெற்கே யாழ்ப்பாணக் கடலேரியையும் வடக்கே தொண்டைமானாற்றுக்கடலையும் தொடுக்கும் நீர்நிலையாக அமைந்துள்ளது. இந்நநீரேரியே வலிகாமம் பகுதியின் கிழக்கெல்லையாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தின் தெற்கெல்லையாக கோப்பாய் கிராமமும், மேற்கெல்லையாக ஊரெழு, அச்செழுக்கிராமங்களும், வடக்கெல்லைக் கிராமமாக சிறுப்பிட்டியும் அமைந்துள்ளன. மேலும் இவ்வெல்லைகள் நீர்நிலைகொண்டதாகவும் அமைந்திருப்பது. "நீர்வேலி" என்னும் பெயருக்குக் வலுச்சேர்ப்பதாகும். தெற்கெல்லையில் பூதர்மடமும் கேணியும் , கிராஞ்சிக்குளமும், மேற்கு சிவபூதவராயர் கோயிலும், கேணியும் வேலியாற்குளமும், வடக்கு மருதங்குளம் என்பனவும் வேறுகுளங்களும் அமைந்துள்ளமை குறிப்பிடப்பட வேண்டியவே. மேலும் எல்லைகளில் காவல் தெய்வங்களாக ஈசானத்தில் சப்தகன்னிகோயிலும், கிழக்கே முழக்கப்பிட்டி நாச்சிமார் ஆலயமும் தெற்கே இலப்பையடிப்பிள்ளையார்கோயிலும், நாச்சிமார் கோயிலும், மேற்கே சிவபூதவராயர் கோவிலும், மேற்கே மாலை

வைரவர் கோயிலும், வடக்கே மீனாட்சியம்மன் கோயிலும் அமைந்துள்ளமை சிறப்பிற்குரியதே. இந்த எல்லைகளுக்கு உட்பட்ட சுமார் 8.5 சதுர மீற்ரர் பரப்பளவைக் கொண்டதே கிராமாகும்.

2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடித்தொகைக் கணக்கெடுப்பின்படி 1842 குடும்பங்களைச் சேர்ந்த 5564 மக்கள் நீர்வேலியில் வாழ்கின்றனர். அவர்களில் 4144 பேர் வாக்குரிமை பெற்ற வாக்காளர் என்பது குறிப்பிடத்தக்கது.

"நீரகம் பொருந்திய ஊரகத்திரு" என்னும் ஔவைப்பிராட்டியின் வாக்கிற்கமைய பொருந்திய இக்கிராமத்தில் வாழும் மக்கள் உண்மையிலேயே புண்ணியம் செய்தவர்களென்றால் மிகையாகாது. இக்கிராமம் பலவகைச் சிறப்புகளும் கொண்டதாகவே அமைந்திருக்கின்றது. மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதது நீரேயாகும். இந்த நீர்வளம் இயற்கையாக அமைந்திருப்பதும், அதற்கேற்ப நிலவளச்சிறப்பு அமைந்திருப்பதும் சிறப்பிற்குரியன.

இச்சிறப்புமிகு கிராமத்தின் கிழக்கெல்லையாக அமைந்த நீர்நிலையைத்தாண்டி உள்ளே வர சமவெளியான தரிசுநிலம், அங்கே பசு இனங்கள் கூட்டங்கூட்டமாக மேயும் மேச்சல்தரவை, ஆங்காங்கே மந்தையினங்கள் நீர் அருந்த நீர்நிலைகள் (குளங்கள்) பெருமரங்களற்ற வெளிப்பிரதேசம். இதுவே மாட்டுவண்டிச்சவாரி நடைபெறும் நீர்வேலி முற்றவெளியான சவாரித்திடல்.

இப்பகுதி களிமண் பிரதேசமாகவும், பயிரேதும் செய்ய முடியாத உவர் (சவர்)நிலமாகவும் அமைந்துள்ள பகுதியாகும்.

அடுத்து தாழைமரங்கள் கூட்டங்கூட்டமாக நிற்பதால் "தாழந்தோப்புகள்" என வர்ணிக்கப்படும் அழகுக்காட்சி அமைந்தபகுதி அதை அடுத்தப்பகுதி பச்சைப்பசேலென்னும் செந்நெல்வயல் நிலங்களைக் கொண்ட மருதநிலப்பகுதி அதையடுத்து தொன்னந்தோப்புகள் அமைந்தபகுதி.

இம்மருதநிலப்பகுதியையும், மக்கள்குடியிருப்புப்பகுதியையும் பிரிப்பதாக அமைந்துள்ளது யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதி இவ்வீதியைக் கடந்து மேற்கே செல்லச்செல்ல மணலும் களியும் சேர்ந்த இருவாட்டி நிலம் செம்மண்களிநிலம் என நில அமைப்பில் வேறுபடுகின்றது. அந்த நிலஅமைப்பைப் பிரிக்கும் வகையில் இருவாட்டி நிலப்பரப்பில்அமைந்த தெற்கு

வடக்குப்பகுதிகளையும், மேற்கையும் பிரிக்கும் எல்லையாக யாழ்ப்பாணம் அச்சுவேலி இராசபாதை வீதி அமைந்துள்ளமையும் குறிப்பிடப்பட வேண்டியனவே.

இங்கு வந்தாரை வரவேற்கும் வகையில் நீண்ட குலைகளைத் தாங்கிய கதலிவாழைத் தோட்டங்களும் மற்றும் சிறுதானியத்தோட்டங்களும், பணப்பயிர்களான வெண்காயம், மிளகாய், புகையிலைத் தோட்டங்களும், கிழங்குவகையான மரவள்ளி, இராசவள்ளி, கருணைக்கிழங்குத் தோட்டங்களும் அமைந்துள்ளமை சிறப்பிற்குரியதே. வந்தோரைவரவேற்கும் வகையில் ஓசை எழுப்பி தொழில் செய்யும் இரும்பு, மரவேலைசெய்யும் தொழிற்சாலைகளும் ஆங்காங்கே அமைந்து கிராமத்துக்கும் பெருமை சேர்க்கின்றன. கூட்டுறவுச்சங்கங்கள் , அறநெறிப்பாடசாலைகள், கல்விச்சாலைகள், பாலர்பகல்விடுதி, முன்பள்ளிகள் என்பனவும் மாதர்சங்கங்கள் கலைவளர்க்கும் கலைக்கூடங்களும், அமைந்து செயலாற்றி வருவது பெருமைக்குரியதே.

ஸ்ரீலஸ்ரீ சிவசங்ரக பண்டிதர் திண்ணைப்பள்ளிக்கூடம் அமைத்தும் தமிழ்ப்பணியாற்றியதால் பெருமை பெற்றது இக்கிராமம். அதனைத்தொடர்ந்து முதலியார் அத்தியார் அருணாசலம் (J. P.) கல்லூரி அமைத்து கல்விப் பணியாற்றியதால் சிறப்புப் பெற்றது இக்கிராமம்.

அருளொளி வீசும் ஆண்டவன் ஆலயங்களாக வாய்க்கால் தரவைப்பிள்ளையார், அரசகேசரிப்பிள்ளையார், கந்தசுவாமி ஆலயம் ஆகிய முப்பெரும் ஆலயங்களும் அடுத்து நீர்வேலி செல்லக்கதிர்காமசுவாமி கோயில், காளியம்மன் கோயில், இராசராஜேஸ்வரி (பழைய அம்மன்) கோயில் என்பனவும் ஆங்காங்கே அமைந்த வேறு சிறு தெய்வங்களுக்கான இந்துக் கோயில்களும் அமைந்துள்ளதோடு கத்தோலிக்கமத வளர்ச்சிக்காக பரலோக மாதா தேவாலயமும் அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தின் இயற்கை அழகினை இங்கு வாழ்ந்த தமிழறிஞர் கு. சிற்சபேசன் அவர்கள் நீர்வை நாட்டு வளம் என்னும் பாடல் தொகுதியில்

*"புன்னை மாதுளை பூங்கொதி மாபுளி*
*தென்னை கூவிளந் தேனுகர் வண்டினம்*
*துன்னு பூக வனந்தொறும் வாழையோ*
*டன்ன தாழை யடர்ந்தது சோலையே"*

என்னும் பாடல் மூலம் வர்ணித்துள்ளமை நினைவிற்கொள்ள வேண்டியதே. இன்னும் இக்கிராமத்தின் சிறப்புகளை நோக்குமிடத்து கலைவளர்ச்சிக்கு தொன்று தொட்டு நிலைக்களனாக அமைந்துள்ளமை அறியக்கிடக்கின்றது. நீர்வேலி தெற்கில் 1900ஆம் ஆண்டளவில் மாதாந்தம் பௌர்ணமி தினங்களில் கூத்தாடுவான்குளம் என இப்பொழுது அழைக்கப்படும் இடத்தில் புராண நாடகங்கள் மேடையேற்றப்பட்டதாகவும் அண்ணாவியம் மேற்கொண்டு பழக்கப்பட்டதாகவும் அறியக்கிடக்கின்றது. இதன் காரணமாகத் தான் அந்த இடம் கூத்தாடுவான்குளம் என்று இன்று வழங்கப்படுகிறது. இதே போல நீர்வேலி வடக்கு காமாட்சி அம்பாள் ஆலய சூழலிலும் மேடையமைத்துப் புராண நாடகங்கள் மேடையேற்றப்பட்டதாக அறியக்கிடக்கின்றது.

இப்படியாக கலைவளர்ச்சிக்கு நிலைக்களனாயமைந்த இக்கிராமத்தின் நிர்வாக செயற்பாடுகளை நோக்குவோம்.

***நீதி நிர்வாகம்***

1946 முதல் 1970 வரை இங்கு கிராமிய நீதிமன்றம் (கிராமக்கோடு) தற்போது வலி. கிழக்கு பிரதேசசபையின் நீர்வேலி உபஅலுவலகம் அமைந்துள்ள இடத்தில் இயங்கி வந்துள்ளது. இதன் நீதிவானாக திரு. தில்லைநாதன் அவர்கள் கடமையாற்றி வந்தமையும் நினைவு செய்யப்பட வேண்டியனவே. இந்த நீதிமன்றம் 1970இல் புத்தூருக்கு மாற்றப்பட்டு அங்கு நடைபெற்றமை குறிப்பிடத்ததாகும்.

***ஊராட்சி***

இக்கிராமத்தின் ஊராட்சியைக்கவனிக்க கிராமச்சங்க அமைப்பு டொனமூர்த்திட்டப்படி 1931இல் உருவாக்கப்பட்ட போது நீர்வேலி, உரும்பிராய், ஊரெழு ஆகிய மூன்று கிராமங்களையும் சேர்த்து ஒரு கிராமச்சங்கம் நீர்வேலியில் உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களே தெரிவு செய்யப்பட்டமை கிராமத்துக்குப்பெருமை சேர்ப்பதாக அமைந்தது. மூன்று வட்டாரங்களாக இருந்த இக்கிராமத்தின் ஏனைய உறுப்பினர்களாக திரு. வே. சி. அப்புத்துரை, திரு. பொ. சி. நாகலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். தொடர்ந்து காலத்துக்குக்காலம் தேர்தல் மூலம் கிராமச்சங்க அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு வந்தமை காலப்போக்கில் 1968ஆம் ஆண்டு நீர்வேலி தனிக்கிராமசபையாகப் பிரகடனப்படுத்தப்பட்டு தேர்தல் மூலம் சபை அமைக்கப்பட்டது. 3 வட்டாரங்களாக அமைந்திருந்த இக்கிராமம் 8 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு திரு. இ. அப்பாத்துரை, திரு. அ. நடராசா, திரு. அ. பூதத்தம்பி, திரு. மு.

பூபாலசிங்கம், திரு. வே. வைத்தியலிங்கம், திரு. க. நாகலிங்கம், திரு. பெ. கந்தப்பிள்ளை, திரு. பொ. கந்தையா போன்றவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். காலப்போக்கில் கிராமசபை முறை ஒழிக்கப்பட்டு பிரதேசசபைமுறை 1987இல் உருவாக்கபட்ட போது நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், புத்தூர், அச்சுவேலி ஆகிய கிராமசபைகள், ஒன்றினைக்கப்பட்டு வலிகிழக்கு பிரதேசசபையாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இதன்தலைமையகம் நீர்வேலியிலேயே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது உப அலுவலகமும், பொதுநூல் நிலையமும் ஆயுள்வேத வைத்தியநிலையமும் அந்த இடத்தில் இயங்க தலைமைச்செயலகம் புத்தூருக்கு மாற்றப்பட்டுள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் வலி. கிழக்குப் பிரதேச சபைக்கான தேர்தல் 23.07.2011 அன்று இடம்பெற்றது. நீர்வையூரவர்கள் பலர் இத்தேர்தலில் போட்டியிட்டனர். 21 ஆசனங்களுக்காக இடம்பெற்ற இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் திரு. கந்தையா தர்மலிங்கம் (ஜே. பி.), திரு. கந்தையா நாகரத்தினம் (ஜே. பி.), திரு. கணபதிப்பிள்ளை துரைசிங்கம், திரு. நாகமணி இராசநாயகம் ஆகிய நீர்வையூரவர்கள் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுப் பதவி ஏற்றுள்ளனர். இவர்களுள் திரு. க. தர்மலிங்கம் உப தவிசாளராக பதவி வகிக்கிறார்.

***அசர நிர்வாகம்***

அரசநிர்வாச்செயற்பாடுகளை கிராமமக்களுக்குச் செய்யும் வகையில் இருந்த கிராமத்தலைமைக்காரன் முறை ஒழிக்கப்பட்டு விதானை நிர்வாகம் கொண்டு வரப்பட்டது. அதற்கமைய திரு. க. வாரித்தம்பி, திரு. வா. கந்தையாப்பிள்ளை, திரு. க. ஞானப்பிரகாசம், திரு. க. வேலுப்பிள்ளை, திரு. ந. இராமலிங்கம் ஆகியோர் கடமையாற்றியுள்ளார்.

இவர்களைத் தொடர்ந்து 1963இல் இருந்து கிராமசேவையாளர்கள் என்ற பதவிப்பெயரோடுதிரு. செ. சீவரத்தினம், திரு. க. ஆறுமுகம், திரு. க. ச. வேலாயுதம்பிள்ளை, திரு. எம். ஒப்பிலாமணி, திரு. எஸ். யோகலிங்கம், திரு. மா. கருணைநாதன் ஆகியோர் கடமையாற்றினர்.

01.03.1990இல் இம்முறையும் நீக்கப்பட்டு ஒரு கிராம சேவையாளர் பிரிவாகவிருந்த நீரிவேலிக்கிராமம் நீர்வேலி தெற்கு (J/268), நீர்வேலி வடக்கு (J/269), நீர்வேலி மேற்கு (J/270) என மூன்றாகப் பிரிக்கப்பட்டு

கிராம அலுவலர் என்ற பதவிப்பெயரில் செயலாற்றி வருகின்றது.

நீர்வேலி தெற்கு – J/268 – திரு. சு. சண்முகவடிவேல் அவர்களும்

நீர்வேலி வடக்கு – J/269– திரு. இ. தவராசா அவர்களும் இவரைத் தொடர்ந்து திரு. சு. அல்பிரெட் அவர்களும்

நீர்வேலி மேற்கு – J/270 – திரு. த. செல்வரத்தினம் அவர்களும், அவர் இளைப்பாறிய பின் திரு. பொ. மகேந்திரன் அவர்களும், அவரும் இளைப்பாறிய பின் செல்வி. கு, குணசீலி அவர்களும் நிர்வாக கடமைகளைச் செய்து வருகின்றனர்.

***நீர்வேலி தெற்கு - (J/268) கிராம அலுவலர்பிரிவு***

வடக்கெல்லை – விளான் வீதி, கேராலிவத்தை வீதி

கிழக்கெல்லை – கடல் நீரேரி (ஊரெல்லை)

தெற்கெல்லை – மலையான்கலட்டி வீதி, கயட்டைப்புல வீதி, கருணாலயவீதி,

மேற்கெல்லை – இராசவீதி, இதனுள் அடங்கிய 3.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட பகுதியாகும். இங்கு 726 குடுபங்களைச் சேர்ந்த 2223 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 1637 பேர் வாக்குரிமை பெற்ற வாக்காளர்களாவர். இப்பிரிவினர் கிராம அலுவலராக திரு. சு. சண்முகவடிவேல் சேவை செய்து வருகின்றார்.

***நீர்வேலி வடக்கு (J/269) கிராம அலுவலர் பிரிவு***

வடக்கெல்லை – ஞானவைரவர் கோயில் ஒழுங்கை கொக்கன் வீதி (ஊரெல்லை)

கிழக்கெல்லை – கடல்நீரேரி (ஊரெல்லை)

தெற்கெல்லை – விளான் வீதி, கேராலிவத்தை வீதி

மேற்கெல்லை – இராச வீதி

இதனுள் அடங்கிய 2.6 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட பகுதியாகும். இங்கு 778 குடும்பங்களைச் சேர்ந்த 2235 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 1725 பேர் வாக்குரிமை பெற்ற வாக்காளராவார். இப்பிரிவின் கிராம அலுவலராக திரு. சு. அல்பிரெட் சேவை செய்து வருகின்றார்.

***நீர்வேலி மேற்கு (J/270) கிராம அலுவலர் பிரிவு***

வடக்கெல்லை – வேவிபுரம் கவடி எல்லை அச்செழு ஒழுங்கை (ஊரெல்லை)

மேற்கெல்லை – R. V. G தோட்டஒழுங்கை, அச்செழு அம்மன் கோயில் ஒழுங்கை (ஊரெல்லை)

கிழக்கெல்லை – இராச வீதி

தெற்கெல்லை – மின்மாற்றி ஒழுங்கை (ஊரெல்லை)

இதனுள் அடங்கிய 2.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட பகுதியாகும். இங்கு 338 குடும்பங்களைச் சேர்ந்த 1106 பேர் வாழ்கின்றனர். இவர்களில் 780 பேர் வாக்குரிமை பெற்ற வாக்காளராவார். இப்பிரிவின் கிராம அலுவலராக செல்வி. கு. குணசீலி சேவை செய்து வருகின்றார்.

***தபாற்சேவை***

இக்கிராமத்தில் 16.12.1948இல் உபதபாலகம் ஒன்று உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து தொடர்ந்து 24 வருடங்கள் திரு. சின்னத்தம்பி மாணிக்கவாசகர் அவர்களே உப தபாலதிபராகப் பணியாற்றி வந்துள்ளார். இவர் இன்று நினைவு கூரப்பட வேண்டியவராக பணியாற்றி வந்துள்ளார். இவர் இன்று நினைவு கூரப்பட வேண்டியவராகவுள்ளார் . அவரது வீட்டின் ஒரு அறையில் இயங்கிவந்த தபாலகம் அவர் இறந்த பின் 1972ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து அத்தியார் இந்துக்கல்லூரிக்குப் பக்கத்திலுள்ள கட்டிடத்தில் இயங்கிவருகின்றது.

1972தொடக்கம் 1995 வரை திரு. தம்பாபிள்ளை சிவசுப்பிரமணியம் அவர்களே பொறுப்பு வாய்ந்த உப தபாலதிபராகவும், இராமலிங்கம் ஜெயந்திமாலா, சுந்தரலிங்கம் விஜிதா ஆகியோர் பதில் உபதபாலதிபர்களாகவும் கடமையாற்றினர். 1969இல் இருந்து திருமதி சிவாகரன் ஜெயராணி அவர்கள் உபதபாலதிபராக கடமையாற்றி வருகின்றார்.

தந்தி சேவையாளர் – 01

அஞ்சலர் – 04

பதிவாளர் – 02

என 07 ஆளணியினரைக் கொண்டு இயங்கி வருகின்றது.

*கூட்டுறவு*

இக்கிராமத்தில் விவசாயிகளின் சின்னமாக வலிகாமம் கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைச்சங்கமும் கைத்தொழிலாளர்களின் சின்னமாக காமாட்சியம்மாள் கூட்டுறவுக் கைத்தொழிற்சங்கமும் இயங்கிவருவது பெருமைக்குரியதே. மேலும் வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்க தலைமைக் காரியாலயமும் ஆங்காங்கே நிலையங்களும், கூட்டுறவுக் கிராம வங்கியும், நெல்குத்தும் அரிசிஆலையும் தானியவகைகள் பொதிசெய்யும் நிலையங்களும், கூட்டுறவு நகர்கிளைகளும், மாதர் சங்கங்களும் அமைந்து சேவையாற்றி வருகின்றன.

மேலும் மக்களின் குடிநீர்த்தேவையைக் கருத்திற்கொண்டு ஆங்காங்கே பொதுக்கிணறுகள் அமைந்துள்ளன.

*விருந்தோம்பல்*

மேலும் இக்கிராமத்தவர்கள் விருந்தோம்பற்சிறப்புள்ளவர்கள் என அன்றொருநாள் ஆசுகவி வேலுப்பிள்ளை (கல்லடி வேலன்) அதை அனுபவித்து "நீர்வேலி கோப்பாய் நிறைசெல்வமாக" என வாழ்த்திச் சென்றமையும் சிறப்பிற் குரியதே. இதற்காக நீர்வேலி தெற்கில் பூதர்மடம் நீர்வேலி மத்தியில் தச்சர்மடம், நீர்வேலி வடக்கில் அம்பலவாணர் சுவாமி, சிவகாமி அம்மன்மடம் (காளி கோயில் மடம்), என்பன இருந்து சேவை செய்தன.

*வெள்ளவாய்க்காலமைப்பு*

பாய்ந்து வரும் மழைநீர் கிழக்கெல்லையாக நீரேரிக்குச் செல்வதற்காக பருத்தித்துறை வீதியை ஊடறுத்து வாய்க்கால் தரவை வீதி, கேராலிவத்தை வீதி, அரசகேசரி வீதி, வெள்ளந்தள்ளி வீதி, வில்லுமதவடி வீதி என்பன அமைந்து மழை காலங்களில் இவ்வீதிகள் வழியாக ஆறுபாய்வது போன்று வெள்ளம் பாய்ந்து வரும் காட்சி கிராமத்தின் அழகைப் பறைசாற்றும்.

*கல்விச்சேவை*

யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீரிவேலி தெற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாசாலை, நீர்வேலி சீ. சீ. த. க. பாடசாலை, நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை என்பனவும் காமாட்சிஅம்மன் அறநெறிப்பாடசாலை, ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலை, ஸ்ரீமுருகன் அறநெறிப்பாடசாலை என்பனவும், பாலர் பகல்விடுதி, ஸ்ரீ கணேசா

முன்பள்ளி, காமாட்சி அம்பாள் முன்பள்ளி, பகவான் முன்பள்ளி, சிவசக்தி முன்பள்ளி, கால்சன் முன்பள்ளி என்பன கல்விப்பணியாற்றி வருவது சிறப்பிற்குரியதே. மேலும் ஐடியல்கல்வி நிலையம், மத்திய கல்வி நிலையம் என்னும் இரண்டு தனியார் கல்வி நிலையங்கள் கல்விப்பணியாற்றி வருகின்றன.


இந்துசமய மன்றங்களாக நீர்வேலி தெற்கு இந்து இளைஞர் மன்றம், காமாட்சி அம்பாள் இந்து பரிபாலனசபை என்பன செயற்பட்டு வருகின்றன.

*சனசமூக நிலையங்கள்*

ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் சனசமூக நிலையம்
ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம்
காமாட்சி அம்பாள் சனசமூக நிலையம்
இளைஞர் சனசமூக நிலையம்
ஸ்ரீ முருகன் மாதர் சனசமூக நிலையம்
ஸ்ரீ விநாயகர் சனசமூக நிலையம்
ராதை சனசமூக நிலையம்
ஸ்ரீ சுவர்ணா சனசமூக நிலையம்
ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையம்
ஸ்ரீ பரமேஸ்வரி சனசமூக நிலையம்
கலைவாணி சனசமூக நிலையம்
சிவசக்தி சனசமூக நிலையம்
வீரபத்திரர் சனசமூக நிலையம்

எனப்பதின்மூன்று சனசமூக நிலையங்கள் ஆங்காங்கே அமைந்து மக்கட்பணியாற்றி வரும் சிறப்பிற்குரியது. இக்கிராமத்தில் ஆங்காங்கே 32 இந்து ஆலயங்களும், 2 கத்தோலிக்க ஆலயங்களும், 49 ஒழுங்கைகளும் அமைந்து கிராமத்துக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் நீர்வேலி தெற்கில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், நீர்வேலி வடக்கில் மீன்சந்தையும் இயங்கிவருகின்றன. கிராமத்தில் ஒரு பொதுச்சந்தையும் உள்ளது. அதன் செயற்பாடுகள் உயிர்ப்பிக்கப்பட வேண்டும்.□



# நீர்வேலியின் கல்விச் சாலைகள்

திரு. இ. குணநாதன்
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
யாழ். கல்விவலயம்.

"மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு" என்பது வள்ளுவர்வாக்கு. கல்வியை வழங்கும் பணியை நீர்வைப்பதியில் பல நிறுவனங்கள் ஆற்றிவருகின்றன.

கல்வியானது முறைசாந்த, முறைசாரா முறையில் வகையில் வழங்கப்படலாம் என்பது கல்வியாளர்கள் கருத்து. பாடநியமங்களுடன் வழங்கப்பட்ட முறைசார்ந்த நிறுவனக்கல்வியே இக்கட்டுரையில் ஊடாக குறிக்கப்படுகின்றது.

**ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதரின் திண்ணைப்பள்ளி**

நீர்வைமண்ணில் இருந்தவாறு வடமொழியையும், தமிழ் மொழியையும் வளர்த்த சைவத்தமிழ்ப்பெரியார் சிவசங்கர பண்டிதர் ஆவார். நீர்வைமண்ணின் கல்வி முன்னோடி எனப் பண்டிதரைக் குறிப்பிடலாம். இவர் நிறுவிய திண்ணைப்பள்ளிக்கூடமே நாளடைவில் வித்தியாசாலையாக வளர்ந்து இன்று நாம் காணும் அத்தியார் இந்துக்கல்லூரியாக உயர்ந்து நிற்கின்றது.

சங்கர பண்டிதரின் மூத்த புதல்வராகிய சிவப்பிரகாச பண்டிதர் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவி, (1880) தந்தையாரின் பணியைத் தொடர்ந்தார். அவரைத்தொடர்ந்து அவரது சகோதரன் சிவகுரு நாதப்பிள்ளையும் அதனை அடுத்து சிவப்பிரகாபண்டிதரின் மகன் நடராசப்பிள்ளையும் மரபு வழியில் கல்வியை வழங்கிவந்தனர். இவர்களின் குடும்பதினரால் நடாத்தப்பட்ட கல்விச்சாலை பண்டிதர் கோட்டம் என அழைக்கப்பட்டது.

பண்டிதர் நடராசப்பிள்ளை தான் நடத்திய வித்தியாசாலையை விற்கமுற்பட்டபோது கிறிஸ்தவ மிசனறிமார் அதனை வாங்கத் தயாராகினர் இதனை அறிந்த பெரியார் அத்தியார் அருணாசலம் அந்தக்கட்டடத்தையும்

அதனோடு இணைந்து இரண்டு பரப்புக்காணியையும் விலை கொடுத்து வாங்கினார்.

ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரப்பண்டிதர் போன்று பீதாம்பரப்புலவர், சிதம்பரநாதப்புலவர், விஸ்வப் பிரம்மஸ்ரீகனகசபாபதி ஆச்சாரியார், வைத்திலிங்க ஆச்சாரியார், போன்றவர்களும் தத்தமது வீடுகளில் தமிழ் மற்றும் வடமொழி இலக்கண இலக்கிய வகுப்புக்களை நடாத்தினர்.

**அத்தியார் இந்துக்கல்லூரி**

அத்தியார் அருணாசலம் அவர்கள் தான் கொள்வனவு செய்த இரண்டு பரப்புக்காணியில் அமைந்த வித்தியாசாலையை விஸ்தரிப்பதற்குப் பொருளாதார ரீதியில் சவால்களை எதிர்கொண்டார். தனது சொத்துக்கள் யாவற்றையும் விற்றுப் பெற்ற பணத்தைக் கொண்டு அயலில் உள்ள காணிகளையும் கொள்வனவு செய்து பாரிய மண்டபங்களையும்,அலுவலகம், மற்றும் வளங்களையும் இயலக்கூடிய வகையில் அமைத்துக் கொண்டார்.

11.02.1929இல் ஸ்தாபிதம் செய்யப்பட்டதாக கொள்ளப்படும் இக்கல்லூரி ஆரம்பத்தில் அத்தியார் இந்து தமிழ்ப் பாடசாலை, அத்தியார் இந்து ஆங்கிலப்பாடசாலை என இரு வேறு நிர்வாகங்களைக் கொண்டிருந்தது.

அத்தியார் அருணாசலம் கொழும்பு கொமேர்சல் கம்பனியில் களஞ்சியப்பொறுப்பாளராகப் பதவி வகித்தவர் அவர் மீதிருந்த நன்மதிப்பின் காரணமாக அக்கம்பனியின் பொறியியலாளரான சாள்ஸ் கௌரிஸ்ரீபன் பாடசாலையின் கட்டடத்தைத் திறந்து வைத்தார். (பிரதான வாயிலுக்கு அருகில் இன்று இருக்கும் தொன்மையான கட்டடம்)

ஆங்கிலப்பிரிவு சாமுவேல் குணரட்ணம் அருளானந்தம் அவர்களின் நிர்வாகத்தின் கீழும் தமிழ்ப்பிரிவு திரு. க. சண்முகம் அவர்களின் நிர்ாகத்தின் கீழும் செயற்பட்டன.

இவர்களைத் தொடர்ந்து கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா அவர்கள் ஆங்கிலப்பாடசாலைத் தலைமையையும் நீர்வேலி செல்லையா நடராசா அவர்கள் தமிழ்ப்பாடசாலைத் தலைமையையும் ஏற்று நடத்தினர். 1954இல் ஏற்பட்ட அரச கொள்கைகளுக்கு அமைவாக இரு பாடசாலைகளும் இணைக்கப்பட்டன. அத்தியார் இந்துக்கல்லூரி எனப் பெயர் சூட்டப்பட்டது. இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் பின்வருவோர் அதிபர் பணியை ஆற்றியுள்ளனர்.

| | |
|---|---|
| திரு. S. G. அருளானந்தம் | 1929 – 1933 |
| திரு. N. வெங்கடேஸ்வரன் | 1933 – 1935 |
| திரு. எஸ். பொன்னையா | 1935 – 1936 |
| திரு. எஸ். ஆறுமுகம் | 1936 – 1936 |
| திரு. எஸ். நவரட்ணம் நெல்சன் | 1936 – 1947 |
| திரு. V. சண்முகநாதன் | 1948 – 1951 |
| திரு. S.T. ஜீவரட்ணம் | 1952 – 1954 |
| திரு. V.G. சம்பந்தன் | 1954 – 1966 |
| திரு. S. ஶ்ரீநிவாசன் | 1966 – 1971 |
| திரு. P. K. இராசரட்ணம் | 1971 – 1974 |
| திரு. K. சொக்கலிங்கம் | 1974 – (2 மாதங்கள்) |
| திரு. K. நவரட்ணம் | 1974 – 1971 |
| திரு. S. சுவாமிநாதசர்மா | 1976 – 1978 |
| திரு. K. இராசரத்தினம் | 1979 – 1984 |
| திரு. S. சபாரத்தினம் | 1984 – 1986 |
| திரு. K. சிவசுப்பிரமணியம் | 1987 – 1998 |
| திரு. K. தங்கராசா | 1988 – 1988 |
| திரு. A. கனகசுந்தரம் | 1988 – 1993 |
| திரு. V. கணேசராசா | 1993 – 1996 |
| திரு. S. விஸ்வலிங்கம் | 1996 – 2002 |
| திரு. இ. குணநாதன் | 22.03.2002 – 01.11.2011 |
| திரு. செ. பத்மநாதன் | 02.11.2011 – இன்றுவரை |

"பொய்யா விளக்கே விளக்கு" என்ற மகுட வாசகத்துடன் செயற்படும் இக்கல்லூரியில் 913 மாணவர்களும் 34 ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரப் பணியார்களளும் சேவையாற்றுகின்றனர்.

**நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை**

1905ஆம் ஆண்டில் சுவாமி ஞானப்பிரகாசரால் சிறிய ஓலைக்கொட்டிலில் நிறுவப்பட்ட பாடசாலை. நீர்வேலியில் பரலோகமாதா தேவாலயமும் இப்பாடசாலையையும் பலத்த சவால்களுக்கு முகங்கொடுத்து நிறுவப்பட்டன.

சிறிய ஓலைக்கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று மாடிக்கட்டிடங்கள், கணினிக்கூடம், அதிபர் அலுவலகம், நூல்நிலையம், சிறிய விளையாட்டு மைதானம், சமையற்கூடம் ஆகிய வளங்களுடன் காணப்படுகின்றது.

சுவாமி ஞானப்பிரகாசரின் வழிப்படுத்தலில் எஸ். கபிரியேற்பிள்ளை உபதேசியார் இப்பாடசாலை ஆரம்பித்தார். இதன் அதிபர்களாக பின்வருவோர் பணியாற்றினர்.

ஆபிரகாம் யோசப்பு (கதிரவேலு உபாத்தியார், நீர்வேலி)
என். பிலிப்பு (வசாவிளான்)
என். அப்புத்துரை (வசாவிளான்)
என். மதியாம்பிள்ளை (கரந்தன்)
க. பிலிப்பு (வசாவிளான்)
என். சிறிகௌதம் (அச்சுவேலி)
சொர்ணம் அந்தோணிப்பிள்ளை (அழகம்மா – நீர்வேலி)
பண்டிதர் செ. துரைசிங்கம் (நீர்வேலி)
மு. வைத்திலிங்கம் (கோப்பாய்)
த. மயில்வாகனம் (நீர்வேலி)
பொ. த. இராசா (கோப்பாய்)
க. அருமைத்துரை (நீர்வேலி மேற்கு)
ச. வேலழகன் (இடைக்காடு)

தற்போது அதிபராக சி. தர்மரத்தினம் (நீர்வேலி) பணியாற்றுகிறார். தரம் 1 முதல் 9 வரையான வகுப்புகளைக் கொண்ட இப்பாடசாலையில் 260 மாணவர்களும் 17 ஆசிரியர்களும் உள்ளனர்.

"கற்க கடசற" என்னும் மகுடவாக்குடன் பாடசாலை செயற்பட்டு வருகின்றது.

**நீர்வேலி சீ. சீ. த. க. பாடசாலை**

இலங்கைத் திருச்சபை (அங்கிலிக்கன் ) மிசனறிமாரால் 1879இல் அரசகேசரிப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நிறுவப்பட்ட பாடசாலை.

இப்பாடசாலை வரலாற்றில் கரவெட்டியைச் சேர்ந்த A. S. சண்முகம் இப்பாடசாலையில் தலைமை ஆசிரியராகத் தொடர்ந்து 36 வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

01.01.1994இல் தரம் 8 வரை கல்வி வழங்கும் பாடசாலையாக உயர்வு பெற்றது.

இதன் அதிபர்களாகப் பின்வருவோர் பணியாற்றினர்

01. திரு. A.D. சுப்பிரமணியம்
02. திரு. J.T. சுப்பிரமணியம்
03. திரு. A. S. சண்முகம்
04. திரு. S. வேதனம்
05. திரு. T. வேலுப்பிள்ளை
06. திரு. P. கதிரவேலு
07. திரு. S. செல்வநாயகம்
08. திரு. S. குணலிங்கம்
09. திரு. K. R. இராசசேகரம்
10. திரு. S. செல்வநாயகம்
11. திரு. K. குகானந்தம்
12. திரு. பா. பாலபவான்

தற்போது திரு. இ. பசுபதீஸ்வரன் அதிபராகப் பணியாற்றுகிறார்.

இப்பாடசாலையின் மகுடவாசகம் "கற்றாங்கு ஒழுகு" என்பதாகும். மாணவர்களும் 10 ஆசிரியர்களும் இப்பாடசாலையில் உள்ளனர்.

**கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்**

நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கரந்தன் வீதி, இராசவீதிச்சந்தியின் கிழக்குப்பக்கமாக அமைந்துள்ள பாடசாலை.

காலஞ்சென்ற பண்டிதர் பொன். இராமுப்பிள்ளை அவரகளின் மனைவி திருமதி. அன்னபூரணம் இராமுப்பிள்ளை அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் 08.01.1979இல் 20 மாணவர்களுடனும் ஒரு ஆசிரியருடனும் ஆரம்பிக்கப்பட்டது.

பண்டிதர் பொன். இராமுப்பிள்ளை வழங்கிய காணியில் ஆரம்பிக்கப்பட்டால் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் என்ற பெயரைப் பெற்றது. இவ்வித்தியாலயத்தின் முதல் அதிபராக திரு. ம. க. நடராசா செயற்பட்டார்.

இப்பாடசாலையின் அதிபர்களகளின் விபரம் வருமாறு:

| இல | பெயர் | பதவி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1 | திரு. ம.க. நடராஜா | அதிபர் | 08.01.1979 | 28.06.1979 |
| 2 | திரு.கு.சண்முகநாதன் | பதில் அதிபர் | 29.06.1979 | 26.09.1979 |
| 3 | திரு. செ. நமசிவாயம் | அதிபர் | 27.09.1979 | 12.07.1985 |
| 4 | திரு.கு.சண்முகநாதன் | அதிபர் | 13.07.1985 | 31.01.1990 |
| 5 | திருமதி. பூ. கந்தசாமி | பதில் அதிபர் | 01.02.1990 | 14.02.1990 |
| 6 | திரு.கு.பூபாலசிங்கம் | அதிபர் | 15.02.1990 | 28.02.1990 |
| 7 | திருமதி. பூ. கந்தசாமி | பதில் அதிபர் | 01.03.1990 | 13.03.1990 |
| 8 | திரு.செ. விநாயகமூர்த்தி | அதிபர் | 14.03.1990 | 31.05.2001 |
| 9 | திரு.சீ.சிவநேசன் | அதிபர் | 01.06.2001 | 14.11.2007 |
| 10 | திரு. கு. வாகீசன் | அதிபர் | 15.11.2007 | இன்றுவரை |

348 மாணவர்களுடனும் 15 ஆசிரியர்களுடனும் உள்ள இப்பாடசாலையின் மகுடவாசம் "வாழும் முறைமை ஆளும் கல்வி" என்பதாகும்.

**நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை**

நீர்வேலி தெற்கில் ஒரு கல்விச்சாலை அமைய வேண்டுமென்று விரும்பி 1947 இல் அப்பகுதி மக்கள் முயற்சிகளை மேற்கொண்டனர். இருப்பினும் அன்றைய அரசியல் நிலைமைகள் காரணமாக அம்முயற்சி கைகூடவில்லை.

காலங்கள் கடந்த நிலையில் அகில இலங்கை காந்தீய சேவா சங்கச் செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களின் முயற்சியால் அரச அனுமதி பெற்று இப்பாடசாலை அமைக்கப்பட்டது.

ஊர்ப்பெரியவர்களாக விளங்கிய திரு. பூ. சின்னத்துரை, பண்டிதர் செ. துரைசிங்கம், கா. சிதம்பரநாதன், க. வே. கனகரத்தினம், திரு. கு. சண்முகநாதன், திரு. சி. பொன்னம்பலம் ஆகியோரது அயரா முயற்சியால் சைவ வித்தியாவிருத்திச்சங்கத்தரால் இப்பாடசாலை வேலுப்பிள்ளை பொன்னையா அவர்களது குத்தகைக்காணியில் 1959இல் ஆரம்பிக்கப்பட்டது.

72 மாணவர்கள் கல்விபயிலும் இப்பாடசாலையில் அதிபர் திரு. மா. சிவானந்தன் மற்றும் நிரந்தர ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர்.

"ஓது, உணர் ஒழுகு" என்ற மகுடம் வாக்குடன் பாடசாலை செயற்படுகின்றது.

**தனியார் கல்வி நிலையங்கள்**

கிராமத்தில் பல தனியார் கல்வி நிறுவனங்கள் காலத்திற்குக் காலம் எழுந்து மறைந்துள்ளன. ஆயினும் இரு நிறுவனங்கள் நீர்வேலிப்பிரதேச கல்வி வளர்ச்சியில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளன.

**ஐடியல் கல்வி நிலையம்**

1985ஆம் ஆண்டு இளைப்பாறிய நில அளவையாளர் இ. செல்லத்துரை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் குடும்பஉறுப்பினர்களால் போதிக்கப்படும் நிறுவனமாக தரம் 10 வரையான கல்வி நடவடிக்கைகள் இடம்பெற்றன. காலப்போக்கில் ஏனைய ஆசிரியர்களை உள்வாங்கிக் கல்வி நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டன. 1997இல் (சேவையர்) திரு. இ. செல்லத்துரை புலம்பெயர்ந்து செல்ல நிலையத்தின் நிர்வாக உரிமையை திரு. தி. வேல்நம்பி (இன்றைய பேராசிரியர்) ஏற்றுச்செயற்பட்டார்.

தனியார் கல்வி நிறுவனம் என்ற நிலையில் பரிசளிப்பு விழா, நவராத்திவிழா, விளையாட்டுப்போட்டி போன்ற நிகழ்வுகளை நடத்த ஆரம்பித்த முன்னோடி நிறுவனமாகவும் இது விளங்குகின்றது.

2011ஆம் ஆண்டு தொடக்கம் இதன் நிர்வாகப்பொறுப்புக்களை திரு. சி.திரிகரன் ஏற்றுக்கொண்டுள்ளார். தரம் 03 தொடக்கம் க. பொ. த. உயர்தரம் கலை, வர்த்தகப் பிரிவு வரையான வகுப்புக்கள் இங்கு இடம்பெறுகின்றன.

**மத்திய கல்வி நிலையம் *(C. T. C)***

நீர்வேலி கந்தசுவாமி கோவில் சூழலில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் திருமதி. கௌசலா நடராஜா அவர்களால் நிர்வகிக்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு தொடக்கம் C. T. C எனப் பெயர் சூட்டப்பெற்று திரு. கந்தசாமி சதீஸ்குமாரனால் பொறுப்பேற்கப்பட்டது. தற்போது தரம் 4 தொடக்கம் க. பொ. த. சா / த வரையான வகுப்புக்கள் இடம் பெறுகின்றன.

இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

**ஆங்கிலக்கல்வி**

நீர்வேலியை மையப்படுத்தி 1980களில் ஆங்கிலக்கல்வி வழங்கும் சாலை ஒன்று சிறப்பாகச் செயற்பட்டது. எமது ஊரின் ஆங்கிலப்பேராசான் திரு. த. ந. பஞ்சாட்சரம் அவர்களது வீட்டில் இப்போதனை நிலையம் செயற்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் இந்நிலையம் தற்போது செயற்படவில்லை.

**அறநெறிக்கல்வி**

அறநெறிக்கல்வி வளர்ச்சிக்கு கிராமத்தில்
காமாட்சி அம்பாள் அறநெறிப்பாடசாலை பதிவு இல HA/7/56/14/029
ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை பதிவு இல HA/7/56/14/87
ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலை பதிவு இல HA/7/58/14/118
என்பன இக்கிராமத்தில் அறநெறிக்கல்விக்கு ஊக்கமளித்து வருகின்றன.

**முன்பள்ளிக்கல்வி**

எமது கிராமத்தில் ஐந்து முன்பள்ளிகள் செயலாற்றிவருகின்றமை குறிப்படத்தக்கது.

| இல | முன்பள்ளியின் பெயர் | பதிவுஇலக்கங்கள் | மாணவர் | ஆசிரியர் |
|---|---|---|---|---|
| 01 | பாலர் பகல் விடுதி முன்பள்ளி | NEP/PS/J/J/98 | 40 | 03 |
| 02 | கணேசா முன்பள்ளி | NP/14/41(13)3/363 | 65 | 04 |
| 03 | பகவான் முன்பள்ளி | HA/PS/J/J/125 | 31 | 02 |
| 04 | காமாட்சி அம்பாள் முன்பள்ளி | NEP/PS/J/J/160 | 40 | 02 |
| 05 | சிவசக்தி முன்பள்ளி | NEP/PS/J/J/163 | 25 | 02 |

இந்த முன்பள்ளிகளின் செயற்பாடுகள் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றன. முன்பள்ளிகளினூடாக 3 வயதிலிருந்தே குழந்தையின் வாழ்க்கைக்கான படிமுறைகள் அத்திவார மிடப்படுகின்றன.

மேற்குறித்த ஐந்து முன்பள்ளிகளை விட மேலும் ஆங்கிலமொழி மூலமுன்பள்ளியொன்றும் இராச வீதியிலமைந்து தற்போது செயற்பட்டு வருகின்றது.

இந்த வகையில் திருநீர்வைக்கிராமம் கல்வியில் செழிப்புற்று வருகின்றது. □

## நீர்வேலிக்கு நிகரில் புகழ் சேர்த்த இராஜேந்திரக்குருக்கள்.


*செந்தமிழ் எனும் தாய் பெற்ற செல்வமே! செந்தில் செவ்வேள்*
*கந்தவேள் அருள் ஒளி மணியே! கந்தபுராண விளக்கக் கடலே!*
*சிந்தனை செயும் போதெல்லாம் உளத்தே தித்திக்கும் அமுத ஊற்றே!*
*வந்தித்தோம் வான்புகழ் நீரூர்க் இராஜேந்திர குருவாய வள்ளலே!*

*வடமொழி வல்லார் தாமும் வரையறுத்துரைக்கலாற்றா(து)*
*இடருறும் இடங்கள் தன்னில் இடரறுத்தியம்ப வல்ல*
*திடமது உடையாய் வேதாகம செழுங்கடல் குடித்தாய்*
*கடம்பணி கந்தன் கழலே கருத்திடை வைத்த குருவே*



(குறிப்பு- கந்தவேள் அருள் ஒளிமணி என்பது 'கலைமகள்' கி.வா.ஜகந்நாதன் அவர்களால் குருக்கள் அவர்களுக்கு சென்னையில் வைத்து வழங்கப்பட்ட சிறப்பு விருதாகும். குருக்களுக்கும் கி.வா.ஜ அவர்களுக்கும் நெருக்கமான நட்புறவு வாழ்நாளெல்லாம் காணப்பட்டமையும் இங்கு நினைவு கூரத்தக்கது)

தி. மயூரகிரி சர்மா



கட்டுரை

# நீர்வேலியின் கைத்தொழில் வளர்ச்சி

த. பரராசசிங்கம் (ச. நீ.)
நீர்வேலி.

*பாராலும், உழவாலும் பயிராக்கி உயிர்வளர்க்கும்*
*பேராளர் தம்மாலே பிறருடைய பெருமையெல்லாம்*
*ஊராலேண்டிசை வளர்க்கும் எழுபத்தொன்பது நாட்டில்*
*காராளர் பெருமையெல்லாம் கண்ணாளர் கைத்தொழிலே*

எனக்கைத்தொழிலின் சிறப்பை கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஏரெழுபது என்னும் நூலின் மூலம் எடுத்தியம்பியுள்ளார்.

இப்படியான பெருமைமிக்க கைத்தொழிலால் நீர்வேலிக் கிராமம் பெருமை பெற்றது என்றால் மிகையாகாது ஊராளருக்கு வேண்டிய உபகரணங்களாகிய ஏர் (கலப்பை) மண்வெட்டி, அலவாங்கு, கோடரி, பிக்கான், கத்தி, சத்தகம், மருந்துத்தெளிகருவி என்பனவற்றை உருவாக்கி விவசாய செய்கையை வளமாக்குபவர்கள் கைத்தொழிலாளர்களே என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். இன்னும் இல்லிடங்களுக்கான கூரை அமைத்தல் நிலை, கதவு, பூட்டுப்பிணையல் என்பவற்றை ஆக்குபவர்களும் இந்தக் கைத்தொழிலாளர்களே, எல்லாவற்றுக்கும் மேலாக ஆலயங்களில் வணக்கத்துக்குரிய விக்கிரகங்களை ஆகம, சிற்பசாஸ்திரங்களுக்கமைய சிருஷ்டிப்பவர்களும், ஆலயங்களுக்கு வேண்டிய கொடித்தம்பம், வாகனங்கள், மஞ்சம், சப்பறம், தேர் என்பவற்றையும் சிற்பசாஸ்திரங்களுக்கமைய உருவாக்குபவர்களும் இந்தக் கைத்தொழிலாளர்களே இதனால் தான் உலகம் இயங்குவதற்கு மூலகாரணமானவர்கள், எனவும் உலகத்தை இயக்குபவர்கள் எனவும் இவர்களே ஜெகத்குரு எனவும் மதிக்கப்படுகின்றார்கள் இதனாலே தான் இவர்கள் உயர்ந்த வர்க்கத்தினர் என வகுக்கப்பட்டுள்ளனர்.

இப்படியான உயர்ந்த தொழிலைச் செய்து கிராமத்தைப்புகழோங்கச் செய்தவர்கள் "கைத்தொழிலாளர்களே" என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர்.

கண்ணால் கண்டதை அப்படியே கையால் செய்து முடிக்கும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. இவர்கள் கண்கூர்மையுள்ள வர்கள் அதனால் இவர்கள் "கண்ணாளர்" எனப்பட்டார்கள்.

மற்றவர்கள் ஆச்சரியப்படும் வகையில் தொழில் செய்பவர்கள் என்பதால் "ஆச்சாரி" என்னும் கௌரவம் இவர்களுக்கு உண்டு.

இன்றும் சந்தையில் நீர்வேலிப் பூட்டு, நீர்வேலிக்கத்தி, நீர்வேலித் தெளிகருவி, நீர்வேலிவண்டில் என்பன நன்மதிப்பிற்குரிய பொருட்களாக விளங்குகின்றன. இதனால் நீர்வேலி ஒரு கைத்தொழில் கிராமம் என்னும் பெருமையைப் பெறுகின்றது.

இப்படியான பெருமைக்குரிய கைத்தொழிலாளர்கள் வீட்டுக்கு வீடு சிறிய அளவிலேயே தொழிற்சாலைகள் அமைத்து தமது தொழிலைச் செய்து வந்துள்ளார்கள் போதிய தொழில் வாய்ப்பு இங்கு இல்லாத காரணத்தால் தொழிலைத் தேடி மன்னார், நானாட்டான், அடம்பன், விடத்தல்தீவு, பூநகரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய்போன்ற பகுதிகளிலும் குடியேறி ஆங்காங்கே சிறு சிறு கைத்தொழிற்சாலைகள் அமைத்துசுயமாகத் தொழில் செய்துவந்துள்ளனர். இதனால் குறிப்பிட்ட இடங்களில் இவர்களுக்கு இன்றும் காணிபூமி இருப்பது சான்றாகும் இவர்கள் கிராமத்து புகழை நாடறியச் செய்தவர்கள் என்றால் மிகையாகாது ஏனெனில் இவர்கள் பரந்துபட்டு நாடுபூராவும் தொழில் செய்யும் போது "நீர்வேலித் தொழிலாளி " என்று பெருமையுடன் மதிக்கப்படுகிறார்கள்.

குலோத்துங்க சோழ அரசர் ஆட்சிக்காலத்தில் அவரது சமஸ்தான வித்துவான்களாகிய ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர் முதலிய வித்துவான் களும் அரசர்களும் இருந்த சபையில் கம்மாளருக்கு "ஜெகத்குரு" என்னும் சிறப்புப்பட்டம் தொன்று தொட்டு உண்டு என நிலை நாட்டப்பட்டு மதிக்கப் பட்டார்கள். இவர்கள் இயந்திரவசதியோ மின்சாரவசதியோ இல்லாத அக்காலத் தில் தமது கரசாதன உதவி கொண்டே கஷ்டப்பட்டு தொழிலைச் செய்து பெருமை பெற்றுள்ளார்கள்.

## கைத்தொழிலாளரின் கூட்டுறவு

காலம் உருண்டோடியது தொழிலுக்கும் கற்பு (மானம்) உண்டு என்பதை உணர்த்தும் வகையில் நாடோடிகளாகத் திரிந்த தொழிலாளர்களை ஒன்று சேர்த்து கூட்டுறவு முறையிலான தொழிற்சாலை ஒன்று உருவாக்கிய பெருமை சமூகமுன்னோடியும், சமூகசேவையாளரும் பிரபலகூட்டுறவாளரு மான காலம் சென்ற சின்னப்பு தர்மலிங்கம் அவர்களை சார்ந்ததாகும் அவராலும் அவரைச்சார்ந்தவர்களாலும் 1947 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதே காமாட்சிஅம்பாள் ஐக்கிய கைத்தொழில் சங்கமாகும்.

வீட்டுக்கு வீடு தனித் தொழிற்சாலை அமைத்து தொழில் செய்தவர்களின் மதிப்பு நாட்டில் உயர்ந்தது தொழிலைத் தேடி தொழிலாளர்கள் அலைந்தகாலம் மாறி தொழில் நிலையத்தைத் தேடி மக்கள் வரும் நிலை உருவானது. "கூட்டுறவு நாட்டுயர்வு", "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்னும் உணர்வு தொழிலாளர் மத்தியில் உருவாக்கப்பட்டது. மனித சக்தியால் தொழில் செய்த தொழிலாளர்கள் இயந்திர சாதன உதவியாலும், மின்சார உதவியாலும் தமது தொழிலை விருத்தியடையச் செய்து மேன் நிலையடைந்தார்கள். இவ்வகையில் அமைந்த தொழிலகம் அம்பிகை நடனமாடும் ஆலயமாக மிளிர்ந்தது. கடைச்சல் இயந்திரங்களின் ஒலி ஒருபுறம், இரும்பைப் பழுக்கக்காச்சி அடிக்கும் தொழிலாளரின் ஒலி, ஒரு புறம், துளையோடும் இயந்திரத்தின் ஒலி புறம், மரங்களைச் சீவும் இயந்திரத்தின் ஒலி இன்னொரு புறம் மரங்களை அரியும் இயந்திரங்களின் ஒலி இன்னெரு புறம் என அமைந்ததே இந்த தொழில் நிலையம். இதனால் யாழ்மாவட்டத்தில் ஒரே ஒரு கைத்தொழில் சங்கம் என்ற பெருமையையும் இச் சங்கம் பெற்றுக்கொண்டது. இச் சங்கத்தை தேடி அமைச்சர்களும் பிரமுகர்களும் வந்து போன செயற்பாடு கிராமத்துக்கு பெருமை தருவதாக அமைந்தது.

இன்னும் கிராமத்தின் பல பாகங்களிலும் தனித் தனி தொழிற் சாலைகள் அமைக்கப்பட்டு தொழில் வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத் தக்க தாகும். நீர்வேலிச் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் செல்லும் வீதியின் ஒரு மைல் தூரம் இருமருங்கும் இரும்பு, மரவேலைகள் செய்யும் தொழில் சாலைகள் அமைந்து இங்கு கைத் தொழில் வளர்ந்துள்ளது. இதனால் இவ் வீதி "கம்மாள தெரு", "கைத்தொழிலாளர் வீதி" என அழைக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இரும்பு வேலைப்பகுதியினர் வீடுகளுக்கும் மற்றும் கட்டடங்களுக்கு மான பூட்டு, பிணைச்சல்கள் கேற், கிறில் என்பனவற்றையும் விவசாயத்துக்கு வேண்டிய கத்தி, சத்தகம், கோடரி, மண்வெட்டி, கலப்பை, தெளிகருவி, பூவாளி போன்றவற்றையும் வீட்டுப்பாவனைக்குரிய குசினிக்கத்தி, திருவுபலகை, அரிவாள் போன்றவற்றையும் உற்பத்தி செய்கின்றனர்.

மரவேலைப் பகுதியினர் கட்டடங்களுக்கான நிலை, கதவு, யன்னல் , கூரை அமைப்பு போன்ற வற்றையும் கட்டில், மேசை, கதிரை, வாங்கு, அலுமாரி என்பனவற்றையும் உருவாக்குவதோடு விவசாயத்துக்கு வேண்டிய கலப்பை, மாட்டுத்தொட்டில், மாட்டு வண்டில் என்பவற்றையும் உருவாக்குகின்றனர்.

இன்னும்கோவில்களுக்கு உடற்கோப்பு அமைத்தல், அலங்காரப்பந்தல் அமைத்தல், போன்ற வேலைகளையும் தரமானதாக செய்து கைத்தொழில் துறையை வளர்த்து கிராமத்தின் புகழில் தனி இடம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

## இரும்பு வேலை




மேலும் கைத்தொழில் சிறப்பிற்கு காரண மாக இருந்தவர்களை நாம் மறந்துவிடலாகாது.

## மாட்டுச்சூத்திரம்



இலங்கையின் முதன் முதலாக மாட்டுச் சூத்திரத்தை அறிமுகம் செய்து விவசாயி களுக்கு ஊக்கமளித்தவர் காலஞ் சென்ற முருகேசு தம்பையா அவர்கள். இயந்திரசாதன வசதிகளற்ற காலத்தில் தனது மதி நுட்பத்தாலும், கரசாதன உதவியாலும் தொழில் துறைக்கே எஜமானாக விளங்கி "எஜமான் தம்பையா" என்ற பெயரை நிலை பெறச் செய்தவர். மேலும் பல தரமான தொழிலாளர்களை உருவாக்கிய தொழில் மேதையுமாகும். இவரது தொழில் நுட்பத்தையும் ஆற்றலையும் பலரும் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

## பூட்டு



அவரைத் தொடர்ந்து அவரது சகோதரர் முறை யான மாரிமுத்து சிவக்கொழுந்து என்பவர் தரமான கதவுப் பூட்டு, விவசாயக் கருவிகளை நுட்பமான முறையில் உருவாக்கியதோடு தரமான தொழிலாளர் களுக்கு குருவாகவிருந்து வழிகாட்டிய ஒருவராவர். இன்றும் அவரது மகன் சிவக்கொழுந்து தியாகராசா அவர்களும் சுயமாகத் தொழில் செய்து தனது தொழில் நுட்பதிறமையால் பலரதும் நன்மதிப்பையும் பாராட்டு தலையும் பெற்றுக் கொண்டார்.

அதே வழியைத் தொடர்ந்து முன் கூறிய இருவரையும் குருவாகக் கொண்டு இரும்பு வேலையில் உள்ள நுட்பங்களையெல்லாம் கசடறக் கற்று பல புதிய படைப்புக்களைப் படைத்தவர் சிவசம்பு முத்துக்குமாரு அவர்களாகும். காமாட்சியம்பாள் கைத்தொழிற் சங்க ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவராகிய இவரதுமதி நுட்பமான வேலைகளே 1950 இல் கொழும்புத் திட்டபபொருட்காட்சியில் தங்கப்பதக்கத்தைப் பரிசு பெறவைத்தன என்றால் மிகையாகாது. தனது மதிநுட்பத்தினால் இயந்திர வசதியோ, மின்சாரவசதியோ

இல்லாத வேளையில் தட்டுப்பாடான வாகன உதிரிப்பாகங்களைச் தனது கையால் செய்து ஓடவைத்த பெருமை இவரையே சார்ந்தாகும். இரும்பைச் சீவுளி கொண்டு சீவியபெருமையும் இவருக்கே தனியானதாகும். தான் கண்களால் பார்த்ததை அப்படியே கையால் உருவாக்கி பல தொழில் நுட்ப வல்லுனர்களின் பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டவர். கண்ணாளர் என்ற சொல்லின் பெருமையை நிருபித்தவர் இவரே என்றால்மிகையாகாது இவரது தொழில் சிறப்பால் எல்லோரும் "யக்கடபாஸ்" என்றே கௌரவமாக அழைப்பார்கள். தமது குல தெய்வமான காமாட்சியம்பாள் மீது நிறைந்த பக்தி கொண்ட இவர் மேற்படி ஆலயபரிபாலகர்களில் ஒருவருமாவார். இவரை தொடர்ந்து இவரது மகன் சிவகுமார் என்பவரும் தந்தைவழி நின்று தரமான கைத்தொழில் செய்து வருவது பெருமைக்குரியதே.

திரு. சி. முத்துக்குமாரு அவர்களுடைய தொழில் நுட்பத்தைப் பாராட்டி காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபை 1994 இல் இவருக்கு "தொழில் நுட்பமாமணி" என்னும் சிறப்புப்பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவித்தது.

## மணிக்கூடு செய்தமை

இயந்திர வசதியோ, மின்சாரவசதியோ இல்லாத காரணத்தில் தனது கைபடமணிக்கூடு ஒன்றை உருவாக்கிய வேலுப்பிள்ளை பாலசிங்கம் அவர்களும் கைத்தொழில் துறைக்கு வித்திட்டவர்களில் ஒருவராவர்.

## துவிச்சக்கர வண்டி உருவாக்கியமை

நீர்வேலியில் வாழ்ந்த சிவபூசா துரந்தரர்களாக விளங்கிய விஸ்வபிரமனர்களான வைத்திலிங்கம் ஆச்சாரியாரும் அவர்களது சகோதரர்களான கனகசபாபதி ஆச்சாரியரும் தமது தொழில் நுட்பத்தினாலும், கரசாதன உதவியாலும் துவிச்சக்கரவண்டியை உருவாக்கி ஓட வைத்து பெருமை கண்டனர் அவர்களது தொழில் நுட்பத்தை பலரும் பாரட்டியது குறிப்பிடத் தக்கது.

## நீர்வேலி தௌிகருவி

மேலும் "நீர்வேலித் தௌிகருவி" என்ற விலாசத்தை ஏற்படுத்தும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட தௌிகருவிகளிலும் பார்க்க தரமானது எனப் பலராலும் பாராட்டப்படும் தௌிகருவியை உருவாக்கி கொண்டிருக்கும் திரு. கந்தையா பத்மநாதன் அவர்களும் சபாரத்தினம் கனேசலிங்கம் அவர்களும் காமாட்சியம்பாள் கைத்தொழிற் சங்க உறுப்பினராக விளங்கி கைத்தொழில் துறைக்கு ஊக்கமளிப்பது பாரட்டத்தக்கதாகும் இன்றும் நீர்வேலிக் கத்தி, பாக்குவெட்டி என்பனவற்றைக் கவர்ச்சிப் பொருளாகச் செய்து பலரதும் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்ட அம்பலபிள்ளை காத்திகேசு

அவர்களும் கைத்தொழிற் துறையில் பெருமைக்குரியவரே. மேலும் இரும்புக்கைத்தொழில் வளர்ச்சிக்கு பங்கற்றிய காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழில் சங்க உறுப்பினராக கணபதிபிள்ளை இராசையா, கந்தையா இராசரத்தினம் வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை முருகேசு மயில்வாகனம் முருகேசு நல்லதம்பி கனகசபை வல்லிபுரம் (காமாட்சிஅம்பாள் ஐக்கிய சங்கமுகாமையாளர்) செல்லத்துரை புவிபாலசிங்கம், காசிப்பிள்ளை பொன்னம்பலம், காசிப்பிள்ளை செல்லையா, கந்தையா கனேசையா, ஆறுமுகம் கந்தசாமி,. சின்னத்துரை லோகேஸ்வரன், பேரின்பநாயகம் மாகாதேவன் (தேவன்), குமாரசாமி கனகசுந்தரம், குமாரசாமி ரவிச்சந்திரன், கந்தையா பாலசிங்கம், வீரசிங்கம் டேவேந்திரராசா (டேவிற்), தர்மலிங்கம் காத்திகேவு (ரத்தினம்) நல்லதம்பி பிரசாந்தன், துரையப்பா தயாபரன் (பூட்டுத்தயா), இராசையா இந்திரகுமார் (பூட்டுஇந்திரன்), பொன்னுத்துரை நேசராசா, நேசன், த. விசயரத்தினம் ஆகியவர்கள் கைத்தொழில்துறைக்கு ஊக்கமளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

### சரவாளி சூத்திரம்

42 வாளிகள் தொடர்ச்சியாக நீரிறைக்கும் சரவாளிசூத்திரத்தை செய்த காளிகோவிலடியைச் சேர்ந்த கந்தசாமி, காமாட்சிஅம்பாள் சங்கத்தை சேர்ந்த முருகேசு சபாரத்தினம் என்பவர்கள் நினைவு கூரப்பட வேண்டிய வர்களே. நீர்வேலி தெற்கில் V.K செல்லத்துரை, ஐ. தர்மலிங்கம், பாலசிங்கம் சுதன் கனகசேகர மூர்த்தி என்பவர்களும் கைத்தொழில் துறைக்கு ஊக்கமளித்து வருகிறார்கள்.

### மரவேலை

கட்டடங்களுக்கு தரமான கூரை வேலைகளைச் செய்துமதி நுட்பத்தினால் பலமானதாகவும், அழகானதாகவும் படைத்ததோடு கோயில் கொட்டகைகளை உறுதியானதாகவும் உருவாக்கி பல தொழில்நுட்ப வல்லுனர்களின் பாராட்டுதல்களைப் பெற்று கொண்ட திரு. வல்லிபுரம் தம்பு அவர்களும் கிராமத்தின் புகழில் இடம்பெற வேண்டிய ஒருவராவர். அவரைத் தொடர்ந்து அவரது பிள்ளைகளான தம்பு பத்மநாதன், தம்பு தணிகாசலம் மற்றும் வேலுப்பிள்ளை சிதம்பரம் நாதன் (பொன்னார்), ஆறுமுகம் செல்வரத்தினம், செல்வநாயகம் முத்துக்குமார், கந்தையா வன்னியசிங்கம், கிருஸ்ணபிள்ளை ஈஸ்வரபாதமும் பிள்ளைகளும், கிருஸ்ணபிள்ளை வைரவநாதன் சபாரத்தினம் பாலசுந்தரம் கணபதிப்பிள்ளை நடராசா, செல்லையா நவரத்தினம், தம்பிப்பிள்ளை நல்லையா, நாகலிங்கம் சுப்பிரமணியம் சின்னத்துரை, அருந்தவநாதன் சுந்தரம், இரத்தினம் நடராசா ரவிச்சந்திரன், நவரத்தினம் ரவி , சின்னத்தம்பி முத்தையா, முத்தையா தேவராசா, முத்தையா யோகராசா,


முத்தையா தர்மராசா, முத்தையா தங்கராசா செல்லத்துரை, இரத்தினசிங்கம் (காந்தி), விநாயகமூர்த்தி உதயகுமார் (உதயன்), ஆகியோர் கைத்தொழில் துறைக்கு ஊக்கமளித்து வருகின்றமைபாராட்ட வேண்டியதே. இன்றும் கற்பக தருவான பனைமரத்தினால் அழகான கதிரை செய்ததோடு, அதன் வரிச்சல் களையும் பனைநாரினால் செய்து பலரதும் பாராட்டைப் பெற்றுக் கொண்டவர் சோமசுந்தரம் கார்த்திகேசு என்பவர் இன்று நினைவு கூரப்பட வேண்டியவரே.

### சிற்பக்கலை

சிற்பக்கலை ததும்பும் வகையில் கோயில்களுக்குரிய வாகனங்கள் விஸ்வப் பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி பொன்னையா, சின்னயா அப்பாத்துரை, சின்னையா செல்வரத்தினம், சேதர் ஆறுமுகம், ஆறுமுகம் சின்னையா, சின்னையா பொன்னுச்சாமி, தம்பு செல்லையா ஆகியவர்கள் நினைவு கூரப்படவேண்டியவர்களே. பொன்னுச்சாமி, சத்தியநாதனும் பிள்ளைகளும், செல்லையா விசுவலிங்கம், இராசரத்தினம் அன்பழகன் ஆகியவர்கள் இன்றும் சிற்பக்கலையை சிறப்புடன் செய்து வருவது பெருமைக்குரியதே.

### மாட்டுவண்டில் வேலை

தரமான நீர்வேலி மாட்டுவண்டிலைச் செய்து பெருமை பெற்றவர் களான சின்னப்பு தம்பிப்பிள்ளை, முருகேசு மயில்வாகனம், வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை, காந்தியேசு சின்னத்துரை, சின்னப்பு செல்லத்துரை, வயித்திலிங்கம், செல்லத்துரை, சின்னத்தம்பி கந்தையா, சின்னப்பு அப்பாத்துரை, தம்பிப்பிள்ளை நடராசா, ஆகியவர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்களே.



### நகைத்தொழில்

நீர்வேலி வடக்கில் நகைத்தொழில் செய்துவந்த தொழிலாளயான ஏரம்பு கந்தசாமி அவர்களும், அவரது சகோதரன் இரத்தினம் அவர்களும் நினைவு கூரப்படவேண்டியவர்களாகவுள்ளனர். அவர்களின் தொழிலை கந்தசாமி அமிர்தலிங்கம் சுப்பிரமணியம் யோகராசாவும் இப்பொழுது செய்து வருவது பெருமைக்குரியதே.

### அலங்காரப்பந்தல் வேலை

நீர்வேலியில் அலங்காரப்பந்தல் செய்தல், வர்ணம் தீட்டல் ஆகிய பணியைத் திறம்படசெய்தவர் இ. சர்வேஸ் அலங்காரப்பந்தல்களை அழகுற உருவாக்கி அமைத்து பலரதும் பாராட்டைப் பெறுபவர்கள். செல்லையா சுப்பிரமணியம் (ராஜ்மணி) கைத்தொழில் வளர்ச்சிக்கு உதவுவது குறிப்பிடத் தக்கது.

## லொறி உடற்கோப்பு அமைத்தல்

ஆரம்பத்தில் இவ்வேலையைச் செய்த நாகலிங்கம் துரைச்சாமி இன்று நினைவு கூறப்பட வேண்டியவரே அவரைத் தொடர்ந்து செல்லையா விசுவலிங்கமும் பிள்ளைகளான இரமணிதரன், ஜெகதீஸ்வரன் என்பவர்களைத் தொடர்ந்து ஐயம்பிள்ளை கந்தசாமி, கந்தசாமி சோதிலிங்கம், செல்லையா நவரத்தினம் பிரபா, பொன்னுத்துரை காந்தன் போன்றவர்கள் இப்பணியைச் செய்வதன் மூலம் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## டிங்கர் கராச்வேலை

ஆரம்பத்தில் நீர்வேலிச்சந்தியில் முதன்முதலாக டிங்கர் கராச் வேலையை அவரைத் தொடர்ந்து அவரது மாணவர்களான பொன்னுத்துரை செல்வராசா (கராச் துரை) நாகலிங்கம் கந்தசாமி நாகலிங்கம் குமாரசாமி நாகலிங்கம் சின்னத்தம்பி (கிட்டு) நன்னியன் ரத்தினம் அவரது மகன் கீசன் சரவனை நேசன், நன்னியன் இரத்தினம், அவரதுமகன் கீசன், சரவவணை இராசப்பு, மனோகரன், செல்வராசா ஆகியோர் செய்துவருவது கைத்தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதாகும்.

## மரம் அரியும் தொழிற்சாலை

காமாட்சி அம்பாள் ஐக்கிய கைத்தொழில் சங்கமும் அம்பலவாணர் சுப்பிரமணியம் (சின்னத்தம்பி) அவர்களும், ஆரம்பத்தில் நடாத்திவந்தமரம் அரியும் தொழிற்சாலை காலப்போக்கில் சின்னப்பு இரத்தினம், கதிர்வேலு வினாயகமூர்த்தி என்பவர்களால் நடாத்தப்பட்டு வந்தது இப்போது இன்னும் விருத்தியடைந்து சபாரத்தினம் இராசதுரை, இரத்தினம் செல்வநாயகம், சிவக்கொழுந்து சிவகுமார், கனகரத்தினம் சற்குணராசா, சுப்பையா புண்ணியமூர்த்தி சுப்பையா கருணாகரமூர்த்தி என்பவர்களால் மேற்கொள்ளப் பட்டு வருவது கைத்தொழில் வளர்ச்சி அம்சமாகும்.

## சுருட்டுக்கைத்தொழில்

நீர்வேலி வடக்கில் சுருட்டுக் கைத்தொலிலைச் செய்து வரும் முகவராக திரு சுப்பையா செல்வராசா அவர்களும் நீர்வேலி தெற்கில் கந்தையா செல்வநாயகமும் சின்னையா வைத்திலிங்கம் கந்தையா என்பவர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்களே.

## பீடிக்கைத்தொழில்

ஆரம்பத்தில் செல்வரத்தினம் அவர்களாலும், பாக்கியநாதன் அவர்களது ஆரம்பிக்கப்பட்டு விட்டுக்கு வீடாக செயற்பட்டு வந்த பீடிசுற்றும் தொழில் பின்னர் தொழில்சாலையாக விருத்தியடைந்ததோடு நீர்வேலி தெற்கில் R. V. G பீடிக்களஞ்சியம் அமைந்திருப்பதும் கைத்தொழில் துறைக்கு பெருமை சேர்ப்பதே.

## தையல்தொழில்

நீர்வேலி தெற்கு ஸ்ரீபரமேஸ்வரி சன சமூகநிலையத்துக்கண்மையில் தையல் தொழில் செய்வதன் மூலம் கைத்தொழில் வளர்ச்சியடைவது குறிப்பிடத்தக்கது.

## ஐஸ்பழ உற்பத்தி

நீர்வேலி தெற்கில் ஐஸ்பழஉற்பத்தி நிலையங்களை நடாத்திவரும் அவர்களின் செயற்பாடுகளும் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதே.

## பனை ஓலைப்பயிற்சி வகுப்பு

தேசிய அருங்கலைகள் பேரவையினரால் நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலய முன்றலில் உள்ள கட்டடத்தில் பனை ஓலைபயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டு வருவது கைத்தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதாக அமை கிறது. இப்படியாகச் கிராமத்தின் கைத்தொழில் வளர்ச்சி நடைபெற்று வருவதையிட்டு ஊக்கமளிக்கும் அனைவரையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடை கின்றோம்.□

நீர்வை அழகு

*கன்னங்கரிய கதலிவனக் கரையிற்*
*தெருவிற் சார்ந்துவளர்*
*தென்னம்பாளை மதுச்சொரியத் தேறலுண்டு*
*திகைத் தயரும்*
*சின்னஞ் சிறிய வணில் மீது*
*சீறிச் சினக்கும் காக்கையதன்*
*கன்னங்கிளியக் குட்டுமொரு*
*காட்சி என்றுமுள தாமால்.*

– தமிழறிஞர் கு. சிற்சபேசன்



# புலம்பெயர் சமூகமும் நீர்வேலியும்

மா. திருவாசகம்
பட்டயக் கணக்காளர்,
பொருளாதார நிபுணர்,
லண்டன்.

நீர்வேலிக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் இன்று உலகமெல்லாம் பரந்து வாழுகின்றனர். இந்தப்புலம் பெயர்சமூகம் உலகத்தில் எங்குதான் இருந்தாலும் தமது தாய்நாட்டையும் நீர்வேலிக் கிராமத்தையும் மறக்கமாட்டார்கள். இப்படியான தொடர்பு ஆழமான அசைக்க முடியாத தொடர்பாகும். அதற்குப் பல காரணங்கள் உண்டு அதில் சிலவற்றைப் பார்க்கும் போது அதன் அடிப்படைக்காரணிகள் விளங்கும். எமது ஊரிலிருந்து வெளிநாடுகள் சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் 1970ஆம் ஆண்டுக்குப்பின் தான் சென்றிருந்தார்கள். தொடக்கத்தில் மேற்படிப்புக்காக UK,US போன்ற நாடுகளுகளுக்குப் போனார்கள். ஆனால் 1977, 1983 இனக்கலவரத்தின் பின் பெருமளவில் தஞ்சம் கோரும் அடிப்படையில் மேற்கத்தயநாடுகளுக்கு சென்றார்கள். உண்மையென்ன வென்றால் பெரும்பாலானவர்கள் கட்டாயம் வெளிநாடு செல்லத்தான் வேண்டும் என்று செல்லவில்லை. நாட்டு நிலைமை தான் அவர்களை அப்படியாகச் செல்லும்படி நிர்ப்பந்தித்தது என்றுதான் சொல்ல வேண்டும். இப்படிச் சென்றவர்கள் தமது சமூகத்தை, தமது உற்றார் உறவினர்களை தமது சுற்றாடலைப்பிரிந்து புதிய சூழல்கள், புதிய சவால்கள் எல்லாவற்றுக்கும் முகம்கொடுத்து பல கஷ்டங்களுக்கிடையில் தான் தமது புதிய வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள் இப்படியான நிலைமையில் அவர்களுக்கு தமது தாய்நாடு, தாய்வீடு என்பது பெரியதொரு Anchor என்று ஆங்கிலத்தில் விபரிப்பார்கள் ஏனென்றால் அது நாம் எந்த புதிய சூழலில் இருந்தாலும் எமது ஊரின், நாட்டின் தொடர்பு ஓர் ஆழ்ந்த நங்கூரம் என்று சொல்லலாம்.

ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் 'Every Dark Cloud has a Silver Line" என்று. அது என்னவென்றால் எந்தக்கஷ்டம் வந்தாலும் அதில் ஒரு நல்ல நன்மை உண்டாகும். என்பது தான் Dark Cloud வந்து கஷ்டங்களை விஸ்தரிப்பது அதன் அருகில் சூரியப்பிரகாசத்தில் இந்த Silver Line காணக்கூடியதாக இருக்கிறது அதுதான் அந்த நன்மையென்பது.

எமது சமூகத்திற்கு வந்த கஷ்டத்தின் நிமித்தம் இடம்பெயர்ந்தாலும் அதனால் வந்த நன்மைதான் எம்வர்கள் உலகமெல்லாம் பரந்து சென்று மேற்படிப்புக்களை மேற்கொண்டு பலவிதமான அனுபவங்களை அறிந்து பலவிதமான வேலைகளை கற்று தமது பிள்ளைகளை உலகிலுள்ள பெரிய பல்கலைக்கழகங்களிலெல்லாம் படிப்பதற்கு வாய்ப்புப்பெற்று பெரு முயற்சி யாளர்களாகவும் மற்றும் உலக சமூகங்களுக்கு எடுத்துக்காட்டானவர்களாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

Wikipedia விலிருந்து எடுத்த தகவலின் படி வெளிநாடுகளிலுள்ள இலங்கைத்தமிழர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது இது ஒரு மதிப்பிட்ட எண்ணிக்கை சரியான எண்ணிக்கை ஒருவரிடமும் இல்லை ஆதலினால் இந்த மதிப்பீட்டை தருகின்றோம்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத்தமிழரின் எண்ணிக்கை மதிப்பீடு.

| | | |
|---|---|---|
| Canda | - | 300,000 |
| UK | - | 250,000 |
| France | - | 60,000 |
| Germany | - | 60,000 |
| Italy | - | 50,000 |
| US | - | 25,000 |
| India | - | 50,000 |
| Australia | - | 30,000 |
| Switzerland | - | 14,000 |
| Norway | - | 1200.00 |
| Sweden | - | 10,000 |
| Denmark | - | 8,000 |

மேலும் Africa, Middle East, South East Asia நாடுகளிலும் குறைந்த எண்ணிக்கையில் வேலை நிமித்தமாக வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தத் தொகையில் நீர்வேலிக்கிராமத்தை சேர்ந்தவர்களை பின்வருமாறு மதிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| Canada | - | 2,000 |
| UK | - | 1,500 |
| France | - | 750 |
| Germany | - | 600 |
| Switzerland | - | 600 |

மற்றைய நாடுகளில் கணிசமானவர்கள் இருந்தாலும் குறைந்த அளவில் தான் இருக்கிறார்கள்.

அண்மையில் www neervely.com இல் பிரசுரமான செல்வி செ.சிவானதியின் நீர்வேலியில் இந்துப்பண்பாடு எனும் கட்டுரையின்படி இப்பொழுது 6387 பேர் எமது கிராமத்தில் வாழ்கிறார்கள். நாட்டு நிலைமைகள் நன்றாக தொடர்ந்து இருந்திருந்தால் 10000 இற்கு மேற்பட்டோர் இருந்திருப்பார்கள். கிட்டத்தட்ட 50% த்துக்கு மேலான நீர்வேலி சார்ந்தவர்கள் வெளிநாடுகளில் இருப்பதாக மதிப்பிடலாம்.

நீர்வேலியைச் சார்ந்த வெளிநாடுகளில் இருப்பவர்கள் மற்றும் இலங்கைத்தமிழர்கள் போல் பெரும்பாலான நகரங்களான Toronto, London, Humburg, Paris, Swich ல் தான் கூடிய அளவில் இருக்கிறார்கள் இதற்கான முக்கிய காரணம் வேலைவாய்ப்புக்களும் மற்றும் வாழ்க்கை வசதிகளுமே யாகும். இப்படியாக இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் கடுமையாக வேலைபார்க்கவேண்டும் மேலும் படிப்பவர்கள் படிக்க வேண்டும் அத்துடன் குடும்ப வேலைகளையும் பார்க்க வேண்டும் இதனால் இவர்கள் எல்லோருக்கும் பெரியளவில் நேரம் கிடைப்பதென்பது கடினம். ஆதலால் இவர்கள் பிறந்தநாள் விழாக்களிலும், மற்றும் கல்யாண வீடுகள் போன்ற குடும்ப நிகழ்ச்சிகளிலும் தான் மற்றைய குடும்பம், சிநேகிதர்களை கண்டுகொள்வார்கள். அதேபோல் அவர்களது தொடர்பு நாட்டுடன் மற்றும் ஊருடன் சிறிதளவிலேதான் இருந்தது 2009ஆம் ஆண்டு வரையும் நீர்வேலி, யாழ்ப்பாண இடங்களுக்கு போய் வருவது கஷ்டமாகத்தான் இருந்ததால் நீர்வேலித்தொடர்புகள் குறைந்து விட்டன.

புலம்பெயர்ந்தவர்களான எமக்கு பெரியளவில் தொடர்புகள் எமது நாட்டுடன், ஊருடன் குறைந்து விட்டாலும் எமது நீர்வேலிச்சமூகத்துக்கு வந்த கஷ்டங்களும் அழிவுகளும் தெரியாமல் இல்லை. இந்த சமூகத்தின் கஷ்டங்களை அறிந்து எப்படி நாம் உதவி செய்யலாம் என்று யோசித்த பொழுது

தான் லண்டனில் வாழும் எமது ஊரைச்சேர்ந்தவர்களுடன் பேசி "நீர்வேலி நலன்புரிச்சங்கம் U.K" என்ற ஒரு அமைப்பை உண்டாக்குவதற்கான திட்டத்தை முடிவெடுத்தோம். இப்படியான நோக்கம் எமக்கு பல காலம் இருந்தாலும் 15 வருடங்களுக்கு முன்பாக நாம் முதல் முயற்சியாக அத்தியார் இந்துக்கல்லூரி நூலகத்திற்குத் தேவையான பாடப்புத்தகங்களை வாங்கி அன்பளிப்புச் செய்ததுடன் எமது முதல் முயற்சியை ஆரம்பித்தோம். இதில் என்னுடன் உறுதுணையாக திரு. எஸ். சுரேஸ்குமாரும், திரு. எஸ் செல்வநாதனும் தங்களுக்கே இயல்பான உற்சாகத்துடன் இயங்கினார்கள். எமது முக்கிய நோக்கம் எமது சமூகத்திற்கு அழிந்து கொண்டிருக்கும் அறிவுக்களஞ்சியங் களான பாடசாலைகள், வாசகசாலைகள், பாலர் நிலையங்கள், சமூக நிலையங்கள் என்பவற்றை புதுப்பிப்பதும் மற்றும் எமது சமூகத்தை சேர்ந்தவர்களையும் ஊக்குவித்து அவர்களது பங்களிப்பையும் இந்த முக்கிய குறிக்கோளுக்காக பாவித்துக் கொள்வதுமாகும். இதைத் தொடர்ந்து நீர்வேலி நலன்புரிச்சங்கம் எமது மற்றும் அங்கத்தவர்களின் உதவியுடன் பல நல்ல வேலைகளை செய்து கொண்டு வருகின்றது.

புலம்பெயர்ந்த தமிழர் - அதற்குள் எமது ஊரவரும் அடங்குவர், சந்தர்ப்ப வசத்தால் ஒருமுற்போக்கு முறையில் Globalitation என்று அழைக்கப்படும் உலக மயமாக்கலின் முன்னோடிகளாக விளங்குகின்றோம். இந்தப்புதிய யுகத்தில் முன்பு எப்போதும் இல்லாத அளவு அறிவு வளர்ச்சி என்பது பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. உலகமெல்லாம் அரசாங்கங்கள் பெரியளவில் நிதி ஒதுக்கம் செய்கிறார்கள். காரணம் அறிவு வளர்க்கும் பாடசாலைகள், சமூக அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் இவைகளை யெல்லாம் 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்ற முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே ஆகும்.

ஆதலால் நாமும் எம்மால் இயன்றளவில் எமது அறிவுப் பொக்கிஷங் களான எமது பாடசாலைகளை அறிவு வளர்க்கும் களஞ்சியங் களாக வளர்க்க வேண்டியது தலையாய கடமை. இதன் அடிப்படையில் உருவானது தான் எமது நீர்வேலி நலன்புரிச்சங்கம் இதன் முதல் நோக்கமும், தூரநோக்கமும் அறிவு வளர்ச்சியே. அதை என்னுமொருமுறையில் கூறலாம் அதாவது Education Learning for Personal Development மற்றைய முக்கியமான குறிக்கோள் ஒன்றையும் நாம் முதல் தொடக்கமே அமைத்துக்கொண்டோம் அதாவது இங்கு நாங்கள் சேர்க்கும் பணத்தை நல்ல வழியில் செலவு செய்வது என்பதே

அதுமட்டும் இல்லாமல் இந்த பொறுப்புக்காக எமது கிளை ஒன்றை நீர்வேலியில் நிறுவி அதில் முக்கியமான அங்கத்தவர்களை சேர்த்து அவர்களது பொறப்பில் அந்தச் செலவு Project Management ஆகிய பொறுப்புக்களை ஒப்பேற்றுவது என்பது தான் அதற்கமைய திரு. ஆர். குணநாதன், திரு. எஸ். சண்முகவடிவேல், திரு. ஐ. சிவராஜா, திரு. ஆர். தியாகராஜா, திரு. ரி. சோதிலிங்கம், திருமதி. ருக்மணி ஆனந்தவேலி, திரு. கே. வி. நடராஜா, திரு. எஸ். பத்மநாதன் ஆகியோர்களை அங்கத்தவர்களாக ஆக்கி அவர்கள் அதை தொடர்ந்து எம்முடன் சேர்ந்து பெருமுதவி செய்து வருகிறார்கள்.

எமது அமைப்பின் சில முக்கிய வழியமைப்பை கூறுவது அவசியம். நாம் முதலில் Project Selection செய்வோம். அது எமது முக்கிய குறிக்கோளுக்கு இணங்க அறிவு சார்ந்ததாக இருக்க வேண்டும். அதன்பின் அதற்கான செலவுகளை விபரித்து இரண்டு Eust Quotation ஐ பெற வேண்டும். இதற்குப்பின் இந்த Project (திட்டத்தை) ஐ எமது அமைப்பு லண்டனில் பார்த்து தீர்மானித்து அதைச் செய்வதாக சம்மதிப்பது என்பது எமது செயற்குழுவின் கூட்டமுடிவாகும். இதன்பின் நாம் எமது நீர்வேலிக்கிளையுடன் தொடர்பு கொண்டு தேவையான பணத்தை அவர்களிடம் அனுப்பி அவர்களின் மேற்பார்வையில் எமது வேலைகளை செய்து முடிப்பது வழக்கம். இதில் முக்கியமான அம்சங்களாவது Accountability Transparency அதாவது ஒழுங்கான கணக்கு வைப்பதும் அத்துடன் எல்லா அம்சங்களும் எல்லாருக்கும் பூரணமாக விளக்குவதுமாகும். முக்கியமாக இதில் பங்குபற்றுவோருக்கு இவை தேவையானது.

2004ம் ஆண்டு அத்தியார் இந்துக்கல்லூரியின் 75ஆம் ஆண்டு விழா கொண்டாடுவதாக நீர்வேலியில் விழாக்குழு அதிபர் திரு. ஆர் குணநாதன் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்டது. அப்பொழுது திரு. ஆர். குணநாதன் அவர்கள் எம்மிடம் ஒரு கோரிக்கையை முன் வைத்தார். அவர் கேட்டதாவது London இல் முதலாவது அத்தியார் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்சங்கம் ஒன்றை அமைத்து அதன் கீழ் கல்லூரிக்குத் தேவையான உதவிகளைச் செய்யுமாறும் இது ஒரு நல்ல நேரம் என்றும், இது பழைய மாணவரை ஒன்று கூட்டும் அத்துடன் எமது ஊர் நலன் விரும்பிகளையும் ஊக்குவிக்கும் எனவும் கேட்டதன் பேரில் நாம் கூட்டம் ஒன்றைக் கூட்டி அங்கு வந்த நீர்வேலி

அன்பர்களுக்கு இந்த விடயத்தை அறிவித்தோம். வந்தவர்கள் எல்லாரும் ஏகோபித்த வகையில் சம்மதித்தனர். அதனால் Attiar Hindu College old Boys Well Wishes Association UK பிறந்தது. இந்த அமைப்பு முதல்முதலாக 2004ம் ஆண்டு கல்லூரியின் 75ஆம் ஆண்டு விழாவைச் சிறப்பாக. கொண்டாடியது. இது எமக்கெல்லாம் பெரியதொரு மகிழ்ச்சியைக் கொடுத்தது இந்தவிழா ஓர் நீர்வேலி விழாவாகவும் அத்துடன் எமது ஊரின் மத்தியிலிருந்து அறிவு வளர்க்கும் அத்தியார் இந்துக்கல்லூரியின் விழாவாகவும் அமைந்தமை சிறப்பானது. அதன்பின் ஒவ்வொரு வருடமும் இந்த ஒன்று கூடல் UKல் நடந்து கொண்டு வருகிறது. இதே அடிப்படைக்காரணங்களால் Canadaவில் இருக்கும் எமது நீர்வேலி சார்ந்தவர்களும் 'Neervely welfare Association - Canada" என்றஅமைப்பை உருவாக்கி பல வருடங்களாக பெரும்பணிகள் செய்து வருவது பாராட்டத்தக்கது. இந்த அமைப்பின் தற்போதைய தலைவராக திருமதி. து. வரதராஜன் செயலாளராக திரு. எஸ். சிவலிங்கம் பொருளாளராக, திரு. S. K. பாலேஸ் மற்றும் பத்து செயற்குழு உறுப்பினர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

Canadaவில் இருக்கும் நீர்வை மக்கள் பெரியமனிதாபி மானத்துடனும், நாட்டு ஊர்ப்பற்றுடனும் செய்து வரும் சேவைக்கு நீர்வேலி நலன்புரிச் சங்கம் ஒரு எடுத்துக்காட்டு ஆகும். அவர்களும் ஒரு நீர்வேலிக்கிளை ஸ்தாபித்து அதில் திரு. எஸ். சண்முகவடிவேல், திரு. கே. இராசையா, திரு. எஸ். சுந்தரலிங்கம், திரு. ஏ. இராசநாயகம், திரு. ஐ. சிவராஜா, செல்வி. எம். இராமநாதன், மதிப்புக்குரிய தியாகராஜக்குருக்கள், திரு. ரி. பரராஜசிங்கம், திருமதி. R. ஆனந்தவேல் ஆகிய அங்கத்தவர்களை உள்ளடக்கி கிராமத்துக்குப் பல சேவைகளைச் செய்து வருவது பாராட்டத்தக்கது.

மற்றுமொரு புலம்பெயர்ந்தவர்கள் நடாத்தும் முக்கிய அமைப்புத் தான் "நீர்வேலி நற்பணிச்சங்கம் – Swiss" ஆகும். இந்த அமைப்பு முக்கியமாக திரு. கே. நேசன் அவர்களால் முன்னெடுத்து பல ஆண்டுகளாக எமது ஊரின் அறிவு வளர்ச்சிக்கு பெருமளவில் உதவி செய்து வருவது பெரியதொரு மகிழ்ச்சிகரமான விடயம். நீர்வேலி நற்பணிச்சங்கம் Swiss அமைப்பில் திரு. கே. நேசன் அவர்களுடன் திரு. கே. இந்திரன், திரு. ஏ. ரங்கன், திரு. எஸ். குகன் ஆகியோரும் மற்றும் பலரும் இணைந்து சிறப்பாகச் செயலாற்றி வருகின்றனர்.

இந்த நான்கு அமைப்புகளும் Canada விலும் Europe இலும் அமைந்து எமது நாட்டையும் ஊரையும் மறவாமல் சேவைகளைச் செய்து வருவது மட்டுமல்லாமல் எதிர்கால சந்ததிகளுக்கு அவர்களது கடமையை ஞாபகப்படுத்துவதாகவும் இந்த அமைப்புக்கள் செயலாற்றி வருகின்றன. மேலும் இந்த அமைப்புக்கு அப்பால் வெளிநாடுகளில் வாழும் நீர்வேலி கிராமத்தவர்கள் தனிப்பட்ட வகையிலும் இணைந்தும் எமது கிராமத்தின் முன்னேற்றத்துக்கு உதவி வருகின்றனர். இந்த வகையில் பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் என்பவற்றின் உயர்வுக்கு உதவிவருவது எமக்கெல்லாம் உற்சாகமளிக்கின்றது.

புலம்பெயர்ந்து வாழும் எமது பிள்ளைகள் பலவிதமான மாற்றுச் சமூகங்களின் பழக்கங்களையெல்லாம் பழகி வாழ வேண்டியுள்ளது. இப்படியான கட்டத்தில் பெற்றோராகிய எமது கடமை எமது தமிழ் கலாச்சாரத்தையும், முக்கியமாக எமது நீர்வேலிச்சமூகக் கலாச்சாரத்தையும் எமது எதிர்காரச்சந்ததியினருக்கு பழக்கி அது எப்படியான (Anchor) நங்கூரமாக அவர்களது வாழ்க்கையிலும் மேலும் அவர்களது சந்ததியினரின் வாழ்க்கையிலும் வழிகாட்டியாகவும் பெரிய துணையாகவும் இருக்கும் என்பதை உணர்த்துவது முக்கியமாகும். அதற்கு முதற்கண் நாம் முதலாவது சமுதாயத்தை சேர்ந்தவர் நடக்கும் முறை பார்த்து எமது எதிர்காலச்சந்ததியினர் தொடர்ந்தும் எமது அமைப்புகளை நடாத்து வதுடன் மேலும் இப்படியான அமைப்புகளை உருவாக்கி எமது நீர்வேலிச் சமுதாயத்துடன் சேர்ந்து வாழ்வார்கள் என்பதில் எனக்கு ஒரு ஐயமுமில்லை.

எல்லாம் எமது கையில் தான் உள்ளது. எப்படி எமது முன்னோர்கள் எமக்கு வழிகாட்டியாக இருந்தார்களோ அந்தப்பணி எம்மிடம் உள்ளது. அதுவும் ஒரு புலம்பெயர்ந்த நாட்டில் பணி செய்யும் பொறுப்பு எங்கள் எல்லாருக்கும் உள்ளது.

எமது நீர்வேலிக்கிராமத்தின் முக்கியத்துவம் என்னவென்றால் அறிவு வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி என்ற முக்கியமான வளர்ச்சியுடன் கலாச்சார வளர்ச்சியையும் ஒருங்கிணைத்து இணையில்லாததொரு சமூகத்தைக் கொண்டுள்ளது.

அறிவு வளர்ச்சிக்கு கல்லூரிகளும், பாலர் நிலையங்களும், ஆன்மீக வளர்ச்சிக்கு ஆலயங்களும், சமூக்ககலாச்சார வளர்ச்சிக்கு சமூகச்சங்கங்களும் இளைஞர் சங்கங்கங்களும் தமது சேவைகளை ஆற்றி வருவது பாராட்டப்பட வேண்டியது . இந்த வகையில் தற்போது நீர்வேலியில் உதயமாகியுள்ள "நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம்" எமது கிராமத்தின் கலை பண்பாட்டு அம்சங்களை வளர்க்கும் கருவூலமாக திகழ வேண்டும் என்பது புலம்பெயர் சமூகத்தினராகிய எமது வேணவாவாகும்.

இதை புலம்பெயர்ந்த நாமும் உணர்ந்து இந்தப்பாரம்பரிய அமைப்புகளை பராமரித்து எமது சமூகம் வளர, எமது ஊர்வளர எமது நாடு வளர எல்லா விதமான முயற்சிகளையும் எடுக்கவேண்டும். அதனால் நாம் எங்கிருந்தாலும் அந்தச் சமூகளர்ச்சியில் பங்குகொண்டு எமது சமூகம் ஒரு Virtual சமூகமாக உலகெல்லாம் பரந்து வளர்ந்து வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.□

## நீர்வைச் சிலேடை வெண்பா

*பத்தியரும் பாவையரும் பண்ணையுழும் பள்ளரும்சீர்*
*நித்திலங்கள் ஆயுமெழில் நீர்வையே- நித்தநித்தம்*
*வேங்கை அரங்குடையான் வெள்ளரவம் காணநடம்*
*வேங்கை அரங்குடையான் வீடு*

*பட்டிடைப்பொற் பாவையரும் பல்லார் பறவைகளும்*
*நெட்டிருப்பை நாடுமுயர் நீர்வையே - விட்டகலை*
*அக்கரருங் கண்டியரும் மாறாறரப் புறத்தார்*
*அக்கரரும் ஆனார்க்கு அகம்*

*பூண்ட மணிவாயும் பூவைக் கிளிபிறவும்*
*நீண்ட குரலெடுக்கும் நீர்வையே - மாண்டகைய*
*மானங் கிடந்தான் மலையரயன் பொற்பாவை*
*மானங் கிடந்தயன் மனை*

*நலத்தோர் மனைமுகத்துந் நந்தா வனமிடத்துந்*
*நிலைத்தோ ரங்களையுந் நீர்வையே - அலைபொழுதும்*
*அம்பலத்தே இறையடிகள் அகங்குருகிப் போற்றாரை*
*அம்பலத்தே வையான் அகம்*

– தமிழறிஞர் கு. சிற்சபேசன்



கட்டுரை

# நீர்வையூரின் இந்துசமய வளர்ச்சியில் இந்துசமய நிறுவனங்களின் பங்களிப்பு

செ. சிவானதி (B.A.)

சைவமும் தமிழும் வளர்க்கும் தொல்பதிகளுள் நீர்வேலியும் ஒன்று. இங்கு இத்துறை சார்ந்து செயற்படும் நிறுவனங்களை அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நீர்வேலி சைவ இளைஞர் சங்கம்

நீர்வையூரின் இந்து சமய நிறுவனங்கள் வரிசையில் ஆரம்ப காலங்களில் நாடளாவிய ரீதியில் பெருமை பெற்ற நிறுவனமாக நீர்வேலி சைவ இளைஞர் சங்கம் விளங்கியுள்ளது. 1940 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் நீர்வேலி சைவ இளைஞர்கள் ஒன்றிணைந்து நீர்வேலி சைவ இளைஞர் சங்கம் எனும் அமைப்பினை நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய சூழலில் திறம்பட நாடாத்தி வந்துள்ளனர். இந்நிறுவனம் பண்ணிசை, சிவதீட்சை, சமய ஒழுக்க விழுமியங்களை மக்கள் மத்தியில் பரப்புதல் என்பவற்றை நோக்காகக் கொண்டு செயலாற்றி வந்துள்ளது. இச்சங்கத்தின் சார்பில் விக்கிரம வருடம் 1940 ஆம் ஆண்டு அறிஞர் கு. சிற்சபேசன் அவர்கள் " சிவநாமாவளித் திரட்டு" எனும் நூலைத்தொகுத்து வெளியிட்டார். இம் முயற்சியினை அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபைத் தலைவராக விளங்கிய நவாலியூர் சோம சுந்தரப் புலவர் விதந்துரைக்கின்றார்.

'நீர்வேலி சைவ இளைஞர் சங்கத்தார் அரிய சிவ நாமங்களை ஒழுங்காகத் தொகுத்து ஒரு சிறு நூலாக வெளியிடுகின்றார்கள். இது மேலான சிவபுண்ணியமாகும். இந்நூலைச் சைவசமயிகள் எல்லோரும் அன்புடன் வாங்கி முறைப்படி ஓதி வருவாராயின் இம்மை மறுமை இரண்டிற்கும் நன்மையடை வார்கள்" எனப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை மடம்

பல்லவர்காலப்பகுதியில் சைவபக்தி இயக்கத்தினூடாக சைவத்தை வளம் பெறச் செய்த நாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசரின் திருநாமத்தினைச் சூடி நீர்வையூரின் இந்து சமய வளரச்சிக்கு தொண்டாற்றி

வரும் நிறுவனமாக திருநாவுக்கரசு நாயனார் குருபூசை மடம் விளங்குகின்றது. இது அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் தெற்கு வீதியில் அமைவு பெற்றுள் ளது. 26/04/1949 ஆம் ஆண்டு எழுதப் பெற்ற அரசகேசரிப் பிள்ளையார் ஆலய தர்மகத்தாக்களுக்குரிய நிவந்தங்களில் அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் தென்பகுதியிலுள்ள திருநாவுக்கரசுநாயனார் மடாலயத்தையும் ஆலயத்துடன் சேர்த்து பரிபாலிக்குமாறு குறிப்பிடப் பட்டுள்ளமையால் இந்நிறுவனம் 1949 ஆம் ஆண்டிற்கு முன்னராகவே ஸ்தாபிக்கப்பட்டுள் ளமையை அறிய முடிகின்றது. அதனை முன்னின்று உருவாக்கிய பெருமைக் குரியவர் சிவஸ்ரீ. கு. தியாகராசாக்குருக்கள் அவர்களே இதன் தீர்த்தக்கிணறு மடத்தின் வடகிழக்குத்திசையில் அமைந்துள்ளது.

இம்மடத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களது குருபூசையும் தொன்று தொட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. குருபூசைத்தினங்களில் அரசகேசரிப் பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. சா. சோமதேவக்குருக்கள் அவர்கள் பூசையாற்றி வருகின்றார். பண்ணிசை, நாயன்மார்களது வரலாற்றுக் கதைகள் என்பன பக்திபூர்வமாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. ஆலய மகோற்சவ காலங்களில் இங்கு மகேஸ்வரபூசை ஆலயத்தின் சார்பில் நடைபெறுவது வழக்கமாகும்.

## நீர்வேலி கந்தசுவாமி கோயில் இந்துசமய அபிவிருத்திச் சங்கம்

நீர்வேலி கந்தசுவாமி கோயில் இந்துசமய அபிவிருத்திச் சங்கம் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தனது பணியினை ஆற்றி வருகின்றது. இச் சங்கம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தமிழக அறிஞர்களை வரவேற்று சமயப் பிரசங்கங்களை நடாத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் சார்பாக தமிழகத்தின் தன்னிகரற்ற பேரறிஞரும் "கலைமகள்" பத்திரிகையின் ஆசிரியருமான வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன் வரவழைக்கப்பட்டு சமயப்பிரசங்கங்கள் ஆற்றியுள்ளமை மனங்கொள்ளத் தக்கது. மேலும் சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு பாடசாலை மாணவர்களிடையே சமயபாடப்பரீட்சைகள், பண்ணிசைப் போட்டிகளை நடாத்தி வந்துள்ளது. மேலும் சமய நூல்கள் பலவற்றை வெளியிட்டு சமய அறிவை மக்கள் மத்தியில் பரவச் செய்யும் வகையில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. இவ் வகையில் திருப்புகழ் 66 (1990) கூட்டுப்பிராத்தனைப் பாடல்கள் முதலிய பல நூல்களை வெளியிட்டுள்ளது.

நீர்வேலியில் முதன்முதலில் அற நெறிப்பாடசாலையை ஆரம்பித்த பெருமை இச் சங்கத்திற்குரியதே. இச்சங்கத்தினை ஆரம்பித்து இதன் பணிகளுக்கு ஊன்று கோலாக விளங்கியவர் பிரம்மஸ்ரீ சு. இராஜேந்திரக் குருக்கள் ஆவார். தற்போது சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள்

அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இச்சங்கத்திற்குரிய ஆன்மீக நூலகம் ஆலயத்தில் அமைவு பெற்றுள்ளமையை இன்றும் காணமுடிகின்றது. 27. 04. 2010 அன்று நீர்வை தி. மயூரகிரி சர்மா அவர்களது நூல் வெளியிடப்பட்டமை இச்சங்கத்தின் சமயப் பணிகளுக்கு சிறந்த சான்றாகும்.

### காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை

**பதிவு இல:–** 6/3/J/S/49 **பதிவு திகதி :– 14.07.1982**

நீர்வேலி காமாட்சி அம்பாள்கோயில் மண்டபத்தி ல் சின்னப்பு தர்மலிங்கம் என்பவரால் 14.01.1965 இல் ஆரம்பிக்கப்பட்டதே நீர்வேலி காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை ஆகும். இச்சபை இவ்ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை, சமய அறிவுப் பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி என்பவற்றை மாணவரிடையே நடாத்தி தனது சமயப் பணியை ஆரம்பித்தது இப்பணி தொடர்ந்து இன்றும் நடைபெற்றுவருகின்றது. 1991 ஆம் ஆண்டு கோப்பாய் கல்விக் கோட்ட மாணவர்களிடையேயும் 1992, 1993, 1994 ஆம் ஆண்டுகளில் யாழ் மாவட்ட ரீதியிலும் சமயப் பரீட்சைகளை நடாத்தியது. மேலும் பாடசாலை மாணவர்களிடையே சமயப் போட்டிப் பரீட்சைகளை நடாத்தி வருவதுடன் முன்பள்ளி சிறார்கள் மத்தியில் திருக்குறள் மனனப் போட்டிகளை நடாத்துகின்றது.

மேலும் சமயப் பெரியார்களை வரவழைத்து கௌரவித்து வருகின்றது. இச்சபை காமாட்சியம்பாள் அறநெறிப்பாடசாலையை சிறப்பாக நடாத்தி வருகின்றது. மேலும் சமய நுல்கள் பலவற்றை வெளியிட்டு வருகின்றது. இவ்வகையில் புகழ் பூத்த நீர்வேலி (2000) கதிர்காம முருகேசர் ஆறாதாரசடாச்சர அந்தாதியும் தியான யோக சரவணபவமாலையும் (2006), கருணை நிறை காமாக்ஷி (2011) முதலிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளமை போற்றுவதற்குரியது. இச் சபையின் தலைவராக பேராசிரியர் தி. வேல்நம்பி அவர்கள் பணியாற்றி வருகின்றார்.

## அற நெறிப் பாடசாலைகள்

### நீர்வேலி ஸ்ரீமுருகன் அற நெறிப்பாடசாலை

**பதிவு இல:-**

நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதம குருவாக விளங்கிய பிரம்மஸ்ரீ சு. இராஜேந்திரக் குருக்கள் அவர்கள் தலைமையில் நீர்வையூரில் ஆரம்பிக்கப்

பட்ட அறநெறிப் பாடசாலை இது ஆகும். இந்துசமய விழுமியங்கள், இந்துப் பண்பாடு, இந்துக்கலாசாரம் என்பவற்றை மாணவர்களுக்குப் போதிப்பதனை நோக்கமாகக் கொண்டதே இப்பாடசாலை ஆகும். இந் நிறுவனம் 14. 04. 2004 அன்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஞாயிறு தோறும் இயங்கி வரும் இப் பாடசாலையில் சமயவிழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. மாணவர் களது கலை நிகழ்வுகள் ஒவ்வொரு வருடமும் நல்லூர் ஆலய மகோற்சவத்தினை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் இடம் பெறுகின்றது.

**நீர்வேலி காமாட்சியம்பாள் அறநெறிப்பாடசாலை**
**பதிவு இல:-**

காமாட்சியம்பாள் ஆலய முன் மண்டபத்தில் இயங்கி வரும் இப்பாடசாலை 14. 01. 1996 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைவராக த. பரராஜசிங்கம் (J.P) கடமையாற்றுகிறார்கள். ஞாயிறு தோறும் இயங்கிவரும் இப்பாடசாலையில் தைப்பொங்கல் விழா, நவராத்திரி விழா முதலிய சமய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் மாணவர்கள் பங்குபற்றுகின்றனர். இந்நிறுவனம் அறநெறிக் கருத்துக்களை மாணவர்களிடையே பரப்புவதனை நோக்கமாகக் கொண் டுள்ளது.

**நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை**
**பதிவு இல :-** HA/ 7/ 56/14 / 87

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய சூழலில் உள்ள இவ் அறநெறிப் பாடசாலை இளஞ்சிறார்களுக்கு அறநெறிக் கருத்துக்களைப் போதித்து எதிர்காலத்தில் இந்து மதப் பற்றாளர்களான நற்பிரஜைகளை உருவாக்கும் நோக்குடன் செயலாற்றி வருகின்றது. இந் நிறுவனம் 10. 02. 2002 அன்று சிவ ஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்கள் அவர்களின் ஆசிர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சிவ ஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள் தலைமையிலான நிர்வாக சபையினால் திறம்பட நடாத்தப்படுகின்றது. ஞாயிறு காலை 9.00 – 12.00 மணிவரை கல்வி போதிக்கப்படுகின்றது.

சைவசமய நெறியை மாணவர்களுக்குப் புரிய வைத்தல், சைவ ஒழுக்கத்தினை வளர்த்தல், நீதி, நேர்மை, நியாய வழிகளில் வாழ அறிவுரை வழங்கல், பண்ணிசைப் பயிற்சி அளித்தல், இயல், இசை, நாடகம் முதலிய

முத்தமிழ்களை வளர்த்தல், இந்துப் பண்பாடு, பழக்க வழக்கங்களை மாணவர்களுக்குப் போதித்தல் என்பவையே இதன் நோக்கங்களாகும். இங்கு மாணவர்கள் இந்துக்கலாசார முறைப்படி உடை அணிந்து வருகின்றமை கண்கொள்ளாக் காட்சியாகும்.

நீர்வேலியில் உள்ள அனைத்து அற நெறிப்பாடசாலை மாணவர் களையும் அழைத்து "அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான வாழும் கலைப்பயிற்சி" யும் பயிற்சிப்பட்டறையினை இந்தியாவிலுள்ள வித்தி விகாஷ்கேந்திரா எனும் நிறுவனத்திலிருந்து வரவழைக்கப்பட்ட பயிற்றுநர் எஸ். சாந்தகுமார் அவர்கள் 2004 ஆம் ஆண்டு நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

தைப்பொங்கல் விழா, நவராத்திரி விழா போன்ற சமயவிழாக்கள் கொண்டாடப்படுவதுடன் ஒவ்வொரு வருடமும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் " ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும்" நடைபெறுவது வழக்கம். இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். நல்லூர் மகோற்சவ காலங்களில் நாவலர் மணி மண்டபத்தில் இப் பாடசாலையின் கலைநிகழ்வுகள் இடம் பெறுவதுண்டு.

## நீர்வேலி தெற்கு இந்து இளைஞர் மன்றம்
## பதிவு இல HA/4/JA/273

நீர்வேலி தெற்கு இந்து இளைஞர் மன்றம் 01.04.2005 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இமமன்றத்தின் குறிக்கோள் வாசகம் " எம் கடன் பணி செய்தல்" என்பதாகும். இவ்வகையில் சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி என்பவற்றை ஆற்றி வருகின்றது. இந்நிறுவனத்தின் நோக்கங்களாக இளைஞர்களை இந்து சமயததுறையிலே உற்சாகமாக ஈடுபடுத்தல் சமயப் பண்ணிசை, கலை வகுப்புகளை நடாத்துதல், சமயப் பிரசாரங்களை ஒழுங்கு படுத்துதல், சைவ ஆலயங்களில் ஆகமவிதிப்படி பூசைகள், விழாக்கள் நடைபெற ஒத்துழைத்தல் போன்றனவாகும்.

மேலும் இக்கிராமத்தில் உள்ள ஆலயங்களின் புகழினை சித்தரிக்கும் வகையில் வாகீசகலாநிதி, கி. வா. ஜகந்நாதன், திரு. இ. முருகையன், திரு.

சோ. பத்மநாதன் (சோ. ப), சீ. மகிந்தினி ஆகியோரால் எழுதப்பட்டபாடல்கள் "நீர்வைக்கந்தன் பாமாலை" எனும் இசைத்தட்டாக 01. 11. 2005 அன்று வெளியிடப்பட்டது.

மேலும் 14.01.2009 ஆம் ஆண்டில் யாழ் வலி –கிழக்கு பிரதேசத்தில் இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் நீர்வேலி இந்து இளைஞர் மன்றத்தில் தைப்பொங்கல் விழா சிறப்பாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் திருப்பணி வேலைகளை இம் மன்றம் முன்னின்று நடாத்துவது போற்றுதற்குரியது.

இவ்வாறாக நீர்வையூரின் இந்து சமய வளர்ச்சிக்கு பண்டு தொட்டு இன்று வரை பல இந்து சமயநிறுவனங்கள் பணியாற்றி வருகின்றமை போற்றுதற்குரியது. நீர்வேலி சைவ இளைஞர் சங்கம், திருநாவுக்கரசு நாயனார் குருபூசை மடம், நீர்வேலி கந்தசாமி கோயில் இந்து சமய அபிவிருத்திச்சங்கம், காமாட்சியம்பாள் அறநெறிப்பாடசாலை, நீர்வேலி தெற்கு இந்து இளைஞர்மன்றம் போன்ற நிறுவனங்கள் தமது பங்களிப்பினை ஆற்றி வருகின்றன. எனினும் இயந்திர கதியான வாழ்க்கை, நாகரிக மோகம், போர்மற்றும் பொருளாதார காரணங்களினால் மக்கள் புலம்பெயர்ந்து வேறுநாடுகளுக்கு சென்றமை, வாழ்வாதாரப் பிரச்சனைகள் போன்ற வற்றினால் இளைஞர்கள் ஒன்றிணைந்து இந்து சமய நிறுவனங்களது வளர்ச்சியில் பங்காற்றுகின்றமை இன்றைய நிலையில் குறைவடைந்துள்ளது. எனவே அனைத்து மக்களும் ஒன்று கூடி இத்தகு நிறுவனங்களது வளர்ச்சியில் பங்காற்றுவதனால் இந்நிறுவனங்களது புகழினை உலகமெங்கும் செழித் தோங்கச் செய்யமுடியும் என்பது மனங்கொள்ளத்தக்க விடயமாகும்.□

### நீர்வை நாட்டு வளம்

*தாக்கணங் குறையுஞ் சோலை தனிப்பனை மீது வைத்த*
*சேக்கையில் வளர்த்த குஞ்சு சிறகடித்து எழுந்து தாவி*
*கூக்குரல் செய்து கூவிக் குயிலினம் சேரக்கண்ட*
*காக்கை தன் இழிவு நோக்கிக் கருத்தழிந்து அயருமன்றே*

*கன்னங்கரிய கதலிவனக் கரையிற் தெருவிற் சாய்ந்து வளர்*
*தென்னம் பாளை மது சொரியத் தேறலுண்டு திகைத்தயரும்*
*சின்னஞ்சிறிய அணில் மீது சீறிச் சினக்கும் காக்கயதன்*
*கன்னங் கிழியக் குட்டுமொரு காட்சி என்றும் உளதாமால்*

அறிஞர் கு.சிற்சபேசன்

கட்டுரை



# நீர்வேலியில் முறைசாராக்கல்வியின் வளர்ச்சி

ச. சிவானந்தன்,
முறைசாராக்கல்வி செயற்திட்ட உத்தியோகத்தர்,
யாழ் கல்வி வலயம்.

## சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நோக்கு:

கல்வி மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. அதனை ஒவ்வொருவருக்கும் கிடைக்க வழிகாட்டுவது அல்லது கிடைக்கச் செய்வது அந்த நாட்டு அரசின் தலையாய கடமையாகும். இலங்கையில் கல்வியானது இலவசமாக வழங்கப்படுகின்றது. ஒவ்வொருவரும் 05–16வயது வரை கட்டாயகல்வியைப் பெற்றிருக்க வேண்டும் என்பது வாழ்க்கையின் நியதி யாகும். இதனைப் பல ஊடகங்கள் மூலமாகப் பெற்ற போதிலும் "பாடசாலை" என்ற நிறுவனத்தினூடாக வழங்கப்படுகின்ற கல்வி அறிவும் அனுபவமும் இணைந்து செல்கின்றது. பாடசாலை சமூகத்தின் நிறுவனம். ஒவ்வொரு தனிமனிதனையும் ஒழுக்க விழுமியங்களால் "தேர்ச்சி" பெறச் செய்து தன்னையும் குடும்பத்தையும் சமூகத்தையும் விளங்கிக் கொண்டு சர்வதேச ரீதியாக தன்னை எதிர்கொள்ளும் எந்த விதமான சவால்களுக்கும் முகம் கொடுக்கும் வகையில் வாழ வழி காட்டுவதே அதன் பிரதான பொறுப்பாகும்.

இந்தவகையில் முறைக்கல்வியோடு இணைந்து முறைசாராக் கல்வியும் வாழ்க்கையைத் தயார்படுத்தி வருகிறது. "வாழக் கல்மின்" என்பதே யாழ்ப்பாணக்கல்வி வலயத்தின் மகுடவாசகமாக விளங்குகின்றது. எனவே முறைசாராக் கல்வி முக்கியமானதொருதுறையாக உணரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நீர்வேலிக் கிராமத்தில் அதன் வளர்ச்சி தனித்துவமானது முறைசாராக்கல்வி என்பது பொதுக்கல்வியின் ஓர்அம்சமாக விளங்குகின்றது. அடிப்படைக்கல்வியைப் பெறத் தவறியவர்களுக்கும், அடிப்படைக் கல்வியை

இடைநிறுத்தி குடும்ப சூழ்நிலை காரணமாக தொழில் வாழ்க்கைக்கு உட்புகவேண்டியவர்களும் வினைத்திறனும் விளைதிறனும் கூடிய பயிற்சி களைப் பெற வசதி காட்டும் கல்வி முறைமை எனக் கூறிக்கொள்ளலாம். இது திட்டமிடப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பையும் குறிக்கோள், நோக்கம் என்ப வற்றைக் கொண்டு நெகிழ்வுத் தன்மை கொண்ட கல்வியாக விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

முறைசாராக் கல்வியினூடாக பல்வேறு செயற்திட்டங்கள் முன்வைக் கப்பட்டு வருகின்றன. இவற்றுள் சில தொடர்ச்சியாகவும் சில காலத்தின் தேவை பௌதீக சூழல்வளம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு நடைமுறைப் படுத்ததப்பட்டு வருகின்றன. செயற்திட்டங்களாவன:

*01. கட்டாயக் கல்விச் செயற்திட்டம்*
*02. தொழிற்திறன் பயிற்சித் திட்டம்*
*03. வளர்ந்தோர் கல்வித் திட்டம்*
*04. விருப்புக்குழுவினருக்கான திட்டம்*
*05. சமுதாயக் கல்வித் திட்டம்*
*06. திறந்த பாடசாலைத் திட்டம்*
*07. விசேட கல்வித் திட்டம்*

போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

நீர்வேலிக் கிராமத்தில் மேற்கூறிய செயற்திட்டங்கள் பாடசா லைகள், தனியார் நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்தும் செயற்பட்டு வருகின்றன. பாடசாலைகளுள்ளே.

*யா/ நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி*
*யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை*
*யா/ நீர்வேலி சீ. சீ. த. க. பாடசாலை*
*யா/ நீர்வேலி இ. த. க. பாடசாலை*
*யா/ நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்*

ஆகிய பாடசாலைகள் முன்னணி வகிக்கின்றன. இவற்றை விட முறைசாராக் கல்வி என்ற பாவனையில் கிராம அபிவிருத்திச்சபை, பிரதேசசபை, பிரதேச செயலகம் , மகளீர் அபிவிருத்தி மன்றம், மிர்வகம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பனவும் இக்கல்விச் செயற்பாடுகளை கிராமத்திற்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் அரசாங்கப் பாடசாலையூடாக வழங்கப்படுகின்ற முறைசாராக் கல்வியில் அதிக நாட்டங் காட்டிவருகின்றமை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய தொன்றாகும்.


மேற்கூறிய செயற்திட்டங்களுள்ளே கட்டாயக்கல்விச் செயற் திட்டம், தொழிற்திறன் பயிற்சித் திட்டம், திறந்த பாடசாலைத் திட்டம் ஆகியன முக்கிய பங்கை வகிக்கின்றன. இவற்றுள்ளே கட்டாயக்கல்விச் செயற்திட்டமானது ஒரு பொதுவான நாடு முழுவதும் தேவையான ஒரு திட்டமாகும். அதாவது 05-18வயது வரை ஒவ்வொருவரும் கல்வி கற்கவேண்டும் என்பதனை உறுதிப்படுத்துவதாகும். இதற்காக பாடசாலைகள் தோறும் கட்டாயக்கல்வி வரவுக்குழு அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. பாடசாலை செல்லாத, .இடைவிலகிய பிள்ளைகளை இனம் கண்டு பாடசாலையில் இணைத்தல், வரவு ஒழுங்கீனமான பிள்ளைகளின் வீட்டிற்குச் சென்று பெற்றோருடன் கலந்துரை யாடி சூழ்நிலைகளை அறிந்து பாடசாலையில் இணைத்தல் அல்லது பொருத்த மான கல்விக்கு வழிகாட்டுதல் என்பன இத்திட்டத்தின் நோக்கமாகும். நீர்வேலிக் கிராமப் பாடசாலைகளில் மாணவரின் வரவு திருப்திகரமாக உள்ளது. கல்வியிலும் முன்னேற்றமடைந்துள்ளது.

தொழிற்திறன் பயிற்சித் திட்டத்தின் வளர்ச்சியை நோக்குகின்ற போது இதில் பல தொழிற்பயிற்சி நெறிகள் உள்ளன. இவற்றுள் சில பயிற்சி நெறிகளையே நடாத்துத முடிந்துள்ளது. அடிப்படைக்கல்வியைப் பெற்ற இளைஞர்கள் யுவதிகளுக்கு "தொழில் வழிகாட்டல்"கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. நீர்வேலிக்கிராமத்தைச் சேர்ந்த 50 பயனாளிகள் கலந்து கொண்டனர். மேலும் அடிப்படைத்தொழில் பற்றிய அறிவு வழங்குதல், தொழிலுக்கு வழிகாட்டுதல் என்ற நோக்கில் கணினி, மனைமுகாமைத்துவம், ஆங்கிலமொழி, சிங்களமொழி ஆகிய பயிற்சிகள் நடாத்தப்பட்டன. ஏறக் குறைய 175 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இவர்களில் 25 மாணவர்கள் கணினிக்கற்கையை யா/அத்தியார் இந்துக்கல்லூரியில் பெற்றனர். உடை யமைத்தல், தலைஅலங்காரம், சமையல்கள், ஐசிங் ஆகிய பயிற்சிகள் இவற்றுள் அடங்குகின்றன. சமூகக் கற்கை நிலையம் யா/நீர்வேலி றோ. க. த. க.

பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக இப்பயிற்சிநெறி 2009ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் போதே சில தொழில் வாய்ப்பை பெறக்கூடியதிறன்கள் இப்பயிற்சி நெறியில் உள்ளது.

மேலும் சிங்களமொழி ஆங்கிலமொழியினுடைய தேவை மிக முக்கிய மாகவுள்ளது. இதன் பயன்கருதி யா/நீர்வேலி றோ. க .த. க. பாடசாலையில் 90 பயனாளிகள் சிங்களமொழியையும் நீர்வேலி கந்தசுவாமி கோயில் அருகில் உள்ள இந்து இளைஞர் மன்றத்தில் 25 இளைஞர் யுவதிகள் ஆங்கிலமொழியை யும் கற்று தொழில் தகமைச் சான்றிதழைப் பெற்றுள்ளர். இந்தப் பயிற்சிகள் தொடர்ந்து யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூயில் இவ்வருடம் நடைபெற்று வருகின்றது. இந்த பாடசாலைத் திட்டமானது மகரகம தேசியகல்வி நிறுனத்தின் அனுசரணையுடன் யா/அத்தியார் இந்துக்கல்லூாயி யில் நடைபெற்று வருகின்றது. யாழ்ப்பாணக்கல்வி வலயத்தில் இப்பாடசாலையி லேயே இது இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பல்வேறு காரணங் களினால் அடிப்படைக்கல்வியை பெறத் தவறியவர்களுக்கு ஒரு சந்தர்ப் பத்தை வழங்கும் நோக்குடன் இது நடாத்தப்பட்டு வருகின்றது. 85பயனாளிகள் ஆங்கிலம், விஞ்ஞானம், சிங்களம் ஆகிய பாடநெறிகள் நடைபெற்று வருகின்றன. நிலையப்பொறுப்பாளராக திரு. இ. குணநாதன் (அதிபர் யா/அத்தியார் இந்துக் கல்லூரி) அவர்கள் சிறந்த முறையில் மேற்பார்வை செய் வதோடு தேவையான வேளை ஆலோசனைகளையும் வழங்கிவருகிறார். இதனால் வலயக்கல்விப் பணிப்பாளராலும் தேசியகல்வி நிறுவக திறந்த பாடசாலைப் பணிப்பாளராலும் சிறந்த மேற்பார்வையாளர் என்ற பாராட்டையும் பெற்றுள்ளார். அவருடைய சேவை அர்ப்பணிப்பும் பரந்த நோக்கும் இத்திட்டத்தினைச் சிறப்பாக நடாத்துவதற்கு உறுதுணையாக உள்ளது. என்பது எனது கருத்தாகும்.

இந்த வகையில் நோக்குகின்ற போது நல்நோக்கம் கொண்ட கிராமசேவையாளர் திரு. எஸ். சண்முகவடிவேல் பாடசாலை அதிபர்கள் , ஆசிரியர்கள் சமூகத்தொண்டர்கள், ஆற்றல் விழுமியப்பண்புகளைக் கொண்ட இளைஞர், யுவதிகளின் ஒத்துழைப்பும் ஒருங்கே இணைந்து செயற்படு கின்றமையால் முறைசாராக் கல்வியானது நீர்வேலிக்கிராமத்தில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது என்றால் மிகையாகாது.□



# எங்களூர்

கவிதை: கு.துரைராஜன் (ஆசிரியர்).
அத்தியார் இந்துக் கல்லூரி.
நீர்வேலி

## காப்பு

செந்தமிழே! நீர்வைக் கந்தனூரைப் பாட
தந்திடுவாய் அருளே !

1. வானநிலவிலே வாழைகள் ஆடிடும் சூழல் நிறைந்த தேசமடி
வரிமீனினம் துள்ளியே நெல்வயல் பாய்ந்திடும்
செம்மணிக்கீழ் எல்லையுள்ளதடி நீர்வைநகர் என்று சொல்லுங்கடி
குளம் மூடிக்கிடக்குது பூக்களடி (வான)

2. தெற்கு வடக்காய் மேற்கமைந்துள்ளன கோப்பாய்
அச்செழு சிறுப்பிட்டி
இவையாவும் எங்களின் சோதரர் ஆனார்கள்
வாழத்தி வணங்கியே கும்மியடி
புகழ் பூத்துக்களிக்கின்ற நீர்வையடி செந்தூர்க் கோவில்
மணிதினம் கேட்குமடி (வான)

3. தேன்துளி ஊற்றொடு நீரது எல்லையாய் வாய்த்ததினால்
வந்த பேருமிது
வண்டில்திடல் போட்டிகண்டு களித்தபின் வானவில்
கைகொட்டிச் சிரிக்குமெடி
வளம்பாடிக் களிக்கின்ற தாய்மடி நீ சுகம் பூத்துச்
சுமக்கின்றாய் பாரமடி (வான)

4 அரசகேசரிப் பிள்ளையார் ஆசியால் நீதி தவழுது
இந்த மண்ணில்
அவன் ஆனைமுகன் அன்னை காமாட்சி காளியும்
ஏனைய தெய்வமும் காக்குமடி
நீர்வை நகரிது பாருங்கடி தெய்வ அவதாரப் பூமியடி (வான)

5 தாமரைக் கையிலே யேசுவைத் தாங்கிய மேரி அருள்
மழைத் தேசமிது
வயல்காட்டிலே மாட்டிலே மீன் துள்ளிப்பாய்ந்திட
வீடுவரை அவை பால் சொரியும்
இந்த வீதிப்புழுதி அணையுமடி எங்கள் நீர்வைப்பதி
சொல்லிக் கும்மியடி (வான)

6. செந்தமிழ் ஆங்கிலச் செம்மல்கள் சைவர்கள் ஏனைய
மதச் சான்றோர் வாழுமிடம்
சிவசங்கர பண்டிதர் போன்ற அறிஞர்கள் தோன்றி வளர்ந்த
இச்சீமையடி
சாதி மதச் சண்டை இங்கு இல்லையடி ஜென்ம பூமிக்கு
வாழ்த்திது கும்மியடி (வான)

7. என்ன வளமில்லை எங்களின் நீர்வையில் – மண்ணை
அகழ்ந்தெல்லோ முத்தெடுப்போம்
வாய்க்கால் பிள்ளையார் ஆசியால் ஏதுங் குறைவில்லை
கூத்துவசந்தனை ஆடுங்கடா
கைகொட்டியே தோள்கொட்டியே ஆடுங்கடா (வான)

8. இன்னறுஞ் சோலைகள் காய்கறித் தோட்டங்கள் –ஏர்
முனையாலிங்கு பூக்குதடா
கலை அள்ளிச்சொரிகின்ற காவியப்பற்றிகள் எத்தனை
இங்கு இருக்குதடா
தேவ திருச்சபைக் கோவிலடி தட்டிப்பாடு கதவு
திறக்குமடி (வான)

9. வெங்காயம் வாழைக்குலைகளின் சங்கம் வாய்த்த
வியாபாரத் தாபனங்கள்
காமாட்சி கைத்தொழில் வாகனத் தேர்சிற்பம்
வல்ல பலர் உள்ள நீர்வைநகர்
கலை நீண்டு வளர்ந்திடும் நீர்வை நகரூடே நீண்ட
நெடுஞ்சாலை நடக்குதடி (வான)

10. வாழ்ந்து முடித்தவர் வீழ்ந்து மடிந்தபின் வாழ்வு
சரித்திரம் ஆவதில்லை
பிறர் வாழ்ந் திடந்தான் வீழ்ந்து தம்மைக் கொடுத்தவர்
சாவது பூமியில் இல்லையடி
எங்கள் அத்தியார் இந்து பாருங்கடி அருணாசலத்தார்
புகழ் சொல்லுங்கடி (வான)

11. செத்துமடிந்து சாய்ந்திடலாம் இந்தத் தேசம்
சிறப்பது தீரர்களால்
பட்டமரம் கூடப் பூத்திடலாம் இந்தப பூமிக்குள்
ஜீவன் இருக்குதடி
தத்துவ வித்தகர் வாழ்ந்த மண்ணே உந்தன்
சாதனைக் காயிரம் வந்தனைகள் □ (வான)

**நீர்வேலி பற்றி அறிந்து கொள்ள விழைவோருக்கு உதவும் வகையில் நீர்வையில் வெளிவந்த நூல்**




ஆசிரியர் : சமூகசோதி த.பரராசசிங்கம்

23.02.2000 ஆந்திகதியில் பதிப்பிக்கப்பட்ட நூல். 230 பக்கங்களில் வெளிவந்தது. அமைவிடச் சிறப்பு, நிர்வாகச் சிறப்பு, ஆலயச் சிறப்பு, கல்விச் சிறப்பு, கமத்தொழில் சிறப்பு, கைத்தொழில் சிறப்பு, விருந்தோம்பற் சிறப்பு, கலைச் சிறப்பு, விளையாட்டுத்துறைச் சிறப்பு, சித்த வைத்தியச் சிறப்பு, கூட்டுறவுச் சிறப்பு, சமூகசேவைச் சிறப்பு, சமயத்தொண்டு சிறப்பு, பெரியார்ச் சிறப்பு.ஆகிய விடயங்களை உள்ளடக்கிய நூல்.

கவிதை

# செழுமைமிகு நீர்வையூர்

ச. அனுசாகரி
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

தமிழ்மூவாயிரம் செய் மூலன் புகழ் இலங்கையின்
சென்னியென விளங்கும் யாழ்ப்பாணத்திலே
சைவமும் தமிழும் தழைத்தோங்க
வளம்பல கொண்டு விளங்குவது நீர்வேலி

முக்கனி தரும் மா, பலா வாழை மரங்களும்
பணம் தரும் பயிர்களும் உள்ள வளநாடு
பொன்விளையும் செம்மண் பூமி
நீர்வளம் பொருந்திய விளைபூமி

கரிய நிறத்தில் கம்பீரமாய் நிற்கும் பனங்கூடலும்
செந்நிற தம்பளப்பூச்சிகள் கும்பலானது போல்
முற்றத்தில் பரப்பியிருக்கும் மிளகாய்ப் பழங்களும்
தென்னை கமுகு மரச் சோலைகளும்
இயற்கையின் எழில் வனப்பை எமக்கூட்டுகின்றன.

வெள்ளையுள்ளம் கொண்ட இக்கிராமமக்கள்
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர் என்ற பொய்யாமொழியை
சிரமேற்கொண்டு விவசாயத்தில் விருப்புடையவர்கள்

வாழைச்செய்கையிலே தனியிடம்பிடித்தவர்கள்
வாழைக்குலைச்சங்கம் தக்க சான்றன்றோ?
வீடுகள் தோறும் செழித்துள்ள - வாழையின்
கன்னி அழகும் தாய்மைப் பொலிவும்

கவிஞர்கள் பாடுபொருளன்றோ.
ஈழத்து இலக்கியம் தனிலே புகழ்பெறு அரசகேசரி
விநாயகனும் இவ்வூரின் மத்தியில் அருளாட்சி புரிகின்றார்
பல்லாயிரம் மாணவரின் அறிவுப்பசி தீர்க்கும்
பெரிய சிறிய பாடசாலைகள், நூல்நிலையம்,
பிணிநீக்கும் வைத்திய சாலைகள், வங்கிகள்

இன்னும் பற்பல பொதுச்சேவை நிறுவனங்கள்
அல்லற்படும் மக்களுக்கு சிறப்புற பணியாற்றி
அழகுக்கு அழகு சேர்க்கின்ற - இக்கிராமம்
மேன்மேலும் வளம் பெற வாழ்த்துகின்றேன். □

**நீர்வேலி பற்றி அறிந்து கொள்ள விழைவோருக்கு உதவும் வகையில் நீர்வையில் வெளிவந்த நூல்கள்**




தொகுப்பாசிரியர்கள் :
நீர்வைமணி, ப.கணேசலிங்கம்

யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் திரு. ப. கணேசலிங்கத்தின் பிரியபத்தினி அமரர் சாந்தி கணேசலிங்கம் அவர்களின் நினைவாக 1999 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நூல். 65 பக்கங்களில் வெளிவந்தது. நீர்வேலியில் உள்ள இந்து ஆலயங்களின் வரலாற்றையும் அவற்றின் ஊஞ்சல் பாக்களையும் உள்ளடக்கிய நூல்.

தொகுப்பாசிரியர் :நீர்வைமணி

சமூகசேவகர் அமரர் கார்த்திகேசு சிவபாலன் அவர்களின் சிவபதப்பேறு குறித்த மலர். இரங்கல் செய்திகளை விட 48 பக்கங்களில் நீர்வேலிக் கிராமத்திற்காக உழைத்த பெரியார்களின் வரலாறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 36 உத்தமர்கள் பற்றி இந்நூல் குறிப்பிடுகின்றது.



கட்டுரை



# வினைத்திறன் மேம்பட விளையாடும் நீர்வையம்பதி கிராமம்

திரு. ந. சிறிமுருகதாஸ்காந்தராசா
உடற்கல்வி அசிரிய ஆலோசகர்,
யாழ். கல்வி வலயம்.

காலத்தின் போக்கிற்கேற்பவும் சமுதாய தேவை கருதியும், நீர்வேலி வாழ் மக்கள் கிராமிய விளையாட்டுக்களில் அதிக ஈடுபாடு உடையவர்களாக மிளிர்ந்து வருகின்றனர். கிராமிய மட்டத்தில் ஆடப்பட்ட விளையாட்டுக்கள் தமிழர் தம் பண்பாடு மிளிர தமது வீரதீரச் செயல்களை வெளிப்படுத்தும் வகையில் ஆடப்பட்டன. இவ்விளையாட்டுக்கள் எமது உடல் வலுவை வெளிப்படுத்துவதோடு சமூக ஒருமைப்பாடும் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்கும் பண்புகள் போன்றவற்றை வளர்த்துக் கொள்ள விளையாட்டுக்கள் உதவுகின்றன.

மண் வாசனைக்கேற்ப பல விளையாட்டுக்கள் விளையாடப் பட்டாலும் மாட்டுவண்டிச் சவாரியே எல்லாவற்றையும் விஞ்சி நிற்கின்றது. சுதந்திரம் அடைவதற்கு முன்னர் உள்ள காலப்பகுதியில் தமிழர் பண்பாட்டை விளக்கும் விளையாட்டாக மாட்டுவண்டிச்சவாரி இருந்து வந்தது. இதனை 1948ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபரான முருகேசம்பிள்ளை அவர்கள் அத்தியார் இந்துக்கல்லூரித் திடலில் தொடங்கி வைத்தார் நீர்வேலியில் இது புதுப்பொலிவுடன் கைக்கொள்ளப்பட்டது. வண்டிச்சவாரி என்றாலும் நீர்வேலி சவாரித்திடலே மனக்கண் முன்தோன்றும் அளவுக்கு புகழ்பூத்த விளையாட்டாக அன்றைய நீர்வேலி இருந்தது வீரம் மிகுந்த காளையர் வீரம் செறிந்த காளைகளுடன் களத்தில் இறங்கி வீரதீரச் சாகசங்களைக் காட்டுவர். இது கண்கொள்ளாக் காட்சியாகவே அமையும் இக்கிராமத்தவர்கள் மட்டுமன்றி இம்மாவட்டத்திலிருந்தும் ஏனைய மாவட்டாங் களிலிருந்தும் பல வீரர்கள் காளைச் சோடிகளுடன் வந்து குவிவர். பொங்கல், சுதந்திரதினக் கொண்டாட்டம், புதுவருடப்பிறப்பு, தினகரன் விளையாட்டுவிழா, ஈழநாட்டு விளையாட்டு விழா போன்ற நிகழ்வுகளின் போது 40 சோடி மாடுகள் சவாரித்திடலை வலம் வரும். அழகுகான சுற்றுவட்டார மக்களும் ஏனைய கிராமத்தவர்களும் ஆண், பெண், சிறுவர், முதியோர் கற்றோர், பாமரர் என்ற வேறுபாடின்றி அனைவரும் கூடுவது நீர்வேலிக் கிராமத்திற்குரிய ஒரு சிறப்பம்சமாகும்.

இம் மண்ணிலே சவாரியில் புகழ் பெற்றோர் வரிசையில் அப்பர் இராமுப்பிள்ளை, இ. கந்தையா, ஐயா அண்ணன் அச்செழுவைச் சேர்ந்த சுருளி என அழைக்கப்படும் கந்தையா சிறுப்பிட்டி தம்பையா ஆகியோர் வாகை சூடி நின்றன 1950ஆம் ஆண்டு அத்தியார் இந்துக்கல்லூரியில் பாரிய பொருட்காட்சி இடம் பெற்றது அந்நிகழ்வின் இறுதியாக மாட்டுவண்டிச்சவாரி இடம் பெற்ற போது அதில் நீர்வேலிக் காளைகளே வாகை சூடிக் கொண்டன. அரசாங்கத்தின் சிபார்சுக்கிணங்க அச்செழு வடக்கு வீதியில் புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதி 400 மீற்றர் தூரம் காளைகளின் பயிற்சிச்சாலையாக விளங்கியது. Bull Training Track அமைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கென அறிவிப்புப்பலகை பெரிய சிவப்புநிற எழுத்துக்களால் மும்மொழிகளிலும் அமைக்கப்பட்டது. பின்னர் அவ்விடம் தார் இட்டு வீதியாக செப்பனிடப் பட்டுள்ளது. 1980, 1990 காலப் பகுதிகளில் இக்கிராமத்தில் சவாரிச்சங்கங்கள் அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் போட்டிகள் நடைபெற்றன. ஏனைய கிராமத்தில் உள்ள சவாரித் திடலுடன் ஒப்பிடுமிடத்து எமது கிராமத்து சவாரித்திடல் இடவசதி, போக்குவரத்துவசதி குறைந்ததாக காணப்படுவதால் . ஏனைய கிராமத்தவர்களும் போட்டிகளை இத்திடலில் நடாத்துவதனால் இக் கிராமம் பெருமை பெறும்.

கிராம மட்டத்தில் கிளித்தட்டு, கோலாட்டம், வசந்தனடி போன்ற விளையாட்டுக்களும் இடம் பெற்றன. இவ்விளையாட்டுக்கள் சிறுவர் சிறுமியர், பெரியோர் எனப் பலராலும் ஆடப்பட்டன இதில் வசந்தனடி கோயில்களில் மழை வேண்டி ஆடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. காலச்சக்கரத்தின் தேவைக் கேற்ப பழையன கழிதலும் புதியன புகுதலும் இயல்பு இந்த வகையில் நீர்வேலியில் கிராமிய விளையாட்டுக்களில் நாட்டம் கூடியவர்கள் சர்வதேச அரங்க விளையாட்டுக்களில் விருப்பம் காட்டினர். இதன் விளையாட்டுக்களில் விருப்பம் காட்டினர். இதன் விளைவாக பல கழகங்கள் அமைக்கப்பட்டன அவற்றுள்

- *நீர்வேலி ஸ்ரீ கணேசா விளையாட்டுக்கழகம்*
- *நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்*
- *நீர்வேலி சுப்பிரமணிய விளையாட்டுக்கழகம்*

போன்ற கழகங்களில் உடல் உறுதிக்காகவும் பொழுதுபோக்கிற் காகவும் விளையாட்டில் ஈடுபட்டனர். கால நீரோட்டத்தில் சில கழகங்கள் தற்போது சீராக இயங்காதுள்ளன. நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆரம்ப காலங்களில் பந்தாட்டத்தில் சிறந்து விளங்கியது. இது ஏனைய மாவட்டங்களிற்கு சென்று

அம்மாவட்ட அணிகளுடன் விளையாடி வெற்றி பெற்றது. அதே போல் ஏனைய மாவட்ட அணிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போட்டிகளில் பங்கு பற்றிய போது நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றி ஈட்டியது. இக்கழகத்தில் மரதனோட்டம், கிறிஸ்கம்பம் ஏறுதல், சைக்கிளோட்டம், போர்த்தேங்காய் உடைத்தல் போன்ற கிராமிய விளையாட்டுக்கள் இடம் பெற்றன.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் 1990 காலப்பகுதியில் யாழ்மாவட்டத்தில் சிறந்த ஒரு கரப்பந்தாட்ட அணியாக சிறந்து விளங்கியது. தற்போது வீரர்கள் வெளிநாடு சென்றமை புதிதாக வீரர்கள் இணைவதில் ஆர்வமின்மை சமூகத்தவர்களின் அக்கறையின்மை, இக்கழகம் நடைபெறும் போட்டிகளில் தமது திறமையைக் காட்டாது தோல்வியைத் தழுவுகின்றமை போன்ற காரணங்களால் சிறந்த அணியாக திகழ முடியாதுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு இக்கிராமத்திலுள்ள விளையாட்டு வீரர்களும் ஆர்வலர் களும் ஆர்வமெடுப்பார்களானால் இவ்விளையாட்டை மேம்படுத்து வதுடன் சமூகச் சீரழிவுகளையும் கட்டுப்படுத்தலாம்.

சமுதாயத்தின் அங்கமாக விளங்குவது பாடசாலைகள் ஆகும். இவை அறிவு, திறன் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தி சமுதாயத்தில் நற்பிரஜைகளை உருவாக்குகின்றன. இந்த வகையில் உடலுக்கு உறுதியும் உள்ளத்துக்கு விருத்தியும் தருவது விளையாட்டு என்பதை உணர்ந்த கல்விப்புலத்தினர் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் விளையாட்டுக்கு முத்கியத்துவம் அளிக்கின்றனர். நீர்வேலியிலுள்ள பாடசாலைகளில் முதுகெலும்பாகி பல அறிவுசார் கல்விமான்களை உருவாக்கியது அத்தியார் இந்துக்கல்லூரி ஆகும். 1929ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டில் இருந்தே விளையாட்டுத்துறை வளர்க்கப்பட்டு வருகின்றது. அத்தியின் செல்வங்கள் விளையாட்டில் மிகவும் சிறந்தவர்கள் இது அவர்கள் காலத்துக்குக் காலம் விளையாடிய கோட்டமட்ட, வலயமட்ட, மாகாணமட்ட, தேசியமட்டப் போட்டிகளில் இருந்து சான்று கிடைக்கிறது. 2004ஆம் ஆண்டு 19வயதுப் பிரிவில் தங்கராசா துசன் என்னும் மாணவன் வடக்கு கிழக்கு மாகாணம் இணைந்திருந்த போது இருமாகாண வீரர்களுடன் சளைக்காது போட்டியில் மாகாண சம்பியனாக வெற்றி பெற்றார். 2003ஆம் ஆண்டு துசன், மோகனப்பிரியா 2008இல் சி. ஜீவனா, கி. ஜெசிதா, இ. முகுந்தன் 2011 இல் பே. தயாகரன் போன்றோர் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியமை போற்றத்தக்க விடயமாகும்.

இப்பாடசாலை கரப்பந்து, வலைப்பந்து, ஆட்டங்களிலும் கோட்ட வலய மட்டங்களில் வெற்றி வாகை சூடி வருகின்றது. அந்த வகையில் 2010ஆம் ஆண்டு DSI நிறுவனம் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடாத்திய கரப்பந்தாட்டப் போட்டியில் 14 வயது பெண்கள் அணி மாகாணமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் கால்பதித்து நீர்வேலி மண்ணிற்கு பெருமை தேடித்தந்துள்ளனர். இனி வரும் காலங்களில் அத்தியார் இந்துக்கல்லூரி மட்டுமன்றி நீர்வேலி அணியப்பாடசாலைகள் அனைத்திலும் வீரர்கள் உருவாக்கப்பட்டு தேசிய மட்டம் போட்டிகளில் பங்குபற்றி எமது கிராமத்திற்கு பெருமை சேர்ப்பதற்கு பெற்றோர்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

நீர்வேலியில் பல முன்பள்ளிகளூடாகவும் விளையாட்டுக்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. சிறுவயதிலிருந்து விளையாட்டுக்கள் மூலம் பிள்ளைகளின் திறன்கள் வளர்க்கப்படுகின்றன இவர்கள் தமது முன்பள்ளிகளிலும் அணிய முன்பள்ளி பாடசாலைகளுடனும் இணைந்து விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்களைப் பெற்று கௌரவிக்கப் படுகின்றார்கள் இச்சிறுவர்களே கிராமத்தின் வருங்காலச் சிற்பிகள் ஆவர்.

நிர்வேலிக் கிராமத்தவர்களினதும் சுவிஸ் நற்பணிச்சங்கம், இலண்டன் நலன்புரிச்சங்கம், அத்தியார் இந்துக்கல்லூரி அதிபரான திரு. இ. குணநாதனின் விடாமுயற்சியினாலும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் என்போரின் ஆதரவுடனும் நீர்வேலிக் கிராமத்திலே 400மீற்றர் ஓடு பாதைகளைக் கொண்ட விளையாட்டு மைதானம் 2010 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது கோப்பாய் கோட்டத்திற்கு மட்டுமன்றி யாழ்மாவட்டத்திற்கும் ஒரு தனிச்சிறப்பாக அமைந்துள்ளது. இம்மைதானம் மேலும் பல வசதிகளைப் பெற்று யாழ் மாவட்ட மண்ணில் சிறந்த விளையாட்டு மைதானமாக மிளிரும் என்பதில் ஐயமில்லை. இம் மைதானத்திற்னூடு நீர்வேலிக்கிராமத்து மாணவர்களும் ஏனைய கிராமத்து மாணவர்களும் விளையாட்டுத்திறன்களையும் கல்விகளையும் பெற்று நீர்வேலிக் கிராமத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல உதவும் இக்கிராமத்தில் மாணவர்களது அறிவையும், விளையாட்டுத் திறனையும் வளர்ப்பதற்கு இலண்டன் நலன்புரிச்சங்கம் , சுவிஸ் நற்பணிச்சங்கம், கனடா நலன்புரிச்சங்கம் என்பன அயராது உழைத்து வருகின்றன. வருடா வருடம் பண உதவிகளைச் செய்தும் விளையாட்டு உபகரணங்களை வழங்கியும் விளை யாட்டுத்துறையினை மேம்படுத்தி வருகின்றன.

நீர்வேலி வாழ்மக்கள் விளையாட்டில் ஆர்வம் காட்டினாலும் அது முற்று முழுதான ஆர்வமாக அமையவில்லை. நகரப்புறத்தைப் போன்று பெரு வளர்ச்சியும் அடையவில்லை. கல்வியிலே அதிக ஆர்வமுடைய பெற்றோர், பிள்ளைகள், விளையாடினால் படிப்புக் கெட்டுவிடும் என நினைக்கிறார்கள் படி, படி என்று பிள்ளைகளை ஓயாமல் படிக்கத் திணிக்கிறார்கள். நாள்முழுவதும் ஓயாத அலைகளாக பள்ளிக்கூடம், பிரத்தியேக வகுபபு என்று ஓடி, ஓடி அலைவதால் விளையாட நேரம் ஏது.

இன்று கல்வியில் போட்டி நிலை உச்சம் பெற்றதால் விளையாட்டு பாதிக்கும் என்ற தவறான நம்பிக்கை பெற்றோர் மத்தியில் நிலவுகிறது. விளையாட்டு ஒருவரை சமூகப் பெறுமதியுடையவராக்குகின்றது. இன்றைய கல்வி அமைப்பில் உயர்கல்வி பெறவதற்கும் தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்வதற்கும் விளையாட்டுத்துறை வெற்றிகள் கைகொடுத்து உதவுகின்றன. எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகள் விளையாட்டுத் துறையில் வளர ஊக்கமளியுங்கள்.

விளையாட்டினால் உடலும் உள்ளமும் உறதியாக்கப்பட்டு மாண வர்கள் சமஆளுமைப் பண்பு உடையவர்களாக வளர்த்தெடுக்கப்படு வார்கள். உடலும் உள்ளமும் ஒருங்கிணைந்து உறுதியாக செவ்வனே இயங்கினால் தான் மாணவர் ஒழுங்காகக் கற்க முடியும். விளையாட்டுத் துறையில் பிரபல்யம் பெற்ற ஒருவருக்கு உலகளாவிய ரீதியில் இருக்கும் கூட்டம் போல் வேறு எத்துறையினருக்கும் இருப்பதில்லை. மொழி, இன, மத பேதங்களின்றி சர்வதேச ரீதியில் மக்களை ஒருங்கிணைப்பது விளையாட்டுத் துறையாகும். நீர்வேலி மண்ணின் மைந்தர்கள் தேசியம் வரை சென்று வெற்றி பெற்று நீர்வேலி மண்ணிற்கு பெருமை சேர்க்க அனைவரும் சேர்ந்து உழைப்போம்.

உதவியன:-

01. நேர்காணல்கள்
    இ. குணநாதன்
    சி. அப்புத்துரை
    க. நாகரத்தினம்
02. ஆசிரிய ஆலோசகர் தரவுக் குறிப்புக்கள். □

# ஒரு வியர்வையின் பார்வை

வி. பராபரன்

இன்றைய காலச்சூழல் ஒரு வித்தியாசமான வேகமான
வளர்ச்சிப்பாதையில் சென்றுகொண்டிருக்க உலக அரசியலிலும்
தொழில்நுட்பங்களிலும் எதிர்பார்க்கமுடியாதளவு மாற்றங்களும்
முன்னேற்றங்களும் ஏற்பட்ட வண்ணமுள்ளன.

ஒவ்வொரு மனிதனது வாழ்க்கைமுறைகளும்
வாழ்க்கைத்தரங்களும் மாறுபட்ட வாறும்
வளர்ச்சியடைந்தாகவும் சென்று கொண்டிருக்கின்றன.

மனிதம், கலாசாரம், பண்பாடு மற்றும் ஆன்மீகம் என்பவை
மீதான வாதங்களும் விமர்சனங்களும் பலமாக
ஏழுதப்பட்டுக்கொண்டிருக்கையில், சில முற்போக்காளர்கள்
தமக்கே உரிய பாணியில் காரணம் கூறமுடியாத அல்லது காரணம்
அறியப்படாத மத கலாச்சார நம்பிக்கைகள் மீது பலமாக அடிப்பதன்
மூலம் ஆன்மீகத்தை கேள்விக்கு உள்ளாக்குகின்றனர்.

கிராம உயர்வுக்கு மனித மனங்கள் உயர வேண்டும்
இதற்கு பின்வரும் வழி முறைகளைக் கையாளலாம்.

கிராமிய அமைப்புகளும் சங்கங்களும் சிறுவர்களையும்
இளைஞர்களையும் நெறிப்படுத்துவனூடாக கிராமியமட்டத்தில்
உள்ள ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்தின்வேகத்தையும்
வளர்ச்சிவேகத்தையும் உறுதிசெய்ய முடியும்.

ஒரு கிராமத்தில் உள்ள அனைத்துபள்ளிகளையும் மற்ரைய
அமைப்புக்களையும் ஒன்றிணைத்து மாணவர்களிடையே கலை
இலக்கிய விளையாட்டு மற்றும் வினைத்திறன் போட்டிகளை
நடாத்தி திறமையானவர்களை ஊக்கிவிப்பதனூடு அனைத்து
சிறார்களையும் அனைத்து துறைகளிலும் திறனுள்ளவர்களாக்கி
அவர்களை சிறந்த சிந்தனையாளர்களாக மற்றமுடியும்.
சாவியைத் தொலைத்த வான் கதவுகள்
அகலத் திறந்து கொண்டு கொண்டதால் □



கவிதை

# பெருமை மிகு நீர்வேலி

செல்வி. சிந்துஜா தேவபாலன்,
வாரணாசி
பருத்தித்துறை வீதி
பூதர்மடம், நீர்வேலி

வெப்பக் காற்றின் கங்குகளை மென்மையாய் தொட்டுக் கொண்டு
ஆர்ப்பாட்டமாய் சொரிந்த மழைத்துளிகளை கைதுசெய்து
வேலியிட்டுக் கொண்ட நீர்வையூர்......

சட்டென வெடித்து மென்மையாய் மலரும்
மலர்களின் சுகந்தத்துடன் காற்றில் பரவி
ஏகாந்தத்தை உணரச் செய்யும் காண்டாமணியோசைகள்
கம்பீரமாய் விண்ணுயரும் கோபுரங்களின் கீழ் அமர்ந்து
அன்பானவர்களின் வேண்டுதல் மனுக்களுக்கு
ஆவன செய்யும் அருவமானவன்

செம்பொன் குழைத்து முலாமிட்ட பூமித்தாய்
உரமேறிய கரங்களுக்கும் முறுக்கேறிய காயங்களுக்கும்
பரிசாக பிரசவிக்கிறாள் பெறுமதி மிகு பசுமைகளின் வரங்களை
உடல் பசியிலும் வலியதாய் உணரும் உளத் தேடலின் கல்வியினை
அர்த்தமாக்கும் பாடசாலைகள்
அங்கே...

இலட்சியக் கனவுகளுடன் நாளைய தலைவர்களும்
கனவுகளை நனவுலகத்திற்கு அழைத்து செல்லும் வழிகாட்டிகளும்

காற்றோடு கதை பேசும் மரக்கிளைகள்
நட்சத்திரத்தோழியருடன் பட்டிமன்றம் நடாத்தும் நிலாப்பெண்
மென்மையாய் உரசிப் போகும் பனிக்காற்று
இயற்கை வழங்கும் இனிமைகளில்
அந்தராத்மா விழித்துப் பேசும் இரவுப்பொழுதுகள்
மொத்தத்தில் நம்மூர் இயற்கையுடன் இணைந்த நாகரிகக் காடு □

# நிறைவோடு வாழி

ரூ. யாழினி
நீர்வேலி

*சீர் பலவும் பெற்றிடு நீர்வேலிக் கிராமம்
ஊர் பல போற்றும் உயர் நிலை கொண்டது.
நீர் நிலை தன்னை எல்லையாய்க் கொண்டதால்
நீர்வேலி எனும் பெயர் நிலைபெற்று நீடு வாழி !*

*ஆலய விதாலய சிறப்புக்கள் கொண்டுமே
ஆய நற்பணிகள் நின்றுமே நிலைத்திட
கல்வியாளர்கள் பண்டிதர் பணியென்றும்
நிலை பெற நின்று நிலைத்திட வாழியவே !*

*பார் பல போற்றும் சிவ சங்கரர் பணியதால்
சீர் பெறு அத்தியார் சிறப்புற சேவையால்
நேரிலா உத்தமர் பலர் தனைப் பெற்றுமே
சீரொடு நிலைத்து சிறப்பொடு வாழியவே !*

*இந்து மதத்தொடு கத்தோலிக்க மதமும்
அந்தமிலா அரும் பணியாற்றி நின்றூரில்
சிந்தனையறிவூ ஊட்டிச் சீர் பெறவே நாட்டில்
நிந்தனையிலாது நித்தம் நிறைவொடு வாழியவே !*

*கைத்தொழிலொடு கமத்தொழில் உன்றும்
எத்திக்கும் புகழ் பரப்பி ஏற்றம் பெற்றிட்டே
சித்திகள் நிலைத்து சிறப்புடன் திகழ்ந்துமே
நித்திலம் சிறக்க நிலை பெற வாழியவே !*

*கூட்டுறவதுவே நாட்டுயர்வென்று நிலையது பெற்று
ஏட்டினில் பதிவுகள் ஏற்றம் பெற்றிட
நாட்டினில் உயர்ச்சி நலமொடு திகழ்ந்திட
வாட்டமதில்லாது வளம் பெற்று நிறை வொடு வாழி !* □


கட்டுரை

# எமது கிராமத்திற்கே உரித்தான சூத்திரக்கிணறு

**இராசையா சுஜாதா**
**நீர்வேலி மேற்கு,**
**நீர்வேலி.**

உலகிலுள்ள வளமிக்க பொருட்களில் மிக முக்கியமானதாக நீர் காணப்படுகின்றது. மனிதன் உயிர்வாழ்வதற்கும். பல்வேறுபட்ட தேவை களுக்கும் அத்தியாவசியமானதாக காணப்படுவனவற்றுள் இது முக்கிய இடத்தை வகிக்கின்றது. அந்த வகையில் மனிதன் நீரைப் பெறுவதற்கு பல முறைகளை பண்டைக்காலங்களில் இருந்தே பயன்படுத்தியுள்ளான். இவற்றில் குறிப்பிடத்தக்கதாக சூத்திரக்கிணறு காணப்படுகின்றது.

முற்பட்டகாலத்தில் மனிதன் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு சூத்திரக்கிணற்றை பயன்படுத்தினான். இது சக்கர நீர் இறைக்கும் இயந்திரம் எனவும் அழைக்கப்பட்டது. இவ் இயந்திரமானது 1956 ஆம் ஆண்டு நீர்வேலியைச் சேர்ந்த ஆசாரி தம்பையா என்பவரின் ஆராய்ச்சியின் பயனாக உருவாக்கப்பட்டது. பின்னர் இவரின் வழிகாட்டலின் பின்னர் நீர்வேலியில் பல சூத்திரக்கிணறுகள் தோற்றம் பெற்றன. இது ஆரம்பத்தில் ஒரு காளையை பூட்டி இயந்திரத்தை செயற்படுத்தினர். பின்னர் காலப் போக்கில் 2 காளைகளைப் பூட்டி தமது தேவைகளுக்கு ஏற்றவாறு வாளிகளை அமைத்து (2 வாளி, 3 வாளி, 4 வாளி) செயற்படுத்தினார்.



இச் சூத்திரமானது 3 அடி விட்டமுடைய சக்கரத்தினூடாக சங்கிலினுடைய செயற்பாடு காணப்பட்டது. 1/2 அடி சக்கரத்தினால் சங்கிலியின் நகர்வு காணப்படும்.

இதனை சிலர் "காளை பூட்டும் துலா" எனவும் அழைத்தனர். காளைகளை ஓய்வின்றி நடத்துவதற்கு மனிதவலு முக்கிய தேவையாக காணப்பட்டது. அதாவது காளையினை தொடர்ந்து இயக்குவதற்கு மனிதன் செயற்படவேண்டிய சூழ் நிலை காணப்பட்டது. கிணற்றின் அடிப்பகுதியி லிருந்து வாளியினூடாக நீரைப் பெற்று சூத்திரத் தொட்டிக்குள் அனுப்புவதற்கு வாளியின் கீழ்ப்பகுதியில் கம்பியினுடைய அமுக்கம் (கள்ளன் என அழைக்கப் படும்) கிணற்றிலிருந்து மேல்நோக்கி செயற்படும் போது வாளி சரிக்கப்பட்டு நீர் சூத்திரத்தொட்டிக்குள் விடப்படும். இவ்வாறாக மனிதன் தனது தேவையை இம் முறை மூலம் நிறைவேற்றி வந்தான்.

இம்முறையில் மனித வலு கூடுதலாக தேவைப்பட்டதுடன் காளையும் தேவைப்பட்டது. அத்துடன் கூடிய நிலப்பரப்பும் பிரயோகிக்கப் பட்டதுடன் கூடிய நேரமும் செலவழிக்கப்பட்டது. பின்னர் காலப்போக்கில் இதன் பாவனை குறையத் தொடங்கியது. பின்னர் 1995 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடம்பெயர்வின் காரணமாக இதன் பாவனை முற்றாக இல்லாமல் போனது. ஆயினும் ஒரு சில இடங்களில் இதன் பாவனை இருந்ததாக என்று அறியக் கூடியதாக இருந்தாலும் உறுதி செய்யப்படவில்லை.


இதன் பாவனையானது குறையத்தொடங்கியமைக்கான காரணத்தை விவசாயிகளிடம் வினாவியபோது அவர்கள் பின்வரும் காரணங்களை கூறினர்.

- காலத்தின் தேவைக்கேற்ப விவசாயநிலம் கூடுதலாக தேவைப் பட்டது. வளர்ச்சியடைந்த விஞ்ஞானத்தினால் நீர் இறைக்கும் இயந்திரம், மின் மோட்டர் பயன் படுத்தும் திறன் கூடியமை.
- காளையிற்கு உணவிற்கான செலவீனம் கூடுதலாக காணப்பட்டது.
- மனித வலு கூடுதலாக தேவைப்பட்டமை.

போன்ற காரணங்களை வழிமொழிந்தனர்.

இவ்வாறாக எமது கிராமத்திற்கே உரித்தான சூத்திரக்கிணற்றின் பாவனை முற்றாக இல்லாது போய்விட்டது. ஆனாலும் இயந்திரம் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இச் சூத்திரக் கிணறு ஆனது இவ்வாறு அழிவடைந்தால் இனி வரும் சமுதாயத்திற்கு தெரியாமலே போய்விடும். ஆனாலும் இப்பொழுது இருக்கும் குழந்தைகளுக்கும் இது பற்றிய அறிவே தெரியாமல் காணப்படுகின்றது.நான் தவழ்ந்த

கவிதை



# நான் தவழ்ந்த மண்

நீர்வை இரத்தினரூபன்
ஹொலண்ட்

மண்ணே
முதல் வணக்கம்
உன்னை அள்ளி அள்ளி
முத்தமிட ஏங்குது நெஞ்சம்

நான் நனைந்த மழைத்துளியே
என் முற்றத்து நிலாஒளியே
வாழைமரமே பட்சிகளே
புல்வெளியே பூவரசே

எத்தனையோ ஞாபகங்கள்
நெஞ்சினில் நிழலாடும்
அத்தனை நினைவுகளும்
எனைவிட்டு பிரிவதில்லை

நீர்வை மண்ணே
என் சுவாசம் சுவாசம்
நெஞ்சில் வந்து பாடும்
உன்கீதம் என்றும்

நினைவுகளைத்தாங்கி --நான்
கனவுகளில் ஏங்கி
தாய் மண்ணை நீங்கி வந்தேன்
கவலைகளைத் தாங்கி

பிரிந்து வந்த பொழுதில் - நான்
சுமந்து வந்த பாரம்
முதிர்ந்து விட்ட பொழுதும்
மிதந்திருக்கும் எப்பொழுதும்
கடல் கடந்து வந்தும் - காலம்
கடந்து பலசென்றும்
நிழலாக நெஞ்சில் என்றும்
நிறைந்து இருக்கும் பாசம்
இன்றும்


உறவு பல கண்டேன் - நானும்
ஊர்கள் பல பார்த்தேன்
உதிரத்தின் பிணைப்பு இன்னும்
உறவாகும் நான் தவழ்ந்த
மண்ணில்.

என் அன்னை என் தந்தை
அவர் தந்தை அவர் அன்னை
ஆடி மகிழ்ந்திருந்த மண்
அளிக்கும் அமைதிக்கு ஈடேது

எத்தனை முறை பிறந்தாலும்
நான்
உன் மடியில் தவழ்ந்திடவும்
உன் அடியில் மடிந்திடவும்
அத்தனை வரம் தந்திடுவாய் □

" பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

கட்டுரை



# ஆலயங்களும் நீர்வேலியும் ஒரு தரிசனம்

கு. தியாகராஜக்குருக்கள்
(நீர்வை மணி)

ஆலயம் – ஆன்மா லயப்படும் இடம். இந்த ஆலயங்கள் தான் பழைய கால தமிழ் மக்களின் ஊர்களின் நடு நாயகமாக, அவற்றின் ஜீவனாக, உயிர்ச்சக்தியாக விளங்கியிருக்கின்றன கோ என்றால் அரசன் அரசர்க் கரசனான ஆண்டவன் கொலு வீற்றிருக்கும் இடம் ஆதலில், அது கோயில் எனப்படுகிறது. தேவ தேவனாகிய கடவுள் உறையும் இடமாதலில் அதனை தேவாலயம், தேவஸ்தானம் என்றெல்லாம் போற்றுகிறோம்.

இத்தகு கோயில்கள் எல்லா ஊர்களிலும் இருப்பினும், முக்கியமாக சில ஊர்கள் "கோயில் நகர்" என்றே அழைக்கப்படுகின்றன. தமிழகத்தில் கும்பகோணம், காஞ்சீபுரம், மதுரை போன்றவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இலங்கையில் நல்லூர் போன்றவையும் இத்தன்மையான சிறப்புடை யனவே இவ்வகையிலேயே நம் "திரு நீர்வை" யூரும் கோயிலூர் எனும் பெருமைக்குரிய வகையில் அமைந்துள்ளது.

நீரூரில் உள்ள வருடாந்த அலங்கார உற்சவம் நடைபெறுகின்ற, உற்சவ முர்த்தி வீதி வலம் வருகின்ற, ஆகம வழி அமைந்த முக்கிய கோயில்களை முதலில் மிகச் சுருக்கமாக – நோக்குவோம்.

**நீர்வை அரசகேசரிப் பிள்ளையார்**

**மூலவர்** – அரசகேசரி விநாயகர், வைத்தீஸ்வரர் (சிவனார்) பாலாம்பிகாதேவி

**தீர்த்தம்** – திருநாவுக்கரசு நாயனார் திருக்குளம்

**தலவிருக்ஷம்** – அரச மரம் (விநாயகர்), பவளமல்லிகை (சிவன்)

**பெருவிழா** – ஆவணிச் சதுர்த்தியை அடுத்து கொடியேறி 11 நாட்கள் மஹோற்சவம் மற்றும் திருவெம்பாவை

**தனிச்சிறப்புக்கள்**

❖ இரகுவம்சத்தை தமிழில் எழுதிய அரசகேசரி என்ற மாமந்திரி (16 ஆம் நூற்றாண்டு) வழிபட்டு திருப்பணி செய்த ஆலயம்.

❖ விநாயகரும் சிவனும் தனித்தனியே மூலஸ்தானத்தில் அமைந்து சிவாலய அமைப்புடன் விளங்குவது.

- ❖ பிள்ளையாரின் பெரிய தேர் அற்புத சிற்ப எழிலுடன் அழகுற அமைந்து ஈழத்து தேர்க்கலையில் உன்னத இடம் வகிக்கிறது.
- ❖ ஆலயத்தை சுற்றி பாடசாலை, முன்பள்ளி, குருபூஜைமடம், வாசிகசாலை, அறநெறிப்பாடசாலை என்று அறப்பணி நிலையங்கள் அமைந்துள்ள பெருமையுண்டு.
- ❖ சீரிய அந்தணோத்தமர்கள், துறவிகள் பிறந்த பதி ஆதலில் அவர்கள் வழிபட்ட பெருமான்.

  (உ – ம் : தியாகராசக்குருக்கள், கார்த்திகேய ஐயர், அறிஞர் சிற்சபேசன், செல்லத்துரை சுவாமிகள்)

இவ்வாலயம் சு. இராமசுவாமிக் குருக்களாலும் அவ்வப்போது தர்ம வான்களாலும் 1949 வரை பரிபாலிக்கப்பெற்றது. அதன் பின் இன்று வரை தர்மகத்தாசபையால் பரிபாலனம் செய்யப்படுகின்றது.

இப்பெருமான் பேரில் திருவூஞ்சல், தோத்திரம், பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்கள் உள்ளன. ஆலய அருகாமையில் அந்தணக் குடும்பங்கள் பரம்பரையாக உறைந்து பூஜா காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

## நீர்வேலி வாய்க்காற்தரவைப் பிள்ளையார்

**மூலவர்** – மூத்த விநாயகர் (மூர்த்தி சிறிது – கீர்த்தி பெரிது) அமைந்துள்ள இடம் – மூத்த நயினார் வளவு

**பெருவிழா**– ஆடிப்பூரணையை நிறைவாகக் கொண்டு கொடியேறி மஹோற்சவம்

**தனிச்சிறப்புகள்**

- ❖ 600 ஆண்டு கால பழைமை வாய்ந்தது.
- ❖ மிக அற்புதம் மிக்கதென அறியப்படுவது.
- ❖ எழில் மிகு குதிரை வாகனம் ஒன்றுண்டு.
- ❖ அந்தண குருமார்களே வழி வழியாக அறங்காவலர்கள் ஆகவும் உள்ளனர்.

200 ஆண்டுகளுக்கு முன் கிராமமே பேதிநோயால், வருந்திய போது அரியரிவட்டர் என்ற மந்திரவாதி இப்பிள்ளையாரை வழிபட்டு வசந்தன் பாடி பேதியை ஒழித்தார். சிவசாமிக்குருக்கள் , அண்ணாசாமிக்குருக்கள், பிக்ஷாடனக்குருக்கள் என்று வழியான ஈழப்புகழ் குருத்துவ பரம்பரையைக் கொண்ட கோயிலிது.

## நீர்வேலி கந்தஸ்வாமி

**மூலவர்** – ஸ்ரீ வல்லி தேவசேனா உடனுறை கந்தஸ்வாமி

**தலவிருக்ஷம்** – கடம்பு

**பெருவிழா** – சித்திரா பூரணையை நிறைவு நாளாகக் கொண்டு கொடியேறி 19 நாட்கள் மஹோற்சவம், கந்தஷஷ்டியை ஒட்டி 7 நாட்கள் கொடியேறி மஹோற்சவம்.

**தனிச்சிறப்புக்கள்**

- ❖ 1830 ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் இங்கே ஆரம்பித்த கந்தபுராண படனம் இன்று வரையும் தொடர்கிறது.
- ❖ 1896 முதல் தர்மகர்த்தா சபையாலும் 1968 தொட்டு பரிபாலன சபையாலும் பரிபாலிக்கப்படுகிறது.
- ❖ 2000 இல் மறைந்த வண. சுவாமி நாத இராஜேந்திரக்குருக்கள் இவ்வாலயப் புகழை இலங்கைக்கு அப்பால் இந்தியாவிலும் பரப்பினார்.
- ❖ ஆண்டு தோறும் இரு மஹோற்சவங்கள் இங்கே நடக்கின்றன
- ❖ திருவூஞ்சல், அந்தாதி, பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களுடைய இத்தல ஆறுமுகம் பெருமானின் அழகே அழகாகும்.

ஸ்ரீ. சு. இராஜேந்திர குருக்களின் பணிகளாலும் – நூல் வெளியீடுகளாலும் ஜோதிடம், போன்ற பிற பணிகளாலும் இக் கோயில் மிகப்புகழ் பெற்றது. 2006இல் அழகான இராஜகோபுரமும் அமைக்கப் பட்டுள்ளது.

## நீர்வேலி செல்லக் கதிர்காமம்

**மூலவர்** – செல்வக் கதிர்காம ஸ்வாமி

**உற்சவர்** – சுந்தரராஜர்

**தலவிருக்ஷம்** – நெல்லி

**தீர்த்தம்** – குமார புஷ்கரணி

**பெருவிழா** – ஆனிப்பூரணையை ஒட்டி 12 நாட்கள் கொடியேறி மஹோற்சவம், கந்தஷஷ்டி, ஆடித்திருவோணம்

**தனிச்சிறப்புக்கள்**

- ❖ இரு பெண் தபஸ்வினிகள் ஸ்தாபித்தது
- ❖ முருகன் இங்கு விஷ்ணுரூபமாக உள்ளான்
- ❖ கோயிலின் வளர்ச்சியில் சாதி, மத பேதமற்று யாவருக்கும் பங்குண்டு.

## அம்பாள் கோயில்கள்

- **இராஜராஜேஸ்வரி** – பழையம்மாள் எனப்படுகிறது. விஸ்வப்பிரம்ம குலமக்கள் பரிபாலிக்கிறார்கள். வைகாசி மாதத்தில் மஹோற்சவம் நடக்கிறது.
- **காமாக்ஷியம்பாள்** – நீர்வேலி – சுன்னாகம் வீதியில் உள்ள எழில்மிகு ஆலயம், தைத்திங்கள் பெருவிழா நடக்கிறது.
- **காளிகாம்பாள்** – வட நீர்வையிலுள்ளது பங்குனித் திங்களில் மஹோற்சவம் நடக்கிறது.
- **மீனாட்சியம்பாள்** – மாசுவன் பகுதியிலுள்ள ஆடிப்பூரத்தை ஒட்டி பெருவிழா நடக்கிறது
- **சப்த கன்னிமார்** – நீர்வேலி சந்திக்கு கிழக்காயுள்ளது யாழ்ப்பாணத்திலேயே சப்த கன்னியர் மூலஸ்தானத்தில் உள்ள ஒரே ஒரு ஆலயம். வைகாசிப்பெருவிழா சிறப்பு

இவற்றை விட நாச்சிமார், மஹாமாரி, காளி, மனோன்மணி, நாகபூஷணி, பராசக்தி (குட்டியம்பாள்), இப்படி எத்தனையோ அம்பாள் கோயில்களோடு நீர்வை சக்தி பீடமாக உள்ளது.

நீர்வேலி தெற்கில் முருகையா கோயில் உள்ளது. இக்கோயில் புனரமைக்கப்பட்டு 2010இல் கும்பாபிஷேகமும் நடந்திருக்கிறது. வீரபத்திரர் கோயிலும் உண்டு. பங்குனியில் அலங்கர உற்சவம் நடக்கிறது.

இவை தவிர, பல்வேறு சிறிய – அழகிய பைரவர் கோயில்கள் உள்ளன. பெரிய தம்பிரான் மற்றும் அண்ணமார் (அன்ன – மஹேஸ்வரர்), வல்லியப்பர் ஆகிய சிறிய கிராமிய வழிபாட்டுக் கோயில்களும் உள்ளன.

இவ்வாறாக – குறிப்பிடத்தக்கனவாக நாற்பதிற்கும் மேற்பட்ட இந்துக் கோயில்களை நீர்வேலியில் அடையாளப்படுத்தலாம். விரிவஞ்சி விடுகிறோம். இவை குறித்த பிரபந்தங்களும் வரலாறுகளும் நீர்வையம்பதி என்ற நூலிலும் புகழ் பூத்த நீர்வேலி என்ற நூலிலும் தொகுக்கும் முயற்சிகள் நடந்திருக்கின்றன. எனினும் இவை குறித்த ஆய்வுகள் இன்னும் தொடர வேண்டும்.

## பரலோக மாதா தேவாலயம்

நூற்றாண்டுகள் பழைமையான இத்தேவாலயம் 1905இல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நீர்வேலி வடக்கில் உள்ள இத்தேவாலயத்தில் கத்தோலிக்க மக்கள் பரலோக மாதா என்ற வடிவில் இயேசு கிறிஸ்துவின் தாயாரான அன்னை மரியாளை வழிபடுகின்றனர். யூலை, ஓகஸ்ட் மாதத்தில் இங்கு பெருவிழாவும் நடக்கிறது. அண்மைக்காலத்தில் நீர்வேலி தெற்கில் கத்தோலிக்க புனிதரான அந்தோனியார் பேரிலும் ஒரு சிற்றாலயமும் எழுச்சி யுற்றிருக்கிறது. ஆக நீர்வேலியூரானது கோயிலூராக அமைந்திருக்கிறது.

## நிறைவுரை

எதிர்காலத்தில் இளம் சமுதாயம் இக் கோயில்களின் வரலாற்றை விரிவாக – தெளிவாக அறிய முயல வேண்டும். கோயிற் பணிகளில் முன்னிற்க வேண்டும். தேவையற்ற வகையில் ஆலயங்களை பெருப்பிப்பதையும் புதிய ஆலயங்களை உருவாக்குவதையும் தவிர்க்க வேண்டும்.

இதற்குப் பதிலாக ஆலயங்களினூடே சமூக – அறப்பணிகளை வளர்க்க வேண்டும். இது போலவே, ஆலய சொத்து விபரங்கள் தொகுக்கப்பட்டு சேமிக்க வேண்டும்.

இளம் குருமார்கள் நவீன உலகிற்கு ஏற்ற வகையில் கோயில்சார் சமூக உருவாக்கத்திற்கு பங்களிக்க வேண்டும். கோயில்களில் குருமார்கள், அறங்காவலர்கள் – பரிபாலன சபையினர் மிகக்கவனமாக இறைபணி என்பதை உணர்ந்து நடக்க வேண்டும். (இறை சொத்து குல நாசம்)

தற்போதெல்லாம் கோயிலுக்கு வரும் அடியவர்களின் தொகையில் ஏற்படும் வீழ்ச்சி நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இவை யாவும் கவனத்தில் கொள்ளப்படும் இடத்து நீர்வேலி ஆன்மிக நெறியின் விளைவிடமாக மாறும்.

*"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காணா மணி விளக்கே."*

*(திருமந்திரம்)* □

கட்டுரை

# நீர்வையின் அபிவிருத்தி
## - சில முன்மொழிவுகள்

நீர்வை மகன்

நீர்வையானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏறத்தார் மத்தியில் யாழ் உப்பாறின் ஓர் கரையிலும் கிழக்கே பருத்தித்துறை பிரதான வீதியையும் மேற்கே இராச வீதியையும் வடக்கே சுன்னாகம் வீதியையும் தெற்கே கரந்தன் வீதியியையும் அதனுடன் இணைந்த பிரதேசங்களையும் 6387 மொத்த சனத்தொகையினையும் 9.5 சதுரக்கிலோமீற்றர் பரப்பளவினையும் கொண்ட கிராமமாகும். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நிலவிய போர்ச்சூழல் காரணமாக கிராமத்தின் அபிவிருத்தியில் பாரிய மாற்றம் ஏற்படவில்லை என்பது உண்மை.. இருந்தும் நீர்வேலிக் கிராம மக்களின் அயராத உழைப்பையும் கடமையின் கண்ணியமும் பல இழப்புகளுக்கு மத்தியிலும் எற்பட்ட சூழல்களையும் தாண்டி இன்று ஓர் நல்ல அத்தியாயத்தில் காலடி வைத்திருப்பது எதிர்காலத்தில் எப்படி மற்றைய கிராமங் களுடன் போட்டிபொட்டு ஒரு சிறந்த கிராமமாக அபிவிருத்தியடைய வேண்டும் என்ற சில எண்ணப்பாங்குகள் இங்கு பகிரப்படுகின்றன.

**நீர்வைத்தரவை - முன்னாளில் விமான நிலையம்?**

நீர்வைத்தரவையானது (இப்போது மாட்டுவண்டி சவாரி நடைபெறும் இடம்) வெள்ளைக்காரன் காலத்தில் விமானநிலையமாக பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டமை பற்றி எனது பாட்டனார் அடிக்கடி சொல்லுவது ஞாபகத்திற்கு வருகின்றது. யாழ்குடாநாட்டில் முதன் முதலாக விமானம் வந்து தரையிரங்கிய பெருமையினையும் நீர்வைத் தரவை பெறுகின்றது. பின்னர் சில காரணிகளால் அந்த திட்டம் இடைநிறுத்தப்பட்டு பலாலி விமான நிலையம் யாழ்குடா நாட்டுக்கான விமான நிலயமாக கட்டமைக்கப்பட்டது. இவ்வாறாக விமான நிலையம். நீர்வை மண்ணில் அமைந்திருப்பின் இன்று இந்த நீர்வையின் அபிவிருத்திக் போக்கே மாறியிருக்கும். நீர்வேலிக் கிராமமானது இன்று பல பிரச்சினை களையும் பல தேவைகளையும் கொண்டு காணப்படுகின்றது. மற்றும் முன்னேறி வரும் உலகில் அதிகரித்து வரும் தேவைகள் மற்றும் சனததொகை அபிவிருத்தி என்பவற்றிற்கு ஈடுகொடுக்கும் முகமாகவும் தனது வளர்ச்சிகளின் உச்சப்பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டும் நிலையான அபிவிருத்தியினை நோக்கி செல்லவேண்டியதன் அவசியம் காணப்படுகின்றது. எல்லாத் தொழில் செய்பவர்களையும் தன்னகத்தே கொண்ட

கிராமமானது ஒர் சிறந்த கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டமைந் துள்ளது. அபிவிருத்தியின் போது இவையாவும் பேணிப் பாதுகாப்பட வேண்டியவை.

## அபிவிருத்தி

அபிவிருத்தி என்னும் பொது ஓர் சிறந்த சமுதாயத்தினை உருவாக்கும் செயற்பாடு என்று சுருங்கக் கூறினும் இது மிகவும் ஒரு விரிவான பதமாகும். அபிவிருத்தியானது ஒரு துறையில் மட்டும் ஏற்படும் முன்னேற்றத்தினை வைத்து கூற முடியாது. பௌதீகம், சமூகம், பொருளாதாரம் போன்ற சகலத்துறைகளையும் உள்ளடக்கிய ஒன்றொடொன்று பின்னிப்பிணைந்த ஒன்றிணைந்த அபிவிருத்தியாகவும் நிலைத்த அபிவிருத்தியாகவும் காணப்பட வேண்டும். நீர்வையினைப் பொறுத்தவரையில் நீர்வையினை ஒரு நகரமாக மாற்றும் எந்தவோர் செயற்பாடும், நீர்வையின் சூழல் அமைப்பு, கலாச்சார மற்றும் பண்பாட்டு விழுமியங்களை கருதுமிடத்து அவ்வாறான ஒரு நகர்வினை அபிவிருத்தி என்று சொல்லமுடியாது. அதாவது நீர்வேலி என்பது தொடர்ந்தும் ஓர் கிராமமாக இருக்கவேண்டும் என்பதுடன் அதன் அடையாளத்தினை தொடர்ந்து பேணிப்பாதுகாக்கப்படும் வேளை நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுக்காணப்பட வேண்டியதும் எதிர்கால கேள்வியினை வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடியதுமாக இருத்தல் வேண்டும். இந்த சிறு கட்டுரையில் அதனை மையப்படுத்தியதான நீர்வையின் அபிவிருத்தியினையே கருத்தில் கொள்ளப் படுகின்றது.

## நீர்வையின் அடையாளம்

பல பெரியோர்கள் நீர்வேலி என்ற பெயர் வந்ததற்கான காரணங் களை பல்வேறு கோணங்களில் பார்த்திருப்பினும் நீரினை எல்லையாகக் கொண்ட பிரதேசம் என்பதே அபிவிருத்தியின் நோக்கில் மிகவும் கருத்தில் கொள்ளப்படவேண்டியதான்று. ஆதிகாலம் தொட்டு இலங்கையில் குடியேற்றங் கள் நீர்நிலைகளை மையப்படுத்தி அமைந்து வந்தன என்பதும் பின்பு அந்நியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட காலப்பகுதியில் அதன் பரிமாணம் சிறிது சிறிதாக மாறி வேறு இன்னொரன்ன காரணிகளையும் கருத்தில் கொண்டு குடியேற்றங்கள் பரவி வந்தன. இந்த விடத்து யாழ் குடியேற்ற வரலாற்றினை நோக்குமிடத்தும் நீர்வேலி என்பதன் பெயர் அமையப் பெற்றதனை நோக்குமிடத்தும் நீர்வேலியும் யாழ்பாணக்

குடாநாட்டின் பழம்பெரும் கிராமங்களில் ஒன்றாக இருந்துள்ளதினை ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. மேலும் யாழ் இராச்சியத்தின் மன்னனான பரராஜசேகர மன்னனின் மைத்துனனும் அமைச்சரு மான அரசகேசரி என்பவன் நீர்வையில் அரசகேசரி பிள்ளையார் ஆலயத்தினை ஸ்தாபித்துள்ளமையும் இங்கு முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய தாகும். அதுவும் நீர்வையின் மையப்பகுதியில் ஆலயம் அமைந்துள்ளமை யானது ஆலயத்தினை சுற்றி குடியேற்றங்கள் பரவியிருந்தன என்பதை வெளிப்படையாக்குகிறது.

வரலாற்று சிறப்பினையுடைய நீர்வேலிக் கிராமத்தின் சொல்லப்படாத மையமாக அரசகேசரி பிள்ளையார் அமைந்துள்ள இடமாக இருந்தாலும் நீர்வைச் சந்தியானது பருத்தித்துறை வீதியும் சுன்னாகம் வீதியும் இணையும் புள்ளியில் அமைந்துள்ளமைக்கும் காரணங்கள் உண்டு. அதாவது நீர்வேலியின் போக்குவரத்து உட்கட்டமைப்பு வலைப்பின்னலுடன் நீரினைக் கொண்ட வேலியானது பருத்தித்துறை வீதியின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளமையும் ஒரு சந்திக்குரிய அமைப்பினைக் கொண்டிருந்த தனாலும் நீர்வேலி சந்தி என வழங்கலாயிற்று. சிதைவடைந்த தொழிற்சாலை அபிவிருத்தியினை மையமாக வைத்து நோக்குமிடத்து கிட்டத்தட்ட 30 வருடங்களிற்கு முன் நீர்வேலி சந்தியின் தோற்றத்திற்கும் இன்றைய தோற்றத்திற்கும் இடையில் நிறைய வேறுபாடு இருப்பதினையும் நிராகரிப்பதற் கில்லை. ஏனெனில் நீர்வேலி சந்திக்கு கிட்டியதாக பருத்தித்துறை வீதியின் கிழக்கு பகுதியில் காணப்பட்ட கண்ணாடித்தொழிற்சாலை சுமார் 400 இற்கு மேற்பட்ட கிராமத்தவர்கள் மற்றும் அண்மித்த கிராமத்தவர்களிற்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுத்திருந்ததாகவும் அதன் நிமிர்த்தம் நீர்வேலி சந்தியினை ஓர் ஆர்ப்பாட்டம் மிக்க சந்தியாக வைத்திருக்க காரணமாயிற்று.

இன்று கண்ணாடித் தொழிற்சாலை முற்றாக போரினால் அழிக்கப்பட்டு துடைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றமையானது காண்போருக்கு கவலை தரும் விடயமாக உள்ளது. ஆனால் அதனை மீள ஆரம்பிப்பதற்கான திட்டம் எதுவும் அரசாங்கத்திடமோ அல்லது பிரதேசம்சார் அரசியல் வாதிகளிடமோ காணப்படாதது மிகவும் கவலைக்குரிய விடயமாக காணப்படுகின்றது. இதனை புலம்பெயர் வாழ் நீர்வேலி மக்கள் கவனத்தில் எடுத்து முறையான நகர்வுகளை எடுக்குமிடத்து மிகவும் செயற்திறன் மிக்க கண்ணாடி தொழிற்சாலையாக மாற்றியமைக்கலாம் என்பது திண்ணம்.

**தனித்துவம் இழந்த வாழைக்குலைச் சங்கம்**

நீர்வேலி வாழைக்குலைச்சங்கம் மீண்டும் சுறு சுறுப்பாக இயங்க ஆரம்பித்தும் பல உட்கட்டமைப்பு பலவீனங்களை கொண்டிருப்பது கவலைக் குரியதாகும். அதாவது முழு யாழ்குடாநாட்டிலும் வாழைப்பழ விலையை தீர்மானிக்கும் முக்கிய வாழைக்குலைச் சந்தையாக காணப்பட்டும் முறையாக வாழைக்குலைகளை பக்குவப்படுத்தி வைக்கும் வசதிகளின்மை, மற்றும் வாழைப்பழத்தில் இருந்து பெறுமதி சேர் பொருட்களை (வாழைக்காய் வற்றல், வாழைப்பூரி, வாழைச்சாறு, வாழை மா மற்றும் தூள், வாழைப்பழ சாராயம்) தாயாரிக்க கூடிய செயற்திட்டமின்மை வாழைக்குலைச் செய்கையை சார்ந்து அன்றாட செலவுகளை பூர்த்தி செய்யும் 50 வீதத்திற்கும் மேற்பட்ட மக்களின் வாழ்வாதார பிரச்சனைகளிற்கு காரணமாகின்றது. அதாவது பிராந்திய அடிப்படையில் வாழைக்குலையின் பெறுமதி வீழ்வடையும் போது அதனை பத்திரப்படுத்தி வைக்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் பெறுமதி சேர் உற்பத்திபொருட்களினை உற்பத்தி செய்கூடிய சிறிய தொழிற்சாலைகளினை ஆரம்பிப்பதன் ஊடாக கிராமத்தின் வேலைவாய்ப் பின்மை பிரச்சனைகளை பூரத்தி செய்யக்கூடியதாக இருப்பதுடன் வாழைக் குலையின் விலை வீழ்ச்சியினைக் கட்டுப்படுத்தக்கூடிதாகவும் விலையினை ஓர் நிர்ணயித்த மட்டத்தில் பேணக்கூடிய தாகவும் இருக்கும்.

இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது நீர்வேலிச சந்தியானது உண்மையில் ஓர் முன்னேற்றகரமான ஆர்ப்பாட்டம் மிக்க கூடிய பயன்பாடுகளைக்கொண்ட சந்தியாக மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப் படுகின்றன.

**கட்டிடக்கலையும் வீடமைப்பும்**

யாழ்ப்பாண கட்டிடக்கலையினை நோக்குமிடத்து அதற்கு பாரம்பரிய மான வரலாறு இருப்பதனை காணலாம். குறிப்பாக கோவில்களில் இன்றும் தென்னிந்திய கட்டிடக்கலையமைப்பான திராவிட கட்டிடக்கலை பின்பற்றப் படினும் வீடுகளை அமைக்கும் போது மேலைத்தேய கட்டிடக்கலை சாயல்கள் பின்பற்றப்படுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உதாரணமாக வாஸ்து சாஸ்திர முறைப்படியும் கிராமத்தில் வழக்கத்தில் உள்ள கலாச்சார அடிப்படையிலும் உயர்மாடி வீடுகளை அமைத்தல் விரும்பபட முடியாத ஒன்றாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இருந்தும் சொல்லப்படாத விதி இன்று மீறப்படுகின்றமையால் அதனை சார்ந்து

இருக்கும் குடும்பங்களிற்கு இடைஞ்சலாகவும் தங்களுடைய அன்றாட நடவடிக்கைகளை மிகவும் சுதந்திரமாக எடுத்துச் செல்ல முடியாது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

எனவே எமது பாரம்பரிய கட்டிடக்கலை உத்திகள் வீடுகளை நிர்மாணிக்கும் போது கவனனத்தில் எடுக்கப்பட வேண்டும். நாற்சார் (நாற்சதுர ) வீடமைப்பு அதாவது மையத்தில் ஓர் முற்றத்தை கொண்ட வீடமைப்பானது எமது கிராமத்திற்கு மட்டுமல்ல முழு குடாநாட்டிற்குமே பொருத்தமான ஓர் வீடமைப்பாக காணப்படுகின்றது. இதன் அருமை என்னவெனில் எமது யாழ்ப்பாண குடாநாட்டின் வெப்பநிலைக்கு ஈடுகொடுக்க கூடியதாகவும் இந்துக்களின் கலாச்சார பண்பாடுகளிற்கு ஏற்றவகையிலும் காணப்படுகின்றமையாகும்.

ஆனால் கவலை என்னவெனில் இற்றைக்கு பல வருடங் களிற்கு முன் 10 இற்கும் மேற்பட்ட வீடுகள் காணப்பட்ட பொழுதும் தற்போது ஒருசில வீடுகளே எஞ்சியுள்ளமையாகும். மாற்றம் என்பது அபிவிருத்திக்கு தேவையானபோதும் எமது அடையாளங்களை பேணிக்காக்கும் அடை யாளங்கள் தான் எமது இனத்தினை, எமது மக்களை, எமது கிராமத்தை மற்றைய கிராமங்களிற்கு முன்மாதிரியாக மாற்றக்கூடியதாகவும் நிலையான தாகவும் இருக்கும். எனவே இந்தக் கருத்துக்களை மக்களின் மனத்தில் புதைப்பதில் நீர்வேலி வாழ் பெருமக்கள், சான்றோர்கள், வாஸ்து சாஸ்திரிகள் மற்றும் கட்டடக்கலை விற்பன்னர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

**கலாச்சார பண்பாட்டு அபிவிருத்தி**

தொன்று தொட்டு நீர்வேலிக்கிராமமானது பாரம்பரிய காலாச்சார பண்பாடுகளைக் கொண்டதாகவும் அதிலும் இந்து கலாச்சார பண்பாடுகளில் தழைத்தோன்றியதாகவும் காணப்படுகின்றது. இதில் பாரம்பரிய கலைகள் மற்றும் நாடகங்கள் முக்கியமானதாகும். சத்தியவான் சாவித்திரி, காத்தவராயன் கூத்து, வசந்தனடி மற்றும் பரத நாட்டிய கலைகள் என்பன நீர்வேலிக் கிராமத்தில் ஒவ்வோரு வருடமும் நடைபெறும் கலாச்சார நிகழ்வுகளாக இருப்பதுடன் அவை இப்பிரதேச மக்களினாலேயே மேடையேற்றப்படுவதும் முக்கியமானதாகும்.

இவ்வகையான கலை நிகழ்ச்சிகளின் நிகழுகை எதிர்டி காலத்தில் வளர்ந்து வரும் தொழில் நுட்பம் மற்றும் இயந்திர வளர்ச்சியினால் அற்றுப்

போய்விடுமோ என்ற பயம் காணப்படுகின்றது. இருந்தும் இந்த நீர்வேலி கலை பண்பாட்டுக்கழகத்தின் வருகை இவ்வாறான நிகழ்ச்சிகளை மேம்படுத்துவதோடு அருகிப் போகின்ற எமது காலாச்சார நிகழ்வுகள் மற்றும் பண்பாடுகள் என்பவற்றில் பெரிய பங்கினை ஆற்ற வேண்டிய அவசியத்தைக் கொண்டிருக்கின்றது.

நிகழ்ச்சிகளை ஆற்றுப்படுத்துகைக்குரிய இடங்களை அமைத்து அவற்றை பேணிப்பாதுகாத்து வருவதிலும் பங்களிப்பு செலுத்த வேண்டும். இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில் எல்லா மக்களையும் உள்ளடக்கியதான ஓர்பார்வை பின்பற்றபட வேண்டும். இல்லாவிடில் முழுமையான அபிவருத்தி யினை ஏற்படுத்துவதில் சங்கடமாக அமையும். இதனைத் தவிர பண்டிகைக் காலங்கள் மற்றும் விசேட காலங்களில் கோடைகாலத்தில் நீர்வேலித்தரவையில் நாடாத்தப்பெறும் மாட்டுவண்டிச் சவாரி போட்டியும் கிராமத்தின் காலாச்சாரத்தினை எடுத்தியம்புவதில் முக்கிய வகிபாகம் வகிக்கின்றது.

**பொருளாதார அபிவிருத்தி**

நீர்வேலியானது பல குலத்தொழில்களை செய்பவர்களை தன்னகத்தில் கொண்டமைந்துள்ளதுடன் வாழைப்பயிற்செய்கை முக்கியமானதாக காணப் படுகின்றது. இதனைத் தவிர பொருளாதார பயிர்கள்(வெங்காம் புகையிலை, மிளாகாய், பயறு, மாம்பழம்) மற்றும் நெற்பயிற்செய்கை பிரதான பொருளாதார நடவடிக்கைகளாக காணப்படுவதுடன் இவற்றிற்கு உதவி செய்யக்கூடிய வகையில் ஏனைய குலத்தொழில்கள் காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

பெரும்பாலான குடும்பங்கள் அந்நியச்செலாவணியினை ஈட்டும் குடும்பங்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சுமூகமான பயிற்செய்கையிற்கு தடங்கல்களாக தொடர்ச்சியான நீர்வழங் கலின்மை, நீர் உப்புத்தன்மையாக மாறுதல், நிலத்தடி நீர்மட்டம் குறைகின்றமை மற்றும் காலநிலையில் ஏற்படும் மாற்றங்கள் என்பன காரணங்களாக காணப்படுகின்றன. இவற்றிற்கான தீர்வினை கிராமமட்டத்தில் நோக்குவது உகந்ததன்று. இதனை பிராந்திய மட்டத்தில் நோக்குவோமாக இருந்தால் உப்பாற்றினை நன்னீராக மாற்றும் செயறதிட்டத்தினை அமுல்படுதுதல் நீர்வேலிக் கிராமத்திற்கு ஓர் நற்செய்தியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. சுருங்கக் கூறின் *"யாழ்ப்பாணத்திற்கான ஓர்*

*ஆறு”* என்ற செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதன் மூலம் உவர் நீர்ப் பிரதேசங்கள் நன்நீர்பிரதேசங்களாக மாறுவதுடன் நெற்பயிர்ச் செய்கைக்குரிய காணி விஸ்தீரணம் மேலும் அதிகரிப்பதுடன் இருபோக நெற்பயிற் செய்கைக்கான சாத்தியங்களும் ஏற்படும் என்பது திண்ணம்.

இது ஏறத்தாழ உப்பாற்றினை எல்லையாக கொண்ட எமது கிராமத்திற்கு 15-20 வருட காலப்பகுதியிற்குள் பெரிய வரப்பிரசாதகமாக அமையும் என்பதில் ஐயமில்லை. அதனை விடுத்து நெற்பயிற் செய்கையின் பொருட்டு நெற்காணிகளை மேலும் பல பிரிகைகளிற்கு உட்படுத்தாது ஒன்று சேர்ந்த ஒற்றுமையான விஸ்தீரணமான காணிப்பயிற்செய்கையின் மூலம் சிறந்த பலனை அடையக்கூடியதாக இருக்கும். இதற்கு நெற்பயிற்செய்கையாளர்கள் ஒன்று சேர்ந்து ஓர் கட்டமைப்பமை அமைப்பதன் ஊடாக இதனை அடையலாம் என்பது சாத்தியமாகும்.

இதனைத் தவிர சுருட்டுத்தொழிலும் இவ்வூரில் மேற் கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கையாக உள்ளது.

**கல்வி அபிவிருத்தி**

கடந்த காலங்களை பார்க்கும் போது பல பண்டிதர்களையும் பல புலவர்களையும் தந்த கிராமம் நீர்வேலிக் கிராமம். பின் அப்பேற்ப்பட்ட தமிழை வளர்க்கும் அறிஞர்கள், பண்டிதர்களின் பிரசன்னம் அற்றுப்போய் இப்போது முற்றுமுழுதாக இல்லை என்று சொல்லும் அளவிற்கு நிலைமை சென்று கொண்டிருக்கின்றது. இது எமது கிராமத்தில் மட்டுமல்ல முழு குடாநாட்டிலுமே பாரிய பிரச்சனையாக உள்ளமையானது கவலக்குரியதாகும்.

இப்போது இளைஞர்களின் முழுக்கவனமும் போட்டியான சூழ்நிலைக்கு ஈடுகொடுக்க கூடிய வகையில் பட்டப்படிப்புக்களை தெரிவு செய்தலும் புலம் பெயர்வதனை நோக்காக கொண்டு கல்வியினை கற்பதுமாகும். அண்மைய காலங்களில் சாராசரி மட்டத்தில் பார்க்கும் போது கடந்த பத்தாண்டு காலத்தில் மிக

கூடுதலான மாணவர்கள் பலதரப்பட்ட பட்ட படிப்புக்களை மேற்கொள்ளு வதற்காக பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டமை மிகவும் குறிப்பிடத்தக் கதாகும். ஆனால் அவர்களில் பலர் நாட்டு சூழ்நிலை காரணமாகவும் பொருளாதார கஸ்ட நிலை காரணமாகவும் பிற நாடுகளிற்கு புலம் பெயர்ந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் நீர்வேலித்தாய்க்கு செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விடுகிறார்கள். எனவே இனிவரும் காலங்களில் பல அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளுவதனூடு மூளைசாலிகளின் வெளியேற்றத்தினையும் துடிப்பு மிக்க இளைஞர்களின் வெளியேற்றத் தினையும் தடுத்து நிறுத்தி அவர்களின் பணியினை நீர்வேலிக் கிராமத்திற்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய கட்டாயம் அவசியமாகின்றது.

நீர்வேலிக்கிராமமனது பல பாடசாலைகளை கொண்டுள்ள போதும் பெருவாரியான மாணவர்கள் கிராமத்தினை விட்டு வெளியிடங் களிற்கு செல்வதினை அவதானிக்க கூடியதாக உள்ளது. இதனால் கிராம பாடசலைகள் செயலிழந்தும் செயற்திறன் இழந்தும் காணப்படுகின்றமை கவலை தரும் விடயமாக உள்ளது. குறிப்பாக 6387 மக்களைக்கொண்ட இக்கிராமத்திற்கு தேவையான அளவினை விட கூடுதலான பாடசாலை களையும் ஆசிரியர் மாணவர் விகிதத்தினையும் கொண்ட கிராமமாக இருந்தும் பெருவாரியான மாணவர்கள் வெளியிடங்களிற்கு செல்வதுடன் பல்வேறு சிரமங்களினையும் எதிர்நோக்கு கின்றார்கள். இதற்கு காரணம் எமது பாடசாலைகளில் நிலவும் பல்வேறு பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டியதில் கவனம் செலுத்தப்படாமையாகும். உதாரணமாக அடிப்படைக் கல்வியினை கிராமப் பெரியவர்களும் கல்வியாளர்களும் அக்கறை எடுத்து எல்லா மாணவர்களையும் சிறந்த கல்வித் தராதரம் உடைய மாணவர்களாக மாற்றியமைக்க முடியும் என்பது உண்மையாகும். மேலும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியினை விஞ்ஞான மற்றும் கணிதப்பிரிவுகளை உள்ளடக்கிய தான ஓர் பாடசாலையாக மாற்றியமைத்து எதிர்காலத்தில் ஏனைய முன்மாதிரியான பாடசாலைகளில் ஏற்படும் போட்டி நிலைமையினை ஈடுகட்டும் வகையில் அப்பிராந்தியத்திலே சிறந்த பாடசாலையாக மாற்றி யமைக்க வேண்டிய கட்டாயம் உணரப்பட்டிருக்கிறது.

**இதர உட்கட்டமைப்புக்களின் அபிவிருத்தி**

சிறந்த வீதி வலைப்பின்னலைக் கொண்ட நீர்வேலிக் கிராமத்தின் உள்ளக வீதிகளின் புனரமைப்பு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. மற்றும் நீர்வேலிக் கிராமமானது இயற்கையான மழைநீர் வழிந்தோடும் அமைப்பினைக கொண்டிருப்பினும் காலவோட்டத்தில் இயற்கையான மழை நீரோட்டத்தில் தடைகள் ஏற்படுகின்றமை குறிப்பாக குப்பை கூழங்களை கொட்டுதல், கட்டிடங்களை அமைத்தல் தவிர்க்கப்பட வேண்டியதுடன் மிகவும் சிறந்த முறையில் அவற்றினைப் பராமரித்தலும் அவசியமாகின்றது. மேலும் கைத்தொலைபேசிச் சமிக்ஞை கிடைக்கக் கூடிய பிரதேசமாக காணப் படுவதுடன் அண்மைக் காலங்களில் நிலையான தொலைபேசி இணைப்புக்கள் இணைய வசதிகளுடன் வழங்கப்படுகின்றமை நோக்கத்தக்கதாகும். மேலும் மின்சாரமற்ற பகுதிகளில் மின்சாரத்தினை பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவையும் காணப்படுகின்றது.

குடிநீருக்கான அணுகு தன்மையினை எல்லா மக்களும் கொண்டுள்ள போதும் நீர்வை கிராமத்தின் கிழக்குப் பகுதி மக்களின் ஒரு பகுதியினர் குடிநீருக்காக நீண்ட தூரம் செல்வதினை அவதானிக்க கூடியதாக உள்ளது. இவர்களிற்கு சிறந்த குடிநீரினை பெற்றுக் கொடுப்பதற்கான வழிமுறைகளை பிரதேச சபைக்கூடாக மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. பவுசர்களில் தற்காலிகமாக நீரினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் நீண்டகாலத் தீர்வாக நிலையான நீர்வழங்கலை பெற்றுக் கொடுப்பதற்குரிய நடைமுறையினை ஏற்படுத்தல் வேண்டும். மேலும் வலி கிழக்கு பிரதேச சபையின் உப செயலகத்தினை நூலகத்துடன் சேர்ந்த மிகவும் முன்னேற்ற கரமான சபையாக மாற்றியமைக்கப்வண்டிய கட்டாயம் காணப்படுவதோடு கிராமத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகள் என்பவற்றின் தரங்கள் உயர்த்தப்படுவதோடு கிராமத்தில் உள்ள நிரந்தரமற்ற வீடுகள் மற்றும் வீடுகளை கொண்டிராத மக்களிற்கான வீடமைப்பு வசதிகளையும் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும்.

இவ்வாறாக எல்லா வசதிகளையும் பெற்று ஓர் தன்னிகரான கிராம மாகவும் மற்றைய கிராமங்களிற்கு எடுத்துக்காட்டான கிராமமாகவும் மாற்றியமைத்து நாங்களும் நீர்வைக் கிராமத்தின் மக்களென பூரிப்படை வோமாக.□

கட்டுரை

# நீர்வேலி பிரதேசத்தின் விவசாய நடவடிக்கையில் இரசாயனப்பசளை, கிருமிநாசினி பயன்பாடும் நிலத்தடி நீரில் அதன் தாக்கமும்.

*(Usage of Pesticides and Fertilizers in Agricultural activities and its impact on Underground water in Neervely region.)*

பா. ராஜ்குமார்
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

**1. 1:– முகவுரை *(Introduction)***

சனத்தொகை செறிவுமிக்கதும் விவசாய நடவடிக் கையினை பிரதான வாழ்வாதாரமகக் கொண்டதும், நீர் வளச் சிறப்பினைக் கொண்டதுமான ஒரு பகுதியாக நீர்வேலிப் பிரதேசம் அமை கின்றது. இப் பிரதேச மக்களின் வாழ்வும் வாழ்வாதாரமும் நிலத்தடி நீரினை ஆதாரமாகக் கொண்டதாகும். இப்பிரதேசத்தின் பிரதான வாழ்வாதாரமாக விளங்கும் விவசாயத் துறையில் உடனடி விளைச்சல், அதிக உற்பத்தி என்பவற்றிற்காக பயன்படுத்தப்படும் இரசாயன பசளை கிருமி நாசினிகள் போன்றன இப்பிரதேசத்தின் மண்வளத்தினை மாசுபடுத்துகின்ற அதேவேளை நிலத்தடி நீரில் மாசுபாட்டை ஏற்படுத்தி மனித உடல்நலத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இத்தகைய தன்மையானது இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் சிறந்த குடி நீருக்கான கேள்வியை உருவாக்குதுடன். சுகாதாரரீயான அச்சுறுத்தலையும் ஏற்படுத்துகின்றது.இவ் வகையில் நீர்வேலிப் பிரதேசத்தின் நீர்வளம், விவசாய நடவடிக்கைகளுக்கும் நீர் மாசுபாட்டுக்கும் இடையிலான தொடர்புகள், சுகாதார ரீதியான பிரச்சினைகள், உவராதல் பிரச்சனை, நிலத்தடிநீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற அடிப்படையில் இக் கட்டுரை நோக்குகின்றது.

**1. 2:– நீர்வேலி பிரதேசத்தின் நீர்வளமும் பயன்பாடும்.**

***(Water resource and its usage of Neervely region)***

இப்பிரதேசத்தினது நீர்வளத்தினை நோக்குகின்ற போது அதனை இரு வகைகளாக நோக்கலாம்.

1. **மேற்பரப்பு நீர்வளம்** *(Surface water)*
2. **தரைகீழ் நீர்வளம்** *(Underground water)*

மேற்பரப்பு நீர்நிலைகள் எனப்படுபவை எமது முன்னோர்களால் நீர்வளத்தைப் பேணுமுகமாக உருவாக்கப்பட்ட கேணிகள், குளங்கள் போன்றவற்றைக் குறிக்கின்றது. இவ்வாறான கேணிகளும் குளங்களும் நீர்வேலியின் கிழக்கு பகுதியில் வயல் பிரதேசத்தை அண்டியபகுதிகளிலும் ஆலயங்களிலும் காணப்படுகின்றன. ஆலயங்கள் தவிர்ந்த கேணிகளும் குளங்களும் விவசாய நடவடிக்கைகளுக்காகவே கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வருடத்தின் சில பகுதிகளிலேயே மழை கிடைக்கின்றது. இவ்வாறு கிடைக்கும் மழைநீரின் ஒரு பகுதி மேற்படி மேற்பரப்புப் பள்ளங்களில்

சேகரிக்கப்பட்டு மழையற்ற காலங்களில் விவசாய நடவடிக் கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

அடுத்து தரைகீழ் நீர்வளத்தினை நோக்குகின்ற போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைக்கீழ் நீர்வள அமைப்பின் அடிப்படையிலேயே நோக்க வேண்டும். இங்கு 12 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த "மயோசின்" (Miocene) என்கின்ற புவிச்சரிதவியல்கால (Geological Period) சுண்ணக்கற்பாறையின் உருவாக்கம் தரைக்கீழ் நீர் கிடைப்பனவிற்கு ஆதாரமாக அமைகின்றது. சுண்ணக்கற்பாறையானது இயல்பாகவே மழைநீரை உட்புகக்கூடிய பண்பைக் கொணடடிருப்பதனால் அம் மழைநீர் பாறைகளில் படுக்கைகளை (Aquifer) உருவாக்கி நீரைச் சேமிக்கின்றன. இவ்வாறு சேகரிக்கும் நீர் தரைக்கீழ் நீர் எனப்படுகின்றது. இதன் பிரதான மூலாதாரம் மழைவீழ்ச்சியாகும். இது வரையறைக் குட்பட்டது. எனெனில் வருடத்தின் சில பகுதிகளிலேயே மழை வீழ்ச்சி கிடைக்கின்றது இவ்வாறு கிடைக்கும் மழைவீழ்ச்சியின் ஒரு பகுதி வெள்ளநீராக (storm water) சென்று கடலை அடைகின்றன. மற்றய பகுதி ஆவியீர்ப்பு ஆவியாக்கத்திற்கு உட்ப்படுகின்றன. ஏனைய பகுதி மேற்பரப்பு நீர் நிலைகளில் சேமிக்கப்பட ஒரு குறிப்பிட்ட பகுதி மட்டுமே தரைகீழ் நீராக சேமிக்கப்படு கின்றது. இவ்வாறான பண்பைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டின் மையப்பகுதியான வலிகாமம் பகுதியில் கிழக்குப்பகுதியில் நீர்வேலி அமைவதனால் மேற்படி தரைக்கீழ் நீரின் பண்பைப் பெறுகின்றது. இங்கு தரைக்கீழ் நீரானது கிணறு, குழாய்க்கிணறுகள் என்பவற்றின் மூலம் குடிநீர், அன்றாட வீட்டுத்தேவைகள், விவசாய மற்றும் ஏனைய தேவைகளுக்கு பயன்படுத்தப் படுகின்றன.

**1.3:- இப்பிரதேசத்தன் விவசாய நடவடிக்கையில் இரசாயனப்பசளை, கிருமிநாசினிப் பயன்பாடும் நிலத்தடி நீரில் அதன் தாக்கமும் சுகாதாரரீதியான பிரச்சனைகளும்.**

இப்பிரதேசத்தின் பிரதான வாழ்வாதாரமாக விவசாயம் நடவடிக்கை அமைகின்றது. இவ் விவசாய நடவடிக்கையில் வாழை பிரதான பயிராகவும் ஏனைய சிறுபணப்பயிர்களாக மிளகாய், கத்தரி, வெண்டி, பீற்றுட், கரட், கறிமிளகாய், கோவா, பயிற்றங்காய், லீக்ஸ், கீரை, இராசவள்ளி, தக்காளி மரவள்ளி போன்றனவும் ஏற்றுமதிப் பயிர்களான வெங்காயம், புகையிலை போன்றனவும் பயன்தரு மரங்களாக தென்னை, தேசி, தோடை, மாதுளை, மா, பலா, கொய்யா போன்றனவும் பயிரிடப்படுகின்றன. மேலும் நெல், உழுந்து, பயறு போன்ற தானியங்களும் பயிரிடப்படுகின்றன. மேற்படி பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இப்பிரதேச மக்களின் உணவுக்கான முலாதாரமாகவும் வருமாண மூலாதார மாகவும், ஏனைய பிரதேச மக்களின் உணவுக்கான மூலாதார மாகவும் அமைகின்ற அதேவேளை பிரதேச பொருளாதார வளர்ச்சியிலும் செல்வாக்கு செலுத்துகின்றன.

சிறு தானியப்பயிர்கள், ஏற்றுமதிப்பயிர்கள், பணப்பயிர்கள் என்பவற்றைக்கொண்ட பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் உடனடி விளைச்சல், அதிகவிளைச்சல், கிருமித்தாக்கங்களி லிருந்து விடுபடுதல் போன்றவற்றிற்காக இரசாயணப்பசளைகளும், கிருமிநாசினிகளும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது இங்கு இயற்கைப்பசளைகளுடன் ஒப்பிடுமிடத்து இரசாயணப்பசளைகள் கூடுதலாகப்பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் யூரியா அமோனியா, LPK, TSP, ரீடியம், பொட்டாசியம் போன்றனவும் கிருமிநாசினிகளாக கீகுரோன், அற்றப்புறோன், குளோரிபரிவோஸ், டைவிட்டியேச் போன்றனவும் பயிர் நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு பயன்படுத்தப்படும் இரசாயனப் பசளைகளும், கிருமிநாசினிகளும் நிலத்தடி நீரை மாசுபடுத்துவதில் முக்கிய பங்காற்றகின்றன. இவை பயன்படுத்தப்பட்ட பின்னர் பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் போது அவை நிலத்தடி நீரில் சேருகின்றன. இவ்வாறு சேரும் இராசாயணப் பசளை கிருமிநாசினிகள் நிலத்தடிநீரில் தாக்கத்தைச் செலுத்தி சிறந்த குடிநீருக்கான (Portable water) பண்பை இழக்கச் செய்கின்றன. அதாவது இவற்றினால் நிலத்தடிநீரின் பௌதிக இராசாயண உயரியற்குணவியல்புகளில் மாற்றம் ஏற்பட்டு சிறந்த குடிநீருக்கான தரம் இழக்கப்படுகின்றன குறிப்பாக யூரியாப்பசளையானது 40 மான நைற்ரேற்றைக்கொண்டிருப்பதனால் அவை இயல்பாகவே நிலத்தடிநீரில் அதன் பெறுமானத்தை அதிகரிக்கச்செய்கின்றன. அதிகளவில் பயிர்செய்கை இடம் பெறும் நீர்வேலி மேற்கு கரந்தன் நீர்வேலி வடக்கு போன்ற பகுதிகளின் சில இடங்களில் 2008ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி நைற்ரேட் பெறுமானம் ($NO_3$), 6 – 10 mg இடைப்பட்ட வகையில் காணப்படுகின்றது.

இதேபோல் நீரின் பௌதிக குணவியல்பான கார அமிலத்தன்மை (pH) கல்சியம் (Ca ) என்பவற்றினது பொறுமானம் சற்று அதிகரிக்கும் போக்கினைக் காட்டினிற்கின்றது. அதாவது ஒரு சிறந்த குடிநீர் எத்தகைய பௌதிக இராசாயண உயரியற் பணபுகளைக் கொண்டிருக்கவேண்டும் என்பதற்கான நியமங்களை உலக சுகாதர நிறுவனம் வகுத்துள்ளது. அத்தகைய நியமங்களில் (WHO Standard) நைற்றேற் பெறுமானம் ஒரு லீற்றருக்கு 10 mg இருக்கவேண்டும் என்பது அனுமதிக்கப்பட்ட அளவாகும். ஆனால் 10 mg க்கு மேற்படின் அது மனித உடல் நலத்திற்கு ஆபத்தானது. 2008 **இல் நீர்வேலியின் விவசாயப்பகுதியில் சில இடங்களில் மட்டும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி நைற்ரேட் பெறுமானம்** ($NO_3$), 6 - 10 mg **இடைப்பட்ட வகையில் காணப்படுகின்றது. இது குறைவான ஆபத்தைக் கொண்டிருப்பினும் இராசாயணப்பசளை கிருமிநாசினிப்பயன்பாடு**

**அதிகரிக்கும் போது இவற்றின் பெறுமானமும் நிலத்தடி நீரில் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பினைக்கொண்டுள்ளன.** மேலும் இரசாயானப்பசளை கிருமிநாசினிப் பயன்பாட்டினால் நீரின் பௌதீக குண இயல்புகளான அமில காரத்தன்மை (pH) மற்றும் கல்சியம் (Ca) என்பவற்றினது பெறுமானங்கள் 2008 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி சற்று அதிகரித்த போக்கினை காட்டி நிற்கின்றன. நீர்வேலியின் அனைத்து விவசாயப் பகுதிகளிலுமுள்ள விவசாயக்கிணறுகளில் இவ்மாதிரியான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை இங்கு குறிப்பட்ட சில பகுதிகளில் மட்டுமே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது குறிப்பாக நீர்வேலி வடக்கின் சில பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அயினும் நீர்வேலியின் அனைதது விவசாயப்பகுதகளிலுமுள்ள கிணறுகளிலிருந்து நீர் மாதிரி எடுக்கப்பட்டு ஆய்விற்குட்படுத்தும் போது இது தொடர்பான உண்மையான பெறுமானங்களை அடையாளங் காணலாம்.

இப்பிரதேசத்தில் நிலத்தடிநீர் மாசுபாட்டில் செல்வாக்குச்செலுத்தும் இராசாயணப்பசளை கிருமிநாசினிப் பயன்பாடு தொடர்பாக விவசாயிகளுக்கு மத்தியில் போதிய விழிப்புணர்வற்றதன்மையே காணப்படுகின்றது அதாவது ஒரு பயிர்ப்பாத்திக்கு (One Plot) எவ்வளவு உரம் பயன்படுத்தப்படவேண்டும் என்பது தொடர்பான தெளிவின்மை காணப்படுவதனால் கட்டுப்பாடற்ற வகையில் அவை பயன்படுத்தப்படுகின்றன. மேலும் இராசாயணப்பசளை கிருமிநாசினி போன்றவற்றின் விலைகளிலேற்படும் மாற்றமும் இதன் பயன்பாட்டில் செல்வாக்குச்செலுத்துகின்றன. 2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் இராசாயணப்பசளை கிருமிநாசினி போன்றவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டது இதனால் இவற்றின் பயன்பாடு வரையறுக்கப் பட்டிருந்தது ஆயினும் 2002 இற்குப்பின்னர் ஏற்பட்ட சமாதானச்சூழல் காரணமாக இவற்றின் கிடைப்பனவு அதிகரித்ததுடன் விலைகளும் குறைவடைந்திருந்தன. இதனால் இவற்றின் பயன்பாடு அதிகரிக்கத்தொடங்கியது. ஆயினும் 2005 இல் ஏற்பட்ட பாதைத்தடை காரணமாக மீண்டும் இவற்றினது விலைகள் அதிகரித்ததுடன் அவற்றின் கிடைப்பனுவும் வரையறுக்கப்பட்டிருந்தது. அத்துடன் இவற்றின் பயன்பாடும் குறைவடையத் தொடங்கியது. ஆயினும் மீண்டும் 2009 இல் பாதை திறக்கப்பட்டதும் இவற்றின் கிடைப்பனவு அதிகரித்ததுடன் விலைகளும் குறைவடைந்து தற்போது மேலும் குறைவடைந்து செல்கின்றது. இதனால் இவற்றின் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது இதனால் நிலத்தடிநீர் பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகி வகின்றது. எனவே இராசாயணப்பசளை கிருமிநாசினி பயன்பாடு தொடர்பாகவும் அவற்றினால் ஏற்படும் தாக்கம் தொடர்பாகவும் விவசாயிகளுக்கு போதிய விழிப்புணர் வினை கமநலகேந்தர நிலையங்கள் வழங்கவேண்டும்.

மேலும் இரசாயனப்பசளை கிருமிநாசினி பயன்பாட்டினால் நிலத்தடிநீரில் மாற்றமடையும் பௌதிக இரசாயன உயிரியற் குணப்பண்புகள காரணமாக மக்களின் உடல்நலத்தில் பல்வேறு தாக்கங்கள் ஏற்படுகின்றன. அதாவது குடிநீரில் அதிகரிக்கும் நைற்றேற் பொறுமானம் புற்றுநோய் மற்றும் நீலக் குழந்தைகளின் **(Cancer and Blue baby)** உருவாக்கத்திற்கான வாய்ப்பை உருவாக்குகின்றன. அதேபோல அதிகரிக்கும் கல்சியம் சிறுநீரகம் சார்ந்தநோய்களுககான வாய்ப்புக்கள உருவாக்கலாம். இதேபோல மாற்றமடையும் ஏனைய பெறுமானங்களும் மக்களின் உடல்நலத்தில் பல்வேறு தாக்கங்களை செலுத்தக்கூடிய வாய்ப்பைக் கொண்டுள்ளன. இப்பிரதேசத்தில் பயிர்ச் செய்கை கூடுதலாக இடம்பெறும் பகுதியான கரந்தன், நீர்வேலி தென்மேற்கு, நீர்வேலி வடக்கு வடமேற்கு பகுதிகளில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகளாக காணப்படுகின்றன. இவ்வகையில் சிறந்த குடிநீர் பாதுகாப்புத்தொடர்பில் நாம் கூடுதலான கவனம் செலுத்த வேண்டியவர் களாகவுள்ளோம்.

நீர்வேலியின் அனைத்து விவசாயப் பகுதிகளிலுமுள்ள விவசாயக் கிணறுகளில் இவ்மாதிரியான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை இங்கு குறிப்பட்ட சில பகுதிகளில் மட்டுமே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது குறிப்பாக நீர்வேலி வடக்கின் சில பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அயினும் முழுவிவசாயப் பகுதிகளிலுமுள்ள கிணறுகளை ஆய்விற்குட்படுத்தும் போது இது தொடர்பான உண்மை விபரங்களை அறியமுடியும்.

மேலும் இப்பரதேசத்தின் நிலத்தடிநீரை மாசுபாடுத்துவதில் கழிவுகளும் முக்கியபங்கினையாற்றுகின்றன. இங்கு மக்களால் வெளியிடப்படும் கழிவுகள் கூடுதலாக முறைசாராத வகையிலேயே அகற்றப்படுகின்றது அதாவது இங்கு கழிவுகள் சேதன அசேதனக் கழிவுகள் (Organic & inorganic waste) என தரம்பரிக்கப்பட்டு அகற்றப்படுவதில்லை. நீர்வேலி விவசாயப்பகுதியாக காணப்படுவதனால் சேதனப்பசளைகள் விவசாயத்திற்காக பயன்படுத்தப்பட்டாலும் அவை அசேதனப்பசளைகளுடன் இணைத்து புதைக்கப்படுகின்றன இதனால் இவை மண்ணையும் நீரையும் மாசுபடுத்துகின்றன. மேலும் இங்கு பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் ஏனைய அசேதனக் கழிவுகள் சரியான முறையில் தரம்பிரிக்கப்பட்டு பொருத்தமான கழிவகற்றல் முறைக்குட்படுத்தப்படவில்லை இதனால் இவை நேரடியாக நிலத்தடிநீரிலும் மண்ணிலும் செல்லாக்குச்செலுத்துகின்றன. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது நிதி ஆளணி தொழிநுட்பம் உபகரணப்பற்றாக் குறை என்பவை தொடர்பிலான முகாமைத்துவப் பிரச்சினைகளை எதிர் கொள்வதனால்

பொருத்தமான கழிவு முகாமைத்துவத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் சவால்களை எதிர்நோக்குகின்றன.

அத்துடன் இப்பிரதேசத்தில் மலசலகூடக்கழிவுகளும் நிலத்தடிநீரை மாசுபடுத்துவதில் செல்வாக்குச்செலுத்துகின்றன. ஆரம்பகாலத்தில் குடியிருப்பு அடர்த்தி குறைந்த பிரதேசமாக நீர்வேலிப்பிரதேசம் காணப்பட்டது இதனால் மலசலகூடக்கழிவுகளால் நிலத்தடிநீருக்கு ஏற்படும் பாதிப்புக் குறைவாகவே காணப்பட்டது. ஆயினும் தற்காலத்தில் புதிய வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதனால் கிணற்றுக்கும் மலசலகூடத்துக்கும் இடையிலான இடைவெளித்தூரம் குறைவடைந்துசெல்கின்றது. இதனால் மலசலகூடக் கழிவுகளால் நிலத்தடிநீருக்கு ஏற்படும் தாக்கம் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக் கள் காணப்படுகின்றன பொதுவில் கிணற்றுக்கும் மலசலகூடக் குழிக்கும் இடையிலான இடைவெளித்தூரம் 50 அடியாக அமைதல் வேண்டும். இது சுகாதாரப்பிரிவினராலும் உள்ளுராட்சி மன்றங்களினாலும் நடைமுறைப் படுத்தப்படும் பிரதான ஒழுங்கு விதியாகும். ஆயினும் புதிய அமைக்கப்படும் வீடுகளில் இத்தகைய நடைமுறை பின்பற்றுவது தொடர்பில் வரையறைகள் காணபப்படுகின்றன. மேலும் இப்பிரதேசத்திலுள்ள மலசலகூடக்குழிகள் சீல்பண்ணாது (குழியின் ஐந்துபக்கமும் சீமெந்து கலவையினால் பூசப் பாடாமல்) அமைக்கப்படுவதனால் மலசலகூடக்கழிவுகள் நிலத்தடிநீருடன் கலப்படைகின்றது. மழைகாலங்களில் இவற்றின் தாக்கம் கூடுதலாகக் காணப்படும். மலக்கழிவுகள் நிலத்தடிநீருடன் கலப்பதனால் நிலத்தடிநீரின் உயிரியற் குணவியல்புகளில் மாற்றம் ஏற்படும் . குறிப்பாக E- Coli Coliform பக்ரீயாக்கள் நீரில் அதிகரிப்பதுடன் வாந்திபேதி காய்ச்சல் போன்ற பல்வேறு நோய்களின் உருவாக்கத்திற்கும் காரணமாகின்றன. எனவே நிலத்தடிநீருக்கு பாதிப்பற்றவகையில் மலசலகூட அமைப்பினை திட்டமிட்டு நிர்மாணிப்பது அவசியமாகின்றது.

**1.4:- நன்னீர் உவராதல்**

எமக்கு கிடைக்கும் நன்னீரானது உவர்நீரின் மேல் ஒரு வில்லை யாகவே அமைந்துள்ளது. மழைகாலங்களில் நன்னீர் வில்லையின் தடிப்பானது அதிகரித்து காணப்படுகின்ற அதே வேளை கோடை காலங்களில் இவற்றின் அளவு குறைவடைந்து வருகின்றது. கோடைகாலங்களில் விவசாயத் திற்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் அதிகளவான நீரை கிணற்றிலிருந்து வெளியேற்றும் போது நன்னீர் வில்லையின் தடிப்பு குறைவடைந்து உவர் நீரானது நன்னீர் வில்லையினுள்

நுழைகின்றது. இத்தகைய தன்மையானது உவராதல் என அழைக்கப்படுகின்றது. இது இருவகையில் இடம் பெறுகின்றன.

1) இயற்கையான முறையில்
2) மனித செயற்பாடுகள் மூலம்

இயற்கையான முறையில் உவராதல் தன்மையினை நோக்ககின்ற போது கடற்கரை, கடல் நீரேரிகளை அண்டிய பகுதிகளில் உவர் நீர் அமைந்த பாறைகள் ஊடாக நன்நீர் பகுதிகளுக்கு உவர்தன்மையானது பரவலடை கின்றது. இது இயற்கையாகவே இடம் பெறும் செயற்பாடாக அமைகின்றது. இதேபோன்று மனித செயற்பாடுகள் மூலமும் உவராதல் பிரச்சினை ஏற்படலாம். இதனைநோக்குகின்ற போது விவசாயத்திற்காகவும், ஏனைய தேவை களுக்காகவும் மிக வேகமான முறையில் தரையிலிருந்து நீர் வெளியேற்றப் படும் போது உவர்நீரானது நன்னீர்வில்லையினுள் உட்புகுந்து உவராதல் பிரச்சனையை ஏற்படுகின்றது. இத்தகைய பின்னனியில் நீர்வேலிப் பிரதேசத் தினை நோக்குகின்றபோது இருவகையில் நோக்கலாம் அதாவது. நீரவேலியின் விவசாயப்பகுதிகளில் அதிகளவான நீர் வெளியேற்றப்படும் தன்மை காணப்படுகின்றது. பொதுவாக இப் பிரதேசத்தின் விவசாய நிலங்கள் தனித் தனியாக கிணறுகளை கொண்டிருப் பது குறைவாகும். அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட விவசாய நிலங்களுக்கு பொதுவான கிணறு அமையும் பண்பே காணப்படுகின்றது. இவ்வாறு அமையும்போது பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் தவணை முறைகளுக்கேற்ப தொடர்ச்சியாக நீர் வெளியேற்றப்படுகின்றது. அத்துடன் நீர் பற்றாக்குறையாக வரும் போது ஒன்றிற்கு மேற்பட்ட குன்றுகள் கிணற்றுக்குள் தோண்டப்பட்டு அதிகளவான நீர் வெளியேற்றப்படுகின்ற தன்மையானது காணப்படுகின்றது. இத்தகையதன்மையானது எதிர்காலத்தில் உவராதல் பிரச்சினையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. ஆரம்ப காலங்களில் விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீர் பட்டை, சூத்திரம் போன்ற பாரம்பரிய முறைகளை பயன்படுத்தி பெறப்பட்டது. அத்துடன் வெளியேற்றப்படும் நீரின் அளவும் தேவைக்கேற்றவகையில் அமைந்திருந்தது. இத்தகைய முறை தரைக்கீழ்நீருக்கு சிறந்த பாதுகாப்பைக் கொடுத்தது. ஆனால் நவின இயந்திர சாதனங்களின் வருகையானது அதிகளவான நீரை கட்டுப்பாடற்றவகையில் தரையிலிருந்து வெளியேற்ற உதவியது. அதாவது பட்டை, சூத்திரம் போன்றவற்றைப்பயன்படுத்தி நீரை வெளியேற்றும்போது அதனால் ஏற்பட்ட வெற்றிடம் உடனேயே நிரவப்படும். ஆனால் நவின இயந்திர சாதனங்களின் மூலம் தரையிலிருந்து அதிகளவான நீரை விரைவாக வெளியேற்றம் செய்கின்றபோது கிணற்றிலிருந்து இழக்கப்பட்ட நீர் உடனே நிரவப்படாது . தொடர்ச்சியாக குறைவடைந்து சென்று குண்றிலருந்து வெளியேறும் நீரில் தங்கியிருக்கும். இங்கு கிணற்றுநீர் மீண்டும் நிரவுவதற்கு எடுக்கும் நேரத்தைவிட இயந்திரம் மூலம் இதை வெளியேற்றும் நேரம் குறைவாகும் இச்செயன்முறை தொடர்ச்சியாக

இடம்பெறும்போது நன்னீர் வில்லையின் தடிப்புக் குறைவடைந்து உவராதற் பிரச்சினையை ஏற்படுத்து கின்றது. நீர்வேலியின் கிழக்குப் பகுதியானது கடல்நீரேரியை அண்டிய பகுதியாக காணப்படுகின்ற அதேவேளை மேற்பகுதியை விட தாழ்நிலம் கொண்ட பகுதியாக காணப்படுகின்றது. கடல்நீரேரியை அண்டிய பகுதிகளில் நீர் உவராக அமைவதற்கு அதன் மண் அமைப்பானது காரணமாக அமைகின்றது. கடல் நீரேரியை அண்டிய பகுதியாக கிழக்கு பகுதி அமைவ தனால் பருத்தித்துறை பிரதான வீதியை அண்டிய பகுதிகளும் உவர்த்தன்மை கொண்ட நீர்வளத்தைக் கொண்டுள்ளன.

கடல் நீரேரியை அண்டிய பகுதிகள் உவர்த்தன்மையாக மாறுவது இயற்கையாகவே இடம் பெறுகின்ற அதேவேளை இவை மேற்குப் பகுதியை நோக்கி பரவலடைகின்ற வாய்ப்பையும் கொண்டுள்ளன.

மேலும் நீர்வேலி பிரதேசத்தின் கிழக்கு பகுதி தாழ்நிலம் பகுதி யாகவும் காணப்படுவதனால் மழைகாலங்களில் வெள்ளநீர் உயர்நிலப் பகுதிகளிலிருந்து தாழ்நிலப்பகுதிக்கு செல்கின்றது. இத் தாழ்நிலப்பகுதிக்கு செல்கின்றது. இத் தாழ்நிலப்பகுதியில் அதிகளவு நீர் தரைக்கீழ் நீராக சேமிக்கப்படுகின்றது. ஏனைய பகுதிகளை விட இப்பகுதி நீர் வளம் கூடிய பகுதியாக காணப்படுகின்ற போதிலும் அவை உவர்த்தன்மை கொண்ட பகுதியாகவே அமைகின்றன. இதேவேளை மேற்பகுதிகளிலிருந்து வரும் வெள்ளநீர் வயலை அண்டிய பகுதிகளில் காணப்படும் ஒரு சில குளங்களில் சேமிக்கப்பட்டு ஏனைய பகுதி கடல்நீரேரியுடன் கலக்கப்படுகின்றது உண்மையில் இத் தகைய வெள்ள நீரானது மேற்குப்பகுதிகளில் சேமிக்கப்பட வேண்டும் அல்லது வயலை அண்டிய பகுதிகளில் காணப்படும் குளங்கள் விரிவாகப் பட்டு அல்லது புதிதாக அமைக்கப்பட்டு சேமிக்கப்பட வேண்டும். இவ்வகையில் கடல்நீரேரி மூலம் வெளியேறும் உவர் நீர் நன்னீர் பகுதிகளுக்கு உட்புகாதவாறு தடுப்பணைகளை அமைத்து தடுப்பதன் மூலம் உவராதல் பிரச்சினையை ஓரளவிற்கு குறைக்கலாம்.

### 1.5:- நீரின் தரமும் பயன்பாடும் *(Water Quality and Usage)*

நீர்வேலிப்பிரதேச மக்களின் வாழ்வும் வாழ்வாதாரமும் தரைக்கீழ் நீரை ஆதாரமாகக் கொண்டவையாகும். ஆரம்ப காலங்களில் சனத்தொகை வளர்ச்சியானது வரையறுக்கப்பட்டுக்காணப்பட்டதனால் தேவையும் குறைவாகவே காணப்பட்டது அக்காலத்தில் கிணறுகளிலிருந்து பட்டை, துலா, சூத்திரம் ஆகிய முறைகளை கையாண்டு விவசாயத்திற்கும் குடி நீர் தேவைக்கும் நீரானது வெளியேற்றப்பட்டது வெளியேறும் நீரின் பயன்பாடும் அளவோடு மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் சனத்தொகை வளர்ச்சி அடைய தேவை அதிகர்த்து இதனால் விவசாய உற்பத்தியை விரிவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. விவசாய உற்பத்தியை விரிவாக்க நீரானது அதிகளவில் தேவைப்பட்டது. விஞ்ஞான

தொழிநுட்ப வளர்ச்சியும், அதன் விளைவாக புதிய கருவிகளின் கண்டுபிடிப்பும் இயந்திர மூலம் நீரை தரையிலிருந்த பெற்றுக் கொள்ள உதவியது. இதனால் பாரம்பரிய முறைகளை மக்கள் கைவிட்டு இயந்திரங்கள் மூலம் விவசாயம் கைத்தொழில் குடிநீர் மற்றும் ஏனைய தேவைகளுக்காகதரையிலிருந்து நீரை வெளியேற்றினர் இதனால் நாளுக்கு நாள் நீர் வெளியேற்றும் அளவு அதிகர்த்து இத்தகைய தன்மையானது நிலத்தடி நீரின் அளவை வெகுவாக குறைத்து வருவதுடன் எதிர்காலத் தேவைகளுக்கான நீரின் பயன்பாடு தொடர்பில் கேள்வியை ஏற்படுத்துகின்றது.

இதே போன்று இப்பிரதேசத்தில் கிடைக்கும் நீரானது அதன் எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியான தரம் கொண்டதாக இருப்பதில்லை இயற்கையான முறையில் நீரின் தரம் மாற்றமடையலாம். அதாவது பாறைகளிலுள்ள கனியுப்புக்கள் கரைவதனால் நீரின் தரம் பாதிக்கப்படும். மாரி, கோடை காலங்களில் பாறைகளின் கனியுப்புக்கள் இடம் பெயரும் தன்மை காணப்படும்.இதனால் நீரின் தரம் மாறுபடும் இது இயற்கையாக இடம் பெறும் மறுவகையில் மனித செயற்பாடுகள் அதாவது விவசாய நடவடிக்கையில் அதிக நீர் வெளியேற்றம், இரசாயணப்பசளைகிருமி நாசினிப் பயன்பாடு, திண்மக்கழிவுகள், மலசலக் கூடக்கழிவுகள் போன்றவற்றினாலும் நீரின் தரம் பாதிக்கப்படும். இங்கு இயற்கையிலும் பார்க்க செயற்கையான முறையிலேயோ நீர் மாசுபாடு அதிகரிப்பதனால் நீரின் பயன்பாடு என்பது கேள்விக்குறியாக மாறியுள்ளது. இவ் வகையில் சிறந்த குடி நீர் என்பது உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைப்படி பின்வரும் முக்கிய பண்புகளை கொண்டமைகின்றது.

| | விரும்பக் கூடிய அளவு |
|---|---|
| நீரின் கார அமிலத்தன்மை (pH) | 7.0 - 85 unites |
| மின் கடத்துதிறன் (EC) | 750 uS/cm |
| குளோரைட் (c1) | 200 mg/l |
| கல்சியம் (ca) | 100 mg/l |
| நைத்திரேற் ($NO_3$) | 10 ml/l இற்கு மேற்படக்கூடாது |
| கலங்கற்தன்மை (Turbidity) | 2 JTU |
| கடினத்தன்மை (Hardness) | 250 mg/l |
| இரும்பு (Iron) | 0.3 mg/l |

மேற்படி நீரின் முக்கியமான பண்புகளினடிப்படையில் அமையும் போது அது குடிநீருக்காக பயன்னடுத்தக் கூடிய பண்பைக் கொண்டிருக்கும். மேற்படி

நியமங்களுக்குட்பட்ட குடி நீர் பாதுகாப்பானதாக வரையறுக்கப்படுகின்றது. மறுவகையில் மேற்படி நியமங்களுகளைவிட கூடுதலாக காணப்படின் அது சிறந்த குடிநீருக்கான பண்பாக அமையாது இருப்பதுடன் இது மனித உடல் நலத்துக்கும் கேடாகவமையும். ஆயினும் எமது பிரதேசத்தின் நீரின் தரமானது குறிப்பிட்டகாலத்துக்கொருதடவை ஆராயப்படவேண்டிய ஒன்றாக உள்ளது.

## 1.6:- நீர்வேலி பிரதேசத்தின் நீர்வளத்தை பாதுகாப்பதற்கான நடைமுறைகள்

## *(Measures for water resource Conservation of Neervely region)*

நீர்வேலி பிரதேசத்தின் அளுமையான வளங்களில் தரைக்கீழ் நீர் வளமும் ஒன்றாகும். இயற்கையான காரணிகளை விட மனித செயற்பாடுகளால் குறிப்பாக விவசாய நடவடிக்கையில் இரசாயன பசளை கிருமி நாசினிப் பயன்பாடு, அதிக நீர் வெளியேற்றம், திண்மக் கழிவுகள் மற்றும் மலசல கூடக்கழிவுகள் என்பன இப்பிரதேசத்தின் தரைகீழ் நீரினை மாசுபடுத்துவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. சனத்தொகையானது வளர்ச்சி அடைந்து வருகின்றது. இதனால் தேவை கூடும் போது நீருக்கான கேள்வி அதிகரித்து செல்கின்றது. அதே வேளை மழைவீழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு தரைக்கீழ் நீர் காணப்படுவதனால் வரையறைக்கட்பட்டதாக அமைகின்றது. நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி நோக்கில் எமது அரிய வளமான இவ் நீர் வளத்தை பாதுகாத்து மனித சுகாதார ரீதியான ஆபத்துக்களை தவிர்ப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் கருத்தில் கொள்ளப்படுவது அவசியமாகின்றது.

01) விவசாய நடவடிக்கைகளில் இரசாயனப் பசளை கிருமிநாசினிப் பயன்னாட்டைக் குறைத்து இயற்கை பசளை பாவனை தொடர்பில் எமது பிரதேச விவசாயிகள் விழிப்புணர்வூட்டப்பட வேண்டும். அதாவது 75வீதம் முன் கூட்டியே இயற்கைப் பசளையைப் பயன்படுத்தி நிலத்தை பண்படுத்தி 25வீதம் இரசாயண பசளையை பயன்படுத்த வேண்டும் அதேஅளவு கிருமிநாசினிகளுக்கு பதிலாக இயற்கையான மூலிகைகளை பயன்படுத்தி பயிர்கிருமிகளை அழிக்கும் முயற்சியில் விவசாயத்தில் ஈடுபட வேண்டும்.

02) விவசாய நடவடிக்கைகளிலும் சரி ஏனைய தேவைக்காகவும் தனிக்கிணறாக இருப்பினும், பொதுக்கிணறாக இருப்பினும் நீரை வெளியேற்றும் போது முழுநீரும் வெளியேற்றப்பட்ட பின்னர் அதே அளவு நீர் மீண்டும் ஊற்றெடுத்து நிரவியன பின்னர் மீண்டும் இறைக்க வேண்டும் அதாவது கிணற்றிலிருந்து ஒரு தடவை நீர் வெளியேற்றப் பட்ட பின்பு ஆறவைத்த அடுத்ததடவை கிணற்றை இறைக்க வேண்டும்.

03) சூழற்சி முறையில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டும்.

04) விவசாயிகளுக்கு இயற்கைபசளை பயன்பாடு தொடர்பின் ஊகிக்கப் படுத்தவேண்டும் இது கமநல கேந்திர நிலையங்கள் மூலம் செயற்படுத்த முடியும்

05) இரசாயணப்பசளை ஒரு பயிரின் பாத்திக்கு எவ்வளவில் பயன்னடுத்த வேண்டும் என்பது தொடர்பான அளவீடு பற்றி கமநல கேந்திர நிலையங்கள் விவசாயிகளுக்கு அறுவுறுத்த வேண்டும் இதன் மூலம் தட்டுப்பாடற்ற வகையில் பயன்னடுத்தப்படும் இரசாயண பசளையின் அளவை குறைக்கலாம்.

06) வலி கிழக்கு பிரதேச சபையானது எமது பிரதேசத்திற்கு பொருந்தக்கூடிய சிறந்த திண்மக்கழிவு முகாமைத்தன வடிவமைக்க வேண்டும் அதாவது அசேதன கழிவுகளை சரியான முறையில் வெளியேற்றுவதற்கான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

07) புதிதாக அமைவு பெறும் மலசல கூடங்கள் Septic tank socatage fit கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

08) நீர்வேலியில் மேற்கு பகுதியிலிருந்து கிழக்கு பகுதி நோக்கி செல்லும் வெள்ளநீர் தடுக்கப்பட்டு அவை அப்பகுதிகளில் சேமிக்கப்பட வேண்டும்.

09) நீர்வேலியின் கிழக்கு பகுதியிலுள்ள வயலை அண்டிய பகுதிகளில் காணப்படும் குளங்கள் விரிவாக்கப்பட்டு புனரமைப்பு செய்ய வேண்டும் அதேபோல கடல் நீரேரியில் செல்லும் மேலதிக நீரை சேமிக்க புதிய குளங்களை அமைக்கவேண்டும். இவை நீர்வளத்தை பாதுகாக்கவும் மழைகாலங்களில் நீரை சேமித்து கோடை காலங்களில் பயன்படத்த உதவும்.

10) நீர்வேலியின் கிழக்கு பகுதியில் கடநீரேரியிலிருந்து நன்னீர்ப் பகுதிக்கு உவர்நீர் உட்புகும் வழிகள் தடுப்பணைகளை அமைத்து தடுக்கப்பட வேண்டும்.

11) எல்லோரும் மழைநீர் சேகரிப்புத் திட்டங்களை பின்பற்றி நிலத்தடியில் அதனை உட் செலுத்த வேண்டும்.

12) பருவகலாங்களுக்கு முன்னர் ஒவ்வொரு குடும்பத்தவரும் வீட்டுவளைவினை துப்பரவு செய்ய வேண்டும் வீட்டில் உருவாகும் கழிவுகளை சேதனம் அசேதனம் என தரம் பிரித்த சரியான முறையில் கழிவகற்ற வேண்டும்.

13) வலி கிழக்கு பிரதேச சபையானது மலசல கூடம் அமைப்பதற்கான அனுமதியை வழங்கும் போது கிணற்றுக்கம் மலசல கூடத்திற்கும் இடையிலாக இடைவெளி சட்டப்பிரகாரம் அமைவதை கட்டாயம் கடைப்படிக்க வேண்டும்.

14) இப்பிரதேச பொதுமக்களின் அனைத்துதரப்பினரும் நீர்வளம் மாசுபடுதல் தொடர்பில் விழிப்புணர்வூட்டப்பட வேண்டும்.

15) எமது பிரதேசத்தின் பயன்படுத்தப்படாத விவசாய நிலங்களில் உயர்வான வரம்புகள் கட்டி மழைகாலங்களில் நீரை சேமிக்க வேண்டும்.

## 1.7:- முடிவுரை *(Conclusion)*

இவ்வகையில் நீர்வேலிப்பிரதேசத்தின் வாழ்வும் வாழ்வாதாரமும் நிலத்தடி நீரை ஆதாரமாகக் கொண்டது என்ற வகையில் இத்தரைக்கீழ் நீரானது மழைவீழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு காணப்படுவதனால் வரையறைக் குட்பட்டது. வரையறைக்குட்பட்ட தரைக்கீழ் நீர் மனித செயற்பாடுகளால் மாசுபாடைகின்றது. எனவே சூழலுக்கு சாத்தியமான விவசாய நடவடிக்கைகள் பாதுகாப்பான திண்மக் கழிவு முகாமைத்துவம், மழைநீர் சேகரிப்பு திட்டம், பொதுமக்கள் விழிப்புணர்வு, போன்றவற்றை ஏற்படுத்துவதன் மூலமே நீர்வளத்தை கண்காணிக்கும் நிலையத்தை அமைத்து நீர் தரம் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டு நீர்வள முகாமைத்துவம் இப்பிரதேசத்தில் எதிர்காலத்தில் பின்பற்றப்பட்டுவதன் மூலம் எமது எதிர்கால சந்ததியினரும் பயன்படுத்தக் கூடிய வகையில் எமது அளுமையான வளமான நீர்வளத்தை பாதுகாக்க முடிவதுடன் சிறந்த அரோக்கிய மிக்க மக்கள் சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். □

**உசாத்துணை நூல்**

01. சிவாகரன் . க. 1992. யாழ்ப்பாண குடாநாட்டின் நீர்வளம், யாழ்ப்பாணம்.



கட்டுரை

# நீர்வேலியில் சமஸ்கிருதக் கல்வி வளர்ச்சி - ஒரு பார்வை

தியாகராஜசர்மா மயூரகிரி

தொன்மையும் இலக்கிய வளமும் பொருந்திய செம்மொழிகளுள் ஒன்றாகத் திகழ்வது சமஸ்கிருதம். வடமொழி என்றும் அறியப்பெறும் இம்மொழி ஒரு காலத்தில் தென்னாசியா முழுமைக்கும் பொது மொழியாகவும் விளங்கியிருக்கிறது. மேலும் இன்று வரை இந்துக்களின் வழிபாட்டு மொழியாகவும் இது உள்ளது. இந்துக்களுக்கு மட்டுமன்றி சமணசமயிகளுக்கும் இன்று வரை இதுவே வழிபாட்டு மொழியாகும்.

இன்று வழங்கி வரும் ஹிந்தி, மராட்டி, குஜராத்தி, காஷ்மீர், ஒரியா போன்றவையும் பாளி போன்றவையும் சம்ஸ்கிருதத்துடன் மிகவும் தொடர்புடையனவே. இவை தவிர இன்று வரை மலையாளம் முதல் தமிழ் வரை இவை யாவற்றிலும் கணக்கற்ற சம்ஸ்கிருதச் சொற்கள் நிறைந்திருக்கின்றன. பல சொற்கள் பொதுவாகவே எதிலிருந்து தோன்றியது என்று அறியப்பட இயலாததாகவே இருக்கின்றன. ஆக, தமிழும் சம்ஸ்கிருதமும் இணை மொழிகள்.

எனவே, இலங்கையில் வாழ்ந்த அனைத்து தமிழ் இந்துப் பெரியவர்களும் இவ்விரு மொழிகளிலும் புலமை பெற்று விளங்கினார்கள். சம்ஸ்கிருத அறிவில்லாத தமிழறிஞர் பெருமைக்குரியவராகார் என்ற கோட்பாடு கடந்த காலங்களில் நம்மவர்களிடம் இருந்திருக்கிறது.

இந்த வகையில் பலரும் சம்ஸ்கிருதக் கல்வியை விரும்பித் தேடிக் கற்றாலும் இம்மொழியில் பாண்டித்தியம் பெற்று பேச,எழுத, வல்லவர்களாக, அதற்கு அப்பால் பிறருக்கும் அதனைப் போதிக்கவல்ல ஆற்றல் உடையவர்களாக விளங்கியவர்கள் மிகச்சிலரே..

இவ்வகையில் தான் யாழ்ப்பாணத்து நீர்வேலி இலங்கையின் சம்ஸ்கிருத வளர்ச்சியிலேயே தனக்கென்று ஒரு இடம் வகுத்து தலை நிமிர்ந்து பெருமையோடு விளங்குகிறது.

**இலங்கையும் சம்ஸ்கிருதமும்**

தென்னிலங்கையிலும் பல்வேறு சம்ஸ்கிருத நூல்கள் எழுச்சி பெற்றிருக்கின்றன. பௌத்தசமயச் சார்புடையனவாகவும் அவற்றில் பல

விளங்கியிருக்கக் காண்கிறோம். கி.பி 3ம் நூற்றாண்டில் புத்ததாஸர் என்பவரால் "சார்த்தசங்கிரஹம்" என்ற சம்ஸ்கிருத பௌத்தநூல் எழுதப்பட்டிருக்கிறது. அதே போல 7ம்நூற்றாண்டில் ஜானகீ ஹரணம் எழுந்திருக்கிறது. யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் இம்மொழி வளர்ச்சியில் மிகச்சிறப்பான பங்களிப்பினை வழங்கியிருக் கிறார்கள்.

**நீர்வேலியும் சம்ஸ்கிருதமும்**

நீர்வேலியை சம்ஸ்கிருத அறிஞர்கள் நீரவாடீபுரம் என்று குறிப்பிடுவர். நீரம் என்றால் நீர் என்றும் வாடீ என்றால் ஊர் என்றும் பொருள். இத்தகு உயரிய நீர்வேலியுடன் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் மகாமந்திரியாக விளங்கியவனான அரசகேசரி என்பான் தொடர்புற்றிருந்தான் என்று கூறப்பெறுகிறது.

இவன் நீர்வேலியின் நடுவில் அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தை ஸ்தாபித்தான் என்பதும் வரலாறு. அரசவம்சத்தில் பிறந்தவனாக அடையாளப்படுத்தப் பெறும் அரசகேசரி ஈடிணையற்ற கவிஞன். பெரும்புலவன். தமிழில் மட்டுமன்றி சம்ஸ்கிருதத்திலும் ஆழமான புலமையும் பற்றும் மிக்கவன். இதற்கு ஆதாரமாக அவனால் எழுதப்பெற்ற இரகுவம்சம் என்ற பெரிய காவியம் நமக்குக் கிடைக்கிறது.

ஸ்ரீ ராமபக்தனாகிய அரசகேசரி காளிதாஸமகாகவியால் சம்ஸ்கிருத மொழியில் எழுதப்பெற்ற இரகுவம்சத்தைப் படித்து.. அதில் ஆழுங்காற்பட்டவனாக.. அதனைத் தமிழில் பாடியிருக்கிறான். ஆக, பதினாறாம் நூற்றாண்டிலேயே நீர்வேலி சம்ஸ்கிருதமொழி வளர்ச்சியில் பங்காற்றலாயிற்று.

எனினும், இங்கே, போர்த்துக்கேய- ஒல்லாந்தர்களின் ஆதிக்கம் உண்டான போது தமிழ்மொழி வளர்ச்சி மட்டுமன்றி சம்ஸ்கிருத மொழி வளர்ச்சியும் பாதிக்கப்பட்டிருக்கும் என்று கருதலாம். அதற்குப் பின்னர் ஆங்கிலேயர் காலத்தின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை நீர்வேலியில் சம்ஸ்கிருதக் கல்வி வளர்ச்சி எவ்வாறு அமைந்தது? என்றும் அது ஈழத்தில் எவ்வகையான தாக்கத்தினை ஏற்படுத்தியது என்றும் ஆராயலாம்.

## சிவசங்கர பண்டிதர் செய்த மாபெரும் சம்ஸ்கிருதப்பணி

தமிழுக்கு ஒரு நாவலர் போல.. சம்ஸ்கிருதத்திற்கு நமக்கு கிடைத்தவர் சிவசங்கரபண்டிதர். 1821ம் ஆண்டு சிவகுருநாதபிள்ளைக்கு மகனாகப் பிறந்த இவர் பிறப்பினால் அந்தணர் அல்லர். ஆனால் சம்ஸ்கிருத மொழியின் ஆழங்கண்டவர். "அந்தணர் என்போர் அறவோர்" என்ற வள்ளுவன் வாக்குக்கு அமைய வாழ்வால் அந்தண வாழ்வு வாழ்ந்தவர்.

தமிழகத்தின் திருப்புகலூரில் ஒரு சாஸ்திரிகளிடம் சம்ஸ்கிருத மொழியை முறையாகக் கற்ற பெருமகனாகிய இவர் ஆறுமுகநாவலரின் நெருக்கமான நண்பராக விளங்கினார். அவருக்கு உண்டாகிற சம்ஸ்கிருத மொழி சார் ஐயங்களை இவரும் காசிவாசி செந்திநாதையர் முதலியவர்களுமே தீர்த்து உதவியதாகவும் கூறுவர்.

இன்றைய நமது நீர்வை அத்தியார் இந்துக்கல்லூரி அமைந்திருக்கும் இடத்தில் அவர் ஒரு திண்ணைப்பாடசாலையை ஸ்தாபித்தார். அங்கே இவரிடம் சம்ஸ்கிருதம் கற்பதற்காக இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் பெரு வாரியான மாணவர்கள் வந்து கல்வி கற்றனர். இந்த வகையில் நிறைய குருமார்களுக்கும் சம்ஸ்கிருதக் கல்வியூட்டி அவர்களை திறமைமிக்க குருவாக பரிணமிக்கச் செய்த பெருமையும் சங்கரபண்டிதருக்கு உண்டு.

ஒரு சமயம் சிதம்பரம் சென்ற போது அங்கே பச்சையப்பமுதலியார் கல்லூரியில் தில்லை வாழ் அந்தணர்கள் நிறைந்த சபையில் "பதி விசேஷநிர்ணயம்" என்ற பொருளில் நீண்டதொரு சம்ஸ்கிருதப்பேருரையை பண்டிதர் அவர்கள் ஆற்றினார். இதனைக் கண்டு யாவரும் வியந்த பாராட்டினர். சிவபூஜாதுரந்தரராகிய பண்டிதர் அவர்கள் எழுதிய பதிப்பித்த சம்ஸ்கிருத நூல்கள் நான்கு. சம்ஸ்கிருத–தமிழ் மொழி பெயர்ப்பு நூல்கள் நான்கு. தமிழ் நூல்கள் பதினொன்று. ஆக, மொத்தமாக 19 நூல்களை பண்டிதர் எழுதியும் பதிப்பித்தும் இருக்கிறார்.
வெறும் 42ஆண்டு கால வாழ்வில் பண்டிதர் செய்த சம்ஸ்கிருதப்பணி மிக உயர்ந்து நீர்வேலியின் பெயரை இலங்கை மட்டுமன்றி இந்தியாவிலும் நிலைநிறுத்தியிருக்கிறது.

பண்டிதர் அவர்களின் இரு குமாரர்களில் முதல்வர் சிவப்பிரகாச பண்டிதர். அவரும் தந்தைக்கு நிகரான அறிவொழுக்கங்கள் உடையவர். தம் தந்தை ஸ்தாபித்த திண்ணைப் பாடசாலையை சிவப்பிரகாச வித்தியாசாலையாக, மாற்றி அங்கே தமிழும் சம்ஸ்கிருதமும் ஒன்றுக்கொன்று நிகராய் கற்பித்தவர். இவர் சம்ஸ்கிருதம் கற்கப்புகும் மாணவர்கள் பொருட்டு சம்ஸ்கிருத பாலபாடம், சம்ஸ்கிருத பாலாமிர்தம் போன்ற நூல்களை எழுதியிருக்கிறார். சிவானந்தலஹரி முதலிய சம்ஸ்கிருத நுஸல்களுக்குத் தமிழுரை செய்திருக்கிறார். இவரது மாணவரே புகழ்பூத்த அச்சுவேலிக் குமாரசுவாமிக்குருக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் குமாரசுவாமிக்குருக்கள் மிக்க நன்றியறி தலுடன் பல இடங்களிலும் பண்டிதர் அவர்களையும் சிவசங்கர பண்டிதரையும் பாராட்டக் காண்கிறோம்.

இவரது சகோதரரான சிவகுருநாத பிள்ளையும் நிறைந்த சம்ஸ்கிருத அறிவாளி. பிரம்மச்சரிய விரதம் பூண்டு வாழ்ந்த இவர், இங்கல்ல.. தூண் கூட சம்ஸ்கிருதம் பேசும் தமிழகத்து காஞ்சியிலும் சென்று அங்கே கூட உபாத்தியாயராக விளங்கி அங்கேயே மரணமானார்.

இவ்வரிசையில் ஆ.முத்துக்குமார ஆச்சார்ய சுவாமிகளையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். 1814ல் நீர்வேலி வடக்கில் பிறந்த இவர் இளமையிலேயே துறவு பூண்டவர். தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் ஆற்றல் மிக்கவர். பல நூல்களும் எழுதியிருக்கிறார். இதே போல, நீர்வேலியில் பஞ்சகம்மாளர் குலத்தில் தோன்றி சிற்பவல்லுனர்களாக விளங்கிய பலரும் சம்ஸ்கிருதக் கல்வியறிவுடையவர்களாக, பிறருக்கும் போதிக்கும் தன்மையுடையவர்களாகவும் விளங்கினர் என்றும் அறியக் கூடியதாக வுள்ளது.

நீர்வேலியில் குருமார்களும் சம்ஸ்கிருதக்கல்வியை வளர்ப்பதில் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். நீர்வேலி வாய்க்காற்தரவைப் பிள்ளையார் கோயில் ஆதீனகர்த்தர்களாகிய வணக்கத்திற்குரிய ஆபதோத்தாரண. பிட்சாடனக்குருக்கள் அரசபதவியைத் துறந்து இறைபணியில் ஈடுபட்டவர். அவரது சம்ஸ்கிருதப்புலமை காரணமாக நீர்வேலி வாய்க்காற்தரவை பிள்ளையார் கோயிற்குருமுதல்வர் என்று யாழ்ப்பாணம் எங்கும் அவர் பெயர் பெற்றிருந்தார். நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோயிலைச் சேர்ந்த கார்த்திகேயஐயர் நிறைந்த அறிஞர். கோப்பாய் நாவலர் வித்தியாலய முதல்வராக பணியாற்றியவர். அது போல, அவர் தம் புதல்வரான சாம்பசதாசிவக்குருக்களும் இப்பணியில் முன்னின்றார்.

நீர்வேலி கந்தஸ்வாமி கோயிலைச் சேர்ந்த வண. சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் அவர்கள் காலத்தில் நீர்வேலியினைச் சேர்ந்த பிள்ளைகள் சம்ஸ்கிருதக்கல்வியைப் பெற வேண்டும் என்று மிகவும் விரும்பினார். இதனால் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்தில் வந்து தங்கியிருந்த சிறந்த அறிஞர்களான ஸ்ரீ.ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள், ஸ்ரீ. சீதாராமசாஸ்திரிகள் போன்ற பெரியவர்களை அழைத்து உபசரித்து தம் இல்லத்திலேயே தங்க வசதி செய்து கோயிலில் குருகுலம் ஒன்றை சில காலம் நடாத்தினார். நாட்டின் சீரற்ற நிலை அதற்கு இடம் தரவில்லை. எனினும், தன்னளவில் சம்ஸ்கிருதக் கல்வியைப் போதிப்பதனை அவர் தொடர்ந்து செய்து வந்தார். இவர் ஏராளமான சம்ஸ்கிருத (கிரந்தலிபி) நூல்களைப் பதிப்பித்திருக்கிறார்.

"வியாபாரி ஐயா" என்று ஊரவர்களால் மிகப் பயபக்தியுடன் அழைக்கப்பெறும் வண.க.தியாகராஜக்குருக்கள் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய சூழலில் வாழ்ந்தவர். அவரும் நிறைந்த சம்ஸ்கிருத அறிஞர். சங்கீத வித்வான். ஜோதிஷ அறிவு மிக்கவர். சம்ஸ்கிருத மொழியில் அமைந்த பாடல்களை இசையோடு பாடுவதில் மிகவும் வல்லமை பொருந்தியவராக அன்னார் விளங்கினார்.

"புனரபி ஜனனம் புனரபி மரணம்.." என்ற ஆதிசங்கரரின் அற்புதமான பஜகோவிந்தம் பாடலை இவர் பாடும் திறனை இன்றும் இப்பகுதியில் வாழ்பவர்கள் விதந்துரைப்பதைக் காணலாம்.

பண்டிதர் பஞ்சாட்சரசர்மா கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆயினும் நீர்வேலியில் தியாகராஜக்குருக்களின் மகளைத் திருமணம் செய்தவர். இதனால் நீர்வேலியுடன் தொடர்புற்று இங்கு பல்லாண்டுகள் வாழ்ந்தவர். இவர் தம் தமிழ்– சம்ஸ்கிருதப்பணிகள் பெரியன. குடத்துள் விளக்காக விளங்கிய சர்மா அவர்கள் நிறைய சம்ஸ்கிருத மொழி இலக்கியங்களை மொழிபெயர்ப்புச் செய்திருக்கிறார். பலருக்கு சம்ஸ்கிருதக்கல்வி புகட்டியிருக்கிறார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஆணிவேராகவும் சர்மா அவர்கள் திகழ்ந்திருக்கிறார். அவர் தம் பாலபாடநூல்கள் இன்றைக்கும் சம்ஸ்கிருத மொழியைக் கற்கப் புகுவோருக்கு சிறந்த கையேடுகளாகும். இன்றைக்குப் புகழ் பெற்றவர்களாக விளங்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்து துறவி ஸ்ரீமத் ஸ்வாமி அட்சரானந்தஜீ மஹராஜ் மற்றும் "கோப்பாய் சிவம்" ப.சிவானந்தசர்மா ஆகியோர் இவரின் புதல்வர்களே.

சைவத்தமிழ்ப்பேரறிஞர் சிதம்பரப்பிள்ளை, சிற்சபேசன், பண்டிதர் இராமுப்பிள்ளை, கிறிஸ்தவரான வித்துவான் எம்.எஸ்.அந்தோனிப்பிள்ளை, பண்டிதர் துரைசிங்கம் ஆகியோரும் குறிப்பிடத்தக்க சம்ஸ்கிருத அறிவுடையவர்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள்.

நீர்வேலியில் அத்தியார் இந்துக்கல்லூரியை ஸ்தாபித்த பெருமகனாகிய அத்தியார் அருணாசலம் அவர்களும் சம்ஸ்கிருதப் பற்று மிக்கவர். அதனால் சம்ஸ்கிருதக் கல்விமான்களை தமிழகத்திலிருந்து அழைத்து உபசரித்து தன் கல்லூரிக்கு அண்மையிலேயே அத்தியார் சம்ஸ்கிருத பாடசாலை (Attiaar shanskrit school) ஒன்றையும் உருவாக்கினார். ஆயினும் அது காலஓட்டத்தில் நின்று போயிற்று.

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அவர்களும் நீர்வையின் சம்ஸ்கிருதக்கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர். மதுரைத் தமிழ்ப் பண்டிதையாக.. பர்த்தாவிற்கு ஏற்ற பதிவிரதையாக வாழ்ந்த அம்மையார் அவர்கள் தம் சம்ஸ்கிருதப் புலமையால் பலரைச் சம்ஸ்கிருத அறிவுடையவர்களாக்கினார். இவர் உருவாக்கிய சம்ஸ்கிருதப்புலமை யாளர்களில் எண்பதாண்டு கண்டு இன்று பிரான்ஸில் வாழும் தி.நடனசபாபதிசர்மா குறிப்பிடத்தக்கவர். இவரும் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழைப் போலவே சம்ஸ்கிருதத்திலும் ஆக்க இலக்கியங்களை உருவாக்க இயலும். அதாவது தாமே முயன்று கவிதைகள் போன்றவற்றைப் படைக்கலாம். ஆனாலும் இவ்வாறு கவிதைகளை சம்ஸ்கிருதமொழியில் ஆக்கியவர்கள் எம் நாட்டில் மிகக்குறைவு. எனினும் நீர்வேலியைச் சேர்ந்தவர்களால் ஆக்கப்பெற்ற இரு சம்ஸ்கிருத கவிதைகள் நமக்கு கிடைக்கின்றன.

*1.ஆஞ்சநேயஸ்துதி– தி.நடனசபாபதி சர்மா*

*2. ஜெயேந்த்ரபஞ்சரத்னம்– தி.மயூரகிரி*

இதில் ஆஞ்சநேயஸ்துதி 11 ஸ்லோகங்களால் ஆனது. கிரந்தலிபியில் எழுதப்பட்டிருக்கிறது. எக்காலத்தில் எழுதப்பட்டது என்று தெரியவில்லை. நடனசபாபதி சர்மா அவர்களின் எண்பதாவது அகவை நிறைவு மலரான (2010) "ராகா சஹஸ்ரத்தில்" இப்பாடல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதில் உதாரணமாக,

*ராமதூத நமஸ்துப்யம், சீதா ஸந்தோஷகாரக,*
*க்ருபயா பாஹி மாம்தீநம் ச்வயி பக்தி சமர்ப்பிதம் (ஆஞ்சநேயஸ்துதி–09)*

என்பதைக் குறிப்பிடலாம்.

ஜெயேந்த்ர பஞ்சரத்னம் என்பது தி.மயூரகிரி என்ற என்னால் எழுதப்பட்ட ஐந்து பாக்கள் உடையது. காஞ்சி காமகோடி ஜெயேந்த்ரசரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பேரில் பாடி 2011 மாசியில் வழங்கி அவரது ஆசீர்வாதங்களைப் பெற்றது. இதில் உதாரணமாக,

*பூஜானுசித்தம் காமகோடிப் பிரசித்தம்*
*சாமான்ய ஜனப்ரிய ரூபம் மங்களம்*

*தேஜோன்மயத்வம் ஸ்ரீ வித்யாபிமானம்*
*காமாட்ஷி மாதா ஸ்வரூபம் ஸ்ரீஜெயேந்த்ரம் (ஜெயேந்த்ரபஞ்சரத்னம்-02)*
என்பதைக் குறிப்பிடலாம்.

இந்த வரிசையில் அண்மையில் வாழ்ந்த சிவத்தொண்டன் செல்லத்துரை சுவாமிகளும் குறிப்பிடத்தக்கவர். நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகளும் சம்ஸ்கிருத அறிவை தன்னார்வ மிகுதியில் ஏற்படுத்திக் கொண்டார். அதற்கு முக்கிய காரணம் பகவத்கீதையையும் உபநிடதங்களையும் மூலமொழியில் படிக்க வேண்டும் என்பதே. இதனால், சம்ஸ்கிருதப்புலமை பெற்ற சுவாமிகள் பின் பலருக்கு சமஸ்கிருத அறிவுண்டாகக் காரணமாகவும் விளங்கினார்.

இன்றைக்கு நீர்வேலியில் முன்னரும் ஒப்பிடும் போது சமஸ்கிருதக் கல்வியின் நிலை திருப்திகரமாக இல்லை. சம்ஸ்கிருதத்தை தற்போது இங்கே வசிக்கும் அந்தணர்கள் மட்டுமே அதிகம் கற்கிறார்கள். தற்போது சமய வாழ்வில் இளைஞர்கள் அதிக நாட்டம் கொள்ளாமையால் சம்ஸ்கிருதக்கல்வியையும் அவர்கள் அதிக ஈடுபாடுடையவர்களாக இல்லை.

எனவே, சம்ஸ்கிருத பாடத்தை உயர்தரத்திலும்- சாதாரணதரத்திலும் பல்கலைக்கழகங்களிலும் கற்கக் கூடிய வாய்ப்புகள் இருப்பினும் அதனை பயன்படுத்திக் கொள்வோர் மிகக்குறைவு. இதற்குப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் குறைவு. நீர்வேலிப் பாடசாலைகளில் இது முற்றிலும் இல்லாமல் போய்விட்டமை வருத்தத்துடன் நினைவு கூரத்தக்கது. ஆனாலும், அரச பாடத்திட்டத்தின் அடிப்படையில் எப்பாடநெறியைக் கற்றாலும் தாம் சுயமாக- அறிவைப் பெருக்குவதற்காக சம்ஸ்கிருதத்தைக் கற்கலாம் என்றால்.. கற்பதற்கான வசதிகள் மிகக்குறைவாகவே இருக்கின்றன.

இம்மொழியை இலங்கையில் வளர்ப்பதில் பாரிய பங்களிப்பினை ஆற்றிய நீர்வேலியில் இன்றைய நிலையில் ஒரு பக்கம் இப்படி இருப்பினும்.. இன்னொரு பக்க வளர்ச்சியும் உள்ளது. இப்போது கணனியில் கிரந்த- நாகரலிபிகள் (சம்ஸ்கிருத மொழியை எழுதப் பயன்படும் இருவகை எழுத்துருக்கள்) பாவிக்க முடிகிறது. இந்த வகையில் நீர்வேலியிலிருந்து குருமார்கள் அவர் தம் குடும்பத்தினர் முன்னின்று எராளமான நூல்களை சம்ஸ்கிருதத்தில் வெளியிட்டு வருகிறார்கள்.

இலங்கையில் முதன்முதலாக கணனியில் சம்ஸ்கிருத கிரந்தலிபியை பயன்படுத்தி நூலாக்கம் செய்தவர் நீர்வேலியைச் சேர்ந்தவரே. நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலைச் சேர்ந்தவரும், இன்று ஜேர்மனியில் வசிப்பவருமாகிய

சா.பாலச்சந்திரசர்மாவே ஆகும் என்பது பெருமைக்குரியது. இன்று சுகவீனமுற்றிருக்கும் பாலச்சந்திரசர்மா அவர்கள் 1996–1997 காலப்பகுதியில் தாமே முயன்று இச்சாதனையை நிறைவேற்றி நீர்வேலியின் சம்ஸ்கிருத பாரம்பரியத்தில் மீண்டும் ஒரு ஒளி விளக்கை ஏற்றினார்கள்.

இதன் பின்னர் இவ்வழியில் இன்று நீர்வேலியின் பல்வேறு குருமார்களும் இப்பணியை இவ்வகையில் முன்னெடுத்துச் செல்கிறார்கள். இவர்களில் சிவஸ்ரீ. ஆ.சந்திரசேகரக் குருக்கள், சிவஸ்ரீ.கு.தியாகராஜக் குருக்கள், சிவஸ்ரீ.சா.சோமதேவக்குருக்கள், சிவஸ்ரீ.இ.ஸ்வாமிநாதக் குருக்கள் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். இதில் 1995 காலப்பகுதியில் சோமதேவக்குருக்கள் அரசகேசரிப்பிள்ளையார் கோயிலில் ஒரு வேதபாடசாலை ஒன்றை உருவாக்க முயன்றார். எனினும் தொடர்ந்து வந்த போரனர்த்தத்தால் அது தோல்வியுற்றது. இதே போலவே, இராஜேந்திரக்குருக்களும் பல்முறை முயன்றும் நாட்டுச் சூழல் அது ஒழுங்குற நடக்கவிடவில்லை.


எது எப்படியாகிலும், இன்றைக்கு இவ்வகையில் கூட சம்ஸ்கிருதம் என்பது வெறும் கோயில் வழிபாட்டிற்குரிய மொழியாகவே வளர்கிறது. வெளியாகிற நூல்களும் கோயிற் கிரியை சம்பந்தப்பட்டதாகவே இருக்கிறது. ஆனால், ஒரு மொழி என்ற வகையில் உணர்வு பூர்வமாகவும், விருப்புடனும், மிகவும் ரசித்து கற்கிற நிலை முன்பிருந்ததாக அறியலாம். அது மீள உருவாக வேண்டும். அதற்கு உரிய வகைகள் செய்யப்பெற வேண்டும். கற்கவும்.. கற்றவர்கள் அதனைக் கற்பிக்கவும் முன் வரவேண்டும். இஸ்லாமியர்களுக்கு அரபு போல, பௌத்தர்களுக்குப் பாளி போல, கத்தோலிக்கர்களுக்கு இலத்தீன் போல, இந்துக்களுக்கு உரிய வழிபாட்டு மொழியான சம்ஸ்கிருதத்தை கற்க ஆவன செய்ய வேண்டும்.

உண்மையில் இலங்கையில்.. முக்கியமாக யாழ்ப்பாணத்தில் நீர்வேலியின் சம்ஸ்கிருதக் கல்விப் பாரம்பரியம் பற்றிய புரிதல் உண்டாக வேண்டும். அதனை மீள் எழுச்சியுறச் செய்வதற்கு இத்துறை ஆர்வலர்கள் பாடுபட வேண்டும். ஏனெனில், இந்துக்கள் என்று பார்த்தால் இந்துக்களின் மூலநூல்கள் சம்ஸ்கிருதத்திலேயே இருக்கிறது. ஆய்வாளர்கள்– ஆர்வலர்கள் என்று பார்த்தால் இந்திய இலங்கைப் பண்பாட்டின் மூலக்கூறுகள் சம்ஸ்கிருதத்திலேயே இருக்கிறது. நமது கர்நாடக சங்கீதமாகட்டும்.. பரநாட்டியமாகட்டும் இவை பற்றிய அறிவு நூல்களை கூட சம்ஸ்கிருதத்தில் தான் அதிகம் காணலாம். அவை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டாலும் சொற்கள் சம்ஸ்கிருத சொற்களே. இன்று பொதுவாக, நம் பெயர்கள் சம்ஸ்கிருத மொழியினவே.

ஆக, அறிவு பூர்வமாக வடமொழி மற்றும் சங்கதம் என்ற சம்ஸ்கிருத மொழி வளர்ச்சியில் நீர்வேலியின் பங்கு விரிவாக ஆராயப்பட வேண்டும். இன்னும் நமது அண்டை நாடான இந்தியாவைப் பின்பற்றி வானொலி– திரைப்படம்– தொலைக்காட்சி –இணையம் வாயிலாகவும் சம்ஸ்கிருதக் கல்வி முன்னெடுப்புக்கள் நீர்வேலியில் ஆரம்பமாக வேண்டும் என்பதே நமது அவா ஆகும். இவ்வாறான– சம்ஸ்கிருதக் கல்வி வளர்ச்சி நமது தாய்மொழியான தமிழையும் மற்றும் பண்பாடு– சமயம் –கலைகள் இவற்றையும் வளர்க்க வல்லதாக இருக்க வேண்டும். □

*உசாத்துணைகள்–*


1. கிருஷ்ணானந்த சர்மா.ஸ்ரீ, யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருதக் கல்வியை வளர்த்த நிறுவனங்களும் அறிஞர்களும், சிவஸ்ரீ.கா.கைலாசநாதக்குருக்கள் நினைவு வெளியீடு, 2000
2. குமாரசுவாமிக்குருக்கள்.ச, விக்னேஸ்வரப்பிரதிஷ்டாவிதி, ஸாயிநாதம், சா.பாலச்சந்தி ரசர்மா, நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில், 1997
3. சிவசங்கரபண்டிதர் எழுதி பிற்காலத்தில் வெளியிடப்பெற்ற பல்வேறு நூல்கள்
4. பரராசசிங்கம்.த., புகழ் பூத்த நீர்வேலி, காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபை, 2000
5. ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் ஞாபகார்த்த நூல் நிலையம், நீர்வேலி, ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர், 2000.
6. ராகாசஹஸ்ரம் (நடனசபாபதி சர்மாவின் எண்பதாவது அகவை நிறைவு நூல்), 2010.
7. தி.மயூரகிரி.நீர்வை, ஸ்ரீ ஜெயேந்த்ரபஞ்சரத்னம், (கைப்பிரதி)
8. நீர்வைமணி, நீர்வை உத்தமர், கா.சிவபாலன் நினைவு மலர், 2010,
9. சு.இராஜேந்திரக்குருக்கள் அவர் மகன் இ.சுவாமிநாதக்குருக்கள் வெளியிட்ட சமஸ்கிருத (கிரந்தலிபி) நூல்கள்
10. சா.சோமதேவக்குருக்கள் வெளியிட்ட சமஸ்கிருத (கிரந்தலிபி) நூல்கள்
11. கு.தியாகராஜக்குருக்கள் வெளியிட்ட சமஸ்கிருத (கிரந்தலிபி) நூல்கள்
12. மீரா சத்தியமூர்த்தி .செல்வி, சமஸ்கிருத இயலுக்கு சங்கரபண்டிதர் ஆற்றிய பணிகள், 2004, (யாழ். பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பெற்ற ஆய்வேடு)



# எமது கிராமத்தின் கூட்டுறவு வளர்ச்சி

த. பரராசசிங்கம் (ச. நீ.)
நீர்வேலி.

ஆதிகாலந்தொட்டு மக்கள் கூட்டுறவை அடிப்படையாக வைத்தே கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். பின்னர் தமது முயற்சிகளிலும் கூட்டு முறைகளையே கடைப்பிடித்து வந்துள்ளார்கள் கூட்டு உழவு, கூட்டுநாற்று நடுகை, கூட்டுப்பராமரிப்பு, கூட்டு அறுவடை, போன்றவகையில் மனிதன் கூடித் தொழில் செய்து கோடி நன்மைகளைப் பெற்றுக் கொண்டான் . ஒரு மனிதன் தனித்துச்செய்ய முடியாததை கூடிச்செய்து நன்மை கண்டான். தமது குடிசைகளை வேயும் போது கூட கூட்டுமுறையில் வேய்ந்து நன்மை கண்டான். சகோதரப்பண்பை வளர்த்துக் கொண்டான். இதுவே மனித வாழ்கையில் கூட்டுறவின் ஆரம்பப்படியாகும்.

காலம் உருண்டோட 1771 – 1858 வரையுள்ள காலப்பகுதியில் இங்கிலாந்தில் றொச்டேல் என்னும் நகரத்தில் வாழ்ந்த றொபேட் ஒவன், டாக்டர் வில்லியம் சிங் என்னும் தன்னலமற்ற முன்னோடிகளால் 1844இல் தொழிலாளர்கள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்த றொச்டேல் முன்னோடிகளிலேயே கூட்டுறவுக் கொள்கைகள் முதல் முதலில் வகுக்கப்பட்டன. அக்கொள்கைகளுக்கமைய 1895 இல் அனைத்துலக கூட்டுறவு நிறுவனம் உருவாக்கப்பட்டது.

1911 இல் இலங்கையிலும் கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. 1912 ஆண்டு முதலாவது கடனுதவு சங்கம் மாத்தறையில் வெல்லபடபத்து என்னும் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

“ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும்” என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டதே கூட்டுறவு இயக்கம்

01. பொதுவான தடையற்ற அங்கத்துவம்.
02. ஜனநாயக முறையில் அமைந்த நிர்வாகமும் கட்டுப்பாடும்.
03. சந்தை விலைக்கே பண்டங்களை விற்பனை செய்வதும் ஏனைய சேவைகளை வழங்குதலும்.
04. உடன் பணத்துக்கே விற்பனை
05. மூலதனத்துக்கு மட்டான வட்டி வழங்குதல்

06. இலாபத்தில் அங்கத்தவர்களின் ஆதரவுக்கேற்ப தள்ளுபடி வழங்குதல்
07. அங்கத்தவர் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குதல்
08. சகோதர தத்துவம் வேணுதல்
09. அரசியல் சமய விடயங்களில் கோஷ்டி சேராது கண்டிப்பாக நடுநிலைவகித்தல்.

இக்கொள்கைகளுக்கு அமைய ஆரம்பத்தில் ஐக்கிய நாணய சங்கங்கள் உருவாக்கப்பட்டன. ஐக்கியநாணயசங்கங்கள் அங்கத்தவர்கள் மத்தியில் சிக்கனம்,, சேமிப்பு என்பன அறிமுகம் செய்யப்பட்டு மக்கள் சிக்கனமாக வாழ்ந்து சிறுகச்சிறுக சேமித்து சங்கத்தில் தங்கள் கணக்கில் சேமிப்பிலிட்டு அச்சிறு தொகை வளர்ந்து பெரிய தொகையாகி தேவைப்பட்டவர்களுக்கு கடன் வழங்கியும், சேமிப்புகளுக்கு வட்டி வழங்கியும், கடன்களுக்கு நீதியான சேவையாற்றியதால் அங்கத்தவர்கள் தாங்கள் பெற்ற கடனை நாணயமாக (நேர்மை), மீளளிப்புச் செய்து தமது நாணயத்தை வளர்த்து வந்தார்கள். இன்னும் நாணயம் (பணத்தை) மையமாக வைத்து ஆரம்பிக்கப்பட்டதால். இச்சங்கங்கள் நாணயச்சங்கங்கள் என அழைக்கப்பட்டன. அந்த வையில் நீர்வேலி கிராமத்தில் 1939ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 16ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டதே காமாட்சியம்பாள் ஐக்கியநாணய சங்கமாகும். அதன் ஸ்தாபகரும் சமூக முன்னோடியும், கூட்டுறவாளருமான சின்னப்பு தர்மலிங்கம் அவர்களது அயராத முயற்சியும் அக்காலத்தில் கூட்டுறவுப்பரிசோதகராக விளங்கிய காலஞ்சென்ற மு. சின்னத்தம்பியின் அனுசரணையுடன் அக்காலத்தில் வடபகுதி ஐக்கிய சங்கங்கங்களின் பதிவுகாரியஸ்தர் C. இரகுநாதன் அவர்கள் முகதாவில் J/217ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து மேலும் நீர்வேலிப்பகுதியில் ஐ. நா. சங்கங்கள் உருவாகியன .

நீர்வேலி ஐக்கிய நாணய சங்கம் J/322
விக்கினேஸ்வர ஐக்கிய நாணய சங்கம் J/325
நீர்வேலி மத்திய ஐக்கிய நாணய சங்கம்
பரலோகமாதா ஐக்கிய நாணய சங்கம்
செவ்வேள் ஐக்கிய நாணய சங்கம்
சரஸ்வதி ஐக்கிய நாணய சங்கம்
ஸ்ரீசுப்பிரமணிய ஐக்கிய நாணய சங்கம் J/1120 (15.10.1951)
பகவதி ஐக்கிய நாணய சங்கம் J/1203 (31.12.1952)
நீர்வேலி தெ. ஸ்ரீ முருகன் மாதர் ஐக்கிய நாணய சங்கம் J/1456 (22.12.1985)
வலி.கிழ. தெ. ப. ப. நோ. கூ. சி. க. கூ. சங்கம் J/1695 (03.01.1985)
துர்க்கா ஐக்கிய நாணய சங்கம் J/ 1731 (09.08.1983)
நீர்வேலி வடக்கு மகளிர் இலக்குமி ஐ. நா.கூ. சங்கம் J/1456 (04.01.1995)
நீர்வேலி வடமேற்கு ஐ. நா. சங்கம் J/ 1804 (13.10.1986)
விநாயகர் ஐ. நா. சங்கம் J/ 1947 (21.10.1986)

ஸ்ரீ மீனாட்சி ஐ. நா. சங்கம் J/2091 (08.03.1991)
இலக்குமி ஐ. நா. சங்கம்
நீர்வேலி வடக்கு மகளிர் ஐக்கிய நாணய சங்கம்)
அரசகேசரி ஐ. நா. சங்கம்
கணேசா ஐ. நா. சங்கம்
காந்திநகர் ஐ. நா. சங்கம்
தச்சுத்தொழிலாளர் சி. சே. க. கூ. சங்கம்

எனக் கிராமத்தின் பல பகுதிகளிலும் ஐ. நா. சங்கங்கள் அமைக்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. எமது கிராமத்தில் கூட்டுறவின் ஆரம்பப்படி ஐ. நா. சங்கங்களே ஆகும்.

## கூட்டுறவு சங்கங்கள் கடைப்பிடிக்கும் புதிய ஏழு கூட்டுறவுக் கொள்கைகள்

01. தன் விருப்பார்ந்த, தடையற்ற அங்கத்துவம்
02. ஜனநாயக நிர்வாகமும் கட்டுப்பாடும்
03. அங்கத்தவரின் பொருளாதார பங்களிப்பு
04. சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழிற்படுதல்
05. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு
06. கல்வி – பயிற்சி – தகவல்
07. சமூக மேம்பாடு.

கொள்கைகளுக்கு அமையச் செயற்பட்டு வருகின்றமை குறிப்படத்தக்கது.

கூட்டுறவு வளர்ச்சிக்குப் பலதுறைகளிலும் பங்காற்றியது நீர்வேலிக் கிராமம் என்பது சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டிய விடயமாகும்.1947ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ந்திகதி சமூகமுன்னோடியும் சமூகசேவையாளருமான சின்னப்பு தர்மலிங்கமும் மற்றும் சி. தம்பிப்பிள்ளை, ஞா. வேலுப்பிள்ளை, சி. செல்லையா, க. வல்லிபுரம், சி. முத்துக்குமாரு, மு. மயில்வாகனம், வே. ஆறுமுகம், இ. நாகலிங்கம், ச. வடிவேலு, வே. பாலசிங்கம், ஆ. சபாபதி ஆகியவர்களால் ஆரம்பிக்கப்பட்டு அக்காலத்தில் கைத்தொழில் அமைச்சராக இருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களினதும், அக்கால வலி. கிழக்கு பிரதேச காரியாதிகாரியாகவிருந்த திரு. முருகேசம்பிள்ளை, கூடுடுறவு பதிவாளராக விருந்த R.E.S. செல்வரசு என்பவர்களின் அனுசரணையினால் 2.11.1949இல் J/1017ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. காமாட்சி அம்பாள் ஐக்கிய கைத்தொழிற்சங்கமாகும். இது நீர்வேலியில் கைத் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சின்னமாக விளங்குகின்றது.

இதே போல் நீர்வேலியின் புகழில் இடம்பெறும் விவசாயிகளின் சின்னமாக விளங்கும் விவசாய கூட்டுறவுச்சங்கங்களின் வளர்ச்சி பற்றியும் ஆராய வேண்டியுள்ளது.

1950ஆம் ஆண்டளவில் வலிகிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைச்சங்கம் 31.01.1951இல் J/1073ஆம் இலக்கதில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்துள்ளது. இச்சங்கம் தற்பொழுது கொழும்பில் வெள்ளைவத்தை யிலும் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வருவது நீர்வேலி கூட்டுறவு வளர்ச்சியை எடுத்துக்காட்டுவது ஆகும்.

வலி. கிழக்கு ப. நோ. கூ. சங்க சமாசத்தின் இரண்டு மொத்த விற்பனை நிலையங்களில் ஒன்றான ஆவரங்கால் மொத்த விற்பனை நிலையத்துக்கு புத்தூரில் நிரந்தர கட்டடம் ஒன்று 1960 இல் அமைக்கப்பட்டது.

நீர்வேலியில் இயங்கி வந்த மொத்த விற்பனை நிலையத்துக்கு, தலைமைக் காரியாலயத்துக்குமான புதிய கட்டடம் ஒன்று அமைப்பதற்காக காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு சுமார் 2 இலட்சத்து 87 ஆயிரம் ரூபா செலவில் அழகிய இருமாடிக் கட்டடம் பலவசதிகள் கொண்ட அலுவலகம், களஞ்சியங்கள், மாதிரிக்கடைகள், கேட்போர் கூடங்கள் எனப்பல அமைப்புகளுடன் கூடிய கட்டடமாக அமைக்கப்பட்டு 10.12.1966இல் கூட்டுறவு ஆணையாளர் P.E. வீரமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக் கட்டடமே இன்று வலிகாமம் கிழக்கு தென்பகுதியின் கூட்டுறவுச்சின்னமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இப்பணிக்கு முன்னின்றுழைத்த கூட்டுறவு ஆக்க உதவி ஆணயையாளர் கே. எஸ். பொன்னுத்துரை அக்காத்தலைவர் கெ. வி. கனகசபாபதி, நு. மு. சண்முகநாதன் (அதிபர்), பண்டிதர் நீ. சி. முருகேசு (ஆசிரியர்), க. இ. குமாரசாமி (ஆசிரியர்) ஆகியவர்களின் பணியை இப்பகுதிமக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

1957ஆம் ஆண்டு கூட்டுறவுத்துறைக்குப் பொறுப்பாயிருந்த கௌரவ மந்திரி பிலிப் குணவர்த்தனா அவர்களின் திட்டத்துக்மைய பல கூட்டுறச் சங்கங்கள் ஆரம்பிக்க வாய்ப்புக் கிட்டியது.

இவை கடன் வழங்கல், நுகர்ச்சிப்பொருள் விற்பனை, விவசாயத்துக்கு வேண்டிய விதைகள், கிருமிநாசினிகள் விற்பனை செய்தல் போன்ற பல நோக்கங்களை மையமாகக் கொண்ட ஒரே சங்கமாக அமைக்கப்பட்டன அந்த வகையில் நீர்வேலி வடக்கு ப. நோ. கூ. ச. நீர்வேலி தெற்கு ப. நோ. கூ. ச என இருசங்கங்கள் இங்கே அமைக்கப்பட்டு செயலாற்றின. இவை குறிப்பாக விவசாயிகளுக்கு விவசாயக்கடன்களை வழங்கி உற்சாகமூட்டியதுடன் இங்கு (விளைவிக்கப்பட்ட) உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தை உற்பத்தியாளரிடமிருந்து உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி, அவற்றைப் பனம் ஈக்கினால் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு கூடுகளில் போட்டு வபகுதி விவசாய உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கூடாக வியாபாரத் திணைக்களத்துக்கு புகையிரத மூலமாக அனுப்பி வியாபாரம் செய்தன. இதனால் இந்தச் சங்கங்கள் வெண்காயச் சங்கங்களெனவும் மக்களால் அழைக்கப்பட்டமை மறக்க முடியாத சம்பவங்களாகும்.

1970 ஆம் ஆண்டு "லெயிட்லோ" ஆனைக்குழ அறிக்கையின் படி கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகி அதனால் தனித்தனியே இயங்கிவந்த பண்டகசாலைச் சங்கங்கள் ப. நோ. கூ. சங்கங்கள் என்பன பதிவழிக்கப்பட்டு அவற்றின் மூலதனங்கள் எல்லாம் ஒன்றாக்கப்பட்டு 31.05.1971இல் ஒருகுடைக்கீழ் ஒரே அமைப்பாகப் புனரமைப்புச் செய்யப்பட்டன. ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த வலிகாமம் கிழக்கு ஐக்கிய பண்டகசாலைச் சமாசத்தின் தொழிற்பரப்பு இரண்டு ப. நோ. கூ. சங்கங்களாக மறுசீரமைக்கப்பட்டன. அவை ஒன்று நீர்வேலியில் மலைமைக்காரியாலையம் அமைத்து கிளைகளையும் அமைத்து கிராமிய வங்கி செயற்பாடு, கூட்டுறவு செயற்பாடு, அரிசியாலை செயற்பாடு என பல செயற்பாடுகளையும் கொண்டு சிறந்த முறையில் செயற்பட்டு வருவது நீர்வேலி கிராமத்தின் கூட்டுறவு வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. இதனையிட்டு நீர்வேலி கிராமத்தின் பிரசை என்ற வகையில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

1970இல் அகில இலங்கை ரீதியில் ப. நோ. கூ. சங்கங்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட பல்வேறு புள்ளிவிபரங்களுக்குமான போட்டியில் அகில இலங்கை ரீதியில் நீர்வேலி 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை பெருமைக்குரியதே.

சுமார் 35800 நுகர்வோரைக் கொண்டியங்கும் மேற்படி ப. நோ. கூ. சங்கம் 27 நுகர்ச்சிக்கிளைகள் மொத்தக்களஞ்சியம், எரிபொருள் நிலையம், சிறப்பு கூட்டுறவுநகர் – 4, கூட்டுறவுநகர்– 1 பொதி செய்யும் பகுதி – 1 அரைக்கும் ஆலை, கிராமியங்கள் எனப்பல அமைப்புக்களைக் கொண்டு இயங்குகின்றது.

**வலி. கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைச்சங்கம்**

1948ஆம் ஆண்டு இப்பகுதியில் வாழ்ந்த பெரியார்களான பூதத்தம்பி சின்னத்தம்பி பூதத்தம்பி சிதம்பரப்பிள்ளை, செ. அப்பாதம்பி , பூதத்தம்பி கதிரேசு நல்லையினார் மருதப்பிள்ளை, நல்லையினார் இராமுப்பிள்ளை ஆகிய நீர்வேலியைச் சேர்ந்தவர்களும், சிறுப்பிட்டி விதானையார், க. வேலாயுதர், சி. பத்மநாதன் ஆகியவர்களும், ஆவரங்காலைச் சேர்ந்த க. சிவகுரு என்வருமான சமூகமுன்னோடிகளால் ஆரம்பிக்கப்பட்டதே இச்சங்கமாகும். முதலில் நீர்வேலிச் சந்தியின் வடக்குப்பக்கமாக இருந்தும், நீர்வேலி வாய்க்கால்தரைப்பிள்ளையார் கோயிலுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கிவந்தது.

கோப்பாய்த் தொகுதி இலங்கைத்தமிழசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கோப்பாய் கோமான் அமரர் கு. வன்னியசிங்கம் அவர்களின் முயற்சியால் மேற்படி சங்கத்துக்கென காணியொன்றை யாழ். பருத்தித்துறைவீதியில் நீர்வேலி வாய்க்கால் தரவை பிள்ளையார் கோயிலின் தெற்கெல்லையாக அமைந்த காணியைக் கொள்வனவு செய்ததோடு பலவசதிகளும் கொண்ட நிரந்தரக்கட்டடம் அமைத்துச் செயலாற்றி வருகின்றது. 31.01.1951இல் J/1073ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்ட

இக்கூட்டுறவுச்சங்கம் நீர்வேலி, சிறுப்பிட்டி வாழைக்குலைச் செய்கையாளரின் கூட்டுறவுச்சின்னமாக விளங்குவது நீர்வேலிக் கூட்டுறவு வளர்ச்சியின் அங்கமாகும்.

இதன் ஆரம்பகால முகாமையாளராக திரு. த. காசிநாதர் (சிறுப்பிட்டி) அவர்கள் நீண்டகாலமாகவும், திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் (நீர்வேலி) அவர்களும் அவர்களோடு திரு.க. அருணாசலம் (சிறுப்பிட்டி) கொழும்பில் இயங்கி வந்த இதன் கிளை விற்னை முகாமையாளராகவும் கடமையாற்றி சங்க வளர்ச்சியில் பெரிதும் தொண்டாற்றிவந்தமை மறக்க முடியாததாகும். 1970ஆம் ஆண்டளவில் சங்கம் தனது செயற்பாடுகளை விருத்தியடையச்செய்யும் வகையில் வாழைநார் தும்பிலிருந்து கயிறுதிரித்தல் போன்ற தொழில்களையும் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

வாழைச்செய்கையாளர்களின் தோட்டங்களுக்கு மாட்டுவண்டி மூலம் தேடிச்சென்று வாழைக்குலைகளைச் சேகரித்து கொழும்பிலுள்ள சந்தைப்படுத்தும் திணைக்களத்துக்கு புகையிரதம்மூலமாகவும் மற்றுதட மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கு லொறிமூலம் கொண்டு சென்று வியாபாரம் செய்துவந்து கிராமத்தின் புகழை நாடறியச்செய்தமை கிராமத்தின் கூட்டுறவு வளர்ச்சியின் முக்கிய அங்கமாகும்.

மேலும் விவசாயிகளுக்கு வேண்டிய கிருமிநாசினிகள், பசளைவகைகளையும், உரம் போன்றவற்றைய.ம், கால்நடைத்தீனிகளான தவிடு, புண்ணாக்கு என்பனவற்றையும் தட்டுப்பாடான வேளையிலும் நியாயவிலைக்கே வழங்கி விவசாயிகளின் வாழக்கைக்கு கைகொடுத்து உதவியதோடு வருடாந்தம் இலாபப்பங்கீடு செய்து வழங்கிவந்தமையும் பாராட்டப்பட வேண்டியமையே.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைகளால் பல பொருட் சேதங்களையும், இழப்புகளையும் கண்ட மேற்படி சங்கம் காலஞ்சென்ற வினாசித்தம்பி சுப்பிரமணியம் மற்றும் பொன்னுத்துரை பாலசிங்கம், தர்மலிங்கம் பரராசிங்கம், செல்லத்துரை மயில்வாகனம், சரவணமுத்து தவராசா ஆகியவர்களின் முயற்சியால் வாழைச்செய்கையாளர்களின் வாழைக்குலைகளைச் சந்தைப்பத்தும் பணியைச் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கதே. கால நீரோட்டத்தில் சங்கத்தின் செயற்பாடுகள் மீண்டும் விஸ்தரிக்கப்படவேண்டுமெனப் பொதுச்சபை மீளமைப்புச்செய்யப்பட்டு புதிய நிர்வாகம் ஒன்று அமைக்கப்பட்டது. சங்கத்தின் பெயர்கூட இப்போ வலி கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கமென புனரமைப்புச் செய்யப்பட்டு வெற்றிப்பாதையில் ஏறுநடைபோட்டு வளர்ந்து வருவது பாராட்டப்பட வேண்டியதே. புனரமைக்கப்பட்ட நிர்வாகச்செயற்பாடுகளில் தலைவராக திரு. சின்னையா சுந்தரலிங்கம் (தலைவர்), திரு. சுந்தரம் சுப்பிரமணியம் (உபதலைவர்), திரு. சின்னப்பா திருநாவுக்கரசு (செயலாளர்), திரு. வேலுப்பிள்ளை தருமலிங்கம் (உபசெயலாளர்), மற்றும் செல்லையா ஜெயபாலன், ஐயாத்துரை குணசேகரம், கந்தசாமி ஸ்ரீமுகுந்தா, ஆறுமுகம் இரத்தினசபாபதி, வைரமுத்து இராசேந்திரம்,

கந்தையா நாகரத்தினம், இராமுப்பிள்ளை பத்மநாதன், சிவசுப்பிரமணியம் மங்களேஸ்வரன் (ஐயாத்தம்பி), ஆறுமுகம் சச்திதானந்தம், சர்வானந்தம் சேயோன், சரவனமுத்து தவராசா ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். முன்னாள் செயலாளராக V. V. இராசரத்தினம் அவர்கள் செயற்பட்டு சில ஆக்கபூர்வமான காரியங்களை நன்றியுடன் பாராட்ட வேண்டியுள்ளது. வளர்ச்சிப்பாதையில் ஏறுநடைபோடும் இச்சங்கத்தின் செயற்பாடுகளை கருத்திற்கொண்டு 2010ஆம் ஆண்டு U.N. D. P நிறுவனம் லொறி ஒன்றையும், இரண்டு சக்கர உழவு இயந்திரம் ஒன்றையும் வழங்கியிருப்பதும் வேறு இவர்களின் செயற்பாடுகளுக்குரிய இயந்திரம் ஒன்றையும் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதே.

மேற்படி சங்கத்தினர் தனியே வாழைக்குலைவியாபாரத்தோடு மட்டும் நின்று விடாது பாதிக்கப்பட்ட வன்னி வாழ் மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கும் வாழ்வாதாரத்துக்கும் நன்மையளிக்கும் வகையில் வாழைக்குட்டிகளையும், தோட்டம் தோட்டமாகச் சென்று சேகரித்து அனுப்பி வைக்கும் அரிய பணியையும் செய்து வருவது பாராட்டப்பட வேண்டியதே.

இன்னும் பாடசாலை மாணவர்களுக்கும், தொண்டர்நிறுவனம் ஒன்றின் உதவியுடன் வாழைப்பழவிநியோகம் செய்து வருவது நீர்வேலிக்கூட்டுறவு வளர்ச்சியில் மட்டுமன்றி கிராம நற்பணிகளில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. இன்னும் அண்மையில் கொழுப்பு வெள்ளவத்தையில் வாழைப்பழவிற்பனை நிலையம் ஒன்றையும் நடாத்தி வருவது நீர்வேலி கூட்டுறவின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாகும். இச்சங்கத்தின் பணியாளர்களாக கடமையாற்றிவரும் திரு. ஆ. லோகரத்தினம் (முகாமையாளர்) திரு. வே. விக்கினேஸ்வரன் (லிகிதர்), திரு. ப. அஜந்தன் (கொழும்பு விற்பனையாளர்)ஆகியவர்களின் பணி பாராட்டப்பட வேண்டியதே.

**பண்டகசாலைச் சங்கங்கள்**

அடுத்தபடியாக 1942ஆம் ஆண்டு 2ஆவது உலகமகாயுத்தத்தின் போது ஏற்பட்ட உணவுத்தட்டுப்பாட்டை பங்கீட்டு அடிப்படையில் விநியோகித்து நிவர்த்தி செய்யும் நோக்குடன் ஆங்காங்கே பண்டகசாலைச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அந்த வகையில்

நீர்வேலி வடக்கு விக்கினேஸ்வர ஐக்கிய பண்டகசாலை J/ 432 - (31.03.1943)
நீர்வேலி வடக்கு இலக்குமி ஐக்கிய பண்டகசாலை
நீர்வேலி மத்தி ஐக்கிய பண்டகசாலை J/ 720 - (18.12.1943)
நீர்வேலி மத்தி செவ்வேள் ஐக்கிய பண்டகசாலை
நீர்வேலி தெற்கு ஐக்கிய பண்டகசாலை J / 570 - (09.07.1943)

என்பன அமைக்கப்பட்டு உணவுப்பொருள் விநியோகத்தைச் சீராகச் செய்து வந்தன இவை அனைத்துக்கும் உணவுப்பொருட்களை விநியோகிக்கும் மொத்த நிலையமாக நீர்வேலி கந்தசாமி கோவிலடியில் வலி கிழக்கு ஐக்கிய பண்டக சாலைகள் சமாசம் ஒன்று அமைந்திருந்தது.

மேற்படி சமாசம் J/877ஆம் இலக்கத்தில் 25.09.1944இல் பதிவு செய்யப்பட்டது. வலிகாமம் கிழக்குப்பகுதி இருபாலை, கோப்பாய், நீர்வேலி, அச்செழு, ஊரெழு, உரும்பிராய், சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, தோப்பு, பத்தைமேனி, தம்பாலை, நவக்கிரி, இடைக்காடு, வளலாய் ஆகிய கிராமப்பகுதிகளைக் கொண்டதாக இருந்ததால் மேற்படி சமாசத்தின் பொருள் விநியோகத்துக்கென நீர்வேலியில் ஒரு மொத்த விற்பனை நிலையமும் ஆவரங்காலில் ஒரு மொத்த விற்பனைநிலையமும் இரண்டு மொத்த விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்ட தோடு நீர்வேலியிலேயே தலைமைக் காரியாலயம் அமைக்கப்பட்டது.

மேற்படி சமாசத்தின் நிர்வாகசபையில் திரு. வி. வீரசிங்கம் (அதிபர்) அச்சுவேலி, திரு. க.அருணாசலம் (ஆசிரியர்) சிறுப்பிட்டி, செ. நடராசா (தலைமையாசிரியர்) நீர்வேலி, திரு. சி. கனகசபாபதி (கோப்பாய் தெற்கு), திரு க. சிவகுரு (ஆவரங்கால்), சி. முருகேசு (ஆசிரியர்) நீர்வேலி, திரு. க. இ. குமாரசாமி (ஆசிரியர்) கோப்பாய் வடக்கு, திரு. சி. கனகசபை (புத்தூர்), திரு. நா. தம்பு (ஊரெழு), திரு. மு. கந்தசாமி (இடைக்காடு), திரு. சி. பொன்னையா (உரும்பிராய்), திரு. A. R. மனுவேற்பிள்ளை (அச்சுவேலி) ஆகியோர் இடம்பெற்று நற்பணியாற்றினர் இவர்களது சேவை மறக்க முடியாததாகும்.

## நீர்வேலி தெற்கு ப. நோ. கூ. சங்கம் J/1058 (08.12.1950)

வலிந்து கமம் செய்யும் பகுதி என்பதாலேயே வலிகாமம் எனப்பெயர் பெற்றதாக அறிகிறேன். இப்படியாக கஷ்டப்பட்டு விவசாயம் செய்யும் விவசாயி களுக்கு கைகொடுக்கும் வகையில் இங்கு கூட்டுறவுச்சங்கங்கள் அமைக்கப்பட்டதாக அறிகிறேன்.

இப்பகுதி விவசாயிகளின் முக்கிய பணப்பயிரான புகையிலை, வெங்காயச்செய்கையில் ஈடுபடுபவர்கள் அவர்களது புகையிலையை கொள்வனவு செய்து சந்தைப்படுத்த மலையாளம்புகையிலைச்சங்கம், சிகரட் புகையிலைச்சங்கம் என்பன செயலாற்றி வெற்றிகள் கண்டதாக அறியக்கிடக்கின்றது.

அந்தவகையில் நீர்வேலி தெற்கில் J/1058 ஆம் இலக்கத்தில் 08.12.1950இல் பதிவு செய்யப்பட்டு செயலாற்றிவந்ததே கரந்தன் விளைபொருள் உற்பத்தி விற்னைக் கூட்டுறவுச்சங்கம். மேற்படி சங்கமே இதற்கான கட்டடம் 26.05.1953இல் R.C. செல்வரசு அவர்களால் அத்திவாரமிடப்பட்டு 19.06.1954இல் கூட்டுறவு ஆணையாளர் M. மாணிக்க இடைக்காடரால் திறப்புவிழா செய்யப்பட்டது. 1972இல் வ. கிழ. தெ. ப. ப. கூ. சங்கம் இயங்கியது.

## நீர்வேலி வடக்கு ப. நோ. கூ. சங்கம். J/1433

02.04.1958இல் பதிவு செய்யப்பட்டது. குறித்த இரண்டு ப. நோ. கூ. சங்கங்களினதும் ஆரம்பகால தலைவராக மதிப்பிற்குரிய மூகாந்திரம் அத்தியார் அருணாசலம் அவர்களே விளங்கி ஆரம்பித்த பெருமைக்குரியவர். 1972இல் புனரமைக்கப்பட்டது. எனவே நீர்வேலி கூட்டுறவு வளர்ச்சியில் ஆணிவேராக அமைந்த சமூகசேவையாளர் அத்தியார் அருணாசலம், சமூகசேவையாளர் சின்னப்பு

தர்மலிங்ம், இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. செ. நடராசா . பண்டிதர் திரு. சி. முருகேசு ஆசிரியர் ஆகியோரர்கள் முக்கியமானவர்களை என்பது நினைவுபடுத்தப்படவேண்டியவர்கள்.

மேலும் சிகரெட் புகையிலைச்சங்கம் 1955இல் நீர்வேலி வடக்கு, நீர்வேலி தெற்கில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்துள்ளது.

வலிகிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் தலைவராக மக்களால் தெரிவு செய்யப்பட்ட திரு.நா. சுந்தரலிங்கம் (இருபாலை), உபதலைவர் திரு. ந. கணேசலிங்கம் (உரும்பிராய்), திரு. கு. பரமராசா (ஊரெழு), திரு. ப. இராசேந்திரம் (ஊரெழு), திரு. க. தர்மலிங்கம் (நீர்வேலி), திரு. சு. கலாதீபன் (நீர்வேலி), திரு. ஞா. யசோதரன் (இருபாலை) ஆகியோரோடு பொதுமுகாமையாளராக திரு. வ. க. சிவலிங்கம் ஆகியோர் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. □

**நீர்வையூருக்குப் பெருமை சேர்க்கும் மூத்த முற்போக்கு எழுத்தாளர்**



நாம் ஏன் எழுதுகின்றோம் என்று தனது எழுத்துலகப் பாதையைத் துணிவுடன் வெளியுலகிற்கு துல்லியமாக வெளிச்சம் போட்டுக்காட்டி எழுதுபவர்கள் ஒரு சிலராகத்தான் இருக்க முடியும். உள்ளத்தில் கள்ளமில்லாத படைப்பாளிகளால் தான் அவ்வாறு எழுத முடியும்.

அண்மையில் 80 வயதை எட்டிய ஒருவர் தனது இளமைப்பருவம் முதல் கடந்த 5 தசாப்தங்களாக கொள்கைப் பிடிப்போடு சிறுகதைகளைப் படைத்து வருகின்றார்.

கலைத்துவமாகவும் வாசகர்களுக்குப் பயனள்ளதாகவும் சிறப்பாக எழுதி வருகின்றார். அடக்கப்பட்ட எல்லா மக்களுக்காகவும் அவரது படைப்புக்கள் குரல் கொடுக்கின்றன.

முற்போக்கு இலக்கியத்தில் அவருக்கெனத் தனியிடம் உண்டு.

இலங்கையின் பெரும்பாலான பத்திரிகைகள் அவரது படைப்புக்களை விருப்போடு பிரசுரிக்கின்றன.

அவர் பரிசுகளைத்தேடி ஒரு போதும் ஓடியதில்லை. சாஹித்திய மண்டலம் உட்பட எந்தப் போட்டிக்கும் தனது நூலை அனுப்பியதில்லை.


ஒரு எழுத்தாளனுக்குரிய அங்கீகாரம் மக்களிடம் இருந்தே வர வேண்டும் பாரதிக்கும் மார்க்ஸிங் கார்க்கிக்கும் யார் பரிசு கொடுத்தார்கள்? எனக் கூறி போட்டிகளையும் பரிசுகளையும் நிராகரிக்கின்றார் அவர்.

அவர்தான் நீர்வைப் பொன்னையன்.

வங்காளத்தில் படிக்கும் போது மாணவர் எழுச்சிப் போராட்டங்களில் பங்குபற்றியதால் அடக்குமுறை எதிர்ப்பு, மக்கள் எழுச்சி போராட்டம் என்பவற்றில் பரந்த அனுபவம் கிட்டியது. ஆத்துடன் அங்கு கற்கும் காலத்தில் ஆங்கிலம் முதல் இந்தியாவின் பல்வேறு மொழிவழி இலக்கியங்களை படிக்கும் வாய்ப்பும் கிட்டியது. இதனால் இவருக்கு நவீன இலக்கியங்கள் பரிச்சியமானது.

யுதார்த்தம் நனவோடை, குறுங்கதை போன்ற மாறுபட்ட வடிவங்களை பரிட்சித்து அவற்றில் வெற்றியும் பெற்றிருக்கின்றார்.

எம். கே. முருகானந்தன்
- வீரகேசரி வாரமலர்.





# ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர்

க. கணேசராசா B. A.
ஆசிரியர்,
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவமும் செந்தமிழும் சிறப்புறப் பாடுபட்ட ஆகிய ஈழத்து பெரியோருள் ஸ்ரீலஸ்ரீ நல்லை ஆறுமுகநாலரும், ஸ்ரீலஸ்ரீ நீர்வை சங்கர பண்டிதரும் மிக முதன்மையானவர்களள். அந்நியராட்சிக் காலத்தில் இந்துமதம் பல ஆபத்துக்களை எதிர்நோக்கிய வேளையில், தமிழ் சில காலத்தில் செத்துப்போம் என கூறப்பட்ட காலத்தில், இலங்கையின் "சிரசு" எனப்படும் யாழ்ப்பாணத் தில் தோன்றிய சிவசங்கர பண்டிதர் அளப்பரிய பணியாற் றினார் 08ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் தோன்றிய சங்கராசாரியார் பாரததேசம் எங்கும் யாத்திரை செய்து தனது கோட்பாடுகளை நிறுவியது போல 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தோன்றிய சங்கர பண்டிதர் தம் அறிவு, குணசீலம், இறைபக்தி ஆழ்ந்த நுண்ணறிவு, அனுபவம் என்பன மூலம் அந்நியராட்சியில் இந்துமதம், தமிழுக்கு வந்த பேரிடர் பொடிப் பொடியாகும் படி போராடி வெற்றி பெற்றார். நாற்பத்திரண்டாண்டுகள் மட்டுமே வாழ்ந்த பண்டிதர் அவர்கள் பல நூல்களையும் எழுதியுள்ளார். பல பெருஞ் சாதனைகள் ஆற்றியுள்ளார். யாழ்ப்பாணத்தில் தேவபாஷை யாம் சமஸ்கிருதத்தை வளர்த்தோருள் பண்டிதர் முதன்மை யானவர் .

### சிவசங்கர பண்டிதரின் பூர்வீகம்

பல பண்டிதர்களும் புலவர்களும் வாழ்ந்த பூமி சுன்னாகம் ஆகும் அங்கு பல ஆயைங்களும் கல்விக்கூடங் களும் நிறைந்துள்ளன எப்பொழுதும் வேத ஒலி முழக்கம் கேட்கும் சுன்னையில் சைவ வேளாளர் மரபில் சங்கரப்பிள்ளையின் முதற் புதல்வராய் இருந்த சிவகுருநாதபிள்ளை எனும் உத்தமர். நீர்வேலியில் அருணாசலம் புதல்வி தேவயானை அம்மையைத் திருமணம் செய்து நீர்வேலியில் இருக்கலானார்.

### பண்டிதரின் தோற்றமும் வளர்ச்சியும்

யாழ்ப்பாணத்தரசர் காலத்திலேயே புகழ் பூத்து விளங்கிய நீர்வேலிப் பதியில் சிவகுருநாதருக்கும் தேவயானை அம்மைக்கும் சிரேஷ்ட புதல்வனாக 1821ஆம் ஆண்டு விரோதி வருடம் சித்திரை 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை, ரேவதி நட்சத்திரத்தில் சிவசங்கர பண்டிதர் அவதரித்தார்.

சங்கரனார் உரிய வயதில் சேனாதிராச முதலியார் போன்றோரிடம் கல்வி கற்கலானார். திருக்குறள், நீதி நூல்கள், பெரியபுராணம், கம்பராமாயணம், இலக்கியங்கள். நிகண்டு, தொல்காப்பியம், நன்னூல், சைவத் திருமுறைகள் எனும் தமிழ் நூல்களை எல்லாம் கசடறக் கற்றார். வேதாரண்யம் பிரம்மஸ்ரீ சுவாமிநாத தீட்சிதரிடம் வேதாகமங் கள் கற்றார். திருப்புகலூர் பரமேஸ்வர சாஸ்திரிகளிடம் சமஸ்கிருத நூல்கள் பலவும் கற்று வடமொழிக் கடலாக விளங்கினார்.

தமிழ் சமஸ்கிருதம் என்பவற்றுடன் ஆங்கில மொழியிலும் போதியளவு அறிவு பெற்றார். மும்மொழி பண்டித்தியம் உடையவரானார்.

*"கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்*

*நற்றாள் தொழார் எனின்"* எனும் குறள் மொழியை நன்கு உணர்ந்தார்.

சமணம், பௌத்தம், சைவம், வைணவம், கிறிஸ்தவம் இஸ்லாமியம் முதலாய மதங்களுள் எது உண்மைச் சமயம்? என ஆராய்ந்து சைவமே உயர்ந்தது எனத் தெளிந்து சைவதீக்ஷைகள் பெற்றுக் கொண்டு சைவசித்தாந்தம், சைவாகமங்கள், சைவசாஸ்திரங்களை நன்கு கற்று சிவபூஜா துரந்தரராக உத்தம சைவராக வாழலானார்.

**இல்லறவாழ்வும் சைவப் பணியும்**

ஸ்ரீ சங்கர பண்டிதர் தங்கமுத்து அம்மாவை உரிய பருவத்தில் திருமணம் செய்தார். ஸ்ரீமதி தங்கமுத்து அம்மாவும் சிறந்த பதிவிரதையாக அவரது சமய சமூகப் பணிகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கினார். அன்பும் அறனும் உடையதாய் விளங்கிய இவர்களின் இல்லறப் பயனாக சிவப்பிரகாசப்பிள்ளை, சிவகுருநாதபிள்ளை எனும் இரு புதல்வர்கள் பிறந்தனர்.

கிறிஸ்தவ மத்ததைப் பரப்பி வந்த பற்பல பாதிரிமாருடன் இந்தியாவிலும், இலங்கையிலும் காரசாரமான விவாதங்களில் ஈடுபட்டு வெற்றி பெற்றார். பல இடங்களில் அந்நியருக்கு அஞ்சாது கிறிஸ்து மத கண்டன பிரசாரங்கள் செய்தார். இந்து சமய வளர்ச்சிக்குப் பல சேவைகள் செய்தார்.

பண்டிதரின் புலமையைக் கண்ட இந்திய, இலங்கை அறிஞர்கள் பண்டிதரைத் தேடிவந்து பாடம் கேட்டனர். "சித்தாந்த சைவ பிரசாரக சிரோரத்தினம்" "சைவசிகாமணி", சிவபூஜா துரந்தர் என்றெல்லாம் பட்டங்கள் *வழங்கினர்.*

"பரசமய கோளரி" இவரது முதன்மைப் பட்டம். மதுரை அறிஞர் சதாவதானி மு. இராமசாமி செட்டியார்

“முத்துக் குமார கவிராச சேகரன் மொய்யமரிற்
தத்தித் தடக்குண்டு நாவலர் தாவச சவிமடிந்து
பித்தங் கெட உடன் தாமோதரந்தரன் சிதைந்த பைபிள்
செத்துக் கிடக்குது பார் சிவசங்கரன் எம்முனைக்கே”

எனப் பாடுகின்றார். அதாவது சிவசங்கரர் முன் பைபிள் செத்துக் கிடக்கிறது என்று பாடுகின்றார். இது சங்கர பண்டிதரின் பரசமய கண்டனத்தை காட்டும். இவர் கிறீஸ்தவத்தின் கடும்போக்கிலிருந்து சைவத்தை காத்ததை சி.தா. அமிர்தலிங்கம் அவர்கள்.

“சீர்பட்ட தெய்வ மறை ஆகமங்களின் தீம்பொருடன்
நாப்பட்டெழுஞ் சிவசங்கர நாயகன் சொற்
பாற்பட்டு வந்த கிறிஸ்து மத கண்டனப் பகுவாய்
வாய்ப்பட்டு வாழ்வதுண்டோ பைபிள் காண் இனி வையகத்தே”

எனப்பாடுகிறார்.

**பண்டிதர் இயற்றிய, பதிப்பித்த நூல்கள் (19)**

**சமஸ்கிருத நான்கு நூல்கள்**

- சமஸ்கிருத பால பாடங்கள்
- சமஸ்கிருத சப்தசங்கிரகம்
- சமஸ்கிருத தாது மாலை
- சமஸ்கிருத சித்தாந்த தசராவளி லகுடிகை

**சமஸ்கிருத - தமிழுரை (4 நூல்கள்)**


- சமஸ்கிருத ஞானபோதம் தமிழுரை
- சமஸ்கிருத சட்சுலோகி தமிழுரை
- சமஸ்கிருத சுக சிர்ணயம் தமிழுரை
- சமஸ்கிரத சுகபஞ்ச சஷ்டி தமிழுரை

**தமிழ் நூல்கள் (11)**

சைவப்பிரகாசம், சிரார்த்தவிதி, கிறிஸ்துமத கண்டனம், மிலேச்ச மத விகற்பம், சிவபூசை, அந்தாதி விருத்தி, மிருகேந்திர விருத்தி, பௌஷ்கர ஞான பதம், சிவஞானபோத விருத்தி, ஞான பிரகாசியம், தேவிகால உத்தரவிருத்தி, தர்க்க பரிபாஷை எனும் 11 தமிழ் நூல்கள்.

**சிவபதப்பேறு**

நீர்வைக்கு புகழ் சேர்த்த உத்தம சங்கர பண்டிதர் பெருமான் இந்தியாவில் தயாத்திரை செய்து சைவத்தை பலவழிகளிலும் வளர்த்து தமிழகம் புதுவையில் அங்கு ஒரு குருகுலம் நடாத்தி வருகையில் 12.09.1870 இல் 42ஆவது வயதில் புரட்டாதி மாத பூர்வ பக்ஷதுதியை திதியில் சிவகதி பெற்று இறைவனோடிணைந்தார். பின்பு இவரது பணியை சிவப்பிரகாச பண்டிதர் தொடர்ந்து செய்யலானார்.□



கட்டுரை

# யாழ்ப்பாணத் தமிழ் மந்திரிக்கு நீர்வேலியில் திருவுருவச் சிலை

ந. குமரசிறி
ஆசிரியர்,
நீர்வேலி மேற்கு.

அரசகேசரி – யாழ்ப்பாணத் தமிழ் அரச வம்சத்தை சேர்ந்த பெரும்புலவர். காளிதாசனின் வடமொழி இரகுவம்சத்தை தமிழில் தந்த பெருமைக்குரியவர். ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன்முதலில் காப்பியம் இயற்றிய புலவன் என்ற பெருமையையும் அரசகேசரி பெறுகிறார்.

யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள் விநாய வழிபாட்டில் அதிக நாட்டம் காட்டினர். நல்லூரில் கைலாயப் பிள்ளையார், இணுவிலில் பரராசசேகரப் பிள்ளையார், செகராசசேகரப் பிள்ளையார் என்ற வரிசையில் நீர்வேலியில் அரசகேசரிப் பிள்ளையார் கோவிலைத் தாபித்தனர்.

நீர்வேலியை ஊடறுத்துச் செல்லும் இராச வீதியும், போர்த்துக்கேயரின் படையெடுப்பின் போது யாழ்ப்பாண அரச வம்சத்தவர் கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் நிலையெடுத்தார்கள் என்ற செய்தியும் நீர்வேலிக்கும் யாழ்ப்பாண அரச வம்சத்தவர்களுக்கும் இடையிலான தொடர்பை உறுதிப்படுத்துகின்றது.

"நல்லூரில் இருந்த இராசதானியும் பெரியகோயிலும் (கந்தசுவாமி கோவில்) போர்த்துக்கேயரால் கி.பி. 1621 இல் முற்றாக அழிக்கப்பட அங்கிருந்த கோயிற் சிலை விக்கிரகங்களை குளமொன்றில் புதைத்துவிட்டுக் கோயில் குருக்கள்மார் நீர்வேலிப் பகுதிக்கு ஓடினர்" என்று ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம் குறிப்பிடுகின்றது.

யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளுள் ஒருவரான எதிர்மன்னசிங்கன் எனப்படும் பெயரினையுடைய எட்டாம் பரராசசேகரனின் (கி.பி. 1591 கி.கி. 1616) நெருங்கிய உறவினனே இந்த அரசகேசரி.

தமிழ்நாட்டிலே திருநெல்வேலியை அடுத்துள்ள ஆழ்வார் திருநகரியிலே இராமாநுசக் கவிராயரிடம் இவர் பாடங்கேட்ட காரணத்தால் இராமாயணம் மீது அதிக காதல் கொண்டார் என்பர். இதனால் வடமொழியில் காளிதாசர் பாடிய இரகுவம்சத்தை அரசகேசரி தமிழில் பாடினார். தமிழில் எழுந்த இரகுவம்சம் ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் எழுந்த முதற்காப்பியமாகக் கொள்ளப்படுகின்றது.

ஒருநாள் உறக்கத்தின் போது தான் கண்ட கனவை நினைந்து பார்த்து தனது இராசவீதி வழியே நீர்வேலி வந்து அதன் அருகில் இருந்த பற்றைக் காட்டிற்குள் அமைந்திருந்த விநாயகரை அரசகேசரி கண்டார் என ஐதீகக் கதைகள் கூறுகின்றன. இதன் காரணமாக விநாயகருக்கு அரசகேசரி கோவில் அமைத்தார். தமிழரிடையே குறிப்பாக இந்துக்களிடையே இருந்த வரலாற்று ஆவணப்படுத்தல் துறைசார்ந்த விழிப்பின்மை அரசகேசரி பற்றிய செய்திகளையு ம கோவில் பற்றிய செய்திகளையும் துல்லியமாக குறிப்பிடத்தவறிவிட்டன.


யாழ்ப்பாண அரச வம்சத்தவர் விநாயகருக்குப் பிரமாண்டமான கோவில் அமைக்கும் போது இரட்டை மூலஸ்தானங்களைக் கொண்டே கோவில்களை அமைத்தனர். நல்லூர் கைலாயப் பிள்ளையார் கோவிலைப் போல நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையாரிலும் இரட்டை மூலஸ்தானங்கள் உள்ளன. ஒன்றில் விநாயகரும் மற்றையதில் வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரப் பெருமானும் வீற்றிருக்கின்றனர்.

அரசகேசரி கண்ட கனவுச்செய்திகளும் அதன் நிமித்தம் விநாயகரைக் கண்டு கோவில் வைத்த செய்திகளும் பிள்ளையாருக்குரிய தேரில் அழகிய சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. 1960 களின் பிற்பகுதில் தமிழகத்தின் புகழ் பெற்ற ஸ்தபதியாக விளங்கிய ஏகாம்பரம் என்பவரால் இந்தச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அழகிய சிற்பங்கள் நிறைந்துள்ள தேர் இந்துக் கோவில் தேர்க்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்கள் பலவற்றைக் கொண்டிருப்பதாக தேர்ச்சிற்ப ஆய்வாளர் அம்பிகைபாகன் குறிப்பிடுகின்றார்.

அரசகேசரியின் பெருமைகளை நிதர்சனமாக நாளும் நினைக்கக் கூடிய வகையில் ஆலய வாயிலுக்கு நேரே அரசகேசரியின் திருவுருவச் சிலையை அமைத்துள்ளனர். இந்திய சிற்ப வல்லுநரான புருஷோத்தமனின் கைவண்ணத்தில் விரிவுரையாளர் ச.லலீசனின் உபயமாக அண்மையில் இடம்பெற்ற திருக்குடமுழுக்குப் பெருவிழாவின் போது அரசசேகரியின் திருவுருவம் "பக்தப் பிரதிட்டை" செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வலி..கிழக்குப் பிரதேச செயலர் ம.பிரதீபன் மற்றும் தமிழார்வலர்கள் பலரும் விநாயக அடியவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அரசகேசரிக்கு முதல் மரியாதை செய்தனர்.

நீர்வேலியூரில் கைகளில் ஏடுகளுடன் கம்பீரமாகக் காட்சி தரும் அரசகேசரி, இப்பிரதேச மக்களின் புலமைசார் இருப்புக்குக் கட்டியம் கூறுபவராக அமைவார் என எதிர்பார்க்கலாம்.□



அறிமுகக் குறிப்பு

# அழகு ஒளிரும் நீர்வேலி

## ஓர் ஊரையே ஆவணப்படுத்தும் புதிய முயற்சி

கு. நிரோஜன்
நீர்வேலி மத்தி.

அழகு ஒளிரும் நீர்வேலி என்கிற பெயரிலே நீர்வேலி கலை பண்பாட்டுப் பேரவை அழகிய இறுவெட்டு ஒன்றை 19.11.2011 சனிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. இது வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதாக அறிய முடியாத வகையில் ஒரு ஊரை மையப்படுத்தி ஊரின் வளங்களை ஒருங்கே ஒளிப்பதிவு செய்து இறுவெட்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

சுழலுகிற உலகில் இந்த நீர்வை மண்ணுக்கு இருக்கும் சிறப்புத் தான் என்ன? என்று கேட்பது போல ஆரம்பிக்கிறது இறுவெட்டின் ஆரம்பம்.

விரிவுரையாளர் ச.லலீசன் (நீர்வைக்கிழார்) அவர்களதும், நீர்வை தி.மயூரகிரி சர்மா அவர்களதும் எழுத்து, வடிவம், இயக்கத்தில் இந்த இறுவெட்டு உருவாகியுள்ளது. இந்த புதிய முயற்சியில் துணிந்து இறங்கியமைக்காக இவர்களுக்கு ஒரு சபாஷ் போடலாம்.




இந்த இறுவெட்டின் தயாரிப்பை நீர்வேலி திருமுருகன் திருமண மண்டப உரிமையாளர் சமூகசோதி ந. சிவசுப்பிரமணியம் (செட்டியார்) அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

இறுவெட்டினை கணினியில் பதிந்து செவ்வையாக்கம் செய்து வடிவமைப்புச் செய்த பெருமை த. தவசாந்தனுக்கு உரியது. இந்தியாவில் இக்கலை

தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக் கொண்ட இவரது திறன் இவ் இறுவெட்டின் ஊடாக வெளிப்பட்டுள்ளது.

நீர்வேலி கலை பண்பாட்டுப் பேரவையினரின் ஆலோசனைகளுடன் வழிநடத்தப்பட்ட இவ் இறுவெட்டை பார்த்து ஆங்காங்கே அற்புதமான மாற்றங்களைக் காட்டி ஆலோசனை வழங்கியவர்கள் யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன், கிராம அலுவலர் சு. சண்முகவடிவேல் ஆகியோர் ஆவர். பிரபல சொற்பொழிவாளரான ச. லலீசன் அவர்களே இந்த இறுவெட்டுக்குக் குரல் வழங்கி எழுச்சியுண்டாக்கியிருக்கிறார்.

ஆக. மூத்தோரின் ஆலோசனை, வழிகாட்டல், அனுசரணை, உதவிகளுடன் இன்றைய இளைய தலைமுறையின் இனிய ஒரு படைப்பாக்கமாக அழகு ஒளிரும் நீர்வேலி வெளியாகியிருக்கிறது.

இன்றைக்கு நீர்வேலியிலிருந்து புலம்பெயர்ந்து பனி படர் நாடுகளிலும், பாலை வனச் சூட்டிலும் வாழ்பவர்கள் ஏராளம். அவர்களில் பலரும் தமது தாயகத்தை பார்க்க. அனுபவிக்க பல சந்தர்ப்பங்களை (இறுவெட்டை வேண்டிய போதெல்லாம் பார்த்துக் கொள்ளலாம்) இந்த இறுவெட்டு வழங்கியிருக்கிறது என நம்பலாம்.

வுழமையான புத்தகக் கலாச்சாரத்திலிருந்து மாறுபட்ட.. புதிய முயற்சியாக இது தெரிகிறது.. நீர்வேலியின் கோயில்கள், பாடசாலைகள், பண்பாட்டு அம்சங்கள், விவசாயம், கைத்தொழில், பாலர் கல்வி நிலையங்கள், வர்த்தகம், சனசமூகநிலையங்கள், மற்றும் பொது அமைப்புக்கள், இயற்கை வளங்கள் என்று பலவற்றையும் இந்த இறுவெட்டில் காண முடிகிறது.


வீதியோரம் ஓடுகிற மாடுகள், பாடி ஆடுகிற குழந்தைகள், இவற்றிலிருந்து பேயுலாவும் சுடலை, மங்கல வாழ்வைத் தரும் திருமணமண்டபம், ஆவுரோஞ்சு கல், வரை இந்த இறுவெட்டுப் பார்வை விரிந்து செல்வது சிறப்பைத் தருகிறது.

இன்னும். இந்த இறுவெட்டு சில நேர்காணல்களை உள்வாங்கி தாலாட்டு, ஒப்பாரி போன்ற கிராமத்துச் சூழல்களையும் உள்வாங்கியிருக்கலாம்.

ஆனால், ஒரு புதிய முயற்சி என்ற வகையிலும், பலருக்கு இதந்தரும் முயற்சி என்ற வகையிலும் இந்த இறுவெட்டு வெளியீட்டை பாராட்டிப் போற்றி மகிழ்கிறோம்.

உலகின் எந்த இடத்தில் வசித்தாலும் நீர்வேலியை ஒரு கணம் தரிசிக்க வைக்கும் இந்த முயற்சி பலராலும் வரவேற்கப்படும் என்பதும், இதனை அடுத்து இவ்வாறான முயற்சிகள் மற்றைய ஊர்களிலும் நடைபெறும் என்பதும் ஐயமில்லா உண்மைகளாய் தெரியக் காண்கிறோம்.□

கட்டுரை



# நீர்வேலியினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயத்துறையின் பங்களிப்பு


பொ. சற்குணநாதன் *B.Sc (Hons)Agri, PGDE, M.Ed.*
விரிவுரையாளர்
மட்டக்களப்பு தேசியக்கல்வியியல்க்கல்லூரி.


குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு கிராமியப் பொருளாதாரம் கணிசமான அளவிற்கு ஒரு பங்களிப்பினை வழங்க முடியும் என்ற விடயம் இப்பொழுது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பின்னணியிலும் விவசாயத்துறையே கிராமியப் பொருளாதாரத்தினுடைய முதுகெலும்பாக உள்ளமை காரணமாக அது நாட்டின் உணவு விநியோகத்துக்கு மிக முக்கியமானதொரு பங்களிப்பினை வழங்கிவருகின்ற யதார்த்தத்திலும் இக்கட்டுரையானது நீர்வேலி விவசாயத்துறை தொடர்பாக வரையறுக்கப்பட்ட சில விடயங்களை மாத்திரம் ஆராய்வதற்கு முயல்கின்றது.

நீர்வேலி பிரதேசமானது யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்ததாகும். இப்பிரதேசமானது தெற்கு புறம் கோப்பாய் வடக்குப் புறம் சிறுப்பிட்டி மேற்குப் புறம் ஊரெழு கிழக்குப்புறம் கைதடி ஆகிய கிராமங்களினால் சூழப்பட்ட 440ha நிலப்பரப்பை உள்ளடக்கிய ஒரு சிறிய கிராமமாகும். இப்பிரதேசத்தின் குடியிருப்பாளர் நிலம் தவிர 402ha பரப்பளவு நிலம் விவசாய முயற்சிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் 62% மானவர்களின் பிரதானதொழில் விவசாயமாக இருக்கின்றமையும் இப்பிரதேசம் ஒரு விவசாயப் பொருளாதாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளமைக்கு சான்றாக அமைகிறது.

இப்பிரதேசத்தினுடைய விவசாயத்துறையை விருத்தி செய்வதற்கென நேரடியாக அல்லது மறைமுகமான தலையீடுகளை மேற்கொள்வதன் மூலம் இப்பிரதேசத்தில் நிலவிவரும் பின்தங்கிய நிலைமையை ஒழிக்கும் பொருட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஆனால் மிக நீண்டகாலமாக மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஒரு சிறிய அளவிலான முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டு வந்துள்ளமையை வெளிப்படையாகவே அவதானிக்க முடிகிறது வறிய விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி வறுமையை ஒழிக்கும் நோக்குடன் பெருந்தொகையான நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட்டு அமுல்

படுத்தப்பட்டிருக்கின்றது. இருப்பினும் நீண்ட காலமாகவே நிலவி வந்த உள்நாட்டுப் போர்ச்சூழல் இவ்வாறான திட்டங்களின் வினைத்திறனையும் விளைதிறனையும் பாதிப்புக்குள்ளாக்கியிருந்தமை அனைத்துத்தரப்பினராலும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

விவசாயத்துறை பற்றி நோக்கும் போது தனியே கமத்தொழில் எனப்படுகின்ற பயிர்ச்செய்கையை மாத்திரம் சிந்திக்காமல் பயிர்ச்செய்கைக்கு துணைபுரிகின்ற கால்நடை வளர்ப்பையும் ஒருங்கிணைத்து பார்க்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஏனெனில் தற்போதைய விவசாயம் என்பது மிகப் பரந்தவொரு துறையாக மாற்றமடைந்துள்ளது. சுற்றாடல், நீர், நிலம்சார் உணவுத்தொழில்நுட்பம் போன்ற பல துறைகளும் விவசாயத்தில் அடங்கியிருக்கின்றன. எனவே இப்பிரதேசத்தின் விவசாயத்துறை பற்றி ஆராய முற்படுகின்ற போது கமத்தொழில் மற்றும் விலங்கு வேளாண்மை முயற்சிகளும் நோக்கப்படவேண்டியிருப்பினும் கட்டுரையின் அடக்கம் காரணமாக கால் நடைவளர்ப்பு தொடர்பான விடயங்களை உள்ளடக்குவது தவிர்க்கப்பட்டுள்ளது.

நீர்வேலிக் கிராமத்தைப் பொறுத்தவரையில் விவசாயத்துறை பின்தங்கிய நிலையிலேயே இருந்து வருகின்றது. இந்த நிலையில் இவ்வாறான பின்தங்கிய நிலைமைக்கு வழிகோலியிருக்கும் பிரதான காரணிகளை இனம் கண்டு கொள்வது அவசியமாகும். விவசாயத்துறையில் செழிப்பு நிலையை எடுத்துவரும் பொருட்டு வளங்களைத் திரட்டுவதற்கு இக்காரணிகளை அல்லது பிரச்சினைகளை சரிவரப்புரிந்து கொள்வது அவசியமாகும். இத்தகைய ஒருசில காரணிகள் மாத்திரம் தொடர்ந்து கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

நீர்வேலிப்பிரதேசமானது தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய மூன்று கிராம சேவகர்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது. இப்பிரிவுகளில் வசிக்கும் குடும்ப எண்ணிக்கை விவசாயக்குடும்ப எண்ணிக்கை போன்றவற்றையும் விவசாய நிலங்கள் தொடர்பான தகவல்களையும் அட்டவணை தருகின்றது.

| கிராம சேவகர் பிரிவு | குடும்ப எண்ணிக்கை | விவசாய குடும்ப எண்ணிக்கை | தாழ்நிலம்(ha)/ நெல்வயல் | | | மேட்டுநிலம்(ha)/ தோட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பயன் பாட்டில் | பயன் படாத | மொத்தம் | பயன் பாட்டில் | பயன் படாத |
| நீர்வேலி தெற்கு | 690 | 298 | 30.36 | 28.36 | 2.0 | 87 | 81 | 06 |
| நீர்வேலி வடக்கு | 791 | 467 | 20.24 | 190 | 1.24 | 152 | 137 | 15 |
| நீர்வேலி மேற்கு | 780 | 447 | --- | --- | --- | 150 | 137 | 13 |
| மொத்தம் | 2261 | 1212 | 50.60 | 47.36 | 3.24 | 389 | 355 | 34 |

மேட்டுநில காணியின் 40 சதவீதமான (அண்ணளவாக 142ha) பரப்பளவில் வாழை செய்கை பண்ணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் அண்ணளவாக 150000 வாழை மரங்கள் (அடிகள்) தற்போது காணப்படுகின்றது. வருடமொன்றுக்கு வாழைத்தார் (குலை) களின் மொத்த உற்பத்தி ஆறாயிரம் தொன்களாக இருக்கும் என எதிர்பார்க்கலாம் இருப்பினும் நீர்ப்பற்றாக்குறை, குறைவான பசளைப்பிரயோகம், புயல்காற்று போன்ற காரணங்களால் இவ் விளைச்சலில் சிறுதளம்பல் ஏற்படக்கூடும்.

எரிபொருள் விலை அதிகரிப்பு விவசாயத்தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிப்பு மற்றும் அவர்களின் கிடைப்புத்தன்மைக்கு ஏற்பட்டு இருக்கும் சிக்கல் நிலை போன்றன காரணமாக வாழைச் செய்கைக்கான உற்பத்திச் செலவு உயர்வாக இருப்பதனால் முறையான பராமரிப்பில் விவசாயிகளின் கவனம் குறைவாக உள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாக விளைச்சலில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை வாழைச் செய்கையாளர்களுக்கு அதிருப்பதியை உருவாக்கியுள்ளது. இருப்பினும் வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிகாரணமாக வாழைச்செய்கையாளர்கள் போக்குவரத்துச் செலவின்றி தமது உற்பத்திகளை நியாயமான விலையில் சந்தைப் படுத்துதவற்கான வசதியை பெற்றுள்ளமையானது வாழைச் செய்கைக்கு புதிய விவசாயிகளின் வருகையை ஊக்குவித்துள்ளது. இதையொரு ஆரோக்கியமான சமிங்ஞையாக கருதலாம். இருப்பினும் காலத்துக்குக் காலம் இயற்கையின் சீற்றம் காரணமாக உருவாகும் கடும் காற்று வாழைச் செய்கைக்கு ஒரு சவாலாகவே இருந்து வருகின்றது. இவ்விழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு வாழைப் பயிருக்கான காப்புறுதித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கமோ அல்லது தனியார் நிறுவனங்களோ முன்வரவேண்டும்.

பயன்பாட்டில் உள்ள மேட்டுநிலக்காணியில் மிகுதி 60 சதவீதம் (அண்ணளவாக 213ha) மானது புகையிலை, வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற பணப்பயிர்களும், வெண்டி, பயற்றை, புடோல், பாகல், பூசினி, கரட், பீற்றூட், லீக்ஸ், முள்ளங்கி, கறிமிளகாய், தக்காளி, கீரை போன்ற மரக்கறிப்பயிர்களும் பயறு, உழுந்து, கௌபீ, குரக்கன் போன்ற சிறு தானியப்பயிர்களும் மரவள்ளி, இராசவள்ளி, கரணை, மோதகவள்ளி போன்ற கிழங்குப் பயிர்களுமாக மாறி மாறி சுழற்சிமுறையில் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. கணிசமானளவு நிலம் புகையிலைச் செய்கைக்காக பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் அனுபவம் மிக்க புகையிலைச் செய்கையாளர்களினால் உயர்விளைச்சல் பெறப்பட்டிருப்பினும் பதனிடும் கட்டமைப்பு செயலிழந்தமை காரணமாக பச்சை இலையை சந்தைப்படுத்தும் போது நியாயமான சந்தை விலையை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் போன்ற பயிர் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் பெரும்பாலன சந்தர்ப்பங்களில் நியாயமான விலையைப் பெற்றுக் கொள்வதில்லை. அரசாங்கத்தின் நிலையற்ற விவசாயக்கொள்கை காரணமாக மலிவான இறக்குமதி உள்ளூர் உற்பத்தியை வெகுவாகப் பாதிக்கின்றது. விவசாய உள்ளீடுகளின் விலை நாளுக்கு நாள் உயர்வடைவதால் இவற்றுக்கான உற்பத்திச் செலவு உயர்வாக இருப்பதால் விவசாயிகள் நட்டமடைகின்றனர். இவ்வாறான நிலைமை கிராமிய விவசாயிகளைச் சோர்வடையச் செய்வதால் அவர்கள் தமது முயற்சியைக் கைவிடவே செய்கின்றனர்.

பணப்பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட தோல்வி காரணமாக பெரும்பாலான விவசாயிகள் உள்ளூர் மரக்கறிப்பயிர்களையும் மலைநாட்டு மரக்கறிப்பயிர்களையும் செய்கை பண்ண முனைகிறார்கள். சந்தை விலையை கருத்தில் கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட மரக்கறிப்பயிர்களை அதிக எண்ணிக்கையான விவசாயிகள் பாரிய நிலப்பரப்பில் ஒரே சமயத்தில் செய்கை பண்ணுவதன் காரணமாக சந்தையில் குறித்த மரக்கறிகளின் மிகை நிரம்பல் ஏற்படுகின்றது. இந்நிலைமையானது மரக்கறிகளுக்கு மலிவான விலையையே பெற்றுத் தரும். இதற்கும் அப்பால் மண்ணுக்குப் பொருத்தமில்லாத பயிர் வகைகளை பொருத்தமல்லாத காலத்தில் (போகம் தப்பி) பயிரிடுவதனால் எதிர்பார்த்தளவிலும், தரத்திலும் விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் உருவாகின்றன. இவ்வாறன தொருநிலையில் நீர்வேலியில் உள்ள கமக்காரர் அமைப்புக்கள் அல்லது விவசாயச்சம்மேளனங்கள் முன்வந்து மரக்கறிப்பயிர் செய்கையாளர்களிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தி மரக்கறிப்

பயிர் உற்பத்தித்திட்டமொன்றை உருவாக்கி அதனடிப்படையில் பயிர் உற்பத்தியில் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும். விவசாயிகளும் இவ்வாறானதொரு திட்டத்தைப் பின்பற்றி தமது உற்பத்திகளுக்கு சிறந்த விலையைப் பெற்று வருமானத்தை உயர்த்தப்பாடுபடவேண்டும்.

நீர்வேலிப்பிரதேசத்தின் கிழக்குப்பறம் (யாழ்-பருத்தித்துறை வீதிக்கும் கடல்நீரேரிக்கும் இடைப்பட்ட பிரதேசம்) தாழ் நிலமாக காணப்படுகின்றது. இங்குள்ள மண் தொகுதியானது களித்தன்மை சார்ந்ததாகக் காணப்படுவதாலும் நீரைத் தேக்கி வைத்திருக்கத்தக்க தன்மையைக் கொண்டிருப்பதாலும் இது பொதுவாக நெற்செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறான நெல்வயல்கள் மழைகாலத்தில் மட்டுமே செய்கைப் பண்ணப்படும். கோடை காலத்தில் அவை உழுது விடப்படுகின்றன. உழுது வெறுமனே விடப்பட்ட காலத்தில் மாடுகளும் ஆடுகளும் இங்கு மேய விடப்படுகின்றன. இவை பகற்காலம் முழுவதும் சாணத்தையும், மூத்திரத்தையும் வயலுக்குச் சேர்த்து அதன் செழுமையை அதிகரிக்கின்றது. இதற்கும் மேலாக வயலில் தானாக வளரும் தொட்டாற் சுருங்கி, காவுளாய் போன்ற அவரையினத்தாவரங்களினாலும் சிறுபோகத்தில் அல்லது அறுவடைக்குப் பின்னான மண் ஈரத்தில் செய்கை பண்ணப்படும் உழுந்து, பயறு, சணல் போன்ற அவரையினத் தாவரங்களினாலும் பெருமளவிலான உயிர்த்திணிவு உற்பத்தி செய்வதோடு இவற்றின் வேரில் உள்ள றைசோபியம் வகை பக்ரீரியா வளிமண்டல நைதரசனை மண்ணிற்குப் பதிப்பதன் மூலம் வளப்படுத்துகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் இப்பிரதேசத்தின் நெற்பயிர்ச் செய்கையில் கணிசமானளவிற்கு தாக்கத்தை உண்டுபண்ணி விளைச்சலை அதிகரிக்கச் செய்கின்றது. இருப்பினும் தற்போது அதிகரித்துவரும் உற்பத்திச் செலவு (விதைநெல், உழவு, அசேதனவளமாக்கி, களைக்கட்டுப்பாடு, பயிர்ப்பாதுகாப்பு, அறுவடை, நெல்மணிபிரித்தெடுப்பு போன்றவற்றுக்கான செலவு) நெற்செய்கையாளர்களிடையே ஒருவித ஊக்கமின்மையை ஏற்படுத்தியுள்ளது எனலாம். எனவே இவற்றை எதிர் கொள்வதற்கான விசேட உத்தி அல்லது நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்குவதன் ஊடாக இப்பிரதேசத்தின் தாழ்நிலங்களையும் பொருளாதாரப் பங்களிப்புக்கு பயன்படுத்தலாம்.

இப்பிரதேசத்தில் விவசாயத்திற்குப் பொருத்தமான உயர் உற்பத்தித்திறன் கொண்ட கணிசமானளவு (34ha) மேட்டுநிலக்காணி செய்கைப் பண்ணப்படாமல்

உள்ளது இக்காணிகளைச் செய்கை பண்ணுவதற்கு காணிச் சொந்தக்காரர்கள் ஊரில் இல்லாமல் வெளி ஊர்கள் அல்லது வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தமை, அல்லது தற்போது அதிகரித்துள்ள உற்பத்திச் செலவை சமாளிக்க முடியாமை போன்ற இன்னோரன்ன காரணங்களை முன்வைக்கலாம். இதே நேரம் கிராமத்தில் அதீத முயற்சியுடைய பாரிய நிலப்பரப்பில் செய்கை பண்ணும் ஆற்றல் மிகுந்த இளைஞர்கள் வெறுமனே மிகக்குறைந்த நிலப்பரப்பில் கீழ் உழைப்பில் உள்ளார்கள். எனவே இவ்வாறான செய்கை பண்ணப்படாமல் இருக்கும் விவசாய நிலங்களை கமக்கார அமைப்புக்கள் பொறுப்பேற்று ஆற்றல் உள்ளவர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதன் மூலம் இந்நிலங்களைப் பயன்பாட்டிற்கு கொண்டு வரலாம். இத்துடன் கிழக்குப் புறமாக காணப்படுகின்ற தாழ்நிலத்தில் கணிசமானளவு நிலப்பரப்பு கடல்நீர் உட்புகுந்ததன் காரணமாகவும் கீழ்ப்படையில் உள்ள உப்பு மேலேறிப் படிவதன் காரணமாகவும் உவர்த்தன்மையடைந்துள்ளது. இந்நிலப்பரப்பு தற்போது நெல்செய்கைக்கு பொருத்தமில்லாமல் கைவிடப்பட்டுள்ளது. இவ்வாறான மண்ணிற்கு சேதனப்பசனைகளை அதிகளவில் இடுவதாலும் நீர் கிடைக்கும் காலங்களில் நீரைத் தேக்கி வடியவிட்டு ஆவியாக விடுவதாலும் அல்லது பொருத்தமான இரசாயணமுறைகளைப் பிரயோகிப்பதன் மூலம் மீண்டும் உயர் உற்பத்தித்திறன் கொண்ட தாழ்நிலமாக மாற்றமுடியும். இம்முயற்சிக்கு மண்ணியல் நிபுணர்களையும் உள்வாங்கிக் கொள்வதனால் விளைதிறனுள்ள மாற்றம் ஒன்றை குறுகிய காலத்தில் எதிர்பார்க்கலாம்.

நீர்வேலியின் விவசாயத்துறையைப் பொறுத்தவரை காணி மற்றும் குடும்ப உழைப்பு என்பனவே இங்கு பிரதான உற்பத்தி உள்ளீடுகளாக இருந்து வருகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களின் உற்பத்தி குடும்பத் தேவைகளுக்காக மட்டுமே வரையறுக்கப்பட்டதாக காணப்படுகின்றது. குடித்தொகைப் பெருக்கத்துடன் இணைந்த விதத்தில் புதிய தலை முறையினருக்கு விவசாயக் காணிகள் கிடைக்காது இருந்தமையால் ஏற்கனவே இருக்கும் காணிகளைத் துண்டாடவேண்டிய ஒரு நிலைமை தோன்றியது. அதன் விளைவாக குடும்ப விவசாயக் காணிகளின் அளவு படிப்படியாக சிறுத்து வந்துள்ளது. எவ்வாறிருப்பினும் பணப்பயிர் உற்பத்தி சந்தைத் தேவைகளைக் கருத்திற் கொண்ட விதத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறாக விவசாயநிலங்கள் அளவில் சிறியவையாக இருந்து வரும் நிலை இப்பிரதேசத்தில் வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் பகிர்வில் நிலவிவரும் ஏற்றத்தாழ்வுக்கு வழிகோலியுள்ளது எனலாம்.

இன்றைய உலகம் அதிநவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களை சாதித்துவந்த போதிலும் எமது கிராமிய பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் நவீன தொழில்நுட்பத்தின் உபயோகம் மிக அரிதாகவே காணப்படுகின்றது. விவசாயத்துறையில் இன்னமும் பாரம்பரியமான விவசாயமுறைகளே இடம்பெற்று வருகின்றன. மேலும் நிலம் துண்டாடப்படுவதன் காரணமாக சிறிய காணித்துண்டுகளை வைத்திருக்கும் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் தொழல்நுட்பத்தைப் பிரயோகிக்கமுடியாத நிலையில் இருந்து வருகின்றனர். சிறுகாணித்துண்டுகளில் இயந்திரங்களின் உதவியுடன் விவசாயத்தை மேற்கொள்ள முடியாது. இந்த சிறுகாணித்துண்டுகள் ஒருங்கிணைக்கப்பட்ட பாரிய நிலப் பரப்புகளாக மாற்றியமைக்கப்பட்டால் மாத்திரமே அவற்றில் இயந்திரங்களின் உதவியுடன் நவீன பண்ணைதொழல்நுட்பங்களைப் பிரயோகித்து பயிர்ச்செய்கையை மேற்கொள்ளமுடியும். இது பயிர் உற்பத்திச் செலவைக் குறைத்து வருமானத்தை உயர்த்தும் நடவடிக்கையாகும்.

மேட்டுநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு நீர்ப்பாசனக் கிணற்றின் மூலம் 5 தொடக்கம் 10 வரையான விவசாயிகள் தலா 0.25 ஏக்கர் தொடக்கம் 1 ஏக்கர் வரையான நிலப்பரப்பளவில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். எனவே ஒரு கிணற்றைப் பயன்படுத்தும் விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டுறவுப்பண்ணையாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களாயின் மேலே கூறப்பட்ட நவீன பண்ணைத் தொழில்நுட்பப்பிரயோகம் சாத்தியமாகும். இதேபோல் தாழ்நிலங்கள் அல்லது வயல்நிலங்களையும் ஒன்று சேர்த்து பாரிய பயிர் செய்கை நிலங்களாக பயன்படுத்துவதன் மூலம் உயர் இலாபம் அடைவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க முடியும். ஆனால் அதற்கென இதுவரையில் எவரும் எத்தகைய முயற்சிகளும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

விவசாயமே முதன்மையான வருமான மூலாதாரமாக இருந்துவரும் நீஉவேலியின் பொருளாதாரத்தில் விவசாயம் சாராத நடவடிக்கைகள் மிக முக்கியமான மாற்று வருமான மூலமொன்றாக கருதப்படலாம். உலகளாவியரீதியில் விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும் வளர்முக நாடுகளின் கிராமங்களில் இவ்வாறான ஏற்பாடுகள் வருமானத்தையும் வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கி வருகின்றது. இவ்வாறான ஏற்பாடுகளானவை நிலமற்ற விவசாயிகளுக்கும் குறைந்தளவிலான வருமானத்தைப் பெற்றுவரும் நிலச் சொந்தக்காரர்களுக்கும், விவசாயத்தொழிலாளர்களுக்கும் விவசாய நடவடிக்கைகள் இடம்பெறாத காலப்பிரிவுகளின் போது வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான சிறந்த மூலமாக இருக்கும் என கொள்ள முடியும். ஆனால் விவசாயம் சாராத நடவடிக்கைகளின் நிறுவனரீதியான கட்டமைப்பு மிகவும் பலவீனமானதாகவே இருந்து வருகின்றமை கவனத்தில் கொள்ளப்பட வேண்யுள்ளது. உதாரணமாக

தச்சுவேலை, இரும்புவேலை, வீட்டுப்பொருட்களின் வியாபாரம், சுருட்டுத்தொழில், பீடிக்கைத்தொழில், தும்புக்கைத்தொழில், பன்னவேலை, கிடுகு பின்னுதல், கைத்தறி நெசவு மற்றும் புடவைக் கைத்தொழில், கைவினைப் பொருட்களின் உற்பத்தி, கல்உடைத்தல், சட்டிபானை மற்றும் செங்கல் உற்பத்தி, போன்றவற்றை விவசாயம் சாராத நடவடிக்கைகளாக கருதலாம். இவற்றோடு பனை தென்னை வளத்தைப் பயன்படுத்தி கள்ளு, பதநீர் போன்றவற்றைப் பெற்று இவற்றை மூலப்பொருட்களாக கொண்டு மதுசாரம், பனங்கட்டி, பாணி போன்ற உற்பத்தியில் ஈடுபடல் மேலும் கடந்தகாலங்களில் இயங்கி வந்த பனங்கட்டித்தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை, வெங்காயச் சங்கம், காமாட்சி அம்பாள் இரும்புப் பொருட்களின் உற்பத்திமையம், புகையிலை பதனிடும் நிலையம் போன்றவற்றில் விவசாயிகள் பகுதிநேர முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் சிறுவருமானத்தைப் பெற்று வந்துள்ளார்கள் எனினும் இவ்வாறான முயற்ச்சிகள் போதியளவில் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு இவ்வாறான நடவடிக்கைளில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு ஒரு நிலையான ஜீவனோபாயத்தை வழங்கக் கூடிய விதத்தில் அவை போதியளவுக்கு வளர்ச்சி பெற்று இருக்கவில்லை. எனவே இவ்வாறான விவசாயம் சாராத நடவடிக்கைகளை உயர்தரத்தில் மேம்படுத்தக் கூடிய சாத்தியப்பாட்டினை கண்டறிவது காலத்தின் தேவையாகும்.

நீர்வேலியின் விவசாயத்துறையை அச்சுறுத்திவரும் மற்றுமோர் பிரச்சினையாக கருதப்படக்கூடியது உயர் உற்பத்தித்திறன் கொண்ட பெரும்பாலான விவசாய நிலங்கள் குடியிருப்பு நிலங்களாக மாறிவருகின்றமையாகும். யாழ்ப்பாணத்துப் பாரம்பரியத்துடன் ஒத்திசைவதற்காக பெண்பிள்ளைகளுக்கு வீடொன்றைச் சீதனமாக வழங்க வேண்டிய தேவை காரணமாக விவசாய நிலங்கள் குடியிருப்பு நிலமாக மாறிவருகின்றது. இவ்வாறானதொரு நிலையில் வளமான குடியிருப்பு நிலத்தை உயர் பயன்பாட்டுக்குட்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இதனடிப்படையில் சிறந்த முறையில் நீண்டகால நோக்கில் திட்டமிட்டு பயன்தரு மரங்களாகிய தென்னை, மா, பலா, கொய்யா, மாதுளை, யம்புநாவல், தோடை, எழுமிச்சை, திராட்சை, போன்றவற்றை நாட்டி வருடமுழுவதும் இந்நிலையிலிருந்து வருமானம் பெறத்தக்க கட்டமைப்பை உருவாக்கிவைத்திருக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனதும் கடமையாகும்.

இப்பிரதேசத்தின் கணிசமானளவு நிலம் இன்னமும் திருத்தப்படாமல் விவசாயத்திற்கு பொருத்தமில்லாத கிரவல் அல்லது கல் நிலங்களாக காணப்படுகிறது. இவ்வாறான நிலங்கள் குடியிருப்புத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை ஊக்குவிக்கப்படவேண்டிய தொன்றாகும். இவ்வாறானதொரு நிலமையில் இந்நிலங்களையும் உற்பத்தித்திறன்கொண்ட நிலங்களாக மாற்றியமைக்கும் மாற்று நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக சாடிகள் அல்லது

உரப்பைகளில் பயிர்ச்செய்கை, மண்ணின்றிய பயிர்ச்செய்கை அல்லது நீர்மயஊடக வளர்ப்பு முறைகள் போன்றவற்றிற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுமாக இருந்தால் விவசாயிகளிற்கு சிறியளவான செலவின்றிய வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தஉப்பங்கிடைக்கும்.

நீர்வேலியின் பொருளாதார வளர்ச்சிக்காக மக்களின் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல், அவர்களுடைய வருமான மட்டத்தினை உயர்த்துதல் மற்றும் விவசாய அடிப்படையிலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்கு வீட்டுத் தோட்டம், சுயதொழில் பயிற்ச்சி, புதிய விவசாய நுட்பங்கள் என்பவற்றின் அறிமுகம் மரநடுகை மற்றும் மூலிகை நடுகை, விசேட விவசாய செயற்திட்டங்கள் போன்ற உத்திகள் பின்பற்றப்படவேண்டும்.

மர நடுகைத் திட்டத்தின் கீழ் வருடாவருடம் பாடசாலைகளின் மூலமாக மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பயன்தரு பழமரக்கன்றுகளை வழங்குவதினூடாக ஒவ்வொரு குடியிருப்பாளர் நிலத்திலும் ஆகக்குறைந்தது ஒவ்வொரு பழமரக்கன்றையாவது நாட்டி சுயதேவைப்பூர்த்தியை ஊக்குவித்தல் அவசியமாகும். இது நாளாந்த தேவைக்குரிய சக்தியைப் பெற்றுக்கொள்ளல் வளர்ச்சி மற்றும் நோய்களில் இருந்து பாதுகாப்புப்பெறல் ஆகியவற்றுக்கான யோசனையை மலிவாக அல்லது இலவசமாக வழங்கும் என்பது நிச்சயம். இதனால் இப்பிரதேச மக்களது வருமானம், கல்வியறிவு ஆயுள்எதிர்பார்க்கை போன்றவை மேன்மைபெறும் இது வறுமையின் விளைவாகத் தோன்றும் போசாக்கின்மையைக் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கையாகக் கொள்ளலாம்.

குடும்பத்தின் சீவனோ பாயத்திற்கு நீடித்திருக்கத்தக்க ஓர் பங்களிப்பை வீட்டுத்தோட்டங்கள் வழங்க முடியும் என்கின்ற விழிப்புணர்வு குடியிருப்பாளர் களிடையே ஏற்படுத்தப்படவேண்டும். நீர்வேலிப்பிரதேசத்தைப் பொறுத்தவரை 2261 குடியிருப்பாளர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியான வீட்டுத் தோட்டங்களைப் பராமரிப்பார்கள் எனின் இவர்கள் மூலமாக பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூகச் செயற்பாட்டுத்துறைகள் தொடர்பானவை உட்பட ஏராளமான நன்மைகளை இப்பிரதேசத்திற்கு பெற்றுக்கொள்ளப்படலாம். பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அது மிக அவசியமான உணவு, பழங்கள், மருந்துகள், விறகு மற்றும் சிறு அளவிலான கட்டட வேலைகளுக்கான மரத்துண்டுகள் என்பவற்றை வழங்குகின்றது. சுற்றுச் சுழற்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது ஆரோக்கியமானதும் சௌகரியமானதுமான நுண்காலநிலையை வழங்குவதுடன்

மண், நீர் என்பவற்றையும் பேணுகின்றது. அத்துடன் உயிரியல் பல்லினத்தன்மையை அதிகரிக்கின்றது. இக்காரணங்களினால் அது தோட்டத்தின் ஒட்டுமொத்தமான உற்பத்தித்திறனை அதிகரிக்கின்றது. இதனால் அது குடியிருப்பாளரை சுய தேவைப்பூர்த்தியடையவும் வைக்கின்றது. இவ்வாறாக குடும்பத்தின் நுகர்வுக்கான அல்லது வருமானத்துக்கான பிரதான மூலமாகவன்றி வீட்டுத்தோட்ட விளைச்சல்கள் பற்றாக்குறை நிரப்புவனவாக உள்ளன. இவற்றுக்கும் அப்பால் பொருளாதார வளமில்லாத வறியவர்களும் ஈடுபடத்தக்க உற்பத்தித் தொகுதிகளாக இவை காணப்படுவதால் இதற்கு இவர்கள் உள்ளூரில் கிடைக்கும் நாற்றுக்கள், இயற்கைப் பசளைகள் மற்றும் சுதேச பீடைக்கட்டுப்பாட்டு முறைகளை பயன்படுத்த வசதி இருப்பதால் வீட்டுத்தோட்டங்கள் குடும்பத்தின் வறுமையை ஒழிப்பதோடு கிராமியப் பொருளாதாரத்திற்கு கணிசமானளவு பங்களிப்பை வழங்கலாம்.

இலங்கையில் மூன்று தசாப்தகாலமாக நிலவிவந்த உள்நாட்டுப் போர்ச்சூழலானது தற்போது தணிந்திருக்கும் நிலையிலும் உலகமயமாக்கல் மற்றும் திறந்த சந்தைப் பொருளாதார முறை என்பவனவற்றின் பின்புலத்தில் நீர்வேலிப் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பாடுபட்டுவரும் பல்வேறு தரப்பினர்கள் இப்பிரதேசத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சி தொடர்பாக பல சவால்களை எதிர்கொண்டுள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் நீர்வேலியின் விவசாயத்துறையின் வளர்ச்சி எந்தத் திசையில் நெறிப்படுத்தப்படவேண்டும் என்பது குறித்து மிகக் கவனமான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இப்பிரதேசத்தினுடைய மனித மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பான சரியான தகவல்கள் திரட்டப்பட்டு அவை பொருத்தமான முறையில் பங்கீடு செய்யப்பட்டு விருத்திசெய்யப்பட வேண்டியது அவசியமாகும். மேலும் இக்கட்டுரையாளரினால் எடுத்தாளப்பட்ட பல்வேறு காரணிகள் தொடர்பான ஆழமான கருத்துக் குவிப்பும், நடைமுறைச் சாத்தியமும் கவனத்தில் எடுக்கப்பட்டு துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது எதிர்கால விருத்திக்கு அகரமாக அமையலாம். இவ்வாறான முயற்சிகள் விவசாயப் பொருளாதாரத்தை பிரதானமாகக் கொண்ட இப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை வழங்கத்தக்கதொரு முன்னெடுப்பாக அமையும். இவ்வாறு இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக தேசியப் பொருளாதாரத்திற்கு ஒரு காத்திரமான பங்களிப்பை வழங்கியவர்கள் என்ற பெருமையை நீர்வேலி வாழ் விவசாயப் பெருமக்கள் பெற்றுக்கொள்ளலாம்.□



கட்டுரை

# நீர்வேலியில் இணையத்தள வளர்ச்சி

பூ. ஜசிந்தன்,
மாணவன்,
யாழ். இந்துக் கல்லூரி.

"கற்றது மவுஸ் (*Mouse*) அளவு கல்லாதது நெற் (*Internet*) அளவு" என்ற புதுமொழி எம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றது. 1980 இல் தமிழ் எழுத்துருக்களின் பயன்பாட்டுடன் பிரவேசமான கணினியில் தமிழ்ப் பாவனை இன்று இணையம், கைத்தொலைபேசி எனப் பல நிலைகளில் வளர்ச்சி பெற்றுவிட்டது. இணையத்தில் தமிழ்ப் பயன்பாடு ஏற்பட்டுத் தற்போது பதினைந்து ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் கிராம மட்டங்களில், தனிநபர் மட்டங்களில் இணையத் தளங்கள் நிறுவப்பட்டு வலைத்தளப் பயன்பாடு பெருக்கமடைந்து வருகின்றது.

உலகில் எந்த மூலையில் இருப்பவரையும் இணைய வழியில் இணைக்க முடியும். 2011 ஆம் ஆண்டில் நீர்வேலியில் ஏடிஎஸ்எல் வழி இணைப்பு பயன்பாட்டிற்கு வந்த பின்னர் இளையோரிடையே இணையப் பாவனை வீச்சும் அதிகரித்திருக்கிறது. இதனை விட தனியார் நிறுவனங்கள் சிலவற்றின் இணையச் சேவைகளை டொங்கல் மூலமாகவோ தொலைபேசி மூலமாகவோ பெறமுடிகின்றது.

நீர்வேலி அன்பர்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் நீர்வேலியில் உள்ள இணையத்தளங்கள் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் உறவுகளிடையே பிரபலம் பெற்றுத் திகழ்கின்றன.

இணையத்தில் இலவசமாக இணையத்தளம் ஒன்றை ஆரம்பிப்பது இலகுவான காரியமாதலால் நீர்வேலியில் உள்ள இளையோர் பலர் வலைப்பூ (*Blogspot*) முகவரிகளைக் கொண்டிருக்கின்றனர். இதை விட மின் அஞ்சல் முகவரிகளையும் பேஸ் புக் போன்ற சமூக இணையத்தளக் கணக்குகளையும் வைத்திருக்கின்றனர்.

### நித்தம் நித்தம் பொலிவு பெறும் நீர்வேலி இணையம்

நீர்வேலியிலிக்கான இணையத்தளம் என்றதும் எல்லோரதும் சிந்தையில் உதயமாவது நீர்வேலி இணையமாகும். தற்போது நாளொன்றுக்கு பல நூற்றுக்கணக்கான வருகையாளர்களைக் கொண்ட தளமாக இது விளங்குகின்றது. **www.neervely.com** என்ற முகவரியைக் கொண்ட இந்த இணையத்தளம் 10 ஆம் திகதி மார்ச் மாதம் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த இணையத்தளம் உலகெங்கும் உள்ளவர்களை எல்லாம் நீர்வேலியுடன் இணைத்து வைத்துச் சேவை செய்து வருகிறது.

நீர்வேலி, கரந்தனைச் சேர்ந்த தற்போது இலண்டனில் கணினித் தொழினுட்பவியல் மாணவனாயுள்ள செல்வன் ஜெயசீலன் செந்தூரனாலும் அவருடன் இணைந்த இளம் நண்பர்களாலும், ஆரம்பிக்கப்பட்ட இத்தளம் நீர்வேலி தொடர்பான செய்திகளுக்கு முதன்மை வழங்குகின்றது. கிராமத்தின் நன்மை கருதி சிவஸ்ரீ. கு.தியாகராஜக் குருக்கள், திரு. இ.குணநாதன் ஆகியோர் இத்தளத்தின் ஆலோசகர்களாயுள்ளனர். அவுஸ்ரேலியாவில் பொறியியல் கலாநிதிப் பட்டப்படிப்பை மேற் கொண்டிருக்கும் சி.சிவநிரூபன், வரதன், பராபரன் ஆகியோரும் இத்தளத்தின் உருவாக்கத்திற்கு உந்து சக்தியாக விளங்கியிருக்கிறார்கள்.



ஜெ. செந்தூரன்

ஊடக அறிவுடையவர்களாயுள்ள நீர்வைக்கிழார், பிரம்மஸ்ரீ. தி.மயூரகிரி சர்மா ஆகியோர் இதன் ஆசிரியர்களாகச் செயற்படுகின்றனர். இன்றைய இளைஞர்களான இவர்களுக்குப் பின் பலமாக நீர்வேலியுடன் தொடர்புடைய பல்வேறு இளைஞர்களும் யுவதிகளும் ஆலோசனைகள் தந்தும், செய்திகள் தந்தும் உதவி வருகிறார்கள்.. அவரவர் அளிக்கிற செய்திகளும் படங்களும் அவரவர்கள் பெயரிலேயே இணையத்தில் பதிப்பிக்கப்படுகின்றன.

இலாப நோக்கற்று சமூக நன்மை கருதி இயங்கும் இணையத்தளம் என்ற வகையிலும் பலராலும் விரும்பிப் பார்க்கப்படும் தளம் என்ற வகையிலும் உதயன் பத்திரிகையில் இத்தளத்தைப் பாராட்டி எழிலன் என்ற செய்தியாளர் கட்டுரை ஒன்றை எழுதிக் கௌரவப்படுத்தியிருந்தார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. பிற பிரபல பத்திரிகைகள், இணையங்களும் நீர்வேலி இணையச் செயற்பாடு குறித்து அறிவித்திருந்தன.

ஒவ்வொரு நாளும் செய்திகளை இற்றைப்படுத்தும் தளமாகவும், நல்ல தமிழில் செய்தி அளிப்புச் செய்யும் தளமாகவும், நீர்வேலி இணையம் காணப்படுகின்றது. தற்போது நீர்வேலி எல்லைக்கு அப்பாலும் இந்த இணையச் செயற்பாடு பெரிதும் விரிவு பெற்றிருக்கிறதையும் அவதானிக்கலாம். இதற்காக இந்த இணைய இயக்குனர் மற்றும் ஆசிரியர்களை போற்றியே ஆகவேண்டியிருக்கிறது.

## நீர்வேலி நலன்புரிச் சங்கம் கனடா அமைப்பு

www.neervely.ca என்ற முகவரியில் இத்தளம் செயற்படுகின்றது. நீர்வேலி நலன்புரிச் சங்கம் கனடா அமைப்பினர் தாயகத்திலும் கனடாவிலும் மேற்கொள்ளும் சமூகப் பணிகளுக்கு வலுவூட்டும் வகையில் இத்தளம் செயற்படுகின்றது. இத்தளம் அடிக்கடி தரவேற்றம் செய்யப்படுகின்றது.

**கரந்தன் இணையம்**

www.karanthan.com என்ற முகவரியில் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் ஜெயசீலன் செந்தூரனே வடிவமைத்து இயக்குகின்றார். கரந்தனில் முக்கிய நிகழ்வுகள் இடம்பெறும் போது மாத்திரம் இத்தளம் தரவேற்றம் செய்யப்படுகின்றது.

**நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் இணையம்**

www.neervelyarasakesarippillayar.com என்ற முகவரியில் பதிவில் உள்ளது. இலண்டனிலிருந்து வரதன் என்கிற இளைஞன் இந்த தளத்தை அமைத்து வழிநடத்துகிறார். பிள்ளையார் கோயில் செய்திகளை இங்கு காணலாம். வி.பராபரன் என்கிற இளம் பொறியியலாளரும் இப்பணியில் இணைந்து செயற்படுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி இணையம்**

www.ahc.neervely.info என்ற முகவரியில் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் இத்தளத்தை இணையத்தில் பார்வையிடக்கூடியதாக உள்ளது. அத்தியார் இந்துக் கல்லூரியை மையப்படுத்தி இத்தளம் செயற்படுகின்றது. 2004 ஆம் ஆண்டின் பவளவிழா தொடர்பான பதிவகளை இத்தளம் கொண்டிருக்கின்றது.

**நீர்வேலி வாசற்றளம்**

www.neervely.info என்ற முகவரியில் இத்தளத்தைப் பெறமுடிகின்றது. நீர்வேலிக் கிராம வளங்கள் தொடர்பான தகவல்களை இத்தளம் வழங்குகின்றது.

**நீர்வைக்கான வலைப்பூக்கள்**

www.neervely.blogspot.com என்ற தளம் ஹொலண்ட்லிருந்து நாகரத்தினம் இரத்தினரூபன் என்பவரால் செயற்படுத்தப்படுகின்றது. கிராமத்தின் மீதுள்ள ஆர்வத்தில் வலைப்பூத் தளமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. விளையாட்டுச் செய்திகள் பலவற்றினையும் இத்தளம் முதன்மை கொடுத்துப் பிரசுரித்து வருகிறது.


இதனை விடவும் பல்வேறு வலைப்பூக்கள் பலராலும் இணைய உலகில் சஞ்சரிக்க விடப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வித செய்திகளைப் பார்க்க முடியும்.

**மாசிவன் இணையம்**

நீர்வேலி இணையம் நீர்வேலியை முழுமையாகப் பிரதிபலிப்பது போல, நீர்வேலியின் பகுதியான மாசுவனைப் பிரதிபலிக்க உருவானதே மாசிவன் இணையம். இதனை இணையத்துறை ஆர்வலரான இளைஞர் ச.அனோராஜ் அவர்கள் இயக்கி வருகிறார். இவராலே நீர்வேலியிலிருந்தவாறே லங்கா எஸ்பிரஸ் என்ற இணையமும் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

நீர்வேலியில் எங்கும் எப்போதும் இல்லாத இணைய எழுச்சி உருவானமையை பாராட்டாமல் இருக்கவே இயலவில்லை.□

கட்டுரை



# நீர்வேலியில் பேணப்படும் வசந்தன் கூத்து

**செல்வராசா கஜதீபன்**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

வடமோடிக்கூத்துக்கள் வரிசையில் வசந்தன் கூத்து தெய்வீகம் சார்ந்த கூத்தாக முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. இக்கூத்தின் தோற்றுவாய், பரம்பல் எனும் அடிப்படையில் நோக்கின் நீர்வேலிக்கிராமத்திற்கு உரித்தான தனித்துவமும் சிறப்பும் மிக்க பாரம்பரியங்களை இக்கூத்தினது அடிச்சுவட்டில் (ஏட்டில்) இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

எமது கிராமத்தில் இக்கூத்தின் தோற்றம் பற்றி நோக்கின் கி. பி. 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதி என்பர். அக்காலத்தில் பேரி, பொக்கழிப்பான், அம்மை போன்ற நோய்களால் மக்கள் பீடிக்கப்பட்டு வருந்தினார்கள். இந்த நோய்களை எந்த வைத்திய நெறிமுறையாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. நோய்வாய்ப்பட்ட மக்களை யாரும் அணுகுவதில்லை காரணம் இது ஓர் தொற்றுநோயாக இருந்தது. இதனால் மக்கள் உயிரிழப்புக்களையும் சந்தித்தனர். உயிரிழந்தவர்களை மக்கள் கையால் கூட தொடுவதில்லையாம். இறவந்தவர்களைப் பாயுடன் சேர்த்து சுத்திக் கொண்டு சென்று எரித்துவிடுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்தக் காலகட்டத்தில் அரிஅரிவட்டர் எனும் ஒருமந்திரவாதி இங்கு வாழ்ந்து வந்துள்ளார். இவர் குப்பிளானில் பிறந்த வரும் நீர்வேலியைச் சார்ந்தவரும் ஆவார். சிறந்த மந்திர சக்தியுடைய இவர் தேவதைகளை வசப்படுத்தி தாம் நினைத்தவற்றை, அவற்றைக் கொண்டு செய்யும் செய்விக்கும் வல்லமை உடையவர். இவர் நீர்வேலி வாய்க்கால்தரவை மூத்த விநாயகரில் மிகுந்த பக்தியும் இறைநம்பிக்கையும் உடைய ஒரு பக்தன். இவர் துன்பமடைந்த மக்களின் துயர் போக்க நினைத்து வாய்க்கால்தரவை உறை விநாயகனை நினைத்து வசந்தன் பாட்டுப்பாடி வழிபாடு செய்தார். இறைவன் சக்திக்கு மனித சக்தி நிகர் ஏது? இவருடைய இந்த வழிபாட்டுடின் பயனாக விநாயகரின் அருட் பேற்றினால் மக்களுக்கு ஏற்பட்ட கொடிய நோய்கள் நீங்கியதாகவும் வரலாறு உண்டு.

இவரால் பாடப்பட்ட வசந்தன் பாடலிற்கு நீர்வேலியைச் சேர்ந்தவர்களான அரி, வேலாயுதர், புத்திரர், செல்லப்பா, விஸ்வநாதன், குழந்தையர், வேலாயுதர், சேனாதிராசா ஆகியோர் இணைந்து தருக்கள், தாளங்கள் என்பனவற்றை அமைத்து அதனை ஏட்டில் பதித்தார்கள் என்றும் கூறப்படுகிறது. இவர்களால் பதிக்கப்பட்ட ஏடானது இன்னும் ஆசாரமான முறையில் பேணிப் பாதுகாப்பட்டு வரப்படுகின்றது.

இவ்வசந்தன் கூத்தில் 20 பாடல்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பாடல்களும் வாய்க்கால்தரவை விநாயகளை வேண்டியும் அவரின் அருட்கடாட்சத்தைச் சிறப்பித்தும் மகிழ்வித்தும் பாடப்படுவதாக அமைகின்றது. ஆயினும் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார், அச்செழு கண்ணகை அம்மன், கதிர்காம வேல்முருகன், குருநாதசுவாமி, காத்தவராயசாமி, பூதராயசுவாமி, வைரவர் ஆகிய தெய்வங்களையும் வாழ்த்திப் பாடப்பட்டுள்ளதனை இறுதிப்பாடலினூடாக அறிய முடிகின்றது.

வசந்தன் கூத்தானது 20 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது அவையாவன.

01) தோடயம் (பிள்ளையார் வசந்தன்)
02) துணிதணடி வசந்தன்
03) நடனம்
04) தனித்தொங்கல்
05) இருகை வாங்கி
06) சீர்ரனி மேனியம்
07) பிறமலக்கம்
08) தூக்கினி வசந்தன்
09) இருநிரைக்கும்மி
10) தனிக்கும்மி
11) பல்லக்கு
12) சிக்குறுட்டி
13) முசுறு
14) அருவி
15) ஊஞ்சல்
16) அனுமார்
17) குறவன்
18) முளைதமிழ்
19) துனித நெடுவசந்தன்
20) களவசந்தன்

இந்த ஒவ்வொரு வகை வசந்தினற்கும் தனித்தனியான பாடல்கள் காணப்படுவதுடன் பாடலுக்கேற்ற முறையில் தரு, தாளம் என்பனவும் தனியாக உள்ளதுடன் ஒவ்வொரு வசந்தனும் வெவ்வேறு வகையான அமைப்பு முறையில் அடிக்கப்படும். இந்தவகையில் முதலாவது வசந்தனாகிய தோடயம் களத்தில் வட்டவடிவமாக சோடியில்லாது தனியாக குனிந்து நின்று அடிக்கப்படும். ஏனைய எல்லா வசந்தன்களும் சோடியாக நின்று அடிக்கப்படும். இவை களத்தில் வட்ட வடிவமாக சோடியாக நின்று அடிக்கப்படுகின்றது. தனித் தொங்கல், இருநிரைக்கும்மி, பல்லக்கு, ஊஞ்சல், முளைதமிழ் ஆகிய வசந்தன்கள் களத்தில் சோடியாக நிரையில் நின்று அடிக்கப்படுகிறது. ஒவ்வொரு வசந்தனுக்குமுரிய ஆட்டமுறையானது வேறுபட்டிருக்கும் ஆனால் கால் மிதிப்பு முறை ஒன்றாக இருக்கும் இம்மிதிப்பு முறை கச்சை மிதிப்பு என்று கூறப்படும்.

காப்புச் சொல்லப்பட்டு கூத்து தொடங்கினால் அடிப்பவர்களும், பாடுபவர்களும் அவ்விடத்தை விட்டு வெளியே செல்லமாட்டார்கள். அதேபோல் பார்வையாளர்களும் இடையில் வீட்டிற்குச் செல்வதில்லை கூத்து முடிந்த பின்னரே செல்லும் வழக்கம் இன்றும் காணப்படுகின்றது.

வசந்தன் அடிப்பதற்குரிய ஆட்களின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை. ஆனால் குறைந்தது 06பேராவது களத்தில் அடிப்பதற்கு நிற்றல் வேண்டும்.இவர்களுடன் ஏடுபடிப்பவர்கள் தாளம் போடுபவர்கள், பறைமேளம் அடிப்பவர், தம்பட்டம் அடிப்பவர் என்பவர்களும் காணப்படுவர். இங்கு வசந்தன் அடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் தடியை கம்பு என்றே அழைப்பர். கம்பினை கையில் எடுத்தால் வசந்தன் கூத்து முடியும் வரை அதனை நிலத்திலே வைக்கமாட்டார்கள். இக்கம்பானது விடத்தல், முதிரை, பாலை ஆகிய மரங்களில் இருந்து செய்ததாக இருக்கும்.

களஅமைப்பு முறை பற்றி நோக்கின் களமானது எப்பொழுதும் ஆலய வாசலின் முன்றலிலே அமைக்கப்பட்டிருக்கும். முன்றலின் வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய திசைகளில் 5 தூண்கள் ஏறத்தாழ 20 அடி இடைவெளியில் சதுரவடிவில் நடப்பட்டு மேலே வெள்ளைகட்டப்பட்டு அதனைச் சுற்றிவர மாவிலை தோரணங்கள் தொங்கவிடப்பட்டிருக்கும். களத்திற்கும் ஆலய வாசலிற்கும் இடையில் மேசையில் வேப்பிலையால் கும்பம் வைக்கப்பட்டு அதனுடன் பழம், பாக்கு, வெற்றிலை, ஊடு என்பனவும் வைக்கப்பட்டிருக்கும். அருகில் குத்துவிளக்கு ஏற்றப்படடிருக்கும். கீழே வசந்தன் அடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கம்புகளும் வைக்கப்பட்டிருக்கும் கும்பத்துக்கு முன்னால் எல்லோரும் எழுந்து நின்று பாடுவார்கள் ஏட்டினை கையில் எடுத்து ஏட்டில் உள்ளபடி வாய்க்கால்தரவை விநாயகனை வேண்டுதல் செய்து காப்புச்சொல்லப்பட்டு பறைமேளம் முழக்கப்பட்ட பின்பு கடத்தினை ஆடுபவர்கள் கம்பினை எடுத்துக் கொண்டு களத்திற்குச் செல்வர் ஏடுபடிப்பவர்களும், மேளம் அடிப்பவர்களும் கும்பத்திற்கு இடப்பக்கமாக அமர்ந்திருப்பர் பாடகர்கள் தருவிற்கு ஏற்றால் போல் பாடலினைப் படிக்க அதற்கு ஏற்றமாதிரி தாளம் போட தருவிற்கும் தாளத்துக்கும் ஏற்ற முறையில் மேளம் அடிக்கப்பட கூத்தினை ஆடுபவர்கள் கையிலே கம்பினை ஏந்தி வசந்தனை அடிப்பார்கள். ஒவ்வொரு வசந்தனும் 3 முறை தரு, தாளம், மோளம் என்பன ஏற்றி இறக்கப்பட்டு இறுதியாக தாளம் போடுபவர் "தெய்தாம் தெய்தக்கதெய்" என்று உரத்துக் கூறப்படுவதுடன் ஆட்டமானது நிறுத்தப்படும். இவ்வாறாக 18 வசந்தன்களும் அடிக்கப்படும். 18வது வசந்தன் முடிந்ததும் மீளவும் கும்பத்துக்கு முன்னே சென்று எழுந்து நின்று விநாயகரை வேண்டி காப்பானது சொல்லப்படும். பின்னர் துனிதநெடு வசந்தன், கள வசந்தன் ஆகிய இரு வசந்தன்களும் அடிக்கப்படும். இவை இரண்டுமே மிக அதிகமான பாடல் வரிகளைக் கொண்டமைந்ததுடன் ஏனைய வசந்தன்களுடன் ஒப்பிடும் போது மிகவும் அதிகநேரம் எடுப்பன. அதிலும் இருபதாவது வசந்தனாகிய கள வசந்தன் மிகவும் கூடுதலான பாடல் வரிகளை கொண்டமைந்துள்ளதுடன் அடிப்பதற்கும் ஏறத்தாழ 1 மணித்தியாலம் தேவைப்படும்.


இவ்வாறு இருபது வகையான வசந்தன்களும் அடிக்கப்பட்ட பின்னர் இறுதியாக கும்பத்துக்கு முன்னின்று காப்புச் சொல்லிய பின்னர் பறைமுழக்கப்பட்டு கும்பமானது இருப்பிடத்தில் இருந்து தூக்கப்பட்டு ஆலய வீதியை சுற்றி எட்டுத்திக்குகளிலும் கர்ப்பூரம் எரிக்கப்பட்டு பறைமுழக்கப்பட்டு ஆலய நுழைவாயிலில் (வெளிப்புற) கும்பம் ஊற்றப்பட்டு வேப்பிலையால் எல்லோருக்கும் தண்ணீர் (கும்பநீர்) தெளிக்கப்பட்டு திருநீறு, சந்தனம் முதலான பிரசாதங்கள் வழங்கப்படுவதுடன் கூத்தானது நிறைவு பெறும்.

கூத்தில் பங்குபற்றுபவர்கள் கிராமத்தினைச் சேர்ந்த இளைஞர்களும், வயோதிபர்களும் ஆவார்கள். இக்கூத்தில் இன்னொரு அம்சம் என்னவெனில் பெண்கள் பார்வையாளர்களாக மட்டுமே இருப்பார்கள். வசந்தன் கூத்து ஆடப்படும் நாட்களில் அடிப்பவர்களும், பாடகர்களும் இறைவனை நினைத்து பகல் விரதமிருந்து இரவில் கூத்து ஆடுவது வழமை. அவ்வாறிருக்க முடியாதவர்கள் ஆசாரமாக இருந்து கூத்தில் பங்குபற்றுவார்கள். இக்கூத்தானது இரவிரவாக ஆடப்படும் வழமை மரபு வழியாக இன்றும் நீர்வேலியில் பேணப்பட்டு வருகின்றது.

வசந்தன் கூத்தில் பங்குபற்றுபவர்களின் ஆடையணிகலன்கள் பற்றி நோக்கின் எல்லோரும் வெள்ளைவேட்டி அணிந்து அதற்கு மேல் சால்வை கட்டியிருப்பார்கள். அடிப்பவர்கள் மட்டும் கொடுக்குக்கட்டி அதற்கு மேலே சால்வை கட்டுவார்கள். அடிப்பதற்கு கையிலே ஒரு சோடி கம்பினை வைத்திருப்பார்கள். பாடகர்கள் கையிலே ஏடு இருக்கும் அதனைப்பார்த்தே பாடலைப்படிப்பார்கள். இசை கருவிகளாக தாளம், பறைமேளம், தம்பட்டம் என்பனவும் பயன்படுத்தப்படுகிறன.

இவ்வாறு அடிக்கப்படும் வசந்தன் கூத்தானது ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதத்திலே வளர்பிறைப்பக்கம் வருகின்ற முதலாவது வெள்ளிக்கிழமை முதலில் நீர்வேலி வாய்க்கால்தரவை மூத்தவிநாயகர் ஆலயத்திலே அடிக்கபட்டு தொடரந்து நீர்வேலியிலும், அயல் கிராமங்களிலும் உள்ள ஆலயங்களில் திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களிலே அடிக்கும் வழமை காணப்படுகின்றது. கிராமத்தில் ஆலயங்களில் மகோற்சவம் நடைபெறும் காலப்பகுதியில் இக்கூத்து ஆடப்படமாட்டது. இறுதியாக வைகாசி விசாக தினத்தன்று வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்குச் சென்று அங்கே அடிக்கப்பட்டு நிறைவுறுத்தப்படும். வற்றாப்பளை ஆலயத்திற்கு செல்லமுடியாத சந்தர்ப்பங்களில் நீர்வேலி வாய்க்கால்தரவை ஆலயத்திலேயே அடிக்கப்பட்டு நிறைவுறுத்தப்படும் வழக்கமும் காணப்படுகின்றது.

இவ்வாறு சிறப்புமிக்க இவ் வசந்தன் கூத்தானது இன்றும் வழிவந்தோரினால் மிகவும் சிறப்பாக மரபுவழி முறைகளைப் பேணி பக்திபூர்வமான முறையில் நீர்வேலியில் பேணப்பட்டு வருகின்றது. □



## நீர்வேலிக்குப் பெருமைசேர்க்கும் எங்கள் ஆசான்

எங்கள் ஆசான் தம்பு நமசிவாயம் பஞ்சாட்சரம் 02.03.1929 இல் மலாயாவில் பிறந்தவர். ஏழு வயது வரை அங்கு வாழ்ந்த அவர் ஈராண்டுகள் ஆரம்ப வகுப்பில் கல்வி கற்றார்.

முதலாம் உலகப் போர்க் காலத்தில் மலாயாவில் வாழ்ந்த நம்மவர்களில் பலர் தாயகம் திரும்பினர். நீர்வை மண் வந்த ரி.என்.பி. தனது ஆரம்பக் கல்வி முதல் எஸ்.எஸ்.சி வகுப்பு வரையான கல்வியை அன்று நீர்வேலி இந்து ஆங்கிலப் பாடசாலை என வழங்கப்பட்ட இன்றைய அத்தியார் இந்துக் கல்லூரியில் கற்றார்.

அத்தியார் இந்துக் கல்லூரியில் இருந்து முதன் முதலாக எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்தயடைந்த ஒரே மாணவன் இவரே. ஆக்கல்லூரியின் கீர்த்திமிகு அதிபர் ஸ்ரீமான் சாமுவெல் நவரட்ணம் நெல்சன் அவர்களைத் தன் குரு தேவராகக் கொண்டவர். "இவன் ஒரு நல்லாசிரியனாக வரக்கூடியவன்" என அதிபர் நெல்சன் வழங்கிய நற்சான்றுப் பத்திரம் இவரது தாரக மந்திரமாக அமைந்தது. 32 ஆண்டுகள் ஐந்திற்கும் மேற்பட்ட கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றி தனது ஐம்பதாவது வயதில் மொழிச் சட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றார்.

மொழிப்பற்றின் காரணமாக பத்திற்கும் மேற்பட்ட ஆங்கில இலக்கிய இலக்கண நூல்களை எழுதியுள்ளார். இவை இலங்கையில் உள்ள பல்லின மாணவர்களாலும் விருப்புடன் பயன்படுத்தப்படுகின்றன.

பட்டம், பதவி, பேர் புகழை இதய சுத்தியுடன் ஏற்க மறுக்கும் ஒரு மனித வகுப்பைச் சார்ந்த இவருக்குத் தற்போது 82 வயதாகின்றது. இன்றும் இளமைத்துடிப்புடன் பல மாணவர்களுக்கு ஆங்கில போதனை மேற்கொண்டு வருகின்றார்.

ச. லலீசன்
ஆசிரியரின் மாணவன்.

**பின்னிணைப்பு - 01**

# நீர்வேலி கலை பண்பாட்டு மன்றத்தால் நடத்தப்பட்ட கலைத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றோர்

## பேச்சு

**பிரிவு – 1**

1ம் இடம்:- செல்வி ஜெகதீஸ்வரன் லிந்துஜா யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை

2ம் இடம்:- செல்வி. சத்தியநாதன் பானுகா யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

3ம் இடம்:- செல்வி. இராசா நிலானி யா/அத்தியார் இந்துக் கல்லூரி,நீர்வேலி

**பிரிவு – 2**

1ம் இடம்:- செல்வி. குணரஞ்சன் மேரிஜென்சிகா யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

2ம் இடம்:- செல்வன். சண்முகவடிவேல் கோபிநாத் யா/யாழ். இந்துக் கல்லூரி

3ம் இடம்:- செல்வி. சுவேந்திரன் துளக்ஷி யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

**பிரிவு –3**

1ம் இடம்:- செல்வி. விசுவரத்தினம் நிறோஜனா யா /கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

2ம் இடம்:- செல்வன். செந்தில் செல்வன் வாராணன் யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.

3ம் இடம்:- செல்வி. மகேஸ்வரன் தேவயாழினி யா /கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

**பிரிவு – 4**

1ம் இடம்:- செல்வன். செல்வராசா கிரிதரன் யா /அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி

2ம் இடம்:- செல்வி. இராசசேந்திரன் ரம்ஜிதா யா /யாழ். இந்து மகளிர் கல்லூரி

3ம் இடம்:- செல்வி.சிவராசா தர்சினி யா /அத்தியார் இந்துக் கல்லூரி,நீர்வேலி

**பிரிவு –5**

1ம் இடம்:- செல்வி.யோகலிங்கம் காசினி யா /அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி

## கட்டுரை

**பிரிவு–1**

1ம் இடம்:- செல்வி.மதிவதனகுமார் கலைநிலா யா /நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை

2ம் இடம்:- செல்வி.சண்முகவடிவேல் கீர்த்திகா யா /அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி

3ம் இடம்:- செல்வன்.சண்முகவடிவேல் மதுசன் யா /அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி

**பிரிவு–2**

1ம் இடம்:- செல்வி நேகராசா வினுசா யா /நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை

2ம் இடம்:- செல்வி.யவனராகா கேதினி யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை

3ம் இடம்:- செல்வி.கனகலிங்கம் சுவேதா யா / நீர்வேலி சி.சி.த.க.பாடாசலை

பிரிவு –3

1ம் இடம்:- செல்வன்.சுரேந்திரன் மதிவிஜய் யா /கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

2ம் இடம்:- செல்வன்.ஜெயக்குமார் மிதுர்ஷன் யா /கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

3ம் இடம்:- செல்வி. இராமச்சந்திரன் டயானி யா/நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை

பிரிவு – 4

1ம் இடம்:- செல்வி. நவரத்தினம் சுபாஜினி யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

2ம் இடம்:- செல்வி. நடராசா கௌசிகா யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

3ம் இடம்:- செல்வி. சிவானந்தம் வித்தியா யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

பிரிவு – 5

1ம் இடம்:- செல்வி. ஆனந்தராஜா சுஜேந்தினி யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

2ம் இடம்:- செல்வி. கனகலிங்கம் அனோஜா யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

3ம் இடம்:- செல்வி. கணபதிப்பிள்ளை லாவண்யா யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

## கவிதை

பிரிவு – 3

1ம் இடம்:- செல்வி. ஸ்ரீவிஷ்ணுகாந்தன் பிருந்தா யா / கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

2ம் இடம்:- செல்வி. ரவீந்திரகுமார் தியானி யா /கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

3ம் இடம்:- செல்வி. சிவானந்தம் தட்சணா யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

பிரிவு – 4

1ம் இடம்:- செல்வன். விசுவாசம் வாசவன் யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

2ம் இடம்:- செல்வி. சிவானந்தம் நித்தியா யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

3ம் இடம்:- செல்வி. இராஜகோபால் துஸ்யந்தினி யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

பிரிவு – 5

1ம் இடம்:- செல்வி. செல்வராஜா ரூபனா யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

2ம் இடம்:- செல்வன். பரமசாமி விஸ்ணுகாந் யா / அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

**துரை. எங்கரசு**

**போட்டிப் பணிப்பாளர்**

**(கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**

**சங்கானை.)**

# நீர்வேலிப் பிரதேச சமாதான நீதிவான்கள்

## நீங்காத நினைவுக்குரியவர்கள்

01. முகாந்திரம் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்கள்
நியமனம் - 1960 நினைவு நாள் 22.09.1961

02. திரு. க. வே. கனகரத்தினம் அவர்கள்
நியமனம் 1965 நினைவுநாள் 09.01.1970


03. திரு. செ. நடராசா (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அவர்கள்
நியமனம்.1970

04. பண்டிதர் நீ. சி. முருகேசு (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)அவர்கள்
நியமனம் 14.08.1980 நினைவு 30.12.1989


05. திரு. ம. க. நடராசா (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)அவர்கள்
நியமனம் 24.04.1991

06. திரு. கா. சிவபாலன் அவர்கள்
நியமனம் 2010. நினைவுநாள் 03.02.2010


## சேவையில் உள்ளவர்கள்




திரு. நவரத்தினம் சிவசீலன்
அரசகேசரிப்பிள்ளையார் கோவிலடி நீர்வேலி.
(மாவட்டப் பொறுப்பதிகாரி,பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, மாவட்டச் செயலகம் யாழப்பாணம்)
சமாதான நீதிவான் நியமனம் 15.03.1990



திரு. தர்மலிங்கம் பரராசசிங்கம்
நீர்வேலி வடக்கு
யாழ்மாவட்ட சமாதானநீதிவான்
நியமனம் 24.04.1991
பதிவுஇல:91/05/NE/JF/F/01




திரு. கந்தையா தர்மலிங்கம்
நீர்வேலி தெற்கு
உப தவிசாளர், வலி. கிழக்கு பிரதேசசபை
யாழ். யாவட்டசமாதான நீதிவான்
நியமனம் 24.04.1991



திரு. கந்தைய நாகரத்தினம்
நீர்வேலி வடக்கு
வலி. கிழக்கு பிரதேசசபை உறுப்பினர்
யாழ். மாவட்ட சமாதான நீதிவான்
நியமனம் 20.05.2010
பதிவு இல: 252/24




திரு. செல்வராசா விக்கினேஸ்வரமூர்த்தி
நீர்வேலி மத்தி
அகிலஇலங்கை சமாதானநீதிவான்
நியமனம் 1996
பதிவு இல: 04/10/NV/J/356




திரு. தம்பிமுத்து சோதிலிங்கம்
நீர்வேலி தெற்கு
அகிலஇலங்கை சமதாதான நீதிவான்
நியமனம் 15.07.2003
(அரச அங்கீகாரம் பெற்ற சத்திய மொழி பெயர்ப்பாளர்)




திருமதி. சின்னையா சோதிமுத்து
நீர்வேலி தெற்கு
யாழ்மாவட்ட சமாதான நீதிவான்
நியமனம் 18.08.2000
பதிவுஇல: 2000/08/NE/J/D/352




திரு. சுந்தரம் சுப்பிரமணியம்
நீர்வேலி வடக்கு
வலிகிழக்கு மத்தியஸ்தர் சபை உறுப்பினர்
யாழ். மாவட்ட சமாதான நீதிவான்
நியமனம்.20.05.2010
பதிவு இல: 252/23



திரு. நமசிவாயம் இரத்தினசிங்கம்
நீர்வேலி வடக்கு
யாழ்மாவட்ட சமாதான நீதிவான்
நியமனம் 2002 டிசம்பர்
பதிவு இல: 2002/12/NE/JA/B/260



திரு. அருளம்பலம் அருந்தவநாதன்
நீர்வேலி தெற்கு
யாழ்மாவட்ட சமாதான நீதிவான்
நியமனம் 18.08.2000



திரு. செல்லத்துரை துரைசிங்கம்
நீர்வேலி வடக்கு
யாழ்மாவட்ட சமாதான நீதிவான்
நியமனம் 2002 டிசம்பர்
பதிவு இல: 2002/12/NE/JF/F/261

# நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் நடத்திய கலை பண்பாட்டு விழா - 2011 நீர்வைக் குரிசில் விருது பெறுவோர்

நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் முன்னெடுக்கும் இனிய விழாவின் போத கிராமத்தின் பெருமைக்காக உழைக்கும் சான்றோர் அறுவர் நீர்வைக் குரிசில் என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர்.

**சிவஸ்ரீ. கு. தியாகராசக் குருக்கள்**



26. 2. 1943 இல் காரைநகரில் பிறந்த குருக்கள் தனது குருத்துவப் பணியின் நிமித்தம் சிறுவயதிலேயே நீர்வைக் கிராமத்தின் சொத்தாகத் தன்னை ஆக்கிக் கொண்டார். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்.

அறிவாலும் அனுபவத்தாலும் மூத்த சிவாச்சாரியார் என்ற தகைமை சைவத் தமிழ் உலகில் இவருக்கு உண்டு. பல நூல்களையும் பிரசுரங்களையும் ஆக்கி வெளியிட்டுள்ள குருக்கள் அவர்கள் நீர்வேலியின் பெருமைகளைப் பறை சாற்றக் கூடிய வகையில் நீர்வையம்பதி (இணை. ப. கணேசலிங்கம்) நீர்வை உத்தமர்கள் ஆகிய நூல்களை ஆக்கியுள்ளார்.

கிராமத்தில் இடம்பெறும் எந்தநற் கருமத்திலும் இன்முகத்துடன் தன் பங்களிப்புக்களை நல்குவார். குறிப்பாக நீர்வைப் பதியின் பாடசாலைகளுக்கு நிதிப் பங்களிப்பு நல்கும் இவரது பரோபகாரத்தைப் பலரும் போற்றி நிற்பர்.

புத்தகங்களை மிகவும் நேசிப்பவராகையால் இவரது வீட்டில் சிறப்பான ஒரு நூலகம் அமைத்துள்ளார். பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்விக நிறுவன மாணவர்கள் பலர் தமது தேடலுக்கான களமாக இவரது நூலகத்தைப் பயன்படுத்துவர்.
நீர்வேலி ஸ்ரீ கணேச அறநெறிப் பாடசாலை, முன்பள்ளி என்பவற்றின் ஸ்தாபகராகவும் பிதாமகராகவும் விளங்குகின்றார்.

**திருமதி ருக்மணி ஆனந்தவேல்**

நீர்வேலி தெற்கு நல்லையா இராசாங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியாக 13.08.1944 இல் பிறந்தவர்.



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவி. கூட்டுறவுப் பரிசோதகர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கூட்டுறவுப் பயிற்சி பெற்று கூட்டுறவுப் பரிசோதகராகவும் எண் பார்வையாளராகவும் நாட்டின் பல பாகங்களிலும் சேவையாற்றி இளைப்பாறியவர்.

நீர்வேலி சமாதான சபை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். அத்துடன் பாலர் பகல் விடுதி, நீர்வேலி கந்தசுவாமி கோவில் (தற்போது பொருளாளர்), நீர்வேலி தெற்கு ஸ்ரீமுருகன் மாதர்

சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றிலும் யாழ். மாவட்ட மகளிர் குழு, சமூக அபிவிருத்தி மன்றம் வலிகிழக்கு ஐக்கிய நாணய சங்க சமாசம் என்பவற்றிலும் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கின்றார்.

நீர்வைக் கிராமத்தின் பெண்குலத்தவரின் உயர்வுக்கு ஒரு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்குவதால் இவரது ஆலோசனையைக் கேட்டு நடக்கும் இளையவர்கள் பலர் கிராமத்தில் உள்ளனர். கிராமத்தில் சமூக சேவகி என்றதும் எல்லோருடைய கைகளும் இவரை நோக்கியே சுட்டுகின்றன.

**செல்லையா விஸ்வலிங்கம் ஆசாரியார்**




நீர்வேலி வடக்கு விஸ்வப்பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி செல்லையாவிற்கும் சின்னக்குட்டி அம்மையாருக்கும் மகனாக 1938இல் பிறந்தார். ஆரம்பக்கல்வியை நீர்வேலி றோ. க. த. க. பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை அத்தியார் இந்துக் கல்லூரியிலும் பெற்றார்.

தனது பரம்பரையாரால் பேணப்பட்டு வந்த மரவேலை நுட்பங்களை தந்தையாரான சின்னத்தம்பி செல்லையாவிடம் கற்றார். சிற்பக்கலை நுட்பங்களை இந்தியாவில் இருந்து வருகை தந்து 1967 இல் அரசகேசரிப் பிள்ளையார் தேர் வேலைகளைச் செய்த ஸ்தபதி வ.ஏகாம்பரம் ஆசாரியாரிடமும் 1969 இல் நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையாருக்கான தேர் வேலைகளை மேற்கொண்ட கோவிந்தராஜிடமும் கற்றார்.

தனது கன்னிப் படைப்பாக நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோவிலில் முருகப் பெருமானுக்குரிய தேரைச் செய்தார். பலரது பாராட்டுக்களைப் பெற்றார். நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் முருகப் பெருமானுக்குரிய தேர், சண்டேஸ்வரர் தேர், சிறுப்பிட்டி மேற்கு வைரவர் மற்றும் சாவகச்சேரி பிரதேசக் கோவிற் தேர்கள் என அழகிய தேர்களை சிற்ப சாத்திர விதிகளுக்கு அமைவாக அழகுற அமைத்து வருகின்றார்.

தென் இந்தியாவின் அண்ணாநகர் பெரியபாளையத்து அம்மன் ஆலயத்திற்கு புஷ்பக வாகனம், மஞ்சம், தேர் முதலியவற்றையும் அமைத்துள்ளார். நீர்வேலியின் பெருமைகளை உலகறியச் செய்யும் சிற்பாசாரிய திலகமாக விளங்குகின்றார்.

**தர்மலிங்கம் பரராசசிங்கம்**



28.07.1946இல் நீர்வேலியில் சி.தர்மலிங்கம் இராசம்மா தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற இவர் வலி.கிழக்கு தென்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தற்போது நீர்வேலி காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபையின் செயலாளராக இருப்பதுடன் காமாட்சியம்பாள் ஆலய பரிபாலகராயும் காமாட்சியம்பாள் அறநெறிப்பாடசாலையின் பொறுப்பாளராயுமுள்ளார்.

1991இலிருந்து சமாதானநீதிவானாயும் சேவையாற்றி வரும் இவருக்கு சமூகஜோதி (விஸ்வகர்ம சங்கம்- 1992) என்ற சிறப்பு விருதும் அமைந்திருக்கிறது. 2000ஆம் ஆண்டில் இவர்

வெளியிட்ட 'புகழ் பூத்த நீர்வேலி'' என்ற நூல் நீர்வேலி பற்றிய தகவல்களின் களஞ்சியமாகத் திகழ்கிறது. இவரது எழுத்தாற்றல், பேச்சாற்றல் என்பன போற்றப்பட வேண்டியனவாயுள்ளன. தெல்லிப்பளை தலைமன்கலட்டிப் பிள்ளையார் திருவூஞ்சல் (2004), அச்சுவேலி பத்தமேனி வடபத்திரகாளி திருவூஞ்சல் (2005) என்பவற்றையும் இவர் இயற்றியுள்ளார். நீர்வை அன்பன் என்ற புனைபெயரிலும் இவரது ஆக்கங்கள் வெளிவருகின்றன.

**கந்தையா முருகையா**



12.01.1949இல் நீர்வேலியில் ச.கந்தையா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர். நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலையிலும் அத்தியார் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்ற இவர் வலி.கிழக்குத் தென்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நீர்வேலிக்கிராமிய வங்கி முகாமையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

கிராமிய வங்கி முகாமையாளராகப் பணியாற்றிய போது தமது கண்ணியமான. கருணை பூர்வமான சேவைகளால் மக்கள் மனதில் இடங் கொண்ட இவர் மரபு மாறாத புராண படனத்தில் விற்பன்னர். தமது சின்னஞ்சிறு வயதிலிருந்து நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத் திருத்தொண்டனாகி இன்று வரை அப்பணியில் தூய்மையாக இருக்கிறார். இதனால் திருப்பணிச் செம்மல் (2009) என்ற விருதுக்குரியவரானார். ஸ்ரீ கணேசா முன்பள்ளி, ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம் ஆகியவற்றில் முக்கிய பதவிகள் வகித்து வருகிறார்.

இவரது சேவைகளைப் நயந்தும் வியந்தும் 2009இல் பல்வேறு பாராட்டு விழாக்களும் நீர்வை மண்ணில் நடைபெற்றமையும் இங்கு பெருமையுடன் நினைவு கூரப்பட வேண்டியனவாகும்.

**வேலுப்பிள்ளை சிதம்பரநாதன்**



01. 02. 1952 இல் மாவிட்டபுரம் மடத்தடியில் க. வேலுப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர். ''பொன்னார்'' என்று செல்லமாக அழைக்கப்பெறும் இவர் மாணவப் பருவத்திலேயே நாடக கலைஞனாகத் தன்னை வளர்த்துக் கொண்டவர். இவர் பள்ளி நாட்களில் நடித்த மார்க்கண்டேயர் நாடகம் இவரது நாடக வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

1991இலிருந்து நீர்வேலி காமாட்சியம்பாள் ஆலய சூழலில் வசித்து வரும் இவர் மார்க்கண்டேயர், சம்பூர்ண அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி, வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி, காத்தவராயன் போன்ற நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்துப் பாராட்டுகளைப் பெற்றவர். இன்று இவற்றை பழக்கி மேடையேற்றும் அண்ணாவியாராகவும் திகழ்கிறார்.

இலங்கை அரசின் 'கலாபூ'ணம்' விருது பெற்ற இவருக்கு மரபுக் கலைச் சுடர், இளங்கலை வேந்தன், இசை நாடக கேசரி போன்ற விருதுகளும் உள்ளன. இன்றைக்கு யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த கலைஞராக இவர் விளங்குகிறார் என்றால் மிகையல்ல.

# நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் - 2011
## நிர்வாகக்குழு

**காப்பாளர்** : திரு. ம. பிரதீபன் (பிரதேச செயலர், வலிகாமம் கிழக்கு)

**தலைவர்** : திரு. இ. குணநாதன்

**உப தலைவர்கள்** : பிரம்மஶ்ரீ கு. தியாகராஜக் குருக்கள் (நீர்வை மணி)

திரு. த. நடராஜா

திருமதி ரு. ஆனந்தவேல்

**இணைச் செயலாளர்கள்** : திரு. சு. சண்முகவடிவேல் (கிராம அலுவலர், நீர்வேலி தெற்கு)

திரு. க. அல்பிரட் (கிராம அலுவலர், நீர்வேலி வடக்கு)

செல்வி தி. குணசீலி (கிராம அலுவலர், நீர்வேலி மேற்கு)

**பொருளாளர்** : திரு. சி. தர்மரத்தினம்

**உபபொருளாளர்கள்**

திரு. வீ. சிவஞானம்

திரு. க. சுப்பிரமணியம்

திரு. பொ. காசிநாதன்

**செயற்குழு உறுப்பினர்கள்**

திரு. ச. லலீசன்

திரு. ந. ஜெயகிஸ்ணன்

திரு. பூ. கஜன்

திரு. பொ. சரவணபவானந்தன்

திரு. சி. பகவத்சிங்கம்

திரு. செ. கஜதீபன்

திரு. ச. குணபாலசிங்கம்

திரு. க. முருகையா

திரு. க. சுந்தரலிங்கம்

செல்வி. தே. லோஜனா

## நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம்
## உப குழுக்கள்

### ஆலோசனைக் குழு

பிரம்மஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்
பிரம்மஸ்ரீ. கு. தியாகராஜக் குருக்கள்
பிரம்மஸ்ரீ. சா. சோமதேவக் குருக்கள்
பிரம்மஸ்ரீ இ. சுவாமிநாதக் குருக்கள்
அருட்பணி யூட்நிக்சன்
திரு. த. ந. பஞ்சாட்சரம்
திரு. த. பரமேஸ்வரன்
திரு. க. தர்மலிங்கம்
திரு. த. பரராசசிங்கம்
திரு. பொ. சிவாநந்தன்

### நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, வரவேற்புக் குழு

திரு. க. நாகரத்தினம்
திரு. ந. சிவசுப்பிரமணியம்
திருமதி பு. சித்திரா
திரு. க. வைரவநாதன்
திரு. செ. சிவஞானசுந்தரம்
செல்வி அ. வினோதா
திரு. சி. நிரோஜன்
திரு. ந. குமரசிறி
திரு. க. கருணேசன்
திரு. செ. தர்மராஜா
திரு. ம. சிவானந்தன்
திரு. பொ. அமுதலிங்கம்
செல்வி த. சங்கீதா
கலாபூசணம் வே. சிதம்பரநாதன்
திரு. நா. இராசநாயகம்

### மலர்க்குழு

திரு. க. லலீசன் (பதிப்பாசிரியர்)
திரு. துரை. எங்கரசு
செல்வி செ. சிவானந்தி
செல்வி தி. குணசீலி
பிரம்மஸ்ரீ தி. மயூரகிரி சர்மா
திரு. க. அல்பிரட்
திரு. சு. சண்முகவடிவேல்
திருமதி. வி. மகிந்தினி

**பின்னிணைப்பு - 05**

# நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் நடத்திய கலை பண்பாட்டு விழா - 2011 அழைப்பிதழ்

இடம் : சிவசங்கரபண்டிதர்அரங்கு,
நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் முன்றில், நீர்வேலி.

காலம் : 19.11.2011 சனிக்கிழமை பி. ப. 1.30 மணி.

**தலைவர்**

திரு. இ. குணநாதன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்)

**பிரதம விருந்தினர்கள்**

திரு. இ. இளங்கோவன்
(செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)

திருமதி. கிருபாகரி இளங்கோவன் (ஆசிரியர், கொக்குவில் மேற்கு சீ.சீ.த.க.பாடசாலை)

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு. ம. பிரதீபன் (பிரதேச்செயலர், வலிகாமம்கிழக்கு, கோப்பாய்)

திரு. சி. கௌரிசங்கர் (வடபிராந்திய முகாமையாளர், இலங்கை மத்தியவங்கி, யாழ்ப்பாணம்)

திரு. ச. குகதாஸ் (கணக்காளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)

திரு. ச. சதீஸ்வரன் (விவசாயஉதவிப்பணிப்பாளர், கிளிநொச்சி)

செல்வி. அ. மிலாசினி (கலாசார உத்தியோகத்தர், வலிகாமம்கிழக்கு, கோப்பாய்)

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பி.பகல் 01.30 | சிவசங்கரபண்டிதர் சனசமூகநிலையத்தில் ஆரம்பநிகழ்வு |
| பி.பகல் 01.40 | வரவேற்பு (மங்கலவாத்தியம்-சுதாகுழுவினர்,கோலாட்டம்,நடனம் யா/அத்தியார் இந்துக்கல்லூரி மாணவர்கள்,பொய்க்கால் குதிரைஆட்டம்- வாய்க்காற்றரவை பிள்ளையார் ஆலய தொண்டர்கள்) |
| பி.பகல் 02.30 | நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய பூசை வழிபாடு |
| பி.பகல் 03.00 | மங்கல இசை |
| பி.பகல் 03.15 | மங்கலவிளக்கேற்றல் |
| பி.பகல் 03.25 | இறைவணக்கம்-யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்கள் |

பி.பகல் 03.30 தமிழ்த்தாய்வாழ்த்து-யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்கள

பி.பகல் 03.45 பிரதேசகீதம்-யா/அத்தியார் இந்துக்கல்லூரி மாணவர்கள்

பி.பகல் 03.55 வரவேற்பு நடனம் (புஸ்பாஞ்சலி)- தோடையமங்களம் பொன்சக்தி கலாகேந்திரா மாணவர்கள்

**பி.பகல் 04.05 வரவேற்புரை:** திரு.த.நடராசா உபதலைவர் கலைபண்பாட்டு மன்றம்

**பி.பகல் 04.15 ஆசியுரைகள்**

1.பிரமம்ஸ்ரீ.ஆ.சந்திரசேகரக்குருக்கள்(வாய்க்காற்றரவை பிள்ளையார்ஆலயம்)

2.பிரம்மஸ்ரீ.சா.சோமதேவக்குருக்கள் (அரசகேசரிப்பிள்ளையார்ஆலயம்)

3.அருட்பணி.யூட்டிக்சன் (பரலோகமாதா ஆலயம்)

4.பிரம்மஸ்ரீ.கு.தியாகராசக்குருக்கள் (செல்லக்கதிர்காம கோவில்)

5.பிரம்மஸ்ரீ.இ.சுவாமிநாதக்குருக்கள்(கந்தசாமி தேவஸ்தானம்)

**பி.பகல் 04.40 தலைமையுரை**

**பி.பகல் 04.50 முன்பள்ளி நிகழ்வுகள்**

1.தீபநடனம்- காமாட்சிஅம்பாள் முன்பள்ளி

2.வேப்பிலை நடனம் சிவசக்தி முன்பள்ளி

3.நடனம்-ஸ்ரீகணேசா முன்பள்ளி

4.கும்மிநடனம்-ஸ்ரீகணேசாஅறநெறிப்பாடசாலை

5.கிராமிய நடனம்.-பாலர் பகல்விடுதி

6.பாட்டு-பகவான் முன்பள்ளி

7.நடனம்-சரஸ்வதி சிறுவர்கழகம்

பி.பகல் 06.00 சிறப்புவிருந்தினர் உரை

திரு.சி.கௌரிசங்கர்-(பிராந்தியமுகாமையாளர்இலங்கை மத்தியவங்கி யாழ்ப்பாணம்)

மீனவநடனம் -யா/ நீர்வேலிதெற்கு இந்து தமிழ்கலவன் பாடசாலை மாணவர்கள்

வேப்பிலை நடனம் -யா/ நீர்வேலி சீ.சீ.தமிழ்கலவன் பாடசாலை மாணவர்கள்

ஒயிலாட்டம் -சுவர்ணா சனசமூக நிலையம்

காவடி நடனம்- பொன்சக்தி கலாகேந்திரா மாணவர்கள்

சுழகு நடனம் -யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்கள்

தீபநடனம் - யா/ .சீ.சீ தமிழ்க்கலவன் பாடசாலைமாணவர்கள்

இசை -யா/ றோமன்.கத்தோலிக்க.தமிழ்.கலவன் பாடசாலை மாணவர்கள்

கும்மி நடனம் -யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்கள்

குழுப்பாடல்- சி.நிரோஜன் குழுவினர் மாதர் கிராமஅபிவிருத்திசங்கம் நீர்வேலிதெற்கு

**பி.பகல் 08.10 திருநீர்வை மலர்வெளியீடும்**

**அழகொளிரும் நீர்வேலி இறுவட்டுவெளியீடும்**

வெளியீடு - பிரதம விருந்தினர்

**முதற்பிரதி பெறுபவர்** - திரு.க.கிருபாகரன்

(உரிமையாளர், ஹரன் ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்.)

**வெளியீட்டுரை** – பேராசிரியர்.தி.வேல்நம்பி

(பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் யாழ்ப்பாணம்பல்கலைக்கழகம்)

**சிறப்புப்பிரதிகள் வழங்கல்**

**நீர்வேலி பற்றிய இறுவெட்டு வெளியீடு,காட்சிப்படுத்தல்**

**ஏற்புரை** - திரு. ச.லலீசன் (பதிப்பாசிரியர், திருநீர்வை)

தில்லானா - பொன்சக்தி கலாகேந்திரா மாணவர்கள்

கும்மி நடனம் - யா/ அத்தியார் இந்துக்கல்லூரி மாணவிகள்

காவடிச்சிந்து - பொன்சக்தி கலாகேந்திராவின் மாணவிகள்

கொழுந்து நடனம் - யா/ அத்தியார் இந்துக்கல்லூரி மாணவர்கள்

கிறிஸ்தவ நடனம் - பரலோக மாதா ஆலயத்தினர்

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல்.

சிறப்புவிருந்தினர் உரை - திரு.ம.பிரதீபன் (பிரதேசசெயலர் வலிகாமம்.கிழக்கு)

பிரதமவிருந்தினர் உரை - திரு.இ.இளங்கோவன் (செயலாளர் கல்வி கலைபண்பாட்டுவிளையாட்டுத்துறை அமைச்சு வடக்குமாகாணம்)

**கலைஞர் கௌரவிப்பு**


**வசந்தன் கூத்து** (வாய்க்காற்றரவை பிள்ளையார் ஆலயத்தொண்டர்கள்)

**சத்தியவான் சாவித்திரி நாடகம்** -கலாபூசணம்.வே.சிதம்பரநாதன்குழுவினர் நீர்வேலி

**நன்றியுரை– செயலாளர்**

விசேட நிகழ்ச்சி:- மு.ப 05.30 மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டம்(சிவசங்கர பண்டிதர் சனசமூகத்தில் ஆரம்பமாகி கரந்தன் வீதி பருத்தித்துறைவீதி, குறுக்குவீதி, இராஜவீதி கரந்தன்வீதி ஊடாக சிவசங்கரபண்டிதர் சனசமூகநிலையத்தை சென்றடையும். (நீர்வேலி கிராமத்தை சேர்தவர்கள்)

மரதன் ஓட்டநிகழ்விற்கு அனுசரணை:- இந்து இளைஞர் மன்றம் நீர்வேலி தெற்கு



வினோ
நகைப் பூங்கா
தங்கப்பவுண் நகை வியாபாரம்
உங்கள் நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர
நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்.
Vino Nakai PoOnka
Dealers in 22ct Gold Jewellers
Gems & Jewellwrs
22 கரட் தங்க நகைகள்
ஓடடுக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T. P.: 021 2222824, 021 2225394.

திருநீர்வை மலர் என்றும் சிறப்புடன் நறுமணம்கமழ வாழ்த்துகிறோம்

## வலி - கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் வ-து.

## நீர்வேலி.



- *வாழைக்குலை*
- *வாழையுடன் கூடிய குலை*
- *வாழை இலை*
- *வாகன சேவை*
  *(லொறி, கன்ரர், லான்மாஸ்ரர்)*

“என்பவற்றை ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம்”

நீர்வேலி.

தொடர்புகளுக்கு: 021 3211614

திருநீர்வை மலர் என்றும் சிறப்புடன் நறுமணம்கமழ வாழ்த்துகிறோம்

## சாரங்கா நகை மாடம்





தங்க வைர நகை வியாபாரம்

அசல் 22 கரட் தங்க நகைள்
உத்தரவாதத்துடன் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.







55, செட்டித்தெரு,
கொழும்பு - 11.
T.P: 011 - 2434971
Fax : 011 - 2434071



157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 6972
Fax : 021 - 222 8917



உ
திருமுருகன் துணை
திருமுருகன்
திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும்
(பதிவு செய்யப் பெற்றது)
மங்கலகரமான நிகழ்வுகளை
உங்கள் எண்ணம் போல்
அழகுற செய்திடவும்,
பல்வகையான சகல
பொருட்களைப் பெற்றிடவும்
சிறந்த ஸ்தாபனம்.
கரந்தன் வீதி,
நீர்வேலி.
தொலைபேசி: 021 2230181
077 6660211, 021 3211523
Email: thirumurugan-neervely@hotmail.com
உரிமையாளர்:
"சமூக சோதி"
ந. சிவசுப்பிரமணியம் (செட்டியார்)

திருநீர்வை மலர் என்றும் சிறப்புடன் நறுமணம்கமழ வாழ்த்தும்

# கிருஷ்ணா பந்தல் & வீடியோ

உங்கள் இல்லங்களில் நடைபெறுகின்ற நிகழ்வுகளின்
வீடியோ படப் பிடிப்புகளுக்கும், அல்பம் கட்டுவதற்கும்
CD, DVD பதிவுகளுக்கும்



சகலவிதமான பந்தல் சேவைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்



# கிருஷ்ணா பந்தல் & வீடியோ

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.



021 4900265
077 1386176

உரிமையாளர்: பாலகிஷ்ணா (பாலா)



திருநீர்வை மலர் என்றும் சிறப்புடன் நறுமணம்கமழ வாழ்த்தும்

# ஓம் அருள் முருகன் பந்தல்

*உங்கள் இல்லங்களில் நடைபெறுகின்ற மங்கலகரமான நிகழ்வுகளை சிறப்பித்திட...*

வில்லுப் பந்தல், சொக்கட்டான் பந்தல், கதிரைகள்,
சில்வர் பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள்,
தலை நகை செட், மணவறை, பூமணவறை,
பிளாஸ்ரிக் பாய், பந்திப்பாய்
போன்றவற்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

தொலைபேசி: 077 6669968 உரிமையாளர்: இ. ஆனந்தராசா (தம்பா)

# பவானி களஞ்சியம்



கெல்லீங், பாம்கெமி, மக்ரட்ஸ் கம்பனிகளின் கிருமிநாசினி வகைகள்,
உரவகைகள், கால்நடை மருந்துகள் என்பவற்றையும் வீட்டுப்பாவனைக்குத்
தேவையான மளிகைப் பொருள்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
ஒரே கூரையின் கீழ் நியாயவிலையில் பெற்றிட தலைசிறந்த நிறுவனம்

இராச வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
தொலைபேசி: 021 4921210, 077 9944453



**கஜமுகா றேட்சென்ரர்**
281, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2228573.



**ஸ்ரீ மகாவிஷ்ணு**
70,72,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2226624.

திருநீர்வை சிறப்புறடன் மலர வாழ்த்துகின்றோம்.

# ஸ்ரீ வேங்கடேஸ்வரா ரேடர்ஸ்

இல. 589, 591, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2224579

இல. 63, 64, நவீன சந்தை,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

எம்மிடம் உருளைக்கிழங்கு, வெள்ளைப் பூடு, வெங்காயம் மற்றும் மளிகைப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(மொத்த வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.)

உங்கள் உயர்ச்சியே எங்கள் மகிழ்ச்சி

திருநீர்வை மலர் என்றும் மணம்பரப்ப வாழ்த்துகின்றோம்.

# ராஜமணி மணப்பந்தல் சேவை
# ராஜமணி வேக்ஸ்

**எங்களிடம்:**

வில்லுப் பந்தல், சொக்கட்டான் பந்தல், கதிரை (இரும்பு, பிளாஸ்ரிக்), சில்வர் பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், தலை நகை செட், மணவறை, பூமணவறை, பிளாஸ்ரிக் பாய், பந்திப்பாய் என்பனவற்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமண வைபவங்களா? பூப்புனித நீராட்டு விழாக்களா? மற்றும் உங்கள் வீட்டில் எந்தவொரு கொண்டாட்டமானாலும் உடனே விஜயம் செய்யுங்கள்.**

T. P.: 077 6701691

*குறுக்கு வீதி,*
*நீர்வேலி.*

(எங்கள் சேவை உங்கள் சேவைக்கே)




ஷாம்பவி பதிப்பகம், 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 2224143
கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு. 077 6184425. e-mail: shampavi2009@gmail.com.